


# கடவுள் முத்திரை


**எழுத்தாளர்:** மூன்று மதத்திற்கும் ஒருவரே குரு,
ஆன்மீக சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தி, நூறு கிரந்தங்கள் எழுதியவர்,
இந்து ஞான தர்ம பிரதாதா, குறிப்பிடத்தக்க எழுத்தாளர்,
த்ரைத்த சித்தாந்த ஆதிகர்த்தா

## ஶ்ரீஶ்ரீஶ்ரீ ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர்



**தமிழாக்கம்**
எஸ். பிரகாஷ்



**பதிப்பாளர்**

**இந்து ஞான மேடை**

(Estd. in 1978 – Regd. No.: 168/2004)

த்ரைத்த வருடம் - 47 முதல் அச்சிடுதல் : ஏப்ரல் - 2025
பிரதிகள்: 1000 விலை: /-

**எஸ். பிரகாஷ்,**
குப்பம், ஆந்திர பிரதேஷ்.
(கைபேசி: +91-9441915291)

**ப. ர. சந்திரமோகன்,**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9840381879)

**கே.செந்தில்குமரன்**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9841355578)

## கடவுள் முத்திரை

“கடவுள்” என்றால் தெரியாமல் இருப்பவர் என்று அர்த்தம். கடவுளுக்கு அர்த்தம் சொல்லினால் “தேடப்படுபவர் கடவுள்” என்று சொல்லலாம். இன்னும் விவரமாக சொல்லிக் கொண்டால் தேடப்படுபவர் யாரோ என்பது போல் இருக்கும். கடவுளுக்கு பெயரும் இல்லை, பலானவர் என்னும் சொல்லுவதற்கு உருவமும் இல்லை. அதனால் அவரை “கடவுள்” என்று சொல்கிறோம். அப்படிப்பட்ட கடவுள் பக்கம் நான் இருக்கின்றேன் என்று வேறவர்களுக்கு சொல்லவேண்டும் என்றால் அவரை பற்றி சொல்லுவதற்கு அவர் மனிதனாகவும் இல்லை, பெயரும் இல்லை, உருவமும் இல்லை. அப்படிப்பட்ட போது எப்படி சொல்ல முடியும்? என்பது கேள்வியாக நின்றுபோனது. எப்படி சொல்ல வேண்டுமோ வழி காட்ட வேண்டியவர் கடவுள் தான். நான் கடவுள் பக்கம் இருக்கின்றேன் அதை எப்படி சொல்ல வேண்டும் என்பது கேள்வியாக நின்றுபோனது அதற்கு பதில் அளிக்க வேண்டும் என்றால் தெரியாத கடவுளை வேண்டிக் கொள்வதற்கு அவர் யாரிடமும் பேச மாட்டார். எந்த வேலையும் செய்யமாட்டார். யாரிடமும் பேசாதவர் எனக்கு, உங்களுக்கு பதில் சொல்லமாட்டார் என்பது தானே அர்த்தம்.

கடவுள் பேசாதவர் என்பதற்குச் சாட்சியமாக கடவுளுக்கு சம்பந்தப்பட்ட இறுதி தெய்வ கிரந்தம் குர்ஆனில் சூரா 42, ஆயத்து 51, இல் இப்படி உள்ளது பாருங்கள். **(42-51) “கடவுள் எந்த மனிதனிடம் நேராக பேச மாட்டார்”** என்று

இருக்கிறது. இதே வாக்கியத்தில் “கடவுள் மூன்று விதமாக தன்னுடைய ஞானத்தை தெரிவிப்பார்” என்று இருக்கிறது. கடவுள் யாரிடமும் நேராக பேசாமல் போனாலும் வேறு விதமாக தன்னுடைய ஞானத்தை தெரிவிப்பார் என்று இருக்கிறது அல்லவா! இப்போது ஞானம் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளலாம். சரியாக பதில் சொல்லினால் **“ஒவ்வொரு கேள்விக்கு பதிலாக இருப்பதே ஞானம்”.** அதனைப் பற்றி விவரித்தால் **“ஞாபகம்”** என்னும் சப்தத்தில் இருந்து **“ஞானம்”** என்ற சப்தம் உருவானது. ஞாபகம் என்றால் **“எருக்கா”** என்று அர்த்தம் எருக்கா என்றால் தெரிகின்ற சத்தியம் என்று அர்த்தம். இறுதியில் சத்தியம் எது இருக்கிறதோ அதே ஞானம் என்று சொல்லலாம். இப்போது உண்மையான விஷயத்திற்கு வந்து பார்த்தால் கடவுள் தெரியமாட்டார். அவருக்கு உருவம், பெயர், வேலை இல்லை என்று சொல்லிக் கொண்டோம். தெரியாத கடவுளைப்பற்றிய சத்தியம் எது இருக்கிறதோ அதனை தெரிந்து கொள்ளுவது கடவுள் ஞானம் தெரிந்ததாகும்.

கடவுள் நேராக பேச மாட்டார், ஞானத்தை சொல்ல மாட்டார் மறைமுகமாக தன்னை பற்றிய சத்தியத்தை தெரிவிப்பார். ஆனால் மனிதனுக்கு கடவுளைப்பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் இருக்கும் போது, கடவுள் மறைமுகமாக தெரிவிப்பது எதுவோ அது சத்தியமாக தெரியும். ஆர்வம் இல்லாமல் போனால் கடவுள் தெரிவித்த சத்தியம் அசத்தியமாக அர்த்தமாகும். கடவுள் மறைமுகமாக தெரிவித்தது மூன்று கிரந்தம் உருவத்தில் எல்லோருக்கும்

தெரியும்படி உள்ளது. மூன்று தெய்வ கிரந்தம் என்னும் பெயர் வந்த **தவ்ராத், இன்ஜீல், குர்ஆன்** என்னும் மூன்று தெய்வ கிரந்தத்தில் கடவுள் வேறொருவர் இடத்தில் இருந்து மறைமுகமாக தெரிவித்த சத்தியம் (ஞானம்) தான். வாக்கியம் உருவத்தில் எழுதப்பட்டிருந்த ஞானம் ஆர்வமில்லாத மனிதனுக்கு, அர்த்தம் ஆனது போலவே இருக்கும், அது அசத்தியமாக அர்த்தமாகி இருக்கும். வாக்கியம் மீது ஆர்வம் இருந்தால்தான் சத்தியமாக அர்த்தமாகும். என்றால் சொல்லப்பட்ட வாக்கியத்தில் ஞானம் அர்த்தமாகும். ஆர்வம் இல்லாமல் போனால் சொல்லியது ஞானமாக இருந்தாலும் அது அஞ்ஞானமாக அர்த்தமாகும்.

**கேள்வி:-நீங்கள் சொல்லியது கேட்பதற்கு நன்றாக இருக்கிறது, நடைமுறை அனுபவத்திற்கு தூரமாக இருக்கின்ற விஷயத்தை நீங்கள் சொல்லியது போல் அர்த்தமாகிறது. என்னுடைய கேள்வி என்னவென்றால் ஓருவன் நன்றாக படிக்கின்றவன் இருக்கின்றான். அவர் படிப்பில் மேதாவி, ஞாபக சக்தி அதிகமாக உள்ளவர். அவர் தற்போது காலத்தில் கலெக்டர் உத்தியோகத்திற்கு சேர்ந்தார். கலெக்டர் உத்தியோகம் வரவேண்டுமென்றால் அவர் படித்த படிப்பில் எவ்வளவோ தெரிந்திரிந்தால் மட்டும் தான் I.A.S பாஸ் ஆக முடியும். அப்படிப்பட்ட மேதா சக்தி (மெயின்டுபவர்) இருந்த நபர் பகவத்கீதா படித்து அதில் குணத்ரயவிபாக யோகத்தில் படித்த சுலோகத்திற்கு எதிர்ப்பாக, புருஷோத்தமபிராப்தியோகத்தில் சுலோகத்திலுள்ள கருத்துக்களை அர்த்தம் செய்து கொண்டார். அப்படியே ஞான யோகத்தில் படித்த சுலோகத்திற்கு கருத்துக்களின்**

உண்மையை தெரியாமல் போனார். உலகத்தில் எவ்வளவோ புத்திசாலியானவர் கடவுள் விஷயத்தில் அசத்திய கருத்துக்களை அர்த்தம் செய்து கொண்டார். அவருடைய விஷயம் அப்படி இருந்து, அதே ஊரில் ஐந்தாவது படித்த ஒரு நபர் பகவத்கீதாவை மெதுவாக படித்தார். ஒரு நாள் இருவரும் ஓரிடத்தில் சந்திக்கும்போது பகவத்கீதாவில் உள்ள விஷயங்கள் பற்றி பேசினார்கள். மேதாவியான நபர் "கடவுள் பகவானாக வந்தால் கெட்டவர்களை இல்லாமல் செய்வார்" என்னும் சொல்லியபோது, ஐந்தாவது படித்திருந்த நபர் "கடவுள் எப்போதும் யாரையும் இல்லாமல் செய்ய மாட்டார். இல்லாமல் செய்யாமல் அவருடைய எண்ணத்தை மாற்றி விட்டு முதலில் இருந்த எண்ணம் கொண்ட நபராக இல்லாமல் செய்வார். அப்போது அதே மனிதன் மாறிய எண்ணத்துடன் புதிய மனிதனாக தயாரானார். அப்போது முதல் இருந்தவன் இல்லையென்றே சொல்ல வேண்டும். கெட்டவன் போய் நல்லவன் வந்தார் என்று சொல்ல வேண்டும். அதே விஷயத்தை தெரிவித்து கெட்டவர்களை இல்லாமல் செய்து, நல்லவர்களை தயார் செய்வேன் என்று சொல்லினார். அதனை "வினாஷாயச துஷ்க்ருதாம்" என்று சொல்லினார். அதனுடைய அர்த்தம் கெட்டவர்களை கொன்றுவிடுவார் என்பது அல்ல. கெட்டவர்களை நல்லவராக மாற்றி கெட்டவர்களை இல்லாமல் செய்வேன்" என்று சொல்லினார்.

எவ்வளவு பெரிய படிப்பு படித்தவன் தெரிய வேண்டும் என்னும் ஆர்வத்துடன் பகவத்கீதாவை படித்தால் அவருக்கு

**சரியாக சுலோகத்தில் உள்ள எண்ணம் தெரியவில்லை. படிப்பு குறைவாக படித்தவன் ஆர்வம் வைக்காமல் எப்போதோ ஒரு நேரம் படித்தால் அவருக்கு நன்றாக அர்த்தம் ஆனது. இங்கு ஒவ்வொரு நாளும் படித்தவனுக்கு அர்த்தம் ஆகாமல் போனது, எப்போதோ ஒரு நாள் படித்தவனுக்கு படித்தது நன்றாக தெரிவது நடந்ததால், இங்கு ஆர்வத்தின் பொருத்து ஞானம் தெரியுமென்று தெரிவது இல்லை அல்லவா! இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்?**

**பதில்:-**ஆர்வம் என்பது சூட்சுமமானது. அது மேல் தெரிவது அல்ல. அதிகம் படித்தவனுக்கும், ஒவ்வொரு நாளும் படிக்கின்றவனுக்கும் ஆர்வம் இருக்கிறது என்பது தவறானது. அப்படியே குறைவான படிப்பு இருக்கின்றவனில், எப்போதோ ஒரு தடவை படிக்கின்றவனில் ஆர்வமில்லை என்று நினைப்பது கூட தவறானது ஆகும். பெரிய படிப்பு படித்து கலெக்டராக இருக்கிறவனுக்கு ஒவ்வொரு நாளும் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கும். அப்படியே குறைவாக படிக்கின்றவனுக்கு வேலைகள் அதிகமாக இருப்பதினால் படிப்பதற்கு குறைவான வாய்ப்பு இருக்கும். பல தடவை படிப்பதற்கும், குறைவு தடவை படிப்பதற்கும் ஆர்வத்திற்கும் சம்பந்தமில்லை. ஆர்வம் என்பது மனிதனின் தலையில் குணங்களின் நடுவில் உள்ளது. ஆர்வம் என்றால் இஷ்டம் என்று சொல்லலாம். படிக்கின்ற படிப்பு இஷ்டமாகவும் இருக்கலாம், இஷ்டம் இல்லாததாகவும் இருக்கலாம். நான் பகவத்கீதா படித்தேன் என்னும் வேறவருக்கு தெரிவதற்கு படித்தால் அது ஆர்வம் இல்லாததாகும். அப்படி ஆகாமல் எனக்கு பகவத்கீதாவில் உள்ள சமாச்சாரங்களை தெரிந்துகொள்ளவேண்டும் என்னும்

எண்ணத்தில் (ஆர்வத்தில்) படித்தால் அது அர்த்தமாகும். மனிதனுக்கு ஒரு விஷயத்தின் மீது ஆர்வம் இருக்கும் போது அந்த விஷயத்தில் மனிதன் தன் புத்தியை உபயோகித்து அங்குள்ள சமாச்சாரம் தெரிந்து கொள்வான். புத்தியை ஓரிடத்தில் வைத்துக்கொள்ளாமல் தன்னுடைய நினைவு வேறு எங்கோ வைத்துக்கொண்டு படித்தால், கேட்டால் எதுவும் சரியாக அர்த்தமாகாது.

எப்போது விஷயங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் கொண்டு படித்த போது, ஒவ்வொரு சின்ன விஷயங்களிலும் புத்தி உதவியுடன் தெரிந்து படிப்பதினால், அந்த விஷயம் சரியாக அர்த்தமாகும். படிக்கின்ற விஷயத்தின் மீது ஆர்வம் இல்லாத போது அவர் வேறவர் பார்ப்பதற்கு மட்டும் படிக்கின்றார் என்னும் அவர் தெரிந்து கொள்ளுவதற்கு அல்ல. அப்படிப்பட்டவருக்கு படிக்கின்ற விஷயத்தின் ஆர்வம் இருக்காது. ஆர்வம் இல்லாத போது புத்திக்கு கூட அதனைப் பற்றி தெரியது. அப்படி படித்தாலும் பிரயோஜனம் இல்லை. படித்த விஷயம் மனிதனுக்கு அர்த்தமாகாது. அதனால் பரமாத்மா விஷயம், உலக விஷயம் அர்த்தம் ஆகுவதற்கு ஆர்வம் இருக்க வேண்டும். ஆர்வம் இல்லாதவனுக்கு எதுவும் தெரியாது. உலக விஷயத்தில் ஆர்வம் இருந்தால் படிக்கின்ற விஷயம் மட்டும் அர்த்தமாகும். பரமாத்மா விஷயத்தில் கிரந்தத்தில் உள்ள ஞானம் அர்த்தமாகுவது மட்டுமல்ல ஞானத்தில் உள்ள சக்தியும் கிடைக்கும். சக்தி கிடைப்பதற்கு கூட ஒரு அளவீடும் சாஸ்திரம் முறை இருக்கின்றது. அந்த விஷயம் **“இறுதி தெய்வ கிரந்தம் வைர வாக்கியங்கள்”** இந்த

கிரந்தத்தில் எழுதினோம். அந்த கிரந்தத்தை படித்தால் ஆர்வம் எப்படி உபயோகப்படுகின்றதோ என்பது அர்த்தமாகும்.

**கேள்வி:-நீங்கள் "கடவுள் சின்னம்" என்னும் ஒரு கிரந்தம் எழுதி அதில் நான்கு சக்கரம் விவரம் தெரிவித்தீர்கள். இப்போது "கடவுள் முத்திரை" என்னும் குறிப்பாக சொல்லுகிறீர். கடவுள் சின்னம் என்றாலும், கடவுள் முத்திரை என்றாலும் இரண்டும் ஒன்றுதான் என்னும் நாங்கள் நினைக்கின்றோம். எங்கள் வார்த்தை உண்மையா, இல்லையா?**

**பதில்:-** உங்கள் வார்த்தை உண்மைதான்! **"கடவுள் சின்னம்"** என்னும் இதற்கு முன் எழுதியது உண்மைதான். கடவுள் சின்னம் இன்னும் நன்றாக அர்த்தம் ஆகுவதற்கு விவரித்து எழுத நினைத்து, அதன் குறிப்பாக **"கடவுள் முத்திரை"** என்னும் பெயரில் எழுதுகின்றோம். கடவுள் சின்னத்திற்கும், கடவுள் முத்திரைக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று விவரித்து சொல்ல நினைத்தோம். அதனால் "கடவுள் முத்திரை" என்னும் பெயரில் கிரந்தம் எழுதினோம். முக்கியமாக சொல்லினால் கடவுள் சின்னம், கடவுள் முத்திரை என்னும் இரண்டு பெயரும் வேறாக இருந்தாலும் அர்த்தத்தில் இரண்டும் ஒன்றுதான். கடவுள் சின்னத்தைப்பற்றி முதல் எழுதிய கிரந்தத்தில் விவரித்தோம். இப்போது அதே சின்னத்தை கடவுள் முத்திரை என்னும் பெயரில் விவரிக்க வேண்டும் என்று நினைத்தோம். அப்படி எதற்கு இரண்டு தடவை சொல்லி இரண்டு கிரந்தங்களாக எழுத வேண்டியது எதற்கு என்றால் அதற்கு சிறிது காரணம் உள்ளது. அது

என்னவென்றால்! நம் தேகத்தில் ஆத்மா இருக்கிறது. ஆத்மா கடவுளில் பாகமாக உள்ளது. கடவுளில் இருந்து ஆத்மா, ஜீவாத்மா பிரிந்து வெவ்வேறாக இருக்கிறது என்று சொல்லலாம். ஆத்மா, ஜீவாத்மா தெய்வாம்சம் கொண்டது ஆத்மா வேலை செய்யும், ஜீவாத்மா வேலை செய்யாது. ஜீவாத்மாவுக்கும், ஆத்மாவுக்கும் எவ்வளவோ வித்தியாசம் உள்ளது. ஆத்மா கடவுள் போல் நடந்துகொண்டு எல்லோருக்கும் தளபதியாக இருக்கிறது. தளபதியாக இருந்து செயல்படுபவராக வேலை செய்கின்றது. ஒருவிதமாக ஆத்மா தேகத்திற்கு, ஜீவனுக்கு தளபதியாக இருந்து ஈஸ்வரன் என்று பெயர் கொண்டது. கடவுளிடம் அதிகாரத்தைப் பெற்று அனைத்துக்கும் கடவுளாக இருப்பது ஆத்மாவே. ஜீவனுடைய காரியங்களை செய்து கடவுள் நிலையில் ஆத்மாவே இருக்கிறது என்று ஆத்ம ஞானம் தெரிந்த எந்த மனிதனும் ஒப்புக்கொள்ளுவான். ஆத்மா எவ்வளவு உயர் நிலையில் கடவுள் போல் இருந்து கடவுளிடம் அதிகாரத்தைப் பெற்று பெரியதாக இருக்கிறது. நான் சொல்லும் வார்த்தை உங்களுக்கு அர்த்தம் ஆகாமல் போனால் நம்பிக்கை இல்லாமல் போனாலும் இந்த விஷயத்தை தித்விய தெய்வ கிரந்தத்தில் யோவான் சுவார்த்தையில் ஐந்தாவது அதிகாரத்தில் 20ஆவது வாக்கியம் முதல் 27ஆவது வாக்கியம் வரை சொல்லி உள்ளதை கவனித்தால் நான் சொல்லிய வார்த்தை உண்மை என்று தெரியும்.

(யோவான் 5-20 முதல் 27ஆவது வரை)

(5-20)“தந்தை, குமாரனை இஷ்டப்பட்டு, அவர் செய்யும் எல்லாவற்றையும் அவருக்கு ஒப்படைத்தார் என்னும் உங்களிடம் நிச்சயமாக சொல்லுகிறேன். மற்றும் நீங்கள் ஆச்சரியம் படும்படி இவற்றைவிட பெரிய காரியங்களை அவருக்கு கொடுத்தார்”.

(5-21)“தந்தை மரணம் அடைந்தவரை எப்படி எழுப்பி வாழ வைத்தாரோ அப்படியே தன்னுடைய குமாரனும் தனக்கு இஷ்டம் வந்தவரை வாழ வைப்பார்”.

(5-22)“தந்தை யாருக்கும் தீர்ப்பு தீர்க்க மாட்டார்”

(5-23)“தந்தையை மகிமைப்படுத்தியது போல அனைவரும் குமாரனை மகிமைப்படுத்த வேண்டும் என்னும் தீர்ப்பு தீர்ப்பதற்கு அனைத்து அதிகாரம் குமாரனுக்கு ஒப்படைக்கப்பட்டது, குமாரனை நம்பாதவன் அவர் அனுப்பிய தந்தையை நம்பதவனாய் இருக்கிறன்”.

(5-24)“என் வார்த்தை கேட்டு என்னை அனுப்பியவன் மீது நம்பிக்கை வைக்கின்றவர்கள் நித்தியம் ஜீவம் அடைந்து, அவன் தீர்ப்புக்கு வராமல் மரணத்திலிருந்து ஜீவத்தை தாண்டி போவன் என்று உங்களிடம் நிச்சயமாக சொல்கிறேன்”.

(5-25)“மரணம் அடைந்தவர் கடவுளுடைய குமாரன் சத்தம் கேட்கும் காலம் வருகின்றது, இப்போது வந்து உள்ளது.

**அதை கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்னும் உங்களிடம் நிச்சயமாக சொல்கிறேன்".**

**(5-26)"தந்தை எப்படி தனக்குத்தானே ஜீவம் கொண்டு இருக்கின்றரோ அப்படியே குமாரனும் தனக்குத் தானே ஜீவம் கொண்டவராக இருப்பதற்கு குமாரனுக்கும் அதிகாரம் கொடுத்தார்".**

**(5-27)"மற்றும் அவர் மனிதன் போல் உள்ள குமாரன் மேலும் தீர்ப்பு தீர்ப்பதற்கு (தந்தை) அதிகாரம் வழங்கினார்".**

இந்த வாக்கியங்களில் தந்தையாக இருக்கின்றவரை கடவுள் என்னும், குமாரன் என்று ஆத்மாவை சொல்லப்பட்டது. கடவுள் ஆத்மாவுக்கு தன்னைப்போல் இருப்பதற்கு எல்லா விதமான அதிகாரமும் கொடுத்தார் என்று கூறப்பட்டது. மேலும் மனிதன் இறந்து போனால் மறுபடியும் கர்மத்தை நிர்ணயித்து ஜென்மங்களுக்கு அனுப்பும் அதிகாரம் ஆத்மாவுக்கு கொடுக்கப்பட்டது. கடவுளுக்கு சமமாக ஆத்மாவை ஆராதிப்பவருக்கும், கௌரவிக்கின்றவருக்கும் ஜென்மங்கள் இல்லாமல் மோக்ஷம் பெறுவார் என்று கூறப்பட்டது. இன்னும் கடவுள் போல் ஆத்மாவும் கூட நித்திய ஜீவம் உள்ளதாக, ஜெனனம் மரணம் இல்லாததாக இருக்க கடவுள் ஆத்மாவுக்கு அதிகாரம் கொடுத்தார் என்று உள்ளது. மனிதர்கள் ஆத்மாவை கடவுள் போல் கௌரவிக்க வேண்டும் என்று கூட கூறப்பட்டது. இது எல்லாம் பார்த்த பிறகு ஆத்மா மனிதர்கள் எல்லோருக்கும் கடவுளாக இருக்கிறது என்று சொல்கின்றோம். கடவுளுக்கு சமமாக

இருக்கின்ற ஆத்மா மனிதனுக்கு காரிய கர்த்தாவாக வேலை செய்து வைக்கின்றது என்றால் யாராவது நம்புவீர்களா? ஒரு பக்கம் எவ்வளவு உயர் நிலையில் தெரிகின்ற ஆத்மா ஜீவனுக்கு சேவகன் போல் காரியங்களை செய்து வைக்கின்றதா! என்னும் ஆச்சரிய பட வேண்டியது இருக்கும். என்னுடைய வார்த்தை நம்பாமல் போனால் இறுதி தெய்வ கிரந்தம் குர்ஆனில் சூரா 6, 102 ஆயத்தில் என்ன சொன்னாரோ ஒரு தடவை பாருங்கள்.

**(6-102)“அவரே உங்கள் அல்லாஹ் உங்களுக்கு பிரபு. அவரைத்தவிர வேறு ஒரு ஆராதிக்கும் தெய்வமில்லை. அவரே அனைத்துக்கும் சிருஷ்டி கர்த்தா. மேலும் நீங்கள் அவரையே ஆராதனை செய்ய வேண்டும். மற்றும் அவர் ஒவ்வொன்றுக்கும் காரியகர்த்தா”.**

இது “புனிதமான குர்ஆன் செய்தி” தெலுங்கு மொழிபெயர்ப்பில் சொல்லப்பட்டது. இந்த வாக்கியம் படித்த பலபேர் அல்லாஹ் என்றால் கடவுளாகவே அர்த்தம் செய்து கொண்டு ஆத்மாவை விட்டு விட வாய்ப்பு உள்ளது. இங்கு “கடவுள்” என்னும் வார்த்தை ஆத்மாவாக அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். மேலும் அப்படி அல்ல அல்லாஹ் (கடவுள்) விஷயமே அந்த வாக்கியத்தில் சொல்லினார் என்று சிலர் வாதிடலாம். எனக்கு வாதனையில் வேலையில்லை இருக்கின்ற உண்மையை சொல்லுவது என்னுடைய வேலை. அல்லாஹ் என்றால் கடவுள் ஆனால் அவர் சாட்சியமாக இருப்பவர் என்று தெரிய வேண்டும். கடவுள் மனிதனுக்கு வேலை செய்யும் வேலைக்காரனாக இல்லை. கடவுள்

உருவம், பெயர், வேலை இல்லாதவர் என்னும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். கடவுள் சாட்சியாக இருக்கின்றார் என்னும் இறுதி தெய்வ கிரந்தம் குர்ஆனில் சூரா 50, ஆயத்து 21 இல் சொல்லியுள்ளார் பாருங்கள்.

**(50-21)"ஒவ்வொரு ஜீவாத்மாவோடு (பிராணி) ஒரு விரட்டுபவர் உடன் மற்றொரு சாட்சியம் கொடுப்பவர் உட்பட வருகிறது.**

இந்த வாக்கியம் கிரந்தத்தில் சின்ன வாக்கியமாக இருந்தாலும் மிக பெரிதான வாக்கியம். தெய்வ கிரந்தம் மூன்றும் இந்த வாக்கியத்தில் உட்பட்டு இருக்கின்றது. முக்கியமாக மூன்று பேர் யார் என்று தெரிவதற்கு தெய்வ கிரந்தங்கள் மூன்றிலும் சொல்லப்பட்டது. முதல் தெய்வ கிரந்தம் தவ்ராத் (பகவத்கீதா) கிரந்தத்தில் **ஷரன், அக்ஷரன் புருஷோத்தமன்** சொல்லி, தித்விய தெய்வ கிரந்தம் இன்ஜீல் (பைபிள்) இல் **தந்தை, குமாரன், பரிசுத்த ஆத்மா** என்னும் சொல்லி, இறுதி தெய்வ கிரந்தம் குர்ஆனில் **விரட்டுபவர், விரட்டப்படுபவர், சாட்சியாக இருப்பவர் என்று சொல்லப்பட்டது.** இந்த மூன்று வாக்கியங்கள் கிரந்ததிற்கு மூலாதாரம் விஷயம் என்று நாங்கள் சொல்லும் வரை யாருக்கும் தெரியாமல் போனது.

மனிதனில் இருக்கும் ஆர்வத்தின் பொருத்து, புத்திக்கு வரும்போது, புத்திக்கு வந்தவுடன் தெய்வ கிரந்தத்தில் உள்ள வாக்கியங்கள் அர்த்தமாகும். குர்ஆன் கிரந்தத்தில் சூரா 5, ஆயத்து 68 இல், மூன்று தெய்வ கிரந்தங்கள்

படிக்காத யாரும் எந்த தர்மத்திலும் இல்லை என்னும் சொல்லினார் பாருங்கள்.

**(5-68)"கிரந்தங்கள் படிக்கிறவர்களே! நீங்கள் தவ்ராத், இன்ஜீல், உங்கள் பிரபு சார்பாக உங்களிடம் அனுப்பப்பட்ட குர்ஆன் கிரந்தம் உங்கள் வாழ்க்கையில் நிறுவப்படும் வரை நீங்கள் எந்த தர்மத்திலும் இல்லை".**

இங்கு சொல்லியது போல் மூன்று தெய்வ கிரந்தத்தை படித்தபோது கடவுள் ஞானம் அர்த்தமாகும். அப்போது நீ ஒரு தர்மத்தில் உள்ளதாகும். அப்படி ஆகாமல் நடுவில் வந்த மதத்தை வைத்துக் கொண்டு முதலில் இருந்து உள்ள கடவுளை மறந்து என்னுடைய கிரந்தம், என் மதம் என்பதினால் மனிதர்கள் கடவுள் ஞானத்தின் உண்மையை தெரியாமல் போனார்கள். உண்மையான ஞானம் தெரிந்தால் கடவுள் வேலை செய்கின்றவர் அல்ல. கடவுள் தன்னுடைய ஆத்மாவை மக்களுக்கு கடவுளாக மற்றும் சேவை செய்கின்ற வராக (காரியகர்த்தாவாக) நியமித்து பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டு இருக்கிறார். ஆத்மாவே கடவுள் போல் உள்ளது. மேலும் (6-102) வாக்கியத்தில் சொல்லியது போல் அவர் (ஆத்மாவே) மனிதனுக்கு கடவுளாக ஆத்மா இருந்து மற்றும் ஆத்மாவே மனிதர்களுக்கு காரியகர்த்தாவாக இருந்து ஜீவனுக்கு சுகங்கள் துக்கங்கள் கொடுக்கின்றது. இந்த விதமாக ஆத்மா மனிதனில் இரண்டு ரகமாக இருக்கிறது என்று சொல்லலாம்.

"ஆத்மா" கடவுளாக இருக்கிறது என்று சொல்லினோம் அல்லவா! இப்போது கடவுள் முத்திரை பற்றி சொல்லுகின்றோம் என்றால், அது "ஆத்மா முத்திரை" பற்றி சொல்லுகின்றோம் என்று அர்த்தம். தெய்வ கிரந்தம் பிரகாரம் எந்த மனிதனும் ஆத்மாவை கடவுளாக சொல்லிக் கொள்ளாமல் போனால் கடவுளின் வார்த்தையை மீறியதாக இருக்கும். கடவுளுக்கு மனிதன் மேல் கோபம் வரும். **"குமாரனான ஆத்மாவை மகிமைப்படுத்தாதவர் கடவுளை கூட மகிமைப்படுத்தமாட்டான்"** பைபிளில் சொல்லிய வார்த்தை மறக்கக் கூடாது. அதனால் ஒவ்வொரு மனிதனும் தந்தையான கடவுளை பற்றி யோசனை செய்யாமல், குமாரனான ஆத்மாவை பற்றி யோசனை செய்ய வேண்டும். ஆத்மாவை கடவுளாக நினைக்க வேண்டும். ஆத்மாவை கடவுளாக ஆராதனை செய்ய வேண்டும். இந்த வார்த்தை எல்லாம் கடவுளே சுயமாக யோவான் சுவார்த்தையில் சொல்லி உள்ளார். மனிதனுக்கு ஆத்மாவே கடவுளாக பெரிய நிலையில் இருந்தாலும், மிக பெரிய நிலையில் உள்ளவர் மற்றொரு விதமாக ஆத்மாவே மனிதனை விட குறைவாக, மனிதனுக்கு சேவை செய்பவராக, வேலைக்காரனாக இருக்கிறார் என்றும் கூட சொல்லலாம். இப்படி ஆத்மா மனிதனில் இரண்டு விதமாக இருக்கிறது என்னும், உண்மையான கடவுள் என்றால் ஆத்மாவுக்கு தந்தையாக இருக்கின்ற கடவுள், நமக்கு (ஜீவனுக்கு) தாதாவாக இருந்த கடவுள் மனிதனின் சம்பந்தமில்லாமல் பக்கத்தில் சாட்சியாக இருக்கிறார். அவர் மனிதனின் கணக்கில் இல்லை. அதனால் தாத்தாவான கடவுளை தெரிவதற்கு தந்தையான ஆத்மாவை

கடவுளாக நினைக்க வேண்டும். கடவுளாக கௌரவிக்க வேண்டும். கடவுளாக ஆராதனை செய்ய வேண்டும்.

நமக்கு கடவுளான ஆத்மா மனிதனில் இரண்டு ரகமாக நடந்து கொள்வது இப்போது தெரிந்து போனது. அதனால் கடவுளின் அடையாளத்தை கடவுள் சின்னம் என்னும் ஒரு ரகம், கடவுள் முத்திரை என்று இன்னொரு ரகம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இதற்கு முன் கடவுளின் அடையாளத்தை "கடவுள் சின்னம்" என்னும் கிரந்தமாக எழுதி தெரிவித்தோம். அந்த கிரந்தத்தில் கடவுள் அடையாளத்தை ஒரு விதமான எண்ணத்தில் முழுமையாக விவரித்தோம். அந்த அடையாளத்தை பகவத்கீதாவில் அக்ஷரபரப்பிரம்ம யோகம் என்னும் அத்தியாயத்தில் இருந்து தெரிந்து கொண்டோம் என்று சொல்லினோம். **"கடவுள் சின்னம்"** என்னும் கிரந்தத்தில் கடவுள் சின்னத்தைப் பற்றி சம்பூரணமாக சொல்லி, கடவுள் சின்னம் என்பதை கடவுளுக்கு சமமாக கௌரவிக்க வேண்டும் என்னும் அதனை **"தலைமீது நெற்றி பாகத்தில் வைத்தால் வேறவர் பார்ப்பதற்கு அதனை தலைமேல் வைத்துக் கொண்டு சுமந்தது போல் தெரியும்"** என்னும் எண்ணத்தில் எல்லோரும் கடவுள் சின்னத்தை நெற்றி பாகத்தில் வைக்க வேண்டும் என்று சொல்லினோம். அந்த நாள் இந்துக்கள் மட்டுமல்லாமல் எல்லாம் மதத்தினருக்கும் அது கடவுளின் அடையாளமாக இருப்பதினால் எல்லா மதத்திலும் மனிதர்கள் அதனை கௌரவமாக பார்த்து மற்றும் கடவுளுக்கு சமானமாக பார்க்க வேண்டும் என்று கூட கூறினோம்.

நாங்கள் சொல்லிய பிறகு அர்த்தம் செய்து கொண்டவர் எல்லோரும் கடவுள் சின்னத்தை (தலை பாகம்) நெற்றி மீது வைத்தார்கள். என் வார்த்தை அர்த்தம் செய்து கொண்ட இந்துக்கள் மட்டுமல்லாமல் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் சிலர்கள் வைத்தார்கள். உண்மையாக கடவுளின் சின்னத்திற்கு இந்துக்களுக்கு சிறிதளவு கூட சம்பந்தம் இல்லை. அது மூன்று மதத்திற்கும் சம்பந்தப்பட்டது. பிறந்த ஒவ்வொரு மனிதனும், கடவுள் என்னும் எண்ணம் கொண்டு ஒவ்வொரு மனிதனும் அதனை வைக்க வேண்டும். ஆனால் கிறிஸ்துவர்களுக்கு, முஸ்லிம்களுக்கு முகத்தின் மேல் வைக்கும் பழக்கம் இல்லை. அவர் மதம் விதிமுறை பிரகாரம் முகத்தின்மேல் இந்துக்கள் போல் எதுவும் வைக்கக் கூடாது என்று சொல்லி உள்ளனர். முதல் பிறந்த ஹிந்துக்களை பார்த்து பிறகு பிறந்த மதத்திற்கு முக்கியதுத்திற்க்காக அப்படி சொல்லினார் என்னும், அது வெறும் மதத்திற்கு சம்பந்தப்பட்டது என்னும், கடவுளுடைய ஞானம் அல்ல என்று அர்த்தமாகிறது. கடவுளின் விஷயம் மூன்று தெய்வ கிரந்தத்தில் ஒன்றாக இருந்தாலும் அது மனிதர்களுக்கு அர்த்தமாகாமல் போவதினால் தெய்வ கிரந்தத்தில் உள்ள ஞானத்தை விட்டு, மதத்திற்காகவே மனிதன் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள்.

மூன்று தெய்வ கிரந்தத்தில் கடவுளின் சின்னத்தை பற்றி எழுதப்பட்டுள்ளது. பகவத்கீதாவில் சூட்சுமமாக அக்ஷரபரப்பிரம்மயோகத்தில் கடவுள் சின்னத்தை பற்றி சொல்லி இருக்கும்போது, பைபிளிலும், குர்ஆன் கிரந்தத்திலும்

ஸ்தூலமாக தெரிகின்ற வாக்கியமாக சொல்லி உள்ளார்கள். கீதாவில் சூட்சுமமாக உள்ளதை நாங்கள் சொல்லியபோது, ஹிந்துக்கள் கவனித்த உடனே கடவுளின் முத்திரையை நெற்றியில் வைத்தார்கள். கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள் எங்கள் வார்த்தையை உடனே அர்த்தம் செய்து கொள்ளாமல் போனார்கள். சிறிது அர்த்தமானாலும் மதத்திற்கு பயப்பட்டு அவர்கள் நெற்றி மேல் கடவுள் முத்திரை வைக்கவில்லை. பிறகு சிறிது காலத்திற்கு அவர்கள் கடவுளுடைய ஞானத்தை அர்த்தம் செய்து கொண்டார்கள். அவர்களுடைய கிரந்தத்தில் நேரடியாக இருக்கின்ற கடவுள் வாக்கியத்தை கௌரவித்து முதலில் முஸ்லிம்கள் கடவுள் முத்திரையை நெற்றி மேல் வைத்து, பிறகு கிறிஸ்தவர்களும் கடவுள் முத்திரையை நெற்றி மேல் வைத்தார்கள். கடவுள் சின்னத்தைப் பற்றி இறுதி தெய்வ கிரந்தத்தில் குர்ஆனில் சூரா 5, ஆயத்து 2, மற்ற ஓரிடத்தில் சூரா 22, ஆயத்து 32 இல் ஸ்தூலமாக சொல்லி உள்ளார். இப்போது (22-32) வாக்கியங்களை பார்க்கலாம்.

**“யார் அல்லாஹ்வின் சின்னத்தை கௌரவிக்கின்றாரோ அது உண்மையாக அவர் இருதயத்தில் உள்ள தெய்வத்தின் பயத்தினால்”** என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் அங்கு சொல்லிய விஷயம் பல பேர் முஸ்லிம்களுக்கு அர்த்தமாகவில்லை. அவர்களுக்கு அர்த்தமானது தவறான மார்க்கம். கடவுள் சூட்சுமமானவர், கடவுள் ஞானம் கூட சூட்சுமத்தில் கூடியிருக்கும்.

கடவுள் தன்னுடைய சின்னத்தைப் பற்றி சொல்லினால் மனிதன் பிரக்ருதி சம்பந்தப்பட்ட அடையாளங்ளை கடவுள் சின்னமாக சொல்லிக் கொள்வது தவறானது அல்லவா! கடவுள் வேறு, பிரக்ருதி வேறு. பிரக்ருதிக்கு சம்பந்தப்பட்டது எதுவாக இருந்தாலும் கடவுள் சின்னமாக இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. கடவுளுக்கு எதிர்ப்பாக இருக்கின்ற பிரக்ருதி. பிரக்ருதினால் தயாரானது ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி. இந்த ஐந்தும் பிரக்ருதி என்று கூறுகிறோம். பிரக்ருதியினால் நம் தேகத்தில் குணங்கள் கூட பிறந்தது. அதனால் குணங்கள் பிரக்ருதி சம்பந்தப்பட்டது. குணங்களை **மாயா** என்று பகவத்கீதையில் சொல்லினார். மாயாவை **சாத்தான்** என்னும், **சைத்தான்** என்னும் **இப்லீஸ்** என்று சொல்கின்றோம். அதனால் பிரக்ருதியை கடவுளாக நினைக்கக் கூடாது. வெளி உலகத்தில் பூமியில் பிறந்த சபா, மருவா என்னும் இரண்டு மலைகளை கடவுள் சின்னமாக சிலர் சொல்லினால் அது எந்த அளவுக்கும் சத்தியம் அல்ல. மேலும் பிரக்ருதியில் தயாரான தேகம் கொண்ட பசுக்களை கடவுள் சின்னமாக சொல்லினார்கள். அதுவும் சத்தியம் அல்ல. பசுக்கள், மலைகள் பிரக்ருதியில் பாகங்களாக இருக்கின்றது. பிரக்ருதியில் பாகங்கள் அல்லாமல் கடவுள் ஞானத்தில் கூடியிருப்பது கடவுள் சின்னமாகும். பிரக்ருதியில் கூடியிருப்பது எப்போதும் கடவுள் சின்னம் ஆகாது.

பகவத்கீதையில் ஞானத்தை அனுசரித்து மற்றும் குர்ஆன் கிரந்தத்தில் அல்லாஹ் சொல்லிய ஞானத்தை அனுசரித்து முதல் நாங்கள் எழுதிய **“கடவுள் சின்னம்”** கிரந்தத்தில் எழுதினோம். அப்போது பைபிள் கிரந்தத்தில்

உள்ள வாக்கியங்களை சிறிதளவு கூட நாங்கள் சொல்லவில்லை. இன்ஜீல் கிரந்தத்தில் கடவுள் சின்னத்தை பற்றி தனித்துவமாக வாக்கியம் இருந்தாலும் அதனை அங்கு குறிப்பிடப்படவில்லை. அப்போது இரண்டு தெய்வ கிரந்தத்தில் உள்ள வாக்கியங்களை சொல்லினாலும் தனித்துவமாக இருக்கின்ற வாக்கியம் குர்ஆன் கிரந்தத்தில் உள்ளது தான். பகவத்கீதா கிரந்தத்தில் தனித்துவமான வாக்கியங்கள் கடவுள் சின்னத்தைப் பற்றி இல்லை. மறைமுகமாக இருக்கிறது என்னும் சொல்லினோம் மேலும் தனித்துவமாக வாக்கியத்தை காண்பிக்கப்படவில்லை. தனித்துவமாக குர்ஆனில் உள்ள வாக்கியங்களை காண்பித்தோம். மேலும் **“கடவுள் சின்னம்”** என்னும் கிரந்தத்தில் கடவுள் சின்னத்தை பற்றி தெளிவாக சொல்லினோம். கடவுள் சின்னம் நான்கு சக்கரம் அடையாளமாக ஒவ்வொரு தேகத்தில் உள்ளது என்று கூறினோம். ஒவ்வொரு தேகத்தில் நெற்றி பாகத்திற்கு சமமான தலை மயத்திய பாகத்தில் கடவுள் சின்னம் இருக்கிறது என்னும் சொல்லுவது மட்டுமல்லாமல், கடவுள் சின்னம் பிரம்ம, கால, கர்ம, குணசக்கரங்களாக இருக்கிறது என்னும் சொல்லி ஒவ்வொரு சக்கரத்திற்கும் ஞான சம்பந்தமான விவரத்தை கூறினோம். அதன் பிரகாரம் மனிதனான ஒவ்வொருவனுக்கும், தேகம் அணிந்த ஒவ்வொரு ஜீவிக்கும் கடவுள் சின்னம் ஜீவிதத்தை நியமித்து நடத்தும் சாராம்சமான சின்னமாக உள்ளது. கடவுள் சின்னத்தில் குர்ஆன் கிரந்தத்தில் சொல்லிய ஞானம் மற்றும் பகவத்கீதாவில் சொல்லிய ஞானம் சம்பந்தப்பட்டு உள்ளது. கடவுள் ஞானம் நாங்கள் சொல்லிய படி அர்த்தம் செய்து

கொண்டால் பிரதம, இறுதி தெய்வ கிரந்தத்தில் உள்ள ஞான சாராம்சம் கடவுள் சின்னத்தில் தெரியும். மனிதன் செய்து கொண்ட கர்மத்தை பற்றி, மனிதன் அனுபவிக்கும் அனுபவங்களைப் பற்றி, மனிதன் தெரிந்து கொள்ளும் ஞானத்தை பற்றி, மனிதன் அனுபவிக்கும் காலத்தை பற்றி, மனிதன் குணங்கள் ரூபத்தில் உள்ள மாயை பற்றி கடவுள் சின்னத்தில் தெரிகின்றது என்னும் நாங்கள் எழுதிய கிரந்தத்தில் எழுதுவது நடந்தது.

நாங்கள் கிட்டத்தட்ட வருடத்திற்கு முன்பே எழுதிய கடவுள் சின்னம் கிரந்தத்தில் கடவுள் சின்னத்தை பற்றி சம்பூர்ணமாக ஞானம் தெரியப்படுத்தினோம். சம்பூர்ணமாக சந்தேகமில்லாமல் தெரிய வேண்டியது எதுவும் இல்லை என்னும் சொல்லியபோது, இப்போது நீங்களே இன்னும் கடவுள் சின்னத்தை பற்றி சொல்ல வேண்டியது அதிகமாக இருக்கிறது என்னும் தனித்துவமாக ஒரு கிரந்தத்தை எழுதினீர் அல்லவா! இப்போது எதனைப் பற்றி நீங்கள் எழுதுகிறீர்? என்று சிலருக்கு கேள்வி வரலாம். அதற்கு என்னிடம் பதில் இருக்கிறது, அது என்னவென்றால்! கடவுளின் அடையாளமாக இருக்கின்றதை கடவுள் சின்னம் என்னும், கடவுள் முத்திரை என்னும் சொல்கின்றோம். கடவுள் முத்திரை கடவுளுக்கு சமானமான சாராம்சம் கொண்டு, கடவுள் ஞானத்திற்கு அடையாளமாக இருக்கிறது என்று சொல்லலாம். மனிதர்களாகிய நாம் உண்மையான கடவுளை கடவுள் என்று சொல்லக்கூடாது. என்றால் தாத்தாவாக இருக்கின்ற கடவுளை அல்லது தந்தைக்கு தந்தையாக உள்ள கடவுளை சிறிது நேரம் பக்கத்தில் வைத்து

ஆத்மாவை கடவுளாக சொல்லிக் கொள்ளலாம். ஆத்மாவை கடவுள் என்னும் சொல்லுவது தவறு இல்லை. சிருஷ்டி கர்த்தாவான கடவுளே தன்னுடைய குமாரனான ஆத்மாவை தன்னைப் போலவே பெரியதாக சொல்ல வேண்டும் என்னும், ஆராதிக்க வேண்டும் என்னும், கௌரவிக்க வேண்டும் என்னும் தர்ம சம்மதத்துடன் திவித்திய தெய்வ கிரந்தமான இன்ஜீலில் சொல்லிய வார்த்தையை மறக்கக்கூடாது. **ஆத்மாவை மகிமைப்படுத்தாதவர் அவரை அனுப்பிய கடவுளைக் கூட மகிமைப்படுத்தாதவர்** என்னும் கடவுளே சுயமாக சொல்லிய வார்த்தை மறக்கக் கூடாது.

கடவுளை மகிமைப்படுத்துபவர், கடவுள் குமாரனான ஆத்மாவை கூட மகிமைப்படுத்த வேண்டும். கடவுள் ஸ்தானத்தில் ஆத்மாவை கடவுளாகவே மனிதர்களாகிய நாம் சொல்ல வேண்டும். இப்போது உண்மையான விஷயத்திற்கு வருவோம். ஆத்மா மனிதர்களில் இரண்டு விதமாக நடந்து கொள்கின்றது. ஒன்று கடவுளாக இரண்டு காரியம் செய்கின்றவராக இருப்பதினால் ஆத்மா இரண்டு விதமான அடையாளத்துடன் சொல்ல வேண்டும். கடவுள் அடையாளம் (ஆத்மா அடையாளம்) ஒன்றானாலும் இரண்டு விதமான அர்த்தங்களில் கூடியிருக்கின்றது. ஆத்மா ஒன்றானாலும் இரண்டு விதமாக நடந்து கொள்வதினால் கடவுள் சின்னத்தை இரண்டு விதமான அர்த்தத்தில் சொல்ல வேண்டியது இருக்கும். ஒரே அடையாளத்தை கடவுள் சின்னம் என்னும் ஒரு விதமாக, கடவுள் முத்திரை என்னும் மற்றொரு விதமாக சொல்கின்றோம். சின்னம் என்னும் சொல்லினாலும், முத்திரை என்னும் சொல்லினாலும் இரண்டும் கடவுள்

முத்திரை தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு முன் கிரந்தத்தில் "கடவுள் சின்னம்" என்னும் பெயரில் கடவுள் காரியங்கள் விதானம் கூறினோம். இப்போது கடவுளின் ஆதி பத்தியம் விதானத்தை பற்றி கூறிக் கொள்ளலாம். கடவுளின் உண்மையான சொரூபம் கடவுளின் ஈஸ்வர தத்துவமே, என்றால் கடவுளின் மகத்துவம் தான். கடவுள் அனைவருக்கும் அதிபதியாக இருக்கின்றதினால், மேலும் அவர் ஆதிபத்தியத்திற்கு அடையாளமாக கடவுள் முத்திரை பற்றி இப்போது கூறிக் கொள்ள வேண்டியது இருக்கும்.

**கேள்வி:-உலகம் பிறந்ததிலிருந்து கடவுள் ஒருவர்தான் என்னும் அனைத்து மனிதர்களும் நம்புகின்றார்கள். ஒரு ஹிந்து மதத்தில் உள்ளவர் சிலர் கடவுள் என்னும் அம்சத்தை எடுத்துக் கொள்ளாமல் தேவதைகள் எல்லோரையும் நம்பி ஆராதனை செய்கின்றார்கள். ஹிந்துக்களிலும் கூட சிலர்கள் பிரதம தெய்வ கிரந்தமான பகவத்கீதையை படித்து தெய்வ ஞானத்தை தெரிந்தவராக தேவதைகள் பக்தியை விட்டு கடவுளின் பக்தியை அனுசரிக்கின்றார்கள். மற்ற கிறிஸ்தவர்களிலும், முஸ்லிம்களிலும் மற்றவர் எல்லோரையும் நம்பாமல் அவர்களுடைய விசுவாசத்தை கடவுள் மீது மட்டும் வைத்துக்கொண்டு கடவுள் ஒருவர் தான் என்று ஆராதனை செய்கின்றார்கள். மக்களை ஆட்சி செய்பவர் மக்களுக்கு அதிபதியாக உள்ளவர் ஒரு கடவுள் தான் என்னும் அவர்கள் நம்புவது மட்டுமல்லாமல் வேறவர்களுக்கும் கூட போதிக்கின்றார்கள். அவர்கள் நம்பிக்கை பிரகாரம் கடவுள்**

ஒருவர்தான் என்னும் கடவுள் ஒருவரையே ஆராதிக்கின்றார்கள். எல்லோர் மனதில் ஒரே கடவுள் ஞாபகம் உள்ளது. எல்லோர் புத்தியில் ஒரே கடவுள் எண்ணம் உள்ளது. கடவுள் தன்னுடைய கிரந்தத்தில் தன்னை ஒருவரையே ஆராதனை செய்ய வேண்டும் என்று கூறியது போல் உள்ளது. கடவுளைப் பற்றி எத்தனையோ ஞானிகள் அவர்கள் ஞானம் பிரகாரம் "ஒருவரே நாராயணா" என்னும் ஹிந்துக்கள், "அல்லாஹ் மாலிக்" (கடவுளே எஜமான்)" என்னும் முஸ்லிம்கள், "கடவுள் ஒருவர்தான்" என்னும் கிறிஸ்தவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும்போது, இத்தனை காலம் ஞானிகளில் உள்ள நம்பிக்கைகள் அல்ல என்னும் கடவுள் ஒருவர் அல்ல இருவர் என்னும் சொல்லியது மட்டுமல்லாமல், உண்மையான கடவுள் உங்களுக்கு தாத்தா ஆகுவார், உங்களுக்கு கடவுள் தந்தையாக இருக்கின்றார் என்னும் உங்களைத் தவிர யாரும் சொல்லவில்லை. நீங்கள் ஒருவர் சொல்லிய வார்த்தையை நாங்கள் எதற்கு நம்ப வேண்டும்? எங்கள் கடவுள் ஒருவர்தான், அவரே எங்கள் எஜமான், அவரே எங்களை பிறக்க வைத்த தந்தை என்னும் நம்புகின்றோம். அதே நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதே நம்பிக்கையில் வாழ்க்கையை கடத்துகின்றோம். அதே நம்பிக்கையில் இருக்கிறோம். நீங்கள் சொல்லிய வார்த்தையை கேட்டு நடுவில் நாங்கள் கெட்டுப் போக மாட்டோம் என்று சொல்கின்றோம். இத்தனை பேருக்கு கடவுள் ஒருவர்தான் தெரிந்தால் உங்களுக்கு ஒருவருக்கே கடவுள் இரண்டாக எப்படி தெரிந்தார்? என்று கேட்கின்றோம்.

**பதில்:-**இதுவரை நீங்கள் நம்பிய கடவுளை நான் அல்லவென்று சொல்லவில்லை. இதுவரை எல்லோரும் தந்தை என்னும் எந்த கடவுளை சொல்கின்றீரோ அதே கடவுளை நானும் கூட தந்தை என்றே சொல்கிறேன். இதுவரை கடவுள் ஒருவர்தான் என்னும் எந்த கடவுளை நீங்கள் சொல்கின்றீரோ அந்த கடவுளை நான் அல்லவென்று சொல்லவில்லை. எல்லோர் நம்பிக்கை எந்த கடவுளின் மீது உள்ளதோ அந்த கடவுளையே நான் ஒப்புக் கொள்கிறேன். எந்த கடவுளை முஸ்லிம்கள் ஒருவர் என்னும் சொல்கின்றாரோ, ஒருவரே என்னும் கிறிஸ்தவர்கள் சொல்கின்றாரோ அந்த கடவுளை நானும் அதை உறுதி செய்கின்றேன். ஆனால் இதுவரை யாரும் சொல்லாதது மற்ற ஒரு வார்த்தை கூட சொல்கின்றேன். நீங்கள் சொல்லுகின்ற கடவுள், நீங்கள் நம்பிய கடவுள் உண்மையானால் நீங்கள் நினைத்தபடி யார் கடவுளாக இருக்கின்றாரோ அவருக்கு தந்தை ஒருவர் இருக்கின்றார் என்னும் நமக்கு தெரியாது. உண்மையான கடவுளைப் பற்றி யாருக்கும் தெரியாது. உண்மையான கடவுள் நமக்கு தந்தையானவனுக்கு தந்தையாக இருக்கின்றார். **அவர் ஆறு நாட்கள் தன்னுடைய சிருஷ்டியை சிருஷ்டித்து ஏழாவது நாளில் ஏழாவது ஆகாசத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றார்** என்னும் இறுதி தெய்வ கிரந்தத்தில் சொல்லிய வார்த்தையை மறந்து நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். கடவுள் பெயர், உருவம், வேலை செய்யாதவர். கடவுள் என்றால் தேடப்படுபவர், கடவுள் யாருடைய கற்பனைக்கும் எட்டாதவர். அவரை யாரும் பலானவர் என்று சொல்ல முடியாது. அவர் எல்லா

வேலைக்கும் அப்பாற்பட்டவர், எந்த காரியத்தையும் செய்யாதவர், சாட்சியாக பார்த்துக் கொண்டிருப்பார். மனிதனை பிறக்க வைப்பதிலும், ஆட்சி செய்வதிலும், மரணம் கொடுப்பதிலும் சம்பந்தமில்லாதவர். கடவுளை எவ்வளவு முயற்சி செய்தாலும் யாரும் கண்டுபிடிக்க முடியாது என்று சொல்லலாம். எல்லோருக்கும் தெரியாத முக்கியமான ரகசியம் ஒன்று இருக்கிறது, அது என்னவென்றால்! தெய்வ கிரந்தத்தில் கடவுளுக்கு சம்பந்தப்பட்ட ஞான விஷயங்கள் எத்தனை இருந்தாலும் அதில் வெறும் 10 சதவீதம் மட்டும்தான் பரமாத்மாவை பற்றி சொல்லிய ஞானம் இருக்கும். மற்ற 90 சதவீதம் ஞான விஷயங்கள் ஆத்மாவுக்கு சம்பந்தப்பட்டது இருக்கும்.

தெய்வ கிரந்தங்களில் மிக முக்கியமான ஞான சமாச்சாரம் கடவுள் மூன்று விதமாக இருக்கின்றார் என்னும் சொல்லியபோது மட்டுமல்லாமல் மேலும் சொல்லாமலே நான்கு விதமாக கடவுள் இருக்கிறார் என்று தன்னுடைய கிரந்தத்தில் தெரிவித்தார். கடவுள் ஒருவர் என்னும் தெரிந்தாலும் உங்களுக்கு உண்மையாக, சத்தியம் முறையாக, சாஸ்திரம் சம்பந்தமாக 3+1=4 விதமாக இருக்கிறார் என்னும் நாங்கள் சொல்லுவது எல்லோருக்கும் ஜீரணிக்க முடியாத விஷயம் என்று எனக்குத் தெரியும். ஆனால் உண்மையான விஷயம் எப்போதோ ஒரு தடவை, எங்கோ ஓரிடத்தில், யாரோ ஒருவர் சொல்லுவது நடக்கும். அந்த ஏற்பாடுகள் எல்லாம் கடவுள் முடிவை பொறுத்து இருக்கும். கடவுள் நிர்ணயம் மனிதனை தன் பக்கத்திற்கு வர வைப்பதற்காகவும் இருக்கும், அல்லது தனக்கு தூரமாக

அனுப்புவதற்காகவும் இருக்கும். கடவுள் இறுதி தெய்வ கிரந்தத்தில் பல தடவை அல்லாஹ் நினைத்தால் மனிதனை சன்மார்க்கத்தில் அனுப்புவார். அப்படியே தவறான மார்க்கத்திலும் அனுப்பலாம். அல்லாஹ்வை நம்பியவரை சன்மார்க்கத்திலும், நம்பாதவரை தவறான மார்க்கத்தில் (அஞ்ஞான மார்க்கத்தில்) அனுப்புவேன் என்று சொல்லி உள்ளார். மனிதனுக்கு கடவுளுடைய ஞானம் அர்த்தமாக வேண்டும் என்றால் கடவுளின் இஷ்டத்தை பொறுத்து இருக்கும். மனிதன் விசுவாசத்தை பொறுத்து கடவுளின் நிர்ணயம் இருக்கும்.

மேல் உள்ள விஷயம் எல்லாம் சொல்லியவர் அனைவருக்கும் தந்தையான கடவுளே என்று தெரிந்து கொள்ள வேண்டும். அனைவருக்கும் தாத்தாவான கடவுள் ஒன்றும் சொல்லவில்லை. அவர் எதுவும் சொல்லுபவர் அல்ல. அவர் மௌனமாக எல்லாம் பார்த்துக் கொண்டு இருப்பவர் தான். இதுவரை கடவுள் ஞானம் தெரிந்தவர் நினைத்த ஞானங்கள் எல்லோருக்கும் நாங்கள் ஒரு சத்தியத்தை சொல்லி, சில குழப்பங்களை ஏற்படுத்தி இருந்தாலும், என்னை நீங்கள் சத்தியத்தை சொல்பவராக நினைக்க வேண்டும். சத்தியம் சிறிது கசப்பாக இருந்தாலும் சத்தியம் எப்போதும் சத்தியமே. அதனால் நிரந்தரமாக, சத்தியமாக இருக்கின்ற விஷயங்களை சொல்லினால், கடவுள் ஒருவராக இருந்தாலும் மொத்தத்திற்கு கடவுள் நான்கு பாகங்களாக இருக்கிறார். உண்மையை சொல்லினால் கடவுள் எப்போதும் கடவுளாக இருக்கின்றார், கடவுளாக இருக்கின்ற ஆத்மா ஒன்று இருக்கிறது. பிறகு மூன்றாவது ஜீவாத்மா இருக்கிறது.

இந்த மூன்று அல்லாதது பிரக்ருதி என்னும் ஒன்று இருக்கிறது. இந்த நான்கு பாகங்கள் ஒரு கடவுளுடையது தான், அந்த ஒரு கடவுளே தாத்தாவான கடவுள். தந்தைக்கு தந்தையான கடவுள். உங்களுக்கு புரியும்படி அர்த்தமாகுவதற்கு இப்போது ஒரு கதை போல் விளக்கத்தை சொல்கின்றேன் ஜாக்கிரதையாக கேளுங்கள்.

நான் சாதாரண மனிதனாக இருந்து எந்த ஞானம் தெரியாத இளம் வயதிலேயே எப்போதாவது வேற ஒரு இடம் கடவுள் விஷயத்தைப் பற்றி பேசுவேன். ஆனால் பகவத்கீதையை படித்த பிறகு கடவுள் த்ரைத்த சித்தாந்தமாக இருக்கிறார் என்னும் தெரிந்தது. ஆனால் விசேஷம் என்னவென்றால் நான் பகவத்கீதை படிக்காத காலத்திலும் கூட, பகவத்கீதை விஷயங்கள் தெரியாதபோது கூட, கடவுள் மூன்று பாகமாக இருக்கிறார் என்று சொல்லிக் கொண்டே இருப்பேன். பகவத்கீதை படித்த பிறகு கடவுள் மூன்று ஆத்மாவாக இருக்கிறார் என்று அர்த்தமானது. அதனை நான் முதலில் இருந்து சொல்லியதினால் அது என் சித்தாந்தமாக மக்களுக்கு தெரிவித்து த்ரைத்தசித்தாந்தத்தை முன்மொழிக்கப்பட்டு சொல்லினேன். ஆனால் த்ரைத்தசித்தாந்தம் முதலிலேயே பகவத்கீதாவில் கிருஷ்ணர் சொல்லி உள்ளார். ஆனால் இப்போது வரை யாருக்கும் தெரியாததினால் அந்த சித்தாந்தத்தை நான் பிரச்சாரம் செய்தேன். விசித்திரம் என்னவென்றால் பகவத்கீதை படித்த பிறகு மூன்று ஆத்மா விஷயங்கள் தெரிந்தால் ஷரன், அக்ஷரன், புருஷோத்தமன் என்னும் பகவத்கீதையில் புருஷோத்தம பிராப்தியோகத்தில் 16,17 சுலோகங்களில்

எழுதி இருந்தாலும், நேரடியாக சுலோகங்கள் வடிவத்தில் மூன்று ஆத்மாக்கள் விஷயம் இருந்தாலும், மறைமுகமாக கடவுள் நான்கு பாகமாக இருக்கிறார் என்னும் பகவத்கீதாவில் முழுமையாக தெரிந்தது. அதனால் அந்த விஷயம் எனக்கு நன்றாக அர்த்தமாகி நான் முதலில் சொல்லிய த்ரைத்த சித்தாந்தத்தையே சொல்லிக் கொண்டு வந்தேன். நடுவில் இரண்டாவது தடவை நான்கு பாகங்களாக கடவுள் இருக்கிறார் என்னும் சொல்லி அவரை குழப்ப வேண்டாம் என்று நினைத்தேன். சில வருடங்கள் கடந்த பிறகு பல பேர் என்னிடம் வந்து நான் சொல்லிய ஞானம் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அப்போது நான் ஞானத்தை சொல்லுவது தவிற, ஒவ்வொரு மாதம் அவருக்கு ஞான பிரிட்சை வைத்தேன். ஞான பரிட்சையில் பல பேர் பங்கேற்ப்பார்கள். ஒவ்வொரு மாதம் நடக்கின்ற பரிட்சையில் 10 கேள்விகளை சொல்லி, அவற்றுக்கு ஞானத்தை பதிலாக எழுதுங்கள் என்று சொல்லுவேன். அப்போது 2001 அல்லது 2002 வருடத்தில் நடந்த ஞான பரிட்சையில் 10 கேள்விகளில் முதல் கேள்வி எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அது என்னவென்றால்! **“சிருஷ்டி ஆதியில் ஒரே கடவுள் எத்தனை பாகங்களாக பிரிந்தார்?”** என்று கேட்டோம். அந்த கேள்வி **“ஆன்மீக கேள்விகள் - பதில்கள்”** என்னும் எங்கள் கிரந்தத்தில் உங்களுக்கு கிடைக்கலாம். அந்த நாள் அந்த கேள்விக்கு நாங்கள் ஞானம் சொல்லியது போல் எல்லோரும் “மூன்று ஆத்மாவாக பிரிந்தார்” என்று எழுதினார்கள். “கடவுள் எத்தனை ஆத்மாவாக பிரிந்தார்?” என்னும் நான் கேட்டு இருந்தால் அந்த பதில் சரியாக இருந்திருக்கும். அப்படியே

"கடவுள் எத்தனை பாகங்களாக இருக்கிறார்?" என்று கேட்டால் சிறிது வரை பதில் நன்றாக இருந்திருக்கும். ஆனால் இங்கு கேள்விகளில் தனித்துவம் உள்ளது. அந்த தனித்துவத்தை யாரும் கவனிக்காமல் எழுதியதினால் அந்த பதிலை சத்தியமாக கணக்கிடவில்லை. அந்த பதில் அசத்தியம் பதில் என்று கருதினோம். அந்த பதிலில் தனித்துவம் என்னவென்றால் "சிருஷ்டி ஆதியில் கடவுள் எத்தனை பாகங்களாக பிரிந்தார்?" என்பது கேள்வி.

அந்த கேள்வி சிருஷ்டி விட பூர்வம் என்னும் மேலும், சிருஷ்டி முதலில் என்று அர்த்தம் கொடுக்கின்றது. சிருஷ்டி பூர்வம் அல்லது சிருஷ்டி ஆதியில் ஒன்றும் இல்லாத நிலையில் உலகம் இல்லாத நிலையில் இருக்கிறது என்று சொல்லலாம். விஷ்வமே இல்லாத அந்த நிலையில் கடவுள் தவிர யாரும் இல்லை. அப்போது இருந்தது ஒரே கடவுள், இரண்டாவது கடவுள் யாரும் இல்லை. கடவுள் அப்போது விஷ்வத்தை உருவாக்க வேண்டும் என்று நினைத்தார். உதாரணத்திற்கு சொல்லிக் கொண்டால் ஒரே தண்ணீரை, எந்த ருசி இல்லாத தண்ணீரை, சிறிது சர்க்கரை கலந்து சிறிது தண்ணீரை இனிப்பாக செய்யலாம். அதன் போலவே சிறிது தண்ணீரை சிறிது உப்பு கலந்து சிறிது தண்ணீரை உப்புத் தண்ணீராக மாற்றலாம். ஒரே தண்ணீரை மூன்று விதமாக உப்பாக, இனிப்பாக, சப்பாக வைத்தாலும் அந்த மூன்று தண்ணீரையும் பராமரிக்க முதல் ஒரு பானை தேவை. தண்ணீரை உப்பாக இனிப்பாக மாற்றுவதற்கு முதலிலேயே தண்ணீரை பராமரிக்க தேவைப்படும் பாத்திரங்கள் அல்லது

குடத்தை தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். அந்த விதமாக கடவுள் ஒருவர் மழை தண்ணீர் போல முதல் இருந்தார். மழை தண்ணீர் வண்ணம், ருசி, வாசனை எதுவும் இல்லாமல் தூய்மை தண்ணீராக இருக்கும். அதன் போலவே கடவுள் ஆகவே ஒருவர் தூய்மையானவராக இருந்தார். அப்படி இருந்த கடவுள் தன்னுடைய சங்கல்பத்தினால் கடவுள் சுயமாக சிருஷ்டியை தயார் செய்யும் காரியத்தை செய்தார். நீங்கள் நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். சிருஷ்டி இல்லாத பூர்வம் கடவுள் காரியம் செய்தார். சிருஷ்டிக்கு பிறகு அவர் எந்த காரியமும் செய்யவில்லை. சிருஷ்டி பூர்வம் உருவம், பெயர், வேலை உள்ள கடவுள் சிருஷ்டி பிறகு அந்த மூன்றும் இல்லாமல் உருவம், பெயர், வேலை ஒன்றும் செய்யாமல் இருக்கின்றார்.

கடவுள் சிருஷ்டி தயாரான பிறகு மக்களுக்கு தன்னை பற்றி தெரியாமல் மறைப்பதற்கு அவர் தன்னை மூன்று ஆத்மாக்களாக பிரிக்கப்பட்டு இருப்பதற்கு தண்ணீருக்கு பாத்திரம் எப்படி தேவைப்பட்டதோ, கடவுளுக்கு பிரக்ருதி அப்படி தேவைப்பட்டது. ஒரு குடத்தை ஆதாரம் செய்து கொண்டு மூன்று ருசி தண்ணீர் இருக்கும் படி, ஒரு பிரக்ருதியில் தயாரான தேகத்தை ஆதாரம் செய்து கொண்டு கடவுள் மூன்று ஆத்மாவாக பிரக்ருதியில் இனைந்தார். பிரக்ருதியில் தெரியாமல் இருக்கின்ற கடவுள் யாருக்கும் எந்த விதமாகவும் தெரியப்பட மாட்டார். மேலும் தன்னை தெரிந்து கொள்வதற்கு தேவைப்படும் ஞானத்தை கூட கடவுளே சிருஷ்டிக்கு பிறகு தெரிவித்தார். இப்போது சிருஷ்டி முதலில் நடந்த விஷயத்தை தெரிந்து கொள்ளலாம். சிருஷ்டி

பூர்வம் கடவுளுக்கு உருவம், பெயர், வேலை மூன்றும் இருந்தது. ஆனால் அது எப்படி இருந்ததோ எந்த மனிதனுக்கும் தெரியாது. சிருஷ்டி பூர்வம் இருந்த விஷயமானதினால் யாருக்கும் தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. எதுவும் இல்லாத நாள் ஒருவராக இருந்த கடவுள் அவர் மனிதனை சிருஷ்டிக்க வேண்டும் என்று நினைத்தார். ஒருவராக இருந்த கடவுள் உருவம், பெயர், வேலை உள்ள கடவுள் சிருஷ்டிக்கப்படுகின்ற மனிதனுக்கு தெரியாமல் இருப்பதற்கு பிரக்ருதி என்னும் போர்வையை எடுத்துக்கொண்டு (தயார் செய்து கொண்டு) அதில் தன்னை மூன்று விதமாக பிரித்துக் கொண்டு மறைத்துக் கொண்டார். அப்படி செய்வதற்கு முதலில் பிரக்ருதி என்னும் தெரிகின்றதை தயார் செய்தார். பிரக்ருதியை சிருஷ்டித்த கடவுள் அதனை பிறகு ஐந்து பாகங்களாக செய்தார்.

கடவுள் ஆதியில் முதலில் பிரக்ருதியை தன்னிலிருந்து தயார் செய்தார். என்றால் தன்னில் உள்ள சிறிது பாகங்களை வெளியே எடுத்து அதற்கு **“பிரக்ருதி”** என்று பெயர் வைத்தார். இதனைப் பொறுத்து பிரக்ருதி கடவுளின் ஒரு பாகம் என்று சொல்லலாம். இந்த விதமாக முதல் தன்னில் இருந்து பிரக்ருதியை வெளியே எடுத்த கடவுள் பிரக்ருதியை 5 பாகங்களாக பிரித்து அவற்றுக்கு வரிசையாக **ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி** என்று பெயர் வைத்தார். அந்த ஐந்து பாகங்களை ஒவ்வொன்றையும் 5 பாகங்களாக தயார் செய்து ஒன்றில் ஒன்று கலந்து மனிதன் தேகத்தை தயார் செய்தார். மனிதன் தேகம் தயாரான பிறகு தன்னில் இருந்து சிறிது பாகத்தை வெளியே எடுத்து அதற்கு

**“ஆத்மா”** என்று பெயர் வைத்தார். தன்னை ஆத்மாவிட வேறாக இருக்கும்படி, தன்னை **“பரமாத்மா”** என்று கூறினார். பிறகு ஆத்மா போல சிறிது பாகம் வெளியே எடுத்து **“ஜீவாத்மா”** என்று பெயர் வைத்தார். இந்த விதமாக தான் கடவுளாகவே இருந்து தன்னிலிருந்து பிரக்ருதியும், இரண்டு ஆத்மாக்கள் பிரிக்கப்பட்டதால் கடவுள் முதலில் சிருஷ்டி ஆதியில் நான்கு பாகங்களாக பிரிக்கப்பட்டார் என்று சொல்லலாம். அதனால் கடவுள் மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டார் என்னும் பதில் எழுதினாலும் அதனை தவறாக கணக்கிட்டோம். அதற்கு சரியான பதில் நான்கு பாகங்கள் என்று சொல்லலாம்.

கடவுள் சிருஷ்டி பூர்வம் ஒருவிதமாக, சிருஷ்டி பிறகு மற்றொரு விதமாக இருக்கின்றார். தெய்வ கிரந்தங்களில் சிருஷ்டிக்கு பூர்வம் உள்ள உருவம், பெயர், வேலை உள்ள கடவுளைப் பற்றி வெறும் பத்து சதவீதம் மட்டுமே சொல்லினார், மற்ற 90 சதவீதம் சிருஷ்டி பிறகு உருவம், பெயர், வேலை இல்லாத கடவுளை பற்றி சொல்லினார். அதனால் நீங்கள் இதுவரை கிரந்தங்களினால் ஞானம் தெரிந்தது. சிருஷ்டி பிறகு கடவுள் மேலும் நீங்கள் சொல்லும் கடவுள், நான் சொல்லும் கடவுள் இருவரும் ஒருவர்தான். அதனால் நீங்கள் நம்பிய கடவுளை நான் சொல்லுகின்றேன் என்று முதலிலேயே சொல்லினேன். சிருஷ்டி பூர்வம் இருந்த கடவுளைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை. கடவுள் தர்மங்கள் பிரகாரம், தெய்வ கிரந்தங்கள் பிரகாரம் மனிதன் நம்ப வேண்டியது சிருஷ்டி பிறகு

கடவுளைத்தான். தெய்வ கிரந்தத்தில் சிருஷ்டி பூர்வம், சிருஷ்டி பிறகு உள்ள கடவுளை வெவ்வேறாக சொல்லி உள்ளார். ஆனால் இதுவரை அவர் வித்தியாசம் மேலும் தெய்வ கிரந்தத்தில் சொல்லிய விதானம், யாரும் தெரிந்து கொள்ளாமல் போனார்கள். அதனால் இப்போது நாங்கள் சொல்லும் சத்தியம் அசத்தியமாக தெரிகின்றது. நான் சொல்லியது சத்தியம் என்னும் தெரிவதற்கு தெய்வ கிரந்தத்தில் கடவுள் சொல்லிய வாக்கியங்களை சந்தர்ப்பத்தை பொருத்து பார்க்கலாம். இறுதி கிரந்தமான குர்ஆனில் 112 சூரா **"அல்இக்லாஸ்"** இல் நான்கு வாக்கியங்களை பார்த்தால் இங்கு சொல்லியது சிருஷ்டிக்கு பூர்வமுள்ள கடவுளைப் பற்றி என்று சுலபமாக தெரிந்து போகின்றது.

**(112-1,2,3,4)**

**1.நபி இப்படி சொல் "அவரே அல்லாஹ் (கடவுள்) ஒருவர்தான்".**

**2.அல்லாஹ் யாருடைய அக்கறையும் இல்லாதவர்.**

**3.அவருக்கு சந்ததி இல்லை மற்றும் அவர் யாருக்கும் பிறக்கவில்லை.**

**4.அனைத்து லோகங்களில் அவரை ஒப்பிடத்தக்கது எதுவும் இல்லை.**

இந்த நான்கு வாக்கியங்கள் "தெய்வீக குர்ஆனின் செய்தி" தெலுங்கு மொழிபெயர்ப்பு. வேறு தெலுங்கு

மொழிபெயர் கூட இந்த நான்கு வாக்கியங்களை மொழியில் சிறிது வித்தியாசமாக எழுதியிருந்தாலும், எல்லாவற்றிலும் எண்ணம் மட்டும் ஒன்றுதான் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

முதல் வாக்கியம் பார்த்தால் **“அவர் ஒரே ஒரு கடவுள்”** என்று எழுதியுள்ளார். இந்த வார்த்தை மகா ஞானியான ஜிப்ராயில் முகமத் பிரவக்தாவுக்கு சொல்லினார். அதனால் பிரவக்தா இப்படி சொல் **“கடவுள் ஒருவர்தான், அவரை விட வேறு கடவுள் இல்லை”** என்று சொல்லி உள்ளார். சிருஷ்டி ஆதியில் சிருஷ்டியை விட முதல் உள்ள கடவுள் பற்றி சொல்லிய வாக்கியம் ஆனதினால் இந்த வார்த்தை முழுமையாக சத்தியம் என்று சொல்லலாம். எதற்கு என்றால்! சிருஷ்டியை விட முதலில் கடவுள் ஒருவர்தான் இருந்தார். கடவுள் தவிர வேறு யாரும் இல்லை. சிருஷ்டி பூர்வம் மனிதர்கள், தேவதைகள் இல்லை. மொத்தத்திற்கு விஷ்வமே இல்லை. அப்படிப்பட்ட போது கடவுள் ஒருவர் ஒருவராக இருந்தார் அவரைத் தவிர வேறு கடவுள் என்பவரும், வேறு மனிதன் என்பவரும் யாரும் இல்லை. அதனால் அப்போது கடவுள் ஒருவரே இருந்தார், அவரைத்தவிர வேறவர் யாரும் இல்லை என்று சொல்லினார். சிருஷ்டி பிறகு கடவுளே பிரக்ருதியினால் ஜீவராசிகளின் தேகங்களை சிருஷ்டித்து, அந்த தேகத்தில் ஒருவராக இருந்த கடவுள் மூன்று ஆத்மாக்களாக பிரிந்து ஒன்று ஜீவாத்மாவாக இருந்து, இரண்டாவது ஆத்மாவாக இருந்து, மூன்றாவது பரமாத்மாவே (கடவுளாகவே) இருக்கிறது. சிருஷ்டி பூர்வம்

ஒருவரே, சிருஷ்டி பிறகு நான்கு பாகங்களாக இருக்கிறார் என்று சொல்லலாம். சிருஷ்டி பூர்வம் கடவுள் ஒருவராக இருந்து சிருஷ்டி பிறகு ஒருவராக இல்லை. பிரக்ருதி, ஜீவாத்மா, ஆத்மா, பரமாத்மாவாக இருக்கின்றார். ஜீவாத்மா, ஆத்மா எப்படி பரமாத்மாவில் பாகமோ அதன் போலவே பிரக்ருதி கூட பரமாத்மாவில் ஒரு பாகமாக இருக்கின்றது. பிரக்ருதி முதலில் ஐந்து பாகங்களாக தயாரானது. பிறகு ஒவ்வொன்றும் 5 பாகங்களாக தயாராகி, மொத்தமாக தேகபாகங்கள் தயாராகி ஜீவன் நிவாசிப்பதற்கு தகுதியாக தயாரானது. பிரக்ருதியினால் தயாரான தேகத்தில் ஜீவாத்மா சேர்ந்து அதில் நிவாசம் இருக்கும்போது, ஜீவனுக்கு சுக துக்கங்களை கொடுப்பதற்கு ஆத்மா தேகத்தை அசைய வைக்கும் வேலை செய்கின்றது. ஆத்மா தேகத்தினால் உறுப்புக்களை அசைய வைத்து வேலை செய்து, அந்த வேலையில் உள்ள சுக துக்கங்களை ஜீவாத்மா அனுபவிக்கின்றது. ஆத்மா எப்போதும் தேகத்தில் வேலை செய்து, ஜீவன் சுக துக்கம் அனுபவங்களை அனுபவித்த அந்த வேலையை நானே செய்தேன் என்று நினைத்துக் கொண்டிருப்பான். தேகத்தில் ஆத்மா வேலை செய்வது, ஜீவாத்மா தானே செய்தது போல் நினைப்பது, பரமாத்மா தேகத்திலேயே இருந்து சாட்சியாக பார்த்துக் கொண்டு இருக்கிறார்.

சிருஷ்டி பிறகு கடவுள் இருந்தாலும் கடவுள் ஒருவராக இல்லை. கடவுளின் பாகமுள்ள ஆத்மா கடவுளாக செயல்படுகின்றது. கடவுள் சிருஷ்டி பிறகு அசையாமல் இருந்தார். அவர் செய்ய வேண்டிய வேலையெல்லாம்

தன்னுடைய ஆத்மாவுக்கு சொல்லி அவரை போல இருக்கும்படி செய்தார். சிருஷ்டி பிறகு நடக்க வேண்டிய காரியங்கள் எல்லாம் கடவுளாக ஆத்மாவே செய்கின்றது. கடவுள் மட்டும் சிருஷ்டி பிறகு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு சாட்சியாக இருந்து, கடவுளால் அதிகாரத்தைப் பெற்று கடவுளாக இருக்கின்ற ஆத்மா எல்லாவற்றுக்கும் அதிபதியாக இருந்து ஒரு பக்கம் பிரக்ருதிக்கு வழிமுறையை கொடுத்து, ஒரு பக்கம் பூதங்கள் கிரகங்கள் ஆட்சியில் இருப்பவர்களுக்கு எங்கு என்ன செய்ய வேண்டுமோ, எப்போது சுனாமிகள் உருவாக்க வேண்டுமோ, எங்கு துப்பான்கள் வெள்ளம் தேவையோ, எங்கு ஆபத்துகள் செய்ய வேண்டுமோ, எங்கு நோய்கள் பரவ வேண்டுமோ சொல்லி, எல்லோருக்கும் அதிகாரியாக இருந்து மனிதனுடைய தேகத்தில் காரிய கர்த்தாவாக வேலை செய்கின்றார். தேகத்தில் ஆத்மா வேலை செய்து காரிய கர்த்தாவாக இல்லாமல் போனால் மனிதனுடைய தேகத்தில் எந்த சின்ன காரியமும் நடக்காது. தேகத்தில் வெளியே நடக்கின்ற காரியங்கள், தேகத்துக்கு உள்ளே நடக்கின்ற காரியங்கள் இதயம் துடிப்பது, சுவாசிப்பது, சிறு நீரகங்கள் சிறுநீரை வடிகட்டுவது தெரியாத நடக்கின்ற வேலைகள் நின்றுவிடும். ஆத்மா காரிய கர்த்தாவாக வேலை செய்யாமல் ஒரு நிமிடம் இருந்தாலும் மனிதனுடைய தேகம் வாழக்கூடிய வாய்ப்பே இல்லை. அதனால் மனிதனுடைய தேகத்தில் மனிதனுக்கு தெரியாமல் தேகத்துக்கு உள்ளே ஆத்மா எப்போதும் வேலை செய்து கொண்டிருப்பதினால் மனிதன் வாழ்கின்றான். இல்லாமல் போனால் மனிதன் வாழ வாய்ப்பே இல்லை.

சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள் இந்த வேலையெல்லாம் ஆத்மாவுக்கு ஒப்படைத்து, ஆத்மாவை கடவுளாக நியமித்து, பரமாத்மா சாட்சியாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தேகத்திற்கு உள்ளே, தேகத்திற்கு வெளியே இருக்கிறார். ஆனால் ஆத்மா கடவுளாக இருந்து தேகம் உள்ளே தவிர, தேகம் வெளியில் இல்லை. தேகம் வெளியே, தேகம் உள்ளே உள்ள கடவுள் சிருஷ்டி பூர்வத்திலிருந்த கடவுள். தேகம் உள்ளே மட்டும் இருந்து தேகத்திற்கு, ஜீவனுக்கு அதிபதியாக இருக்கின்ற ஆத்மா தேகத்திற்கு உள்ளே கடவுளாக இருக்கின்றார் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இன்று தேகம் உள்ளே இருக்கின்ற கடவுளை பற்றி தெய்வ கிரந்தத்தில் அதிகமாக எழுதப்பட்டுள்ளது. சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள் அசையாமல் யாருக்கும் தெரியாமல், ஒன்றும் செய்யாமல் சாட்சியாக மட்டும் இருப்பதினால் அவருக்கு அதிகம் முன்னுரிமை இல்லை. அதனால் தாத்தாவான கடவுளை பற்றி தெய்வ கிரந்தங்களில் குறைவாக சொல்லப்பட்டது. தேகத்தில் கடவுளாக இருந்து ஒரு பக்கம் அதிகாரியாக, ஒரு பக்கம் காரிய கர்த்தாவாக இருக்கின்ற கடவுளை பற்றி கிரந்தங்களில் கூட அதிகமாக சொல்லப்பட்டது. இந்த விஷயம் குர்ஆன் கிரந்தத்தில் சூரா 6ஆயத்து 102 இல் இப்படி கூறினார் பாருங்கள்

**(6-102)“அவரே அல்லாஹ் உங்களுக்கு பிரபு. அவரைத் தவிர வேறு ஆராதிக்கும் கடவுள் இல்லை. அவரே அனைத்துக்கும் சிருஷ்டி கர்த்தா. மேலும் நீங்கள் அவரையே ஆராதனை**

**செய்யுங்கள். மற்றும் அவரே ஒவ்வொன்றுக்கும் காரிய கர்த்தா."**

இந்த வாக்கியம் இங்கு இரண்டாவது தடவை கூறினோம். கடவுளாக ஆத்மா இருந்து எல்லோரையும் சிருஷ்டித்தவர் ஆத்மாவான கடவுள் தான். எல்லோரும் அவரையே ஆராதனை செய்ய வேண்டும் என்னும் பரமாத்மாவான கடவுள் இங்கு சொல்லி திவித்திய தெய்வ கிரந்தமான இன்ஜீல் யோவான் சுவார்த்தையில் ஐந்தாவது அத்தியாயம் 21 முதல் 24 வரை சொல்லி உள்ளார். நமக்கு தந்தையான ஆத்மாவையே கடவுளாக ஆராதனை செய்ய வேண்டும் என்று கிரந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. தெய்வ கிரந்தத்தில் பரமாத்மாவான கடவுளைப் பற்றி குர்ஆன் கிரந்தத்தில் 112 சூராவில் நான்கு வாக்கியங்கள் இருக்கின்றது. அந்த நான்கு வாக்கியங்கள் தாத்தாவான கடவுளை பற்றி சொல்லி உள்ளார். மற்ற படி அதே தெய்வ கிரந்தத்திலேயே தந்தையான கடவுளுடைய வார்த்தைகள் எப்படி இருக்கிறது என்று பாருங்கள்.

**(3-18) "அல்லாஹ் தவிர மற்றொரு ஆராதனை செய்ய வேண்டிய தெய்வம் இல்லை சுயமாக கடவுள், கடவுளுடைய தூதர்கள் மற்றும் ஞானம் தெரிந்தவர்கள் சாட்சியம் கொடுக்கின்றார்கள். அவருடைய சமநிலையுடன், சமமான இடையில் இந்த விஷயத்தை நிறுத்தினார். சர்வத் திசையில் இருப்பவர், பகுத்தறிவு உள்ள கடவுள் தவிர மற்றொருவர் ஆராதனைக்கு அருகதை இல்லாதவர்கள்".**

(22-66) "உங்களுக்கு வாழ்க்கை கொடுக்கின்றவர் அவர் தான். அவரே மரணத்தையும் கொடுக்கின்றவர். மறுபடியும் அவரே உங்களுக்கு வாழ்வு கொடுப்பார். ஆனால் மனிதன் கடவுளுடைய நன்மையை மறந்தவன் தான்".

(29-44) "அல்லாஹ் ஆகாசங்களை, பூமியை உண்மையாக உருவாக்கினார். ஆகாசங்களை, பூமியை பரமார்த்தத்தில் உருவாக்கினார் என்று தெரிந்தால் இதில் பெரிய நிதர்சனம் கிடைக்கும்".

(2-255) "கடவுள் மட்டுமே உண்மையான ஆராதனை செய்யும் தெய்வம், அவரை தவிர இன்னொருவர் ஆராதனை செய்பவர் யாரும் இல்லை". அவர் சஜீவமானவர், அவர் எல்லாவற்றுக்கும் மூலாதாரம். அவருக்கு தூக்கம் உறக்கம் வரவே வராது. பூமி, ஆகாசத்தில் உள்ள சமஸ்தமும் அவருடைய ஆதீனத்தில் இருக்கின்றது. அவருடைய அனுமதி இல்லாமல் அவருடைய முன்னிலையில் யாரும் சிபாரிசு செய்ய முடியாது. அவருக்கு முன் பின் உள்ள சமஸ்த சமாச்சாரம் அனைத்தும் அவருக்கு தெரியும். அவர் கேட்டதை தவிர அவருக்குள்ள ஞானத்தில் எந்த விஷயமும் அவர் எல்லைக்குள் வராது. அவருடைய நாற்காலி பரப்பளவு பூமி, ஆகாசம் சுற்று முற்றிலும் இருக்கிறது. பூமியை ஆகாசத்தை காப்பாற்றுவதற்கு அவர் எப்போதும் சோர்வடைய மாட்டார்".

இப்போது நான்கு வாக்கியங்களை குறிப்பிடுவதற்கு இங்கு எழுதி காண்பிக்க நடந்தது. இதற்கு முன் 112 சூராவில் நான்கு வாக்கியங்களை எழுதி காட்டினோம். அந்த

நான்கு வாக்கியங்கள் தந்தைக்கு தந்தையாக இருந்த என்றால் தாத்தாவாக இருந்த கடவுளுக்கு சம்பந்தப்பட்ட வாக்கியம் என்று கூறினேன். அதில் முதல் வாக்கியத்திற்கு விவரம் கூட கொடுத்தோம். இன்னும் மூன்று வாக்கியத்திற்கு விவரம் சொல்ல வேண்டியது இருக்கும். இதற்கிடையில் உங்களுக்கு அர்த்தம் ஆகுவதற்கு தந்தையாக இருந்த கடவுளைப் பற்றி நான்கு வாக்கியங்களை கூறினோம். இந்த நான்கு வாக்கியங்கள் 2,3,22,29 சூராக்களில் உள்ள வாக்கியங்களை சொல்லினோம். முதல் சொல்லிய 112 சூராவில் நான்கு வாக்கியங்கள் மட்டும் தான் இருக்கிறது. அந்த நான்கு வாக்கியங்கள் தாத்தாவாக இருக்கின்ற கடவுளுடையது. தாத்தாவாக இருக்கின்ற சிருஷ்டி பூர்வம் கடவுளை பற்றி கிரந்தத்தில் அதிகமாக சொல்லவில்லை. அதனால் 112 சூராவில் நான்கு வாக்கியங்கள் மட்டும் இருக்கின்றது. அந்த நான்கு வாக்கியங்களை நாங்கள் சொல்லினோம். மீதி கிரந்தம் எல்லாம் சூராக்களில் எத்தனையோ வாக்கியங்கள் தந்தையான கடவுளைப் பற்றி சொல்லி இருக்கின்றது. இரண்டாவது சூராவில் 286 ஆயத்துக்கள், 3 சூராவில் 200 ஆயத்துக்கள், 22 சூராவில் 78 ஆயத்துக்கள், 29 சூராவில் 69 ஆயத்துக்கள் உள்ளது. இந்த வாக்கியங்கள் அனைத்தும் தந்தையாகிய கடவுளை பற்றி சொல்லிய வாக்கியங்கள். குர்ஆன் கிரந்தம் மொத்தம் மீது 6236 இருக்கும்போது அதில் வெறும் 36 வாக்கியங்கள் கூட தாத்தாவான கடவுளை பற்றி சொல்லியது இல்லை.

நீங்கள் நன்றாக கவனித்தால் 112 வது சூராவில் சொல்லிய 4 ஆயத்தில் உள்ள சமாச்சாரத்திற்கு பிறகு

சொல்லிய (2-255), (3-18), (22-66), (29-44) வாக்கியங்களுக்கு எவ்வளவோ வித்தியாசம் தெரியும். இதற்கு முன் முதல் வாக்கியங்களில் வித்தியாசங்களை பற்றி சொல்லிக் கொண்டோம். இப்போது தாத்தாவான கடவுள் வேறு, தந்தையான கடவுள் வேறு என்று இன்னும் சிறிது விவரமாக தெரிந்து கொள்ளலாம். தந்தையான கடவுளே சமஸ்த மனிதர்களுக்கு தேவையானவர் ஆராதிக்கப்படுகின்றவர். அதனால் தந்தையான கடவுளைப் பற்றி ஆயிரக்கணக்கான வாக்கியங்கள் சொல்லி தாத்தாவாக இருந்த கடவுளை பற்றி இரண்டு மூன்று இடத்தில் சில வாக்கியங்களை சொல்லினார். 10,15 விட மீறி வாக்கியங்கள் இல்லை என்று நினைக்கின்றேன். இதுவரை யாருக்கும் தந்தையான கடவுளை பற்றி, தாத்தாவான கடவுளை பற்றி வேறாக தெரியாது. ஒன்றும் செய்யாதவர் என்று ஓர் இடத்தில் சொல்லி, எல்லாம் செய்பவர் என்னும் இன்னொரு இடத்தில் சொல்லியபோது அந்த வித்தியாசத்தை மனிதர்கள் எதற்கு கவனிக்கவில்லை! புத்தி விவேகம் எதற்கு வேலை செய்யவில்லை! நான் யாருடைய குழந்தையும் அல்ல, எனக்கு குழந்தைகள் இல்லை என்னும் சொல்லிய போது, சமஸ்தமும் நானே உருவாக்கினேன் என்று சொல்லியபோது, அந்த வித்தியாசத்தை எவ்வளவோ புத்தி உள்ள மனிதர்களும் தெரிந்து கொள்ளாமல் போனார்கள். என்னுடைய குமாரனை ஆராதனை செய்கின்றவன் என்னை ஆராதனை செய்வது போல் என்னும் திவித்திய தெய்வ கிரந்தத்தில் சொல்லியவர், துருத்திய தெய்வ கிரந்தமான குர்ஆனில் ஆராதனை செய்ய வேண்டிய கடவுள் ஒருவரே இருக்கும்போது அந்த

வித்தியாசத்தை எதற்கு கவனிக்கவில்லை! இந்த விதமாக சொல்லிக் கொண்டு போனால் சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள், சிருஷ்டி பிறகு உள்ள கடவுள் இந்த வித்தியாசம் கிரந்தத்தில் சொல்லினாலும் மனிதர்கள் கிரகிக்காமல் போனார்கள்.

இன்ஜீல் கிரந்தத்தில் **“என் தந்தையும் நானும் ஒன்றாக இருக்கிறோம்”** என்னும் சொல்லிய வார்த்தை படிப்பதற்கு மட்டும்தான் தந்தை யார்? தான் யார்? என்று தெரிந்து கொள்ளாமல் போனார்கள். அதன் போலவே “என்னுடைய குமாரனை மகிமைபடுத்தியவர் என்னை மகிமைபடுத்தியது போல் ஆகும், என் குமாரனை ஆராதனை செய்தவன் என்னை ஆராதனை செய்வது போல தான் என்னும், குமாரனை மகிமைபடுத்தாதவன் அவரை அனுப்பிய தந்தையையும் மகிமைபடுத்தாதவன் ஆவான்.” சொல்லிய வார்த்தை எந்த விதமாக கிறிஸ்தவர்களாக இருக்கின்றவர்கள் அர்த்தம் செய்து கொண்டார்களோ! இன்ஜீலும், குரானிலும் சொல்லி உள்ள வாக்கியங்கள் இரண்டும் ஒன்றுதான் என்னும் தெரியாமல் எங்களுடைய கிரந்தம் வேறு, அவர்களுடைய கிரந்தம் வேறு என்னும் எண்ணம் இருக்கும்போது கிரந்தத்தில் சொல்லிய கடவுளுக்கு சம்பந்தப்பட்ட வாக்கியங்கள் யாருக்கும் அர்த்தம் ஆகாது. ஏன் ஒரே கிரந்தத்தில் சொல்லிய தந்தையைப் பற்றி குமாரனை பற்றி கூட அர்த்தம் ஆகவில்லை என்னும், அதன் போலவே ஒரு கிரந்தத்தில் சொல்லிய சந்ததி இல்லாத கடவுள், சந்ததி இருக்கின்ற கடவுள் பற்றி தெரிந்து கொள்ளாமல் போனார்கள். கடவுள்

இரண்டு விதமாக இருக்கிறார் என்னும் தற்போது வழி நடத்தும் கடவுள் ஒருவர்தான் என்னும், அவரையே ஆராதனை செய்ய வேண்டும் என்னும், அவருக்கு பிறகு சாட்சியாக பரலோகமாக கூட கடவுளே இருக்கிறார் என்று அதிகம் பேர் தெரிந்து கொள்ளாமல் போனார்கள்.

**"சிருஷ்டி பூர்வம் கடவுள், சிருஷ்டி பிறகு கடவுள்"** இந்த வார்த்தை முதல் தடவை கேட்கும் சிலருக்கு, அவர் இருவர் என்று தெரிவதற்கு தெய்வ கிரந்தத்தில் குர்ஆனில் இரண்டு ரகம் உள்ள வாக்கியங்கள் சொல்லிக் கொண்டோம். 112 சூராவில் சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள் எப்படி இருந்தார் 4 வாக்கியங்களில் கூறியுள்ளார். அதில் இரண்டாவது வாக்கியத்தை பார்த்தால் **(112-2) "கடவுள் எந்த அக்கறை இல்லாதவர்"** சிருஷ்டி பூர்வம் எதுவும் இல்லை. இப்போது இருக்கின்ற உலகமே இல்லை. எதுவும் இல்லாதபோது அவர் எந்த தேவை இல்லாதவராக இருந்தார். சிருஷ்டி பிறகு அவருக்கு ஜெகத்தை ஆட்சி செய்வது ஏற்பட்டது. அப்போது சிருஷ்டி பிறகு கடவுளாக இருப்பவர் வேலையை செய்ய நினைக்கவில்லை. அதனால் சிருஷ்டி பூர்வமுள்ள உருவத்தை, பெயரை காரியங்கள் செய்யும் விதானங்களை இல்லாமல் செய்து கொண்டார். ஆனால் அவரே சிருஷ்டித்த உலகத்தை விடவில்லை. சிருஷ்டி பூர்வத்தை விட சிருஷ்டி பிறகு வித்தியாசமாக இருக்க வேண்டும் என்னும் நினைத்த கடவுள் தன்னைப் போல அதிகாரியாக என்றால் கடவுளாக இருப்பதற்கு, உலகத்தை ஆளுவதற்கு, அதற்கு தகுந்த காரியங்கள் செய்வதற்கு தேவைப்படும் கடவுளை

சிருஷ்டித்து, தன்னுடைய அதிகாரத்தை எல்லாவற்றையும் அவருக்கே கொடுத்து கடவுள் உருவம், பெயர், வேலையில்லாதவராக சிருஷ்டி பிறகு மௌனமாக சாட்சி பூதமாக நின்று போனார். கடவுளுக்கு சிருஷ்டி பிறகு தேவை ஏற்ப்பட்டது மேலும், சிருஷ்டி பூர்வம் அவருக்கு எந்த தேவை இல்லை என்று சொல்லலாம். அதே விஷயத்தை இரண்டாவது வாக்கியத்தில் கூறினார். சிருஷ்டி பிறகு ஏற்பட்ட தேவைக்கூட இல்லாமல் செய்வதற்கு இன்னொரு கடவுளை சிருஷ்டித்தார். சிருஷ்டி பிறகு கடவுள் நியமித்த ஆத்மாவே கடவுளாக வேலை செய்கின்றது. இந்த விஷயம் எல்லாவற்றையும் புத்தியை உபயோகித்து பார்த்தால் அர்த்தம் ஆகாதது எதுவும் இல்லை. ஆனால் சிருஷ்டி பூர்வம், சிருஷ்டி பிறகு உள்ள சத்தியம் எதற்கு தெரியவில்லை?

**(112-3) "கடவுளுக்கு சந்ததி இல்லை, அவர் யாருக்கும் சந்ததி அல்ல"** என்று உள்ளது. இந்த வார்த்தை சிருஷ்டி பூர்வம் உள்ள கடவுளுக்கு பொருந்தும். அப்போது அவருக்கு எந்த தேவை இல்லாததால் அவருக்கு குமாரன் தேவை கூட இல்லை. அப்போது நிராமையனாக இருந்தார். "சிருஷ்டி பிறகு கடவுளுக்கு சந்ததி இல்லை" என்ற இந்த வார்த்தை பொருந்தாது. அவருக்கு ஜென்மங்கள் இல்லாதவரானதினால், சிருஷ்டி பூர்வம் அவருக்கு தந்தை இல்லை என்று சொல்லலாம், அவர் யாருக்கும் பிறக்கவில்லை என்று சொல்ல முடியும். சிருஷ்டியை சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தா விஸ்வத்தை சிருஷ்டித்தப்போது தந்தையாக மாறிப் போனார். பிறகு தனித்துவமான கடவுளாக

தன்னுடைய குமாரனான ஆத்மாவை நியமித்ததினால் அவர் தந்தையான கடவுளானார். சிருஷ்டியே இல்லாத பூர்வம் கடவுள் உண்மையாக யாருக்கும் தந்தை அல்ல. அதன் போலவே அவருக்கு யாரும் தந்தை அல்ல.

**(112-4) "கடவுளுக்கு சமமானது எதுவும் இல்லை"** இந்த வார்த்தை சிருஷ்டி பூர்வமுள்ள கடவுளுக்கு பொருந்தும். அதே கடவுளுக்கு இந்த வார்த்தை சிருஷ்டி பிறகு எந்த அளவுக்கு பொருந்தாது. சிருஷ்டி பூர்வம் எதுவும் இல்லை. விஷ்வமே இல்லை, மனிதர்கள், விலங்குகள், கிரகங்கள், பூதங்கள் எதுவும் இல்லாதபோது அவருக்கு (சமானமாக) ஒப்பிட்டு சொல்லுவதற்கு முடியாது. அதனால் வாக்கியத்தில் அவருக்கு சமமானது எதுவும் இல்லை என்று கூறினார். சிருஷ்டி பிறகு கடவுள் தனக்கு சமமான தன்னுடைய குமாரனுக்கு அதிகாரத்தை கொடுத்து தனக்கு சமமாக இருக்கும் படி, தனக்கு சமமாக உலக காரியத்தை செய்வதற்கு, தனக்கு சமமாக கடவுள் போல் இருப்பதற்கு அதிகாரத்தை கொடுத்தார். அப்போது இருந்து கடவுள் சாட்சியாக நின்று போய், கடவுளுக்கு சமமாக ஆத்மாவே மாறி போய் கடவுளாக இருப்பது மட்டுமல்லாமல், 6-102 வாக்கியத்தில் சொல்லியது போல் கடவுள் எல்லாவற்றுக்கும் அதிபதியாக இருக்கின்றார் மற்றும் காரியங்கள் செய்பவராக இருக்கிறார் என்று கூறப்பட்டது.

கடவுளுக்கு சமமாக மற்றொரு கடவுளாக கடவுளே தன்னுடைய ஆணையினால் ஆத்மாவை கடவுளாக செய்தார். கடவுளுக்கு சமமாக இருந்த கடவுள் வந்த பிறகு முதல்

இருந்த கடவுள் ஆடாமல் அசையாமல் நின்று போனதனால், மக்கள் எல்லோரும் கடவுளாக இருக்கின்ற அவரை கடவுளாக சொல்லி அவரையே நம்பினார்கள். மனிதர்கள் எல்லோருக்கும் கடவுளுக்கு சமமாக இருக்கின்ற கடவுள் தெரியுவார் மேலும், உண்மையான தாத்தாவாக இருக்கின்ற கடவுள் தெரிய படவில்லை. இன்று கிரந்தத்தில் எழுதிக் கொண்டது, நம்பியது, ஆராதிப்பது, பெரியதாக சொல்லிக் கொண்டது, இன்று உலகத்தில் காரியங்கள் செய்பவராக, அதிபதியாக இருக்கின்ற கடவுள் தான் என்று தெரிய வேண்டும். இந்த கடவுள் எல்லோரையும் உருவாக்கியதினால் இன்று நமக்கு தெரிந்த, நாம் சொல்லிக் கொண்டிருந்த கடவுளை தந்தை என்று சொல்லிக் கொள்ளலாம். தந்தையாக இருக்கும் கடவுளை சிருஷ்டித்த, சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள், இன்று மௌனமாக இருக்கின்ற கடவுள், நம் தேகத்திலேயே சாட்சியாக இருக்கின்ற கடவுள், தாத்தா என்று சொல்லலாம். நம் தந்தைக்கு தந்தையாக இருக்கின்ற கடவுளை யாராவதும் தாத்தா என்று சொல்ல வேண்டியதுதான். விஷ்வம் எல்லாம் பரவியிருந்து, தேகத்திலும் கூட தாத்தாவாக இருக்கின்ற கடவுள், தேகத்தில் சாட்சியாக இருப்பதினால் அவருக்கு சிருஷ்டி பூர்வம் அவருக்கு பொருத்தமானவர்கள் யாரும் இல்லை என்று சொல்லலாம்.

நான் அதிக தடவை வெளிப்படையாக எனக்கு குர்ஆன் கிரந்தத்தில் 112 ஆவது சூரா எனக்கு மிகவும் பிடித்த சூரா என்று கூறினேன். மேலும் அதில் உள்ள நான்கு ஆயத்துக்கள் எவ்வளவோ மதிப்பானது என்று சொல்லினேன். ஆனால் தாத்தாவாக இருக்கின்ற கடவுள் முக்கியமானால்

தந்தையான கடவுள் உனக்கு முக்கியம் இல்லையா! என்று என்னை சிலர் கேள்வி கேட்கலாம். அதற்கு எங்களுடைய பதில் என்னவென்றால்! தாத்தாவாக இருக்கின்ற கடவுளே மாயம் செய்து தந்தையான கடவுளாக கூட இருக்கிறார் என்று எனக்குத் தெரியும். அதனால் அவர் இவர் இருவரும் ஒருவர்தான் என்று எனக்கு நன்றாக தெரியும். கடவுள் ஒருவராக இருக்கிறார். அவர் மாறுவேடத்தில் தான் **ஆத்மா** என்ற பெயரில் அவரே வந்தார். அதனால் பார்ப்பதற்கு, சொல்லுவதற்கு வெவ்வேறாக இருந்தாலும் **தந்தை, குமாரனும் இருவரும் ஒருவர்தான்.** அதனால் இன்ஜீல் கிரந்தத்தில் யோவான் சுவார்த்தையில் 10 ஆவது அத்தியாயத்தில் இப்படி கூறினார் பாருங்கள்.

**(யோவான் 10-30) "நானும் என் தந்தையும் ஒன்றாக இருக்கிறோம் என்று அவர்களிடம் கூறினேன்"**

என்னும் 14 ஆவது அத்தியாயத்தில் இப்படி கூறினார் பாருங்கள்.

**(யோவான் 14-10) "தந்தையிடம் நானும், என்னில் தந்தையும் உள்ளோமென்று நீ நம்பவில்லையா? நான் உங்களிடம் சொல்லுகின்ற வார்த்தை என்னால் கூறப்படவில்லை. தந்தை என்னில் நிவாசித்துக் கொண்டு தன்னுடைய வேலையை செய்கின்றார்."**

இந்த வார்த்தைகள் கேட்ட பிறகு இரண்டு கடவுள் இருக்கிறார் என்று நம்பாமல் போனால் தவறாகும். இரண்டு கடவுள்கள் ஒருவர்தான் என்று தெரிந்து கொள்ளாமல்

போனால் தவறு தான் ஆகும். இந்த விஷயம் தெரியாதவரை மனிதன் அஞ்ஞானத்திலேயே இருக்கிறான் என்று சொல்லலாம். கடவுளுடைய விஷயம் என்றால் ஞானம் மிக கடினமானது. கடவுளுடைய ஞானம் சுலபமாக அர்த்தமாகாது. கடவுள் 112 ஆவது சூராவில் தன்னுடைய நான்கு வாக்கியத்தினால் தன் பூர்வத்தில் உள்ள நிலையை தெரிவித்தார். அப்படியே ஜிப்ராயிலினால் சிருஷ்டி பிறகு தான் மறைமுகமாக யாருக்கும் தெரியாமல் எப்படி இருக்கிறேன் என்று கூட இறுதி தெய்வ கிரந்தத்தில் எத்தனையோ வாக்கியங்களில் கூறியுள்ளார். எத்தனையோ நூற்றுக்கணக்கான வாக்கியங்களில் வெறும் நான்கு வாக்கியங்களை எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்டோம். அந்த நான்கு வாக்கியங்களை பற்றி விவரித்துக் கொண்டு பார்த்தால் கடவுள் சிருஷ்டி பிறகு எப்படி இருந்தாரோ தெரியும்.

இப்போது சூரா 3 ஆயத்து 18 இல் இருந்த விஷயம் பார்க்கலாம். (3-18) **“அல்லாஹ் தவிர மற்றொரு ஆராதனை செய்ய வேண்டிய கடவுள் இல்லை என்னும், சுயமாக கடவுள், கடவுளுடைய தூதர்கள் மற்றும் ஞானம் தெரிந்தவர்கள் சாட்சியம் கொடுக்கின்றார்கள். அவர் திறன், சம எடையில் இந்த விஷ்வத்தை நிறுத்தி வைத்தார். சர்வ திசையில் இருப்பவர், விவேசனசாலியான கடவுள் தவிர மற்றொருவர் யாரும் ஆராதனைக்கு அருகதை இல்லாதவர்”.** இந்த வாக்கியத்தில் கடவுள் ஒருவர்தான் பூஜைக்கு அருகதை பெற்றவர் என்று சொல்லி அவரையே பெரிய

விவேசனசாலி என்று கூறினார். “விவேசனசாலி” என்றால் அறிவாற்றலில் சிறந்தவர் என்னும் எல்லாவற்றுக்கும் அதிபதி என்று சொல்லப்பட்டது. சொல்லியவர் கடவுள், கடவுள் தூதர்கள், ஞானம் தெரிந்தவர்கள் என்று கூட கூறினார். “அல்லாஹ் தவிர வேறு ஆராதனை செய்யும் தெய்வம் இல்லை என்னும்” கடவுள் தூதர்கள் சொல்லலாம், ஞானம் இருப்பவர்கள் சொல்லலாம். கடவுள் கூட சுயமாக “கடவுள் ஒருவரே ஆராதனைக்குரியவர்” எப்படி கூறினார்? அப்படி கூறினார் என்றால் ஒரு கடவுள் இன்னொரு கடவுளைப் பற்றி பெரியதாக கூறுவது போல் ஆகும் அல்லவா? அந்த வார்த்தை உண்மைதான். வாக்கியத்தில் உள்ள சூட்சும எண்ணத்தை பார்த்தால் முதல் கடவுள் இரண்டாவது கடவுளை பற்றி சொல்லினார் என்று தானே அர்த்தம். “கடவுளே உண்மையான ஆராதனைக்கு அருகதை பெற்றவர்” என்னும் தன்னைப் பற்றி தானே எந்த கடவுளும் கூறிக்கொள்ள மாட்டார். அப்படி கூறினார் என்றால் அவர் இன்னொரு கடவுளேயே தான் தெரிவித்தார் என்று தவறாமல் கூறலாம். தெய்வ கிரந்தத்தில் எழுதிய வாக்கியம் பிரகாரம் சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள், சிருஷ்டி பிறகு அவர் தயார் செய்த கடவுளைப் பற்றி கூறினார் என்று அர்த்தமாகிறது. இந்த விதமாக மற்ற வாக்கியங்கள் கூட சிருஷ்டி பூர்வமுள்ள கடவுளுக்கு வித்தியாசமாக இருப்பதினால் முதல் கடவுள் வேறு, பிறகு கடவுள் வேறு என்று அர்த்தமாகிறது. இரண்டாவது கடவுளை ஆராதனை செய்ய வேண்டும் என்றும், அவரே பெரியவர் என்றும் கிரந்தத்தில் பல இடத்தில் இருப்பதினால் இரண்டாவது கடவுளே உலகமெல்லாம்

பிரச்சாரம் ஆனார் மேலும், முதல் கடவுள் பிரச்சாரம் செய்த கடவுளே மூன்று மத கிரந்தத்தில் ஆராதனை செய்கின்ற கடவுளாக கூறப்பட்டது. எங்களுடைய ரசனையில் **"விஷ்வ வித்யாலயம்"** என்னும் கிரந்தத்தில் கூட முதல் இருந்த கடவுளை அலங்காரமாக வைத்து அவர் உலகத்தில் உள்ள விஷயங்களில் ஈடுபடவில்லை என்னும் உலகத்தையும் ஒவ்வொரு மனிதனையும் நடத்தும் கடவுள் தனித்துவமாக இருக்கிறார் என்னும், உலகத்தை நடத்துவதற்கு முதலில் கடவுளே இரண்டாவது கடவுளை தயார் செய்து, அவரே உங்களுக்கு ஆராதிக்கும் கடவுள் என்று கூறி எழுதினோம். அதே விஷயம் இறுதி தெய்வ கிரந்தம் குர்ஆனில் சூரா மூன்றில் 18 ஆவது ஆயத்தில் சுயமாக கடவுளே மக்கள் ஆராதனை செய்ய வேண்டிய கடவுள் என்று காண்பித்து சொல்லியது போல் இருக்கின்றது. அந்த விஷயம் நான் கூட சொல்லினேன். முதல் கடவுள் எல்லா அதிகாரங்களை இரண்டாவது கடவுளுக்கு கொடுத்து ஆராதனை செய்ய வேண்டும் என்னும் சொல்லியபோது முதல் கடவுளிடம் வேலை என்ன என்னும், அவர் இருந்தாலும் இல்லாதது போல் அல்லவா! என்னும், அப்படிப்பட்ட போது தாத்தாவாக இருந்த முதல் கடவுள் தேகத்தில் சாட்சியாக இருக்க வேண்டிய தேவை எதற்கு வந்தது? இதன் போல நாங்களே கேள்வி கேட்டு, முதல் கடவுள் தேவை என்று கூட சொல்லினோம்.

இன்று உலகமெல்லாம் ஞானம், பக்தி என்றால் அது எல்லாம் எல்லோருக்கும் தந்தையான இரண்டாவது கடவுள் மீது உள்ளது. மூன்று தெய்வ கிரந்தங்களில் கூட

எல்லோருக்கும் தந்தையாக இருக்கின்ற கடவுளை பற்றியே சொல்லப்பட்டது. தாத்தாவான கடவுள் விஷயம் யாருக்கும் தெரியவில்லை என்று சொல்லலாம். மூன்று தெய்வ கிரந்தங்களில் தாத்தாவான கடவுளை பற்றி மிகக் குறைவாக சமாச்சாரம் இருக்கும் போது அது தனித்துவமான பிரச்சாரம் என்னும், முதல் கடவுளுக்கு சம்பந்தப்பட்ட ஞான விஷயம் என்று யாரும் தெரிந்து கொள்ளாமல் போனார்கள். நாங்கள் மூன்று மதத்தில் உள்ள ஞானிகளை கவனித்து பார்த்தோம். இன்று எவ்வளவு பெரிய சுவாமிஜிகளாக இருந்தாலும், எவ்வளவு பெரிய மதப் பெரியோர்களாக இருந்தாலும், குருவுகளாக இருக்கின்றவர்கள், போதிப்பவராக இருப்பவர்கள் இரண்டாவது கடவுளை சொல்கின்றார்கள். சிருஷ்டி பிறகு கடவுளை சொல்கின்றார்கள். சிருஷ்டி முதல் இருந்த கடவுள் பற்றி சொல்லவில்லை. அதனால் அவர்கள் எல்லோருக்கும் மொத்தத்தில் மூன்று மதத்தில் உள்ளவர்களுக்கு “கடவுள்” என்னும் விஷயம் தெரியும், கடவுள் ஒருவர்தான் என்னும் விஷயம் தெரியும், அந்த ஒரு கடவுளை தான் ஆராதனை செய்ய வேண்டும் என்றும் தெரியும். ஆனால் அந்த கடவுள் சிருஷ்டி பூர்வத்தில் இருந்தவரா!, சிருஷ்டி பிறகு இருக்கின்றவரா!! என்ற விஷயம் மட்டும் தெரியாது. சிருஷ்டி பூர்வம் இருந்த கடவுள் அவரே சுயமாக ஆத்மாவை கடவுளாக அறிவிக்கப்பட்டு, ஆத்மாவுக்கு தனக்கு இருந்த எல்லா அதிகாரங்களை கொடுத்து, அவருக்கு சமமாக செய்து மனிதர்கள் எல்லோருக்கும் கடவுளாக இருக்கும்படி செய்தார் என்று தெரிந்து கொள்ளாமல் போனார்கள்.

பிரதம தெய்வ கிரந்தம் பகவத்கீதாவில் 700 சுலோகங்கள் உள்ளது. அதில் கிட்டதட்ட நூறு சுலோகங்கள் முதல் கடவுளைப் பற்றி சொல்லி, மற்ற சுலோகங்கள் எல்லாம் இரண்டாவது கடவுளை பற்றி சொல்லி இருக்கின்றது. அதிக சதவீதம் இரண்டாவது கடவுளைப் பற்றி இருக்கும் போது அவற்றை பார்த்தவர்கள் முதல் கடவுளை பற்றி சொல்லிய சுலோகங்கள் கூட இரண்டாவது கடவுள் சுலோகங்களாக கணக்கிட்டார்கள். பகவத்கீதாவில் முதல் கடவுள் பற்றியும் இரண்டாவது கடவுள் பற்றியும் இருகின்றது போல், இன்ஜீல் என்னும் பைபிள் கிரந்தத்தில் கூட அதிக வாக்கியங்கள் இரண்டாவது கடவுளைப் பற்றி இருக்கும் போது, குறைவான வாக்கியங்கள் முதல் கடவுளைப் பற்றி இருக்கிறது. அந்த விதமாக இறுதி தெய்வ கிரந்தத்தில் கூட வெறும் 10,15 வாக்கியங்களை விட அதிகம் முதல் கடவுளை பற்றி சொல்லவில்லை என்று முதலிலேயே கூறினோம். உதாரணத்திற்கு குர்ஆனில் 112 வது சூராவில் முதல் கடவுளைப் பற்றி நான்கு வாக்கியங்கள் சொல்லி அவற்றின் விவரங்கள் கூட சொல்லினோம். அதன் போலவே இரண்டாவது கடவுளை பற்றி நான்கு வாக்கியங்கள் கூட காட்டினோம். அதில் ஒரு வாக்கியத்தை (3-18) மட்டும் விவரித்து சொல்லினோம். இந்த வாக்கியங்களில் சுயமாக முதல் கடவுள் “இரண்டாவது கடவுள் ஒருவரே ஆராதனைக்கு அருகதை பெற்றவர்” என்று சொல்லியது போல் இருக்கிறது என்று காட்டினோம்.

**(22-66) “உங்களுக்கு ஜீவன் கொடுத்தவர் மற்றும் அவரே உங்களுக்கு மரணத்தை கொடுப்பார். அவரே உங்களை மறுபடி பிறக்க வைப்பார். ஆனால் மனிதன் கடவுளுடைய நன்மையை மறப்பவன்”.**

இந்த வாக்கியத்தில் கடவுள் மனிதனுக்கு ஜீவனம் கொடுத்து பிறந்தற்கு பிறகு அவரே மரணிக்கும் படி செய்வது, மறுபடியும் பிறக்க வைப்பது இந்த காரியத்தை சக்கரம் போல் மறுபடியும் மறுபடியும் நடக்கும் படி செய்கின்றார் என்னும் சொல்லுவதினால் தேகத்தில் காரியம் செய்கின்றவராக வேலை செய்கின்றவரை இரண்டாவது கடவுளை சுலபமாக கிரகிக்கலாம். முதல் கடவுள் எந்த காரியமும் செய்யாதவர், அவர் பார்த்து கொண்டு சாட்சியமாக இருக்கின்றவர் என்று சொல்லிக் கொண்டோம். அதனால் இந்த வாக்கியம் முதல் கடவுளுடையது அல்லவென்று சுலபமாக கிரகிக்கலாம். இந்த விதமாக காரியங்களை செய்கின்றவர் இரண்டாவது கடவுள் என்னும், காரியங்கள் செய்யாதவர் முதல் கடவுள் என்று கிரகிக்க வேண்டும். முதல் கடவுள் இரண்டாவது கடவுளை தயார் செய்து, அதிகாரங்கள் எல்லாம் இரண்டாவது கடவுளுக்கு கொடுத்து, எல்லோரும் அவரையே ஆராதனை செய்யுங்கள் என்று கூறினார். அப்படி ஆராதனை செய்யாமல் போனால் என்னை ஆராதனை செய்யவில்லை என்னும், நான் சொல்லியதை கேட்டு இரண்டாவது கடவுளை ஆராதனை செய்தால் என்னை ஆராதனை செய்வது போல் ஆகும், அதனால் அவருக்கு **மோக்ஷம்** கிடைக்கும் என்று கூறி உள்ளார். இரண்டாவது

கடவுள் உங்களுடைய தேகத்திலிருந்து உங்களுக்கு ஜெனனம் பிறகு மரணம் கொடுத்து மேலும், மரணித்தவனுக்கு உடனே ஜீவனத்தை கொடுக்கின்றேன் என்று சொல்லினார். அவ்வளவு காரியங்கள் செய்தாலும், கடவுளுடைய மென்மையை சிலர்கள் மறந்து போய் கடவுளை சிறிதளவு கூட நினைக்காமல் எல்லா தேவதைகளை ஆராதனை செய்து, அவரையே புகழ்கின்றார்கள் என்று கடவுள் தெரிவித்துள்ளார். இப்போது இன்னொரு வாக்கியம் பார்க்கலாம்

**(29-44) “அல்லாஹ் ஆகாசங்களை, பூமியை உண்மையாக சிருஷ்டித்தார். ஆகாசங்களை பூமியை பரமார்த்தத்தில் சிருஷ்டித்தார் என்று தெரிந்தால் இதில் பெரிய நிதர்சனம் உள்ளது”.**

இந்த வாக்கியம் கூட தந்தையான இரண்டாவது கடவுளுடைய நோக்கத்தில் சொல்லியது என்று தெரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு அர்த்தம் ஆகுவதற்கு “இரண்டாவது கடவுள்” என்று கூறுகிறோம். ஆனால் எல்லோரும் ஆராதனை செய்வது இரண்டாவது கடவுளை. தாத்தாவாக இருக்கின்ற முதல் கடவுள் ஆதியில் ஆகாசத்திலிருந்து பூமி வரை உலகத்தை சிருஷ்டித்தார் அல்லவா! அப்படிப்பட்ட போது ஆகாசத்தை பூமியை உண்மையாக சிருஷ்டித்தவர் முதல் கடவுள் ஆகுவார் அல்லவா! என்று எல்லோரும் கேட்கலாம். அப்படியானால் இந்த வாக்கியம் முதல் கடவுளுக்கு சம்பந்தப்பட்டது அல்லவா! நீங்கள் இரண்டாவது கடவுள் வாக்கியம்

சொல்கின்றீர்களே என்று கேள்வி கேட்கலாம். அதற்கு எங்களுடைய பதில் என்னவென்றால்! முதல் உலகத்தை சிருஷ்டித்தது தாத்தாவாக இருக்கின்ற முதல் கடவுள் தான். சிருஷ்டி பிறகு உலகத்தை, உலகத்தில் உள்ள ஜீவராசிகளை நடத்துகின்றது தந்தையாக இருக்கின்ற இரண்டாவது கடவுள். இங்கு இந்த வாக்கியத்தை நன்றாக கவனித்து பார்த்தால் "ஆகாசங்களை, பூமியை பரமார்த்தத்தில் சிருஷ்டித்தார்" என்று இருக்கிறது. அல்லாஹ் ஆகாசத்தை பூமியை **உண்மையாக** சிருஷ்டித்தார் என்னும் சொல்லி பரமார்த்தத்தில் சிருஷ்டித்தார் என்று கூறியுள்ளார். அதோடு நிறுத்தாமல் தெரிந்தால் இதில் பெரிய **நிதர்சனம்** உள்ளது என்று கூட கூறினார். அதனால் இந்த வாக்கியத்தை பற்றி சிறிது ஆழமாக ஆலோசனை மற்றும் லோசனை கூட செய்ய வேண்டியது இருக்கும். அந்த விதமாக ஆழமாக போய் பார்த்தால் இந்த வாக்கியம் தந்தையாக இருக்கின்ற கடவுளைப் பற்றி சொல்லியது மேலும், தாத்தாவாக இருக்கின்ற கடவுளைப் பற்றி சொல்லவில்லை என்று தெரிந்து போனது.

இந்த வாக்கியங்களில் ஆகாசங்களை, பூமியை என்று கூறினார் அல்லவா! என்று சிலர் கேட்கலாம். ஆகாசங்களை, பூமியை என்று சொல்லிய வார்த்தை உண்மை தான்! அது சிருஷ்டி ஆதியில் சிருஷ்டித்த உலகம் என்றால் "ஆகாசம்" என்று ஒருமையில் கூறியிருப்பார். அதன் போல் கூறாமல் பன்மையில் "ஆகாசங்கள் பூமியை உண்மையாக அல்லது பரமார்த்தமாக சிருஷ்டித்தார்" என்னும் கூறினால் இது

வெளியில் உள்ள ஆகாசம் மேலும், வெளியில் உள்ள பூமி அல்லவென்று தெரிந்து போகின்றது. இதில் நிதர்சனம் உள்ளது என்று சொல்லுவதால் நமக்கு வெளியே தெரிகின்ற பூமி, ஆகாசம் அல்லவென்று அர்த்தமாகிறது. "தரிசனம்" என்றால் தெரிவது என்று அர்த்தம். "நீ" என்றால் அல்ல, இல்லை என்று அர்த்தம். நிதர்சனம் என்றால் தெரிகின்றது அல்லவென்று வாக்கியம் இறுதியில் கூறப்பட்டது. எத்தனையோ ஆதாரங்கள் வாக்கியத்தில் தெரிவித்த மனிதன் வெளியில் உள்ள ஆகாசத்தை, வெளியில் உள்ள பூமியை பற்றி கூறினார் என்னும் நினைத்துக் கொண்டால் அவன் முழுமையாக அஞ்ஞானி என்று சொல்லலாம். உண்மையான ஞான பிரகாரம் பார்த்தால் ஆகாசங்கள், பூமி இரண்டும் மனிதன் தேகத்திலேயே ரகசியமாக தெரியாமல் இருக்கின்றது. இன்னொரு ஆயத்தில் (வாக்கியத்தில்) **"பூமி, ஆகாசங்கள் அவற்றில் நடுவில் உள்ள அனைத்தும் கடவுள் சிருஷ்டித்தார்"** என்று இருக்கிறது. அங்கு கூட ஆகாசங்கள் என்று பன்மையாக இருக்கிறது. பெரிய நிதர்சனம் இருக்கிறது என்றால் தெரியாத எண்ணம் இருக்கிறது அல்லவா, அர்த்தம். அதனால் தெரியாமல் சூட்சுமமான ஞானம் என்ன இருக்கிறது என்னும் பார்த்தால், எங்களுக்கு தெளிவாக கண்ணுக்கு தெரியாமல், புத்திக்கு தரிசனமாக தெரிவது என்னவென்றால்! மனிதனுடைய தேகத்தில் கீழ் உள்ள பாதங்கள் பூமியாக, மேல் உள்ள தலையை ஆகாசங்களாக தெரிகின்றது. தேக உள்பாகத்தில் பிரம்ம நாடியில் ஏழு நாடி மையங்களை, ஏழு ஆகாசங்களாக சொல்லலாம். தலை ஏழாவது ஆகாசமாக இருக்கிறது. தலையில் இருந்து பாதங்கள் வரை ஏழாவது

ஆகாசத்தில் இருந்து பூமி வரை என்று எல்லாம் அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். மனிதனுடைய தேகம் ஆகாசங்கள் பூமி என்று கடவுள் கூறியுள்ளார். மனிதர்கள் தேகத்தை இப்போது தயார் செய்கின்றவர் தந்தையாக இருக்கின்ற கடவுள். தாத்தாவாக இருக்கின்ற கடவுள் ஒன்றும் செய்யாமல் சாட்சியாக இருக்கின்றார். 29-44 வாக்கியத்திலும் கூட வெளியே ஸ்தூல தேகத்திற்கு சொல்லிய விஷயமாக இருந்தாலும் சொல்வதில் சூட்சும ஞானத்தில் சொல்லி உள்ளார். அதனால் “நிதர்சனம்” இந்த சொல் வாக்கியத்தில் சொல்லினார். நிதர்சனம் என்றால் வெளியில் தெரிகின்றது அல்லவென்று மற்றொரு தடவை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த வாக்கியத்தை எத்தனை விதமாகவும் பார்த்தால் மனிதன் தேகத்தை சிருஷ்டிப்பது என்று உள்ளது. மனிதன் தேகத்தை சிருஷ்டித்தவர், மனிதனுக்கு ஜெனனம் மரணம் கொடுக்கின்றவர், அனைத்து காரியங்கள் செய்கின்றவர் தந்தையாக இருக்கின்ற கடவுள் தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இன்று ஹிந்துக்கள் பகவத் கீதாவை, கிறிஸ்தவர்கள் பைபிள் கிரந்தத்தை, முஸ்லிம்கள் குர்ஆன் கிரந்தத்தை படித்தாலும் அதில் உள்ள ஞானத்தை முழுமையாக தெரிந்து கொள்ளாமல் போகின்றார்கள். எந்த வாக்கியம் தந்தையாக இருக்கின்ற கடவுளுடையது, எந்த வாக்கியம் தாத்தாவாக இருக்கின்ற கடவுளுடையது என்று தெரிந்து கொள்ளாமல் போகின்றார்கள்.

இரண்டாவது கடவுளுக்கு சம்பந்தப்பட்ட ஆயத்துகள் இதுவரை விவரித்து சொல்லிக் கொண்டோம். இப்போது

நான்காவது ஆயத்தை பற்றி சொல்லிக் கொள்ளலாம். சூரா 2,ஆயத்து 255 இல் இருக்கின்ற விஷயம் பார்க்கலாம்.

**(2-255) "கடவுள் மட்டும் உண்மையான ஆராதிக்கின்ற தெய்வம் அவரைத் தவிர மற்றொரு ஆராதனை செய்கின்றவர் யாருமில்லை. அவர் சஜீவமானவர், அவர் எல்லாவற்றுக்கும் மூலாதாரம். அவருக்கு சிற்றுறக்கமும் வராது, பூமி ஆகாசத்தில் உள்ள அனைத்தும் அவருடைய ஆதீனத்தில் இருக்கின்றது. அவருடைய அனுமதி இல்லாமல் அவர் முன்னிலையில் சிபாரிசு செய்ய யாரும் இல்லை. அவருக்கு முன் பின் உள்ள சமாச்சாரம் அனைத்தும் அவருக்கு தெரியும். அவர் நினைத்தது தவிர அவருக்கு உள்ள ஞானத்தில் எந்த விஷயமும் அவர் கிரகிக்கும் வரம்பிற்குள் வராது. அவருடைய நாற்காலி பரப்பளவு பூமி, ஆகாசங்களை சுற்றிலும் உள்ளது. பூமியை ஆகாசத்தை காப்பாற்றுவதற்கு அவர் எப்போதும் சோர்வு அடைய மாட்டார்".**

இந்த வாக்கியங்கள் பார்த்தால் நான் சொல்லாமலே நீங்களே, சொல்லியது எந்த கடவுளுக்கானது முடிவு சொல்லுவீர்கள். இங்கு இந்த வாக்கியத்தை கவனித்தால் முதலிலேயே கடவுள் ஒருவர் மட்டும் உண்மையான ஆராதிக்கும் தெய்வம் என்னும் சொல்லி உள்ளார் மேலும், எந்த கடவுள் ஆராதிக்கும் தெய்வமாக இருக்கிறார் என்று முடிவெடுக்காமல் போனதினால் கடவுள் ஒருவர்தான் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் தவிர மனிதர்களுடன் சம்மந்தமில்லாமல் இன்னொரு கடவுள் சிருஷ்டி பூர்வத்திலிருந்து இருக்கிறார் என்று யாரும் தெரிந்து

கொள்ளாமல் போனார்கள். கடவுள் ஒருவரே மனிதர்கள் ஆராதிக்கும் கடவுள் என்னும் கடவுளே சுயமாக இன்னொரு கடவுளைப் பற்றி கூறினார் என்னும் (3-18) வாக்கியத்தில் உள்ளதை கிரகிக்காமல் போனார்கள். அவர்களுடைய புத்திக்குத் தெரிந்தது, வேறவர்கள் சொல்லிக் கேட்டது உண்மைதான் நம்பி கடவுள் ஒருவர் தான் என்ற நம்பிக்கையில் இருக்கின்றார்கள். தாத்தாவாக இருக்கின்ற கடவுள் கூட தந்தையாக இருக்கின்ற ஒரே கடவுள் மீது பக்தி இருக்க வேண்டும் என்னும் வாக்கியத்தில் கூறியுள்ளார்.

(2-255) வாக்கியத்தில் வேலை செய்கின்ற கடவுள் பற்றி சொல்லி உள்ளார். இறுதியில் பூமி ஆகாசத்தை காப்பாற்றுவதற்கு அவர் எப்போதும் சோர்வடைய மாட்டார் என்னும் இருப்பதால் அவர் வேலை செய்யும் கடவுள் என்னும், வேலை செய்தாலும் அவருக்கு சோர்வு இல்லை என்று தெரிந்ததினால் இந்த வாக்கியம் யாரைப் பற்றி கூறியது என்று சுலபமாக தெரிந்து போகின்றது. அவருக்கு சோர்வும், தூக்கமும் வராது என்று கூறினார். தாத்தாவாக இருக்கின்ற கடவுளைப் பற்றி தெய்வ கிரந்தத்தில் சில வாக்கியங்கள் மட்டும் கூறினார். எத்தனை வாக்கியங்கள் கூறினாலும் அவருடைய விஷயம் யாருக்கும் சிறிதளவு கூட அர்த்தம் ஆகவில்லை. அர்த்தமாகுவதற்கு தேவை கூட இல்லை. அந்த கடவுளினால் உபயோகம் இல்லை, லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை. வேலை செய்யாத தாத்தாவாக இருக்கின்ற கடவுள் அமைதியாக தேகத்தில் இருக்கின்ற ஜீவனுடன் சம்பந்தம் இல்லை. ஜீவனுக்கு சம்பந்தம் உள்ளவர், ஜீவன் நிவாசிக்கும் தேகத்தை இரவும் பகலும்

சுவாசையை ஆட வைத்து, தேகத்தில் தெரியாத எத்தனையோ காரியங்களை செய்து, தேகத்தில் ஜீவனுடைய ஜீவனம் நடக்கும்படி செய்கின்றார். ஒவ்வொரு நொடி காலம் தேகத்தில் விழிப்புடன் ஆத்மாவான கடவுள் வேலை செய்கின்றதினால் தேகம் ஆரோக்கியமாக இருக்கின்றது. அதனால் தந்தையாக இருக்கின்ற கடவுளுக்கு சோர்வும், தூக்கம் இல்லை என்று வாக்கியத்தில் கூறினார்.

இறுதி தெய்வ கிரந்தத்தில் குர்ஆனில் தாத்தாவாக இருக்கின்ற கடவுளைப் பற்றி நான்கு வாக்கியங்களை 112 ஆவது சூராவில் பார்த்தோம். அப்படியே அதே கிரந்தத்தில் தந்தையான கடவுளைப் பற்றி சொல்லிய வாக்கியங்கள் பல இருந்தாலும் வெறும் நான்கு வாக்கியங்களை எடுத்துக்கொண்டோம். அது (3-18), (22-66), (29-44), (2-255) வாக்கியங்களை எடுத்து விவரித்து கொண்டோம். எட்டு வாக்கியங்களில் **சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள் மற்றும் சிருஷ்டி பிறகு உள்ள கடவுள்** இருப்பதாக தெரிகின்றது. ஒரு குர்ஆன் கிரந்தத்தில் மட்டுமல்லாமல் மற்ற இரண்டு கிரந்தத்திலும் கூட சிருஷ்டி பூர்வமுள்ள கடவுளை, சிருஷ்டி பிறகு உள்ள கடவுளைப் பற்றி கூறியுள்ளார். பகவத்கீதாவில் கூட நாம் ஆராதனை செய்ய வேண்டிய கடவுளைப் (ஆத்மா) பற்றி, நாம் ஆராதனை செய்ய கூடாத தெரிந்துக் கொள்ள வேண்டிய கடவுளை (பரமாத்மா) பற்றி கூறியுள்ளார். சிருஷ்டி பூர்வமுள்ள கடவுளைப் பற்றி நான்கு சுலோகங்கள், சிருஷ்டி பிறகு உள்ள கடவுளைப் பற்றி பல சுலோகங்கள் இருந்தாலும் வெறும் மூன்று சுலோகங்களை எடுத்துக் கொண்டு விவரித்து கொள்ளலாம்.

ராஜ வித்யா ராஜகுஹ்ய யோகத்தில் 11ஆவது சுலோகத்தில் பார்க்கலாம்.

**அவஜானந்தி மாம் மூடா மானுஷிம் தனு மாஷிரிதம் /**

**பரம்பாவ மஜா நந்தோ மம பூத மகேஸ்வரம் //**

**(பரமாத்மா சாகாரம்)**

**கருத்து:-"மனிதர்களுக்கு கடவுளாக இருக்கின்ற நான் நர தேகத்தை அணிந்து மனிதர்கள் மத்தியில் வந்தால் என்னுடைய நிஜமான நிலையை தெரியாத மனிதர்கள் என்னை ஒரு மனிதனாக எண்ணிக்கொண்டு எல்லோரைப் போல் என்னை அவமானிக்கின்றார்கள்"** என்று கூறினார். இந்த சுலோகத்தில் சொல்லியது இரண்டாவது கடவுளை அல்ல. முதல் கடவுளான பரமாத்மாவை பற்றி கூறினார். சிருஷ்டி பிறகு எல்லா காரியங்கள் தந்தையாக இருக்கின்ற கடவுள் செய்து கொண்டிருக்கும்போது தாத்தாவாக இருக்கின்ற கடவுள் மௌனமாக இருந்து எப்போது பூமி மீது தெய்வ ஞானம் தெரியாமல் போய், தர்மங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது அப்போது மட்டும் மனிதன் போல் பூமி மீது பிறந்து தன்னுடைய தர்மங்களை தெரிவித்துப் போவார். பூமி மீது உள்ள மனிதர்களுக்கு கடவுளுடைய தர்மங்கள் தெரியப்படுத்துபவர் யாரும் இல்லாததால், கடவுளுடைய தர்மம் கடவுளுக்கு தவிர வேறவர்களுக்கு யாருக்கும் தெரியாது என்னும், அதனால் தாத்தாவாக இருக்கின்ற கடவுளே மனிதன் போல் வந்து

மனிதர்களுக்கு தன்னுடைய தர்மங்களை அறிவிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

**கேள்வி:-நீங்கள் இதற்கு முன்பு "சிருஷ்டியை விட முன் இருந்த கடவுள் எந்த வேலை செய்யாதவராக சிருஷ்டி பிறகும் இருந்தார்" என்று சொல்லினீர். இப்போது என்னமோ அதே கடவுள் மனித உருவத்தில் வந்து மனிதர்களுக்கு தன்னுடைய ஞானத்தை போதித்தார் என்று சொல்கின்றீர். சிருஷ்டிக்கு முதல் இருந்த கடவுள் சிருஷ்டி பிறகு ஓய்வு பெற்றதாக அவர் வேலையை நிறுத்திவிட்டு சிறிதளவு கூட வேலை செய்யாதவராக இருப்பேன் என்னும் நிர்ணயித்துக் கொண்டு தன்னுடைய வேலையை, அல்லது அவருடைய பதவியை, அல்லது நிலையை தனக்குப் பிறகு தன்னுடைய குமாரனுக்கு ஒப்படைத்து, தன்னைப்போல் தன் குமாரனான ஆத்மா கடவுளாக இருக்கும்போது, மக்களுக்கு தான் தாத்தாவாக இருக்கும் போது தன் குமாரனான ஆத்மா தந்தையாக இருக்கின்றார். பரமாத்மாவான தான் மக்கள் எல்லோருக்கும் தாத்தாவாக தன்னுடைய குமாரன் மக்கள் எல்லோருக்கும் ஒரு பக்கம் கடவுளாக இருந்து, மற்றொரு பக்கம் காரியங்கள் செய்கின்றவராக இருக்கிறார் என்று அர்த்தமாகின்றது. மக்கள் எல்லோருக்கும் ஆத்மா தந்தையாக இருக்கும்போது, பரமாத்மா தாத்தாவாக இருக்கிறார் என்னும் நீங்களே சொல்லினீர். தாத்தாவாக இருக்கின்ற பரமாத்மாவான கடவுள் எந்த வேலை செய்யாதவராக இருக்கும்போது மறுபடியும் மனிதனாகப் பிறந்து தன்னுடைய தர்மங்களை தெரிவிப்பார் என்று நீங்கள்**

**இப்போது சொல்கின்றீர். அப்படி செய்தால் தாத்தாவாக இருக்கின்ற கடவுள் கூட என்றால் பரமாத்மா கூட வேலை செய்ததாக ஆகும் அல்லவா! அப்படிப்பட்ட போது "வேலை செய்யாதவர்" என்று பரமாத்மாவை முதல் எதற்கு சொல்லினீர்? "கிரிய ரஹீதுடு" (வேலை செய்யாதவர்) என்னும், சொல்லிய நீங்களே அதே கடவுளை "கிரிய சஹிதுடு" (வேலை செய்கின்றவர்) என்னும், சொல்வது தவறாகும் அல்லவா! இதற்கு நீங்கள் என்ன சொல்கின்றீர்?**

**பதில்:-**தாத்தாவாக இருக்கின்ற கடவுள் "வேலை செய்ய மாட்டார்" என்று சொல்லிய வார்த்தையில் அப்போதும் இப்போதும் கூட உறுதியுடன் இருக்கிறோம். உங்களுக்கு நான் இரண்டு விதமாக பேசியது போல், அசத்தியம் கூறியது போல் அர்த்தமாகி இருக்கும். ஆனால் நான் எப்போதும் அசத்தியத்தை பேசாமல் சத்தியத்தை பேசியது போல் மற்றொரு தடவை சொல்கின்றேன். தேகத்தில் காரிய கர்த்தா ஆத்மாவாக இருக்கின்ற கடவுளுக்கு ஒரு நொடி கூட இடைவேளை இருக்காமல் வேலை இருக்கின்றது. மேலும் அவர் ஒவ்வொரு மனிதன் கர்ம பிரகாரம் அவனை நடத்துவார். பரமாத்மாவான கடவுள் தன்னுடைய குமாரனான ஆத்மா தேகத்தில் வேலை செய்வதை பார்த்துக் கொண்டு இருப்பார். ஆத்மா ஜீவாத்மாவை கர்ம பிரகாரம் நடத்த வேண்டும் என்னும் நியமம் பிரகாரம் நடத்துவதில் அஞ்ஞானம் பிரகாரம் மனிதனை அஞ்ஞானத்திலேயே நடத்த வேண்டியது இருக்கும். மனிதன் ஆர்வத்தை பொறுத்து அவன் செய்து கொண்ட கர்மாவை பொறுத்து மனிதன் அஞ்ஞானம்

மார்க்கத்தில், அஞ்ஞான வேலைகளிலேயே அஞ்ஞானியாக நடந்து கொள்ளுவான். அப்படி ஆத்மாவே அவனை நடத்துகின்றது. எப்போதும், எந்த சந்தர்ப்பத்திலும் ஆத்மா சுயமாக நடந்துக் கொள்ளாமல் அவருடைய ஆர்வத்தை பொறுத்து கர்மத்தை பொறுத்து அவனை எந்த மார்க்கத்தில் நடத்த வேண்டுமோ அந்த மார்க்கத்திலேயே நடத்திக் கொண்டு, கஷ்ட சுகங்களை அடையும்படி செய்கின்றது. இந்த விதமாக மனிதனுடைய எண்ணத்தைப் பொறுத்து அவனுடைய கர்மத்தை பொறுத்து அதிகமாக அஞ்ஞானத்திலேயே ஆத்மாவான கடவுள் அல்லது தந்தையான கடவுள் நடக்க வைக்கின்றார். மனிதன் வாழ்வதில் தந்தையாக இருக்கின்ற கடவுள் ஈடுபாடு தவிர, தாத்தாவான பரமாத்மா ஈடுபாடு எதுவும் இல்லை. ஆத்மா மனிதனுடைய கர்மத்தை புத்தி இஷ்டத்தை (ஆர்வத்தை) பொறுத்து நடத்துவதால் ஆத்மாவான கடவுளே சுயமாக மனிதனை அஞ்ஞானம் பக்கம் நடத்த வேண்டியது இருந்தது. அப்படி நடத்தியதினால் சிறிது காலத்திற்கு மனிதனுக்கு கடவுள் ஞானம் சிறிதளவு கூட தெரியாமல் போனது. அப்படி ஞானம் தெரியாமல் போனதனால் பூமி மீது கடவுளுடைய தர்மங்கள் குறைந்துவிடும். எப்போது கடவுளுடைய தர்மம் தெரியாமல் போகின்றதோ அப்போது அவற்றை தெரிவிப்பவர் யாரும் இல்லாமல் போகின்றான். கடவுளாக இருக்கின்ற ஆத்மா மனிதர்கள் ஜீவனம் நடத்துவதிலேயே லக்னமாகி ஒரு நொடி கூட ஓய்வில்லாமல் இருக்கின்றது. மற்றும் மனிதனை அஞ்ஞானம் பக்கம் நடத்தி ஆத்மாவே தெய்வ தர்மங்களுக்கு எதிர்ப்பாக மனிதர்களை நடத்துகின்றது. அப்படி தயாரான

மனிதன் ஜென்ம ஜென்மத்திற்கு முழுமையாக அதே நிலைக்கு போவதினால் காலம் கடந்து கொண்டிருக்கும்போது அதர்மம் விளைவுகள் அதிகமாகும். அதன் போலவே தர்மங்கள் எது என்று தெரியாத மனிதன் தர்மங்கள் முழுமையாக மறந்து போவான். அதனால் அதர்மம் நடைமுறை அதிகமாகும், தர்மம் நடைமுறை சிறிதளவு கூட இல்லாமல் போகும்.

அப்படிப்பட்ட நிலையில் ஆத்மா தர்மங்களை பற்றி தெரிவிக்காது. அப்போது அதுவரை வேலை இல்லாத பரமாத்மாவே தன்னுடைய தர்மங்களை பற்றி மனிதர்களுக்கு தெரியப்படுத்த வேண்டியது இருக்கும். அந்த வேலைக்காக கடவுள் பக்கத்தில் இருக்கிறார் என்னும் இல்லாமல் போனால் பரமாத்மாவான கடவுள் இருக்க வேண்டிய தேவை இல்லை என்னும், மனிதர்களுக்கு கூட கடவுள் தேவையில்லை என்று சொல்லலாம். ஆனால் தாத்தாவாக இருக்கின்ற பரமாத்மா கடவுள் வேலை செய்யாதவராக இருக்கின்றார், மேலும் கடவுள் செய்ததாக யாருக்கும் தெரியாமல் கடவுளே தன்னுடைய ஞானத்தை, தன்னுடைய தர்மங்கள் பூமி மீது மனிதர்களுக்கு சொல்ல வேண்டியது இருக்கும். கடவுளுடைய தர்மங்கள் கடவுளைத் தவிர வேறவர்கள் யாரும் தெரியப்படுத்த மாட்டார்கள். எனவே வேறவர்கள் அல்ல கடவுளே சொல்ல வேண்டியது இருக்கும். கடவுள் எந்த வேலையும் செய்ய மாட்டார், யாரிடமும் பேச மாட்டார் என்னும் முதலிலேயே சொல்லிக் கொண்டோம். அப்படிப்பட்ட போது எப்படி தெரியப்படுத்துகின்றார் என்பது கேள்வியாக நின்று போனது. இப்படிப்பட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்கு

கடவுள் முதலிலேயே திட்டத்தை தயார் செய்து வைத்துக்கொண்டார். அந்த திட்டம் என்னவென்றால்! அவர் சொல்லியது போல் யாருக்கும் தெரியாமல் அவரே மாறு வேடத்தில் வந்து தன்னுடைய விஷயங்களை சொல்லி போவது மார்க்கமாக வைத்துக் கொண்டார். அந்த மார்க்கம் ஏற்றுக்கொள்ளும் போது அவர் மனிதர்களில் இணைந்து போகும்படி மனிதனாக மாறுவேடத்தில் வந்தால் அவருக்குத் தவிர யாருக்கும் தெரியாத தர்மங்கள் அவரே சுயமாக சொல்லலாம். அப்படியே மாறு வேடத்தில் சொல்லுவதினால் அவர் சொல்லியது போல் யாருக்கும் தெரியாது. யாருக்கும் தெரியாத போது அவர் பேசியது போல் இருக்காது.

**கேள்வி:-சாட்சியாக தேகத்தில் அமைதியாக இருக்கின்ற கடவுள் மனிதன் அவதாரத்தில் பகவானாக வந்தால் அப்போது பரமாத்மாவான கடவுள் தேகத்தில் சாட்சியாக இல்லாதது போல தானே! அப்போது தேகத்தில் மொத்தம் மூன்று ஆத்மாக்கள் மட்டுமல்லாமல் ஜீவாத்மா, ஆத்மா இரண்டு ஆத்மாக்களே இருக்கும் அல்லவா! பரமாத்மா இருக்க மாட்டார் அல்லவா! அப்படிப்பட்ட போது ஒவ்வொரு தேகத்திலேயும் எப்போதும் எந்த நேரத்திலும் மூன்று ஆத்மாக்கள் இருக்கும் என்னும் சொல்லிய உங்கள் வார்த்தை அசத்தியம் ஆகும் அல்லவா! என்று கேட்கிறோம். இதற்கு நீங்கள் என்ன கூறுகிறீர்கள்.**

**பதில்:-**நீங்கள் சந்தர்ப்பத்தின் பிரகாரம் கேட்கவேண்டிய கேள்வியே கேட்டீர்கள். அதற்கு நான் என்ன சொல்கின்றேன் என்றால், கடவுள் திருடன் போல் பகவானாக தேகம்

அணிந்து வந்தார். ஒரு தேகம் அணிந்து வருவதற்கு கடவுளின் கோடிக்கணக்கான அம்சத்தில் ஒரு அம்சம் மட்டுமே கடவுள் மனிதன் தேகம் அணிந்து வரும். கடவுள் மனிதன் தேகம் அடைந்து மனிதன் போலவே வேலை செய்வதினால் அவரை பகவானாக அடையாளிக்க முடியாது. கடவுள் மனிதன் போல் வரும்போது அந்த மனிதனை “பகவான்” என்று சொல்லலாம். பகவான் 25 பாகங்களாக தேகத்துடன் இருக்கின்றவர், மேலும் அவரை கடவுள் என்று சொல்வதற்கு வாய்ப்பில்லை. கடவுளின் கோடிக்கணக்கான அம்சங்களில் ஒரு அம்சத்துடன் வந்த பகவான் கடவுள் அல்ல என்னும், பல அம்சங்கள் இருக்கின்ற பரமாத்மா ஒரு அம்சம் உள்ள பகவான் அல்லவென்று சொல்லலாம். அதனால் பரமாத்மா பரமாத்மாவாகவே இருந்து பகவானாக பூமி மீது வந்து பேசி தன்னுடைய தர்மங்களை தெரிவிக்கின்றார். அப்படி செய்வதினால் பரமாத்மா தேகத்திலேயே இருக்கிறார் என்று சொல்லலாம். கடல் கடல் ஸ்தானத்திலேயே இருக்கும். எனவே கடலில் இருந்து ஒரு சொட்டு தண்ணீர் காற்றுக்கு தண்ணீர் தூரல் போல் வெளியே வந்தது என்று நினைத்துக் கொள்ளலாம். அப்போது அந்த தண்ணீர் சொட்டை கடல் என்று சொல்ல மாட்டோம். தண்ணீர் சொட்டு தான் என்று தனித்துவமான பெயரில் அழைப்போம். ஆனால் அந்த தண்ணீர் சொட்டு முதலில் கடலில் உள்ளது தான் பிறகு வெளியில் வந்து தண்ணீர் சொட்டாக அழைக்கப்படுகின்றது. அந்த தண்ணீர் சொட்டு ஏதோ ஒரு ரகமாக கடலில் கலந்து போனால் அப்போதும் அது கடலாகவே அழைக்கப்படும். கடலில் இருப்பது நீர்தான்,

தண்ணீர் சொட்டில் இருப்பதும் நீர்தான் எனினும் அதனால் அவற்றை வெவ்வேறாக இருக்கும் போதும் கூட இரண்டையும் நீர் தான் என்று சொல்லலாம். நீர் சொட்டானதினால் அதற்கு, கடலில் உள்ள தண்ணீருக்கு ஒரே தர்மம் இருக்கிறது என்று சொல்லலாம். அந்த விதமாகவே தாத்தாவாக இருக்கின்ற கடவுளுக்கு அவரில் இருந்து வெளியே மாறுவேடத்தில் மனிதனுடைய தேகத்தை அணிந்து வந்த பகவானுக்கு சிறிதளவு கூட வித்தியாசம் இல்லை என்னும், இருவரும் ஒருவர்தான் என்று சொல்லலாம். நீர் ஒன்றானாலும் கடல் வேறு, தண்ணீர் சொட்டு வேறு என்பது போல் பரமாத்மா பகவான் வெவ்வேறாக இருந்தாலும், இருவரும் ஒருவர்தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். கடல் தண்ணீர் சொட்டை உதாரணமாக எடுத்துக் கொண்டது போல் பரமாத்மாவையும் பகவானையும் வெவ்வேறாக சொல்லலாம். தண்ணீர் சொட்டு வேறாக இருக்கும் போது கூட கடல் இருக்கும் இடத்தில் உள்ளது போல் பரமாத்மா (கடவுளிலிருந்து) பகவான் வெளியில் வரும்போது கூட பரமாத்மா தன்னிடத்திலேயே இருக்கிறார். அதனால் தர்ம சமஸ்தாபனத்திற்காக பரமாத்மா பகவானாக வந்தால் அவர் பரமாத்மாவாகவே தேகத்தில் சாட்சியாக இருப்பார். அப்போது மனிதர்கள் அவரை அடையாளித்தால் பெரிய அதிர்ஷ்டக்காரர்கள் தான் என்று சொல்லலாம். எதற்கு என்றால்! தாத்தாவாக இருக்கின்ற கடவுள் பகவானாக வந்த போது அவரை மனிதர்கள் கண்டுபிடிக்க முடியாது. அவ்வளவு கடினமான வேலையை, யாருக்கும் சாத்தியமாகாத பகவானை அடையாளிப்பது நடந்தால் அந்த ஜென்மத்திலேயே அவருக்கு உள்ள கர்மம்

எல்லாம் எரிந்து போய் சுலபமாக மோக்ஷம் கிடைக்கும். இந்த விஷயத்தை பகவத்கீதாவில் ஞான யோகத்தில் ஒன்பதாவது சுலோகத்தில் இந்த விதமாக கூறினார் பாருங்கள்.

**சுலோகம்:- 9.**

**ஜென்ம கர்மசமே திவ்யமேவம் யோ வேத்தி தத்துவத்தஹ /**

**த்யக்த்வா தேகம் புனர்ஜென்மனைதி மாமேதிசோஅர்ஜுனா! //**

**(சாகாரம் நிரகாரம்)**

**கருத்து:-"நான் மனிதன் அவதாரத்தில் பூமி மீது வந்த போது என்னுடைய திவ்யமான வேலையை தெரிந்து, நான் பகவானாக வந்தேன் என்னும் கிரகித்துக் கொண்டவன் மரணித்த பிறகு வேறு ஜென்மத்திற்கு போக மாட்டான். அவன் நேராக என்னில் ஐக்கியமாகுவான்".**

இந்த விதமாக கடவுளே பகவானாக இருக்கும்போது சுயமாக கூறினார். இங்கு மட்டுமல்லாமல் மற்ற இரண்டு தெய்வ கிரந்தத்தில் கூட குறிப்பாக இந்த விஷயத்தை கூறியுள்ளார். இந்த சுலோகத்தை நன்றாக கவனித்தால், தெரிகின்ற பகவானாக வந்தவர் தாத்தாவாக இருக்கின்ற கடவுள் தான் என்னும் தெரிந்த போது தவறாமல் அவரை நமஸ்கரிப்பார்கள். தெரிந்தால் மோக்ஷம் கிடைக்கும் என்னும் மேலுள்ள சுலோகத்தில் கூறினார். இங்கு சொல்லியதைப் பற்றி சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள் சுயமாக பூமி மீது அவதரித்து தன்னுடைய ஞானத்தை சொல்லிப் போகின்றார்

என்று அர்த்தம் ஆகின்றது. அவர் அதன் போல சுயமாக ஞானத்தை சொல்லிப் போனாலும் அவர் பகவானாகவே தெரியப்படுவார். மேலும் கடவுள் வந்து போதிக்க வேண்டிய வேலையை செய்தார் என்னும் சொல்வதற்கு ஆதாரம் இல்லை. ஆதாரங்கள் யாருக்கும் காட்ட முடியாது. ஒருவேளை வந்தவர் தாத்தாவாக இருக்கின்ற கடவுளே என்னும் தெரிந்தாலும் வேற அவர்களுக்கு சொல்லி நம்ப வைக்க முடியாது. இந்த சுலோகம் தாத்தாவான பரமாத்மாவை பற்றி கூறப்பட்டது. தந்தையான கடவுளை பற்றி சொல்லியது அல்ல. இந்த விதமாக தாத்தாவான பரமாத்மாவை பற்றி சொல்லிய சுலோகங்கள் சிலது மட்டும்தான் இருக்கிறது. இப்போது நாம் நான்கு சுலோகங்களை சொல்லிக் கொள்ளலாம். அதில் ஒரு சுலோகத்தை பற்றி சொல்லினேன். இப்போது பகவத்கீதா ஞான யோகத்தில் 7,8 ஆவது சுலோகங்களை சொல்லிக் கொள்ளலாம்.

**சுலோகம்:- 7. யதா யதாஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத!/**

**அப்யுத்தானமா தர்மஸ்ய ததாத்மாநாம் ஸ்ரு ஜாம்யஹம் //**

**கருத்து:-“எப்போது பூமி மீது தர்மங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது அதர்மங்கள் வளர்கின்றதோ அப்போது நான் அவதரிக்கின்றேன்”**

**சுலோகம்:-8.பரித்ராணாய சாது நாம் வினாசாயச**

**துஷ்க்ருதாம் /**

**தர்ம சம்ஸ்தாபனார்த்தாய ஸ்ம்பவாமி யுகே யுகே //**

**கருத்து:-"சாது ஜனங்களை அபிவிருத்தி செய்வதற்கு துஷ்ட மக்களை என்றால் அஞ்ஞானிகளை இல்லாமல் செய்வதற்கு, கெட்டவர்களை மாற்றி நல்லவர்களாக செய்து தர்ம சம்ஸ்தாபனம் செய்வதற்கு யுக யுகத்திலேயும் நான் வர வேண்டியது இருக்கிறது"**

இந்த விதமாக தாத்தாவான பரமாத்மா என்று சொல்லப்படும் கடவுள் அவர் சொல்லிய தவ்ராத் கிரந்தத்தில் (பகவத்கீதா கிரந்தத்தில்) போதித்து உள்ளார். இந்த விதமாக வெளியே மனிதனாக அவதரித்து போதிப்பவர் சிருஷ்டி பூர்வமுள்ள கடவுளே என்று தெரிகின்றது. சிருஷ்டி பிறகு கடவுள் தேகத்தில் காரியத்தை நடத்துவதற்கு, தன்னை கடவுளாக ஆராதனை செய்தால் அவனுடைய கர்மத்தை மன்னிப்பதற்கு, இல்லாமல் செய்வதற்கு மட்டும் இருக்கிறார் தவிர அவர் அவதரித்து போதிக்கும் வேலை செய்வதில்லை. பரமாத்மாவான கடவுளே இரண்டு விதமான பாத்திரங்களை அணிகின்றார். ஆத்மாவான கடவுள் ஆர்வம் கொண்டவனுக்கு தேகத்திலேயே ஞானத்தை அர்த்தமாகும் படி செய்கின்றார். மேலும் ஆர்வம் இல்லாதவனுக்கு அஞ்ஞான மார்க்கத்தில் போகும்படி செய்கின்றார். தேகத்தில் உள்ள ஜீவன்களை பொறுத்து விதிகளை (வேலைகளை) நடத்துவதன் மூலம் சுயமாக அவரே அஞ்ஞானத்தை அபிவிருத்தி செய்தது போல் இருக்கின்றது. அஞ்ஞானம் மனிதர்களில் அபிவிருத்தி ஆகிக் கொண்டிருக்கும்போது அதர்மங்கள் முறை அதிகமாகிவிடும். அந்த கணக்கு

பிரகாரம் தேகத்தில் தந்தையாக இருக்கின்ற கடவுள் மனிதன் விருப்பத்தை பொறுத்து அஞ்ஞானத்தை வளர்த்துவது அதனினால் அதர்மங்கள் தயாராகின்றது. அவற்றை அல்லவென்று கண்டித்து தர்மங்களை போதிப்பதற்கு தாத்தாவாக இருக்கின்ற கடவுளுக்கு தேவை இருக்கின்றது. அப்படி தர்மசம்ஸ்தாபன செய்யும் வேலை இல்லாமல் போனால் மக்கள் அதர்மங்களை விட்டு வரமாட்டார்கள். அவர்களுக்கு கடவுளுடைய தர்மங்கள் தெரியாது.

தேகத்தில் ஆத்மாவாக இருக்கின்ற கடவுள் தேகத்தில் தன்னுடைய வேலையை நிர்வகிப்பதை தவிர வெளியே தர்மங்கள் தெரிவிப்பது, ஞானத்தை போதிப்பது செய்யவில்லை. தந்தையான கடவுள் தேகத்தில் மனிதர்கள் கர்மத்தை பொறுத்து நடந்து கொண்டு ஜீவனுக்கு கஷ்ட சுகங்களை கொடுக்கும். அதன் போலவே அவனுடைய ஆர்வத்தை பொறுத்து ஞானம், அஞ்ஞானம் கொடுக்கின்றது. மனிதர்கள் ஆர்வம் ஞானம் மீது குறைவாக, அஞ்ஞானம் மீது அதிகமாக இருப்பதினால் தன்னுடைய கடமை பிரகாரம் அவருடைய ஆர்வத்தை பொறுத்து அவருக்கு எது இஷ்டமாக இருந்தால் அதையே கொடுப்பார். மனிதர்கள் ஆர்வம் அஞ்ஞானம் மீதே இருப்பதினால், ஆத்மாவான கடவுள் அஞ்ஞானத்தையே கொடுப்பார். மனிதன் அஞ்ஞானத்தினால் அதர்மங்கள் அபிவிருத்தி ஆகின்றது. ஒரு கணக்கில் சொல்லினால் தந்தையான கடவுளே மனிதனுடைய விருப்பத்தை பொறுத்து அதர்மங்கள் அபிவிருத்தி ஆகும்படி செய்கின்றார். அதுவரை சிறிதளவு கூட வேலையில்லாத தாத்தாவான கடவுள் ஆத்மாவினால் அபிவிருத்தியான

அதர்மங்களை இல்லாமல் செய்ய வேண்டிய கடமையை செய்து யாருக்கும் தெரியாமல் பூமி மீது மனிதன் போல் அவதரித்து மறுபடியும் தர்ம பிரதிஷ்டாபன செய்கின்றார். இதெல்லாம் ஒரு வித்தியாசமாக இருக்கிறது அல்லவா!

நமக்கு எப்படி இருந்தாலும் நடக்க வேண்டிய வேலை மட்டும் அதுதான். இங்கு சொல்லிய நான்கு சுலோகங்கள் பரமாத்மாவை பற்றி என்றால் தாத்தாவான கடவுளைப் பற்றி சொல்லியது என்று தெரிய வேண்டும். இப்படிப்பட்ட சுலோகங்களில் தாத்தாவாக இருக்கின்ற கடவுளைப் பற்றி சொல்லிய சுலோகங்கள் பகவத்கீதாவில் கூட சிலது மட்டும் இருக்கின்றது. தந்தையாக இருக்கின்ற கடவுளைப் பற்றி சொல்லிய சுலோகங்கள் அதிகமாக இருக்கின்றது. தந்தை தாத்தா வேறுபாடுகள் தெரிந்து கொள்வதற்கு தந்தையான கடவுளைப் பற்றி சொல்லிய சுலோகங்களை மூன்றையும் இங்கு பார்க்கலாம்.

புருஷோத்தம பிராப்த்தியோகத்தில் 14ஆவது சுலோகம்...

**சுலோகம்:-14. அகம் வைஸ்வநாரோ பூத்வா பிராணி நாம் தேக மாஸ்ரீதம்!/**

**பிராணா பானா சமாயுத்தஹா பசாம்மியனம் சதுர் விதம்//**

**கருத்து:-நான் அனைத்து ஜீவராசிகள் தேகத்தில் அக்னி கடவுளாக இருந்து, அவர் தின்கின்ற நான்கு ரகமான ஆகாரங்கள், ஆகாரங்களில் உள்ள சத்துள்ள பொருட்களை கரைந்து போகும் படி செய்கின்றேன்.**

மோக்ஷ சன்யாசி யோகத்தில் 61,65 ஆவது சுலோகங்கள்...

**சுலோகம்:-61. ஈஸ்வரா சர்வ பூதா நாம் குருத்தசே சர்ச்சுனா திருஷ்டதி/**

**பிராமையன் சர்வ பூதாணி எந்திர ரூடானி மாயயா//**

**கருத்து:-அனைத்து ஜீவராசிகள் தேகத்தில் அந்த தேகத்திற்கு, ஜீவன்களுக்கு அதிபதியாக அவருடைய ருதய ஸ்தானத்தில் இருக்கிறேன். ஐஸ் காந்தத்தில் உள்ள சக்தி தெரியாமல் இருந்து ஊசியை அசைப்பது போல், தேகத்தில் உள்ள நான் தெரியாமல் இருந்து அனைத்து ஜீவிகளையும் அசைய வைக்கின்றேன். அதனால் தேகத்தினால் பலவிதமான வேலைகள் நடக்கின்றது.**

**சுலோகம்:-65 மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜி மாம் நமஸ்குரு /**

**மாமே வைஷ்யஸி சத்தியம் தே பிரதி ஜானே பிரியோ ஸிமே//**

**கருத்து:-நீ என்னை நினைத்து. நீ எனக்கு பக்தனாக இருந்து. என்னை மட்டும் வணங்கு. எனக்கு மட்டும் பூஜை செய். அப்படியே செய்யுவதினால் நீ என்னை அடைவாய் இந்த வார்த்தைகள் உண்மையானவை என்று உறுதி அளிக்கிறேன்.**

இந்த விதமாக ஆத்மாவான கடவுள் தேகத்தில் இருந்து, அவர் செய்யும் வேலைகளைப் பற்றி சொல்லி தன்னை நம்பி, தன்னை ஆராதனை செய்தவனை இறுதி

மரணம் சமயத்தில் தன்னிலேயே இணைந்து போகும்படி செய்யுவேன் என்று கூறினார். **மனிதன் ஆராதனை செய்ய வேண்டியது தேகத்தில் உள்ள தந்தையான ஆத்மா கடவுளை தான்.** அதே விஷயத்தை சுலோகத்தில் கூறினார். ஜீவாத்மா சரியான ஞானத்தை தெரிந்து கொண்டு தர்மம் பிரகாரம் நடந்து கொண்ட போது அவனுக்கு உள்ள சஞ்ஜித கர்மம் எல்லாம் எரிந்து போகும். ஞானம் என்னும் அக்னியினால் கர்மம் எல்லாம் எரிந்து போய், அவன் கர்மம் இல்லாத மனிதனாக இருப்பான். கர்மம் இல்லாத மனிதன் மரணித்த பிறகு அவன் மற்றொரு ஜென்மத்திற்கு போக மாட்டான். "ஜெனன மரண சித்தாந்தம்" என்னும் கிரந்தத்தில் நாங்கள் முதலிலேயே 1980 ஆவது வருடத்தில் எழுதப்பட்டுள்ளது, இறுதி மரணத்தில் ஜீவன் ஜென்மத்திற்கு போகாமல் தேகத்தில் தன் ஆத்மாவிலேயே ஐக்கியமாகி போகும். ஜீவாத்மாவில் இணைந்து உள்ள ஆத்மா தனித்துவமாக தயாராகி பரமாத்மாவில் இணைந்து போகின்றது. இந்த விதமாக தேகத்தில் ஆத்மாவாக இருக்கின்ற கடவுள் ஜீவாத்மாவுக்கு பரமாத்மாவுக்கு இடையில் இருந்து தன்னில் சேர்ந்தவனை பரமாத்மாவில் சேர்த்தும். அதனால் ஆத்மா **"என்னால் தான் ஜீவாத்மா பரமாத்மாவிடம் சேர முடியும் என்னும்"** தெய்வ கிரந்தத்தில் ஒரு இடத்தில் கூறியுள்ளார். இதன் போல சுலோகங்களை பகவத்கீதாவில் பார்த்தால் தேகத்தில் ஆத்மாவாக இருக்கின்ற கடவுளைப் பற்றி சொல்லிய விஷயம் தெரியும்.

பகவத்கீதையில் மற்ற சுலோகங்கள் எல்லாவற்றிலும் ஆத்மாவான கடவுளைப் பற்றி சொல்லி உள்ளது. ஆனால் அவற்றை மனிதன் அடையாளிக்காமல் போனான். அதன் போலவே மிகக் குறைவாக இருக்கின்ற பரமாத்மாவின் சுலோகங்கள் பற்றி கூட தெரிந்து கொள்ளாமல் போனார்கள். அதனால் இரண்டு ரகமான பகவத்கீதை சுலோகங்களையும், குர்ஆன் கிரந்தத்தில் உள்ள ஆயத்துகளையும் விவரித்து சொல்லினோம். பைபிள் கிரந்தத்தில் உள்ள வாக்கியங்களை முதலிலேயே சொல்லினோம். யோவான் சுவார்த்தையில் 5ஆவது அத்தியாயத்தில் 20, முதல் 27 வரை உள்ள சமாச்சாரங்களை சொல்லி அங்கு தந்தை, குமாரன் என்னும் ஆரம்பமான வாக்கியங்களை பற்றி சொல்லி அவற்றை சாட்சியமாக மற்ற இரண்டு கிரந்தத்தில் வாக்கியங்களை சொல்லிக் கொண்டோம். இந்த விதமாக ஆழமாக ஞானத்தை தெரிந்து கொண்டால் சிருஷ்டி பூர்வம் கடவுள் உலகத்தை தயார் செய்து பிறகு உலகத்தில் ஜீவராசிகளை சிருஷ்டிப்பதற்கு தன்னில் இருந்து ஆத்மாவை, ஜீவாத்மாவை தயார் செய்தார். தன்னுடைய பிரக்ருதியை, தன்னுடைய ஆத்மாவை, ஜீவாத்மாவை சேர்த்து விஷ்வம், விஷ்வத்தில் உள்ள ஜீவராசிகளை சிருஷ்டித்தார். இந்த விதமாக கடவுள் முதலில் விஷ்வத்தை தயார் செய்வதற்கு 1) பிரக்ருதி, 2) பரமாத்மா, 3)ஆத்மா, 4) ஜீவாத்மாவாக பிரிந்தார். அதில் ஒன்று செயலற்ற ஜீவம் இல்லாத பிரக்ருதி தயாராகி, மூன்று சைதன்யமான ஆத்மாக்கள் தயாரானது. அதனால் சிருஷ்டி ஆதியில் கடவுள் நான்கு பாகங்களாக தயாரானார் என்று சொல்லலாம். சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள் வேறாக, சிருஷ்டி

பிறகு உள்ள கடவுள் வேறாக இருப்பது போல், தெய்வ கிரந்தத்தில் தெரிந்தது. சிருஷ்டி பூர்வமுள்ள பரமாத்மா சுயமாக சிருஷ்டி பிறகு வந்தால், அவரையே கடவுளாக கௌரவிக்க வேண்டும், ஆராதனை செய்ய வேண்டும் என்னும் சொல்லியது போல் இன்ஜீல் கிரந்தத்தில் யோவான் சுவார்த்தையில் 20, முதல் 27 வரை வாக்கியங்களில் உள்ளது. மேலும் இறுதி தெய்வ கிரந்தத்தில் குர்ஆனில் சூரா 3,ஆயத்து 18இல் கூட சுயமாக அல்லாஹ்வே **“அவரை தவிர வேறு ஆராதனை செய்ய வேண்டிய தெய்வம் இல்லை என்னும்”** சொல்லி உள்ளார். அல்லாஹ்வே தன்னைவிட வேறாக இருந்த கடவுளை ஆராதனை செய்ய வேண்டும் என்னும், அவரே மனிதர்களுக்கு உண்மையான கடவுள் என்னும் (3-18) வாக்கியத்தில் சொல்லியது போல் அர்த்தமாகிறது. இன்ஜீல் கிரந்தத்தில் யோவான் 5-20, முதல் 27 வரை, அதன் போலவே குரானில் 3-18 வாக்கியங்களில் மற்றும் பகவத்கீதாவில் ராஜ வித்யா ராஜ குஹ்ய யோகத்தில் 25,34 சுலோகங்களில் தேகத்தில் அதிபதியாக இருக்கின்ற ஆத்மாவையே கடவுளாக ஆராதனை செய்ய வேண்டும் என்னும் சுயமாக கடவுளே சொல்லி உள்ளார்.

மனிதர்கள் மொத்தம் 12 மதங்களாக பிரிந்து இருந்தாலும் அதில் முக்கியமானது, பெரியது மூன்று மட்டும்தான். அதுவே ஹிந்து (இந்து), கிறிஸ்துவ, இஸ்லாம் மதங்கள் என்று கூறப்பட்டுள்ளது. இந்த மூன்று மதங்களுக்குச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவர் ஒவ்வொரு கிரந்தங்களை எங்கள் மத கிரந்தங்கள் என்று சொல்லிக்

கொண்டிருக்கிறார்கள். உண்மையாக அந்த மூன்று கிரந்தங்கள் மத கிரந்தங்கள் அல்ல. அந்த மூன்றும் தெய்வ கிரந்தங்கள். அது எந்த ஒரு மதத்திற்கும் சம்பந்தமில்லை. மூன்று தெய்வ கிரந்தங்கள் சமஸ்த (அனைத்து) மனிதர்களுக்கு சம்பந்தப்பட்டது என்று சொல்லலாம். மூன்று தெய்வ கிரந்தங்களில் கடவுள் ஞானம் சம்பூர்ணமாக உள்ளது. சிருஷ்டியை சிருஷ்டித்த கடவுள் சிருஷ்டியை ஆள்வதற்கு கடவுளை நியமித்து அவரையே ஆராதனை செய்ய வேண்டும் என்னும், அவரை தவிர வேறு யாரையும் ஆராதனை செய்ய கூடாது என்று கூறினார். சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள், சிருஷ்டி பிறகு அவர் வேலை செய்யாமல் தனக்கு பதிலாக தனக்கு பிறந்த, தன் குமாரனான தன்னுடைய ஆத்மாவையே கடவுளாக நியமித்து சர்வ அதிகாரங்கள் அவருக்கே கொடுத்து அவர் எல்லோருக்கும் கடவுள் என்னும் அவரையே ஆராதனை செய்யுங்கள் என்று கூறினார். அப்படி சொல்லி விஷ்வம் எல்லாம் பரவி உள்ள பரமாத்மா வெறும் சாட்சியாக இருந்து விட்டார். அவர் யாருக்கும் எந்த தேவையும் இல்லாதவராக தெய்வ தர்மங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போதும் அதர்மங்கள் மேல் ஓங்கும் போதும் பரமாத்மாவான கடவுள் மனிதன் போல் அவதரித்து தன்னுடைய தர்மங்களை மறுபடியும் மனிதர்களுக்கு தெரியப்படுத்துவார். மனிதன் உருவத்தில் மனிதர்களுக்கு தன்னுடைய தர்மங்களை தெரிவித்த பகவான் மறுபடியும் பரமாத்மாவாகவே மாறிப் போகுவார்.

இதுவரை பூமி மீது உள்ள ஞானிகளுக்கு கடவுளைப் பற்றி சிறிது ஞானம் தெரிந்து இருந்தாலும் **சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள், சிருஷ்டி பிறகு கடவுள்** என்று இரண்டு ரகம் உள்ள கடவுள் தெரியப்பட மாட்டார். இன்று எல்லா மதத்தில் உள்ளவர்கள் “கடவுள் ஒருவர்தான்” இந்த வார்த்தையை சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவர் ஒரு கடவுளை ஆராதனை செய்து கொண்டு இருந்தாலும், பரமாத்மா கடவுளையா? அல்லது ஆத்மா கடவுளையா? இந்த விஷயம் தெரியாது. கடவுள் தாத்தாவாக இருக்கின்ற கடவுளாக, தந்தையாக இருக்கின்ற கடவுளாக இரண்டு ரகமாக பிரிந்து இருக்கிறார் என்னும் ஞானிகள் சொல்லினால், மூன்று மதத்தில் உள்ளவர்களுக்கு தெரியாது. இந்த விஷயம் மூன்று தெய்வ கிரந்தத்தில் சொல்லி இருந்தாலும் யாரும் கிரகிக்கவில்லை. இந்த விஷயம் வெளியில் நன்றாக சொல்லியவரில், என்றால் விவரித்து சொல்லியவரில் ஒருவேளை நாங்கள் முதலாவதாக இருப்போம் என்று நினைக்கின்றோம். என்னுடைய வார்த்தைகளை யாரும் கண்டிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் என்னுடைய எண்ணங்களுக்கு சரியாக இருக்கின்ற வாக்கியங்கள் தெய்வ கிரந்தங்களில் முதலிலேயே எழுதி இருந்ததினால் தைரியமாக நான் இந்த விஷயத்தை வெளியில் சொல்கின்றேன். இதுவரை கடவுள் இருவர் என்னும், ஒருவர் வேலை செய்யாத கடவுள் என்னும், இரண்டாம் அவர் வேலை செய்கின்ற கடவுள் என்னும் சொல்லி சிருஷ்டி பூர்வம் பிறகு கடவுள் தன்னிலிருந்து ஒரு பிரக்ருதியை, இரண்டு ஆத்மாக்களை தயார் செய்தார் என்று கூட சொல்லினோம்.

சிருஷ்டி பிறகு கடவுள் தன்னில் இருந்து பிரிந்த பிரக்ருதி, ஆத்மா, ஜீவாத்மாக்களை மற்றும் தன்னை சேர்த்துக் கொண்டு நான்கு பாகங்களாக தயாராகி இருக்கிறார்.

சிருஷ்டி பூர்வம் கடவுள் கடவுளாகவே ஒருத்தராகவே இருந்தார். அப்போது விஷ்வம் இல்லை என்றால் பிரக்ருதி இல்லை. தன் ஒருவராக கடவுள் இருக்கும்போது அவருக்கு பெயர், உருவம், அப்போது வேலை இருந்தது. அப்போது நாம் இல்லை. மேலும் கடவுளுடைய உருவம் எது எப்படி இருந்ததோ யார் கற்பனைக்கும் கூட எட்டாது. அதன் போலவே பெயர் என்ன இருந்ததோ யாருக்கும் தெரியாது. பலான பெயர் இருக்கலாம் என்று சொல்லவும் முடியாது. அவருடைய வேலையை மட்டும் சொல்லலாம். சிருஷ்டியை தயார் செய்தவர் மேலும் கடவுளை சிருஷ்டி கர்த்தா என்று சொல்லலாம். சிருஷ்டியை தயார் செய்த பிறகு தன் தயார் செய்த ஆத்மாவை விட வேறாக இருக்கின்ற வரை பரமாத்மா என்று அடையாளமாக சொல்கின்றோம். அதன் போலவே இன்று பரமாத்மாவான கடவுளுக்கு உருவம், பெயர், வேலை இல்லை என்று சொல்கின்றோம். சிருஷ்டி பிறகு பரமாத்மாவான கடவுள் பெயர், உருவம், செயலற்ற நிலையில் இருக்கிறார் என்று சொல்கின்றோம்.

சைதன்யமான உலகத்தை சைதன்யமான கடவுளே நடத்த வேண்டும். ஆனால் சிருஷ்டி கர்த்தாவான கடவுள் அவர் சிருஷ்டி பிறகு சைதன்யம் இல்லாதவராக மாறிப் போனார். அதன் போலவே காட்சி வடிவம் கொண்ட உலகத்தை நடத்துவதற்கு தெரியப்படாதவர் உபயோகப்பட

மாட்டார். தெரியப்படுபவர் என்றால் உருவம் கொண்டவர் இருக்க வேண்டும். ஆனால் சிருஷ்டி கர்த்தாவான கடவுள் உருவம் இல்லாதவராக மாறிப் போனார். அப்படியே காரியம் உருவம் கொண்ட உலகத்தை நடத்துவதற்கு காரியம் செய்கின்றவர் வேண்டும். ஆனால் சிருஷ்டி கர்த்தாவான கடவுள் காரியம் செய்யாதவராக மாறிப் போனார். அதனால் உருவம், பெயர், வேலை கொண்ட உலகத்தை உருவம், பெயர், வேலை கொண்ட கடவுளே நடத்த வேண்டும். அதனால் சிருஷ்டி கர்த்தாவான கடவுள் கண்டிப்பாக உலகத்தை நடத்துவதற்கு மற்றொரு கடவுளை உலகத்தை தயார் செய்தது போல தயார் செய்தார். தன்னில் இருந்து பிரித்து எடுத்துக்கொண்ட ஆத்மாவை உலகத்தை நடத்துவதற்கு சரியான கடவுளாக நிர்ணயித்தார். ஆத்மாவை தயார் செய்த சிருஷ்டி கர்த்தா ஆத்மாவை விட வேறாக பரமாத்மாவாக இருப்பதினால் பரமாத்மா உலகத்திற்கு சம்பந்தம் இல்லாத கடவுளாக தயாரானார். உலகத்திற்கு சம்பந்தப்பட்ட கடவுளை விட வேறாக இருந்து உலகத்தில் உள்ள மனிதர்கள் எல்லோருக்கும் “என்னுடைய குமாரனான ஆத்மாவே கடவுள், நான் மட்டும் உங்களுக்கு கடவுள் அல்ல” என்று சொல்லினார். உலகத்தில் உள்ள மனிதர்கள் யாராவது இருந்தாலும் உலகத்திற்கு கடவுளானவரை ஆராதனை செய்ய வேண்டும் என்னும் பரமாத்மாவை ஆராதனை செய்ய கூடாது என்று கூட தெரிவித்தார். பரமாத்மா உலகத்திற்கு சம்பந்தமில்லாதவர் ஆனதினால் பரமாத்மா விஷயம் எந்த மனிதனுக்கும் தெரியாது. பரமாத்மா தந்தையாக இருக்கும்போது, ஆத்மா குமாரனாக

இருக்கின்றார். குமாரன், தந்தை இருவர் கடவுள் தான் என்று சொல்லலாம். அதனை இதுவரை “சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள், சிருஷ்டி பிறகு உள்ள கடவுள்” என்று சொல்லிக் கொண்டோம். தண்ணீருக்கு பாத்திரம் ஆதாரம் ஆகுவது போல் ஆத்மாவுக்கு ஜீவாத்மாவுக்கு, தண்ணீருக்கு பாத்திரம் போல், பிரக்ருதி இருக்கின்றது. தண்ணீருக்கு ஆதாரம் கொண்ட பாத்திரம் தேவையை உணர்ந்த கடவுள் ஆத்மா, ஜீவாத்மாக்கள் தயார் செய்வதற்கு முதலிலேயே பிரக்ருதியை தயார் செய்தார். அதனால் கடவுளிலிருந்து முதல் பிரக்ருதி பிறகு ஆத்மா, அதன் பிறகு ஜீவாத்மா தயாரானது. கடவுள் மூலக்கர்த்தாவாக இருந்து முதலில் பாத்திரமாக பிரக்ருதியை, பிறகு பாத்திரத்தில் தண்ணீராக நின்ற ஆத்மாவை, ஜீவாத்மாவை தயார் செய்தார்.

**கேள்வி:-கடவுள் முதலில் பாத்திரமாக உள்ள பிரக்ருதியை தயார் செய்தார் அல்லவா! அந்த பாத்திரத்தை ஆதாரம் செய்து கொண்டு இருப்பதற்கு தேவைப்படும் ஜீவாத்மாவை தண்ணீரை தயார் செய்து கொண்டு இருந்தால் சரி ஆகிவிடும் அல்லவா! அப்படி அல்லாமல் ஆத்மாவை கூட தயார் செய்து ஜீவாத்மாவுடன் பாத்திரத்திலேயே வைத்தார். அப்போது ஒரே பாத்திரத்திலேயே ஜீவாத்மா, ஆத்மா இரண்டும் இருக்கும். சிருஷ்டி கர்த்தாவான பரமாத்மா கூட தண்ணீராகவே இருக்கின்றதினால் மூன்று ஆத்மாவாக ஏற்படுகின்றது. ஒன்று பரமாத்மா, இரண்டு ஆத்மா, மூன்று ஜீவாத்மா. மூன்று ஆத்மாக்கள் ஒரு பிரக்ருதியில் விஷ்வத்தில் உள்ளது. இவை நான்கு தவிர வேறு ஒன்று எதுவும் இல்லை. பிரக்ருதி**

**ஜீவமில்லாததால், ஜீவமுள்ளவன் ஜீவாத்மா. பிரக்ருதிக்கு ஜீவாத்மாவுக்கு சுயம் சக்தி இல்லை. பிரக்ருதியை, ஜீவனை அசையவைக்கின்றதற்கு சைதன்யம் கொடுப்பதற்கு ஜீவாத்மாவை பிரக்ருதியில் ஆட வைப்பதற்கு ஆத்மாவான கடவுள் தேவைப்பட்டார். ஆத்மாவை கடவுளாக பரமாத்மா செய்து அவர் மூவரையும் பார்த்து சாட்சியாக நின்று போனார். இங்கு ஆத்மா தேவை எதற்கு வந்தது? பரமாத்மாவே ஆத்மா உடைய வேலையை செய்து இருக்கலாம் அல்லவா! என்பது கேள்வி, இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

**பதில்:-**இந்த கேள்வியை சுலபமாக யாராவதும் கேட்கலாம். இது சமயத்திற்கு அனுகூலமாக கேட்க வேண்டிய கேள்விதான். ஆனால் இதற்கு எங்களுடைய பதில் என்னவென்றால்! ஒரு விளையாட்டு விளையாடும் போது அதற்கு ஒரு பக்கம் சிலர், மற்றொரு பக்கம் சிலர் இருப்பது சகஜம். ஒரு புட்பால் விளையாட்டில், கிரிக்கெட் விளையாட்டில், எந்த விளையாட்டிலும் சமமாக இரண்டு பக்கம் விளையாட்டு காரர்கள் இருப்பது சகஜம். “விஷ்வம்” என்னும் ஒரு மைதானத்தில் “ஜெகத்” என்னும் விளையாட்டு விளையாடுவதற்கு ஒரு பக்கம் இருவர் மற்றொரு பக்கம் இருவர் மொத்தம் நான்கு பேர் விளையாட்டுக்காரர்கள் தேவை ஆகும். உதாரணத்திற்கு நான்கு பேர் இணைந்து டென்னிஸ் விளையாட்டு விளையாடுவது பார்த்திருப்போம். அதன் போலவே “ஜெகத் நாடகம்” என்னும் இந்த விளையாட்டில் நான்கு விளையாட்டு காரர்கள் இருக்கின்றார்கள். அவரில்

பிரக்ருதி பரமாத்மா ஒரு பக்கம், ஆத்மா, ஜீவாத்மா மற்றொரு பக்கம் இருக்கிறார்கள். இந்த விளையாட்டில் ஒரு பக்கம் உள்ள பிரக்ருதி பரமாத்மாவில் பிரக்ருதி முன்பு உள்ளது. பிரக்ருதி பின்பு பரமாத்மா இருக்கிறார். அதனால் பிரக்ருதி தெரிந்து கொண்டிருக்கும், பின் உள்ள பரமாத்மா தெரியப்பட மாட்டார். இன்னொரு பக்கம் ஜீவாத்மா, ஆத்மா ஜோடியாக இருக்கிறார். விளையாட்டில் முதல் இருப்பவர் ஜீவாத்மா பின் இருப்பவர் ஆத்மா. அதனால் ஜீவாத்மாவே தெரிவார் ஆத்மா தெரியப்பட மாட்டார். இந்த ஜெகத் என்னும் விளையாட்டில் முதல் இருப்பவர் தெரிவார், பின் இருப்பவர் தெரியப்பட மாட்டார்.

பிரக்ருதி பின் இருக்கும் பரமாத்மா வேலை செய்ய மாட்டார் கடவுளுடைய சங்கல்பம் பிரகாரம் பிரக்ருதி வேலை செய்யும். ஜீவன் பின் உள்ள ஆத்மா, ஜீவன் அனைவருக்கும் கடவுளாக இருக்கின்ற மற்றொரு விதமாக ஆத்மாவே எல்லா வேலையும் செய்கின்றது. ஆத்மா செய்கின்ற வேலை எல்லாம் ஜீவாத்மா செய்வது போது வெளியே தெரியும் போது தன் பின்பு ஆத்மாவே வேலை செய்கின்றார் என்னும் தெரியாத ஜீவாத்மா தானே எல்லா வேலைகளும் செய்கின்றது போல் பிரமிக்கின்றார். பின் இருந்து ஆடவைப்பவர் ஆடுபவர் ஆத்மாவான கடவுள் என்னும் ஜீவன் தெரிந்து கொள்ளாமல் போனான். விஸ்வமென்னும் மைதானத்தில் ஜெகத் என்னும் நாடகத்தில் பிரக்ருதி பக்கம் தாத்தாவான கடவுள் இருப்பார். அதன் போலவே ஜீவன் பக்கம் தந்தையாக இருக்கின்ற கடவுள் இருப்பார். ஒரு பக்கம் உள்ள பிரக்ருதி பரமாத்மாக்களில் பரமாத்மாவை பிரக்ருதி தன்னுடைய

கணவனாக சொல்லிக்கொள்வது நடக்கின்றது. அதன் பிரகாரம் பரமாத்மாவுக்கு பிரக்ருதி மனைவியாக இருக்கிறது என்று சொல்லலாம். மற்றொரு பக்கம் ஆத்மா ஜீவாத்மாகளில் ஜீவாத்மா ஆத்மாவை தந்தையாக சொல்லிக்கொள்வது நடக்கின்றது. அதன் போலவே ஆத்மா ஜீவாத்மாவுக்கு தந்தையாக இருக்கின்றார். இதில் எந்த பக்கம் உள்ளவர்களுக்கு அந்த பக்கம் உறவை வெளிப்படுத்தினோம். இப்போது அந்த பக்கம் உள்ளவர்கள், இந்த பக்கம் உள்ளவருக்கு என்ன ஆகுவார்களோ, இந்த பக்கம் உள்ளவருக்கு அந்த பக்கம் உள்ளவர்கள் என்ன ஆகுவாரோ தெரிந்து கொள்ளலாம்.

பிரக்ருதி பக்கம் இருந்து இரண்டாவது பக்கம் உள்ள ஜீவாத்மா பிரக்ருதிக்கு மகனாக வேண்டும். அதன் போலவே பரமாத்மாவுக்கு ஆத்மா குமாரன் ஆகுவார். தந்தையாக இருக்கின்ற பரமாத்மாவுக்கு இஷ்டமான குமாரன் ஆத்மா, பிரக்ருதிக்கு இஷ்டமான மகன் ஜீவாத்மா என்று தெரிந்து கொள்ள வேண்டும். பகவத்கீதா குணத்ரயவிபாக யோகத்தில் 3,4 சுலோகங்களில் இந்த விஷயமே கூறினார் பாருங்கள்.

**சுலோகம்:-மம யோனிர்மஹத்ப்பிரம்மா தஸ்மின்கர்பம் ததாம்யஹம் /**

**சம்பவ சர்வ பூதாநாம் ததோபவதி பாரத! //**

**(பக்ருதி, பரமாத்மா)**

**கருத்து:-இந்த அசெதன பிரக்ருதி எனக்கு மனைவியாக இருக்கும்போது, அதுக்கு நான் பீஜதாதனாக கணவனாக இருக்கிறேன். எங்கள் இருவருக்கும் அனைத்து ஜீவராசிகள் பிறக்கின்றது.**

**சுலோகம்:-சர்வ யோனிஷீ கௌந்தேய! மூர்தயஹ சம்பவந்தியாஹ /**

**தாசாம் பிரம்மா மஹத்தோனிஹ அகம் பீஜப்பிரதாம் பிதா //**

**(பிரக்ருதி, பரமாத்மா)**

**கருத்து:-எத்தனையோ கர்ப்பங்களில் பிறக்கின்ற அனைத்து ஜீவராசிகளுக்கு தாய் பிரக்ருதி, பீஜதாதனாக நான் தந்தையாக இருக்கின்றேன் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.**

இந்த இரண்டு சுலோகங்களினால் அனைத்து ஜீவிகளுக்கு தந்தை தாய் பரமாத்மா பிரக்ருதி என்று தெரிந்து போனது. ஆனால் பிரக்ருதியான தாய் ஜாடை, தாய் லட்சணங்கள் ஜீவாத்மாவுக்கு அதிகமாக இருப்பதினால் பிரக்ருதி மாதாவுக்கு பிரியமான மகன் ஜீவாத்மா என்று சொல்லலாம். அதன் போலவே பரமாத்மா லட்சணங்கள், ஜாடைகள் ஆத்மாவுக்கு அதிகமாக இருப்பதினால் பரமாத்மாவுக்கு இஷ்டமான மகன் ஆத்மா என்று சொல்லலாம். ஆத்மா என்னுடைய தந்தை பரமாத்மா என்று சொல்கின்றது. ஆனால் ஜீவாத்மாவுக்கு தந்தை ஆத்மா என்று தெரியாது. தாய் பிரக்ருதி என்று தெரியும். அதனால்

தன்னுடைய தந்தையை பற்றி தெரியாதவனாக இருக்கிறான். வெறும் தாய் பிரக்ருதி மட்டும் தெரியும். இது தற்போது உலகத்தில் ஆத்மா, பரமாத்மாவுக்கு ஜீவாத்மா பிரக்ருதிக்கு உள்ள உறவுமுறை என்று தெரிந்தது. இதெல்லாம் பிரதம தெய்வ கிரந்தம் பகவத்கீதாவினால் தெரியப்பட்ட ஞானம். அதே பகவத் கீதாவில் அக்ஷரப்பரப்பிரம்மயோகத்தில் ஞானத்தினால் மற்றும் சேத்ர சேத்ரக்னிய விபாக யோகம் என்னும் அத்தியாயத்தில் ஞானத்தினால் தெரியப்படும் பிரக்ருதியை பரமாத்மாவை, ஆத்மாவை ஜீவாத்மாவை நான்கு பேரை இணைத்து வரைபடமாக காட்டலாம். விஸ்வமென்னும் மேடை மீது ஜெகத் என்னும் நாடகத்தில் பாத்திரங்கள், பாத்திரதாரர்கள் தெரிந்தார்கள் அல்லவா! அது அர்த்தம் ஆகுவதற்கு மனிதன் தேகத்தில் தெரியப்பட்ட ஞானம் பிரகாரம் வரைந்து கொண்டு பார்த்தால் அது ஞானத்திற்கு சமமாக தெரியும். மூன்று ஆத்மாக்கள், ஒரு பிரக்ருதியை வரைந்து பார்க்கலாம். அந்த வரைபடத்தை “கடவுள் சின்னம்” என்று சொல்லலாம். கடவுள் சின்னத்தை “கடவுள் அடையாளம்”, “கடவுள் முத்திரை” என்று கூட சொல்லலாம்.

கடந்த காலத்தில் **“கடவுள் சின்னம்”** என்ற கிரந்தம் எழுதி உள்ளோம். அதில் மூன்று ஆத்மாக்களை ஒரு பிரக்ருதியை வரைந்து காட்டினோம். அந்த வரைபடம் இன்று கடந்த 40 வருடங்களில் இருந்து அர்த்தம் ஆகும் படி வரைபடமாக சொல்கின்றோம், காட்டுகின்றோம். நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு “கடவுள் சின்னம்” இந்த பெயரில் எழுதிய கிரந்தத்தில் “கடவுள் சின்னம்” என்னும் வரைபடம்

எல்லோருக்கும் புதியதாக தெரிந்தது. ஆனால் சிலருக்கு அதில் அதில் உள்ள சாராம்சம் பெரியதாக தோன்றியது. **"கடவுள் சின்னம்", "கடவுள் முத்திரை"** இரண்டும் ஒன்றுதான் என்னும் நாங்கள் பல தடவை கூறினோம். கடவுள் சின்னம் என்றால் கடவுளுக்கு உயர் மதிப்பு உள்ளது என்று அர்த்தம். கடவுள் முத்திரை அல்லது கடவுள் சின்னம் கடவுளுடைய நான்கு பாகங்கள் மற்றும் அதற்கு அனுபந்தமான கர்மம், குணங்கள், காலம் எல்லாம் தெரிகின்றது போல் இருக்கும்.

கடவுள் ஜெகத் நாடகத்தில் கடவுள் பிரக்ருதி ஒரு பக்கம், ஆத்மா ஜீவாத்மா இரண்டும் மற்றொரு பக்கம் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டோம். கடவுள் பக்கம் கடவுள் தெரியவில்லை பிரக்ருதி தெரிகின்றது, ஆத்மா பக்கம் ஆத்மா தெரியவில்லை ஜீவாத்மா இருப்பது போல் தெரிகின்றது. இந்த விதமாக விஷ்வ மேடையின் மீது ஜெகத் நாடகம் ஒரு விளையாட்டாக உள்ளது. இந்த விளையாட்டில் இரண்டு பக்கம் அதிபதிகள் இருக்கின்றார்கள். பிரக்ருதி பக்கம் பரமாத்மா அதிபதி, ஜீவன் பக்கம் ஆத்மா அதிபதியாக இருக்கின்றது. பரமாத்மா பாகத்தில் பிரக்ருதி இருக்கும்போது இப்போது நீ என்றால் ஜீவாத்மா ஆத்மா பக்கம் இருக்கிறாய். உனக்கு அதிபதியாக உன் பக்கம் ஆத்மா இருக்கிறது. அந்த பக்கம் உள்ள பரமாத்மா விஷயம் ஜீவனுக்கு (உனக்கு) சிறிதளவு கூட தெரியாது. எதிராக இருக்கின்ற பிரக்ருதி மட்டும் தெரிகின்றது. அதன் போலவே உன் பின்னால் (ஜீவன் பின்னால்) உள்ள ஆத்மா கூட ஜீவனுக்கு தெரியாமல் போனதனால் ஒரு பக்கம் நான்

மட்டுமே இருக்கிறேன் என்று ஜீவன் நினைத்துக் கொண்டிருக்கிறான். அந்த பக்கம் பிரக்ருதி பின்னால் இருக்கின்ற பரமாத்மாவும் தெரியவில்லை. தன் பக்கம் தன் பின்னால் உள்ள ஆத்மாவும் தெரியவில்லை. எதிராக பிரக்ருதி இயக்கம் இல்லாமல் (ஜடமுக) தெரிகின்றது. இந்த பக்கம் தான் ஒருவனே வேலை செய்கின்றதாக ஜீவன் நினைத்துக் கொண்டிருக்கிறான். தன் பக்கம் எல்லா காரியங்களும் ஆத்மாவே செய்கின்றார் என்ற விஷயம் ஜீவனுக்கு தெரியாது. தன்னுடைய ஈடுபாடு இல்லாமல் வேலை நடக்கின்றது என்னும், ஆத்மாவே எல்லாம் செய்கின்றது என்னும் தெரியாமல் போனதினால் தனக்கு சம்பந்தம் இல்லாத காரியங்கள் அனைத்தும் தானே செய்கின்றதாக நினைத்துக் கொண்டிருக்கிறான்.

ஜெகத் நாடகம் என்னும் விளையாட்டில் இந்த பக்கம், அந்த பக்கம் இரண்டு பக்கத்தில் ஒரு பக்கம் பரமாத்மா பிரக்ருதி இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டோம். பிரக்ருதியின் பின்னால் இருக்கின்ற கடவுள் என்றால் பரமாத்மா சிறிதளவு கூட வேலை செய்யாதவராக இருக்கின்றார். அந்த பக்கமுள்ள பிரக்ருதி கிரகங்கள், பூதங்களினால் வேலை செய்கின்றது. பரமாத்மா வேலை செய்யாதவராக தேவைப்படும் போது பிரக்ருதிக்கு அறிவுரை கொடுக்கின்றவராக இருக்கிறார். உலகத்தில் மனிதர்களுக்கு, விலங்குகளுக்கு அனைத்து ஜீவராசிகளுக்கு ஆத்மாவே கடவுளாக இருக்கின்றார். ஆத்மாவை கடவுளாக இருக்கும்படி பரமாத்மாவே நிர்ணயித்து ஆத்மாவுக்கு அதிகாரத்தை கொடுத்தார். அதனால் மூன்று தெய்வ கிரந்தத்தில்

ஆத்மாவையே கடவுளாக கூறினார். இன்று முஸ்லிம்கள் **அல்லாஹ்** என்று சொல்வதும், கிறிஸ்தவர்கள் **யகோவா** என்று சொல்வதும், ஹிந்துக்கள் **கடவுள்** என்று சொல்வதும் ஆத்மாவான கடவுளை தான். இதெல்லாம் தெரிவதற்கு எழுதிக் கொண்ட வரைபடத்தில் கடவுள் சின்னம் அல்லது கடவுள் முத்திரை என்று சொல்கின்றோம். கடவுள் முத்திரையை விவரமாக தெரிந்து கொண்டால் கடவுளான ஆத்மா விஷயம் ஜீவன் விஷயம் தெரியப்படும். அதன் போலவே மற்றொரு பக்கம் உள்ள பிரக்ருதி பரமாத்மா விஷயம் கூட தெரியப்படும். அதனால் கடவுள் முத்திரையை தெரிந்து கொள்வதற்கும் முயற்சி செய்வோம்.

கடந்த காலத்தில் **"கடவுள் சின்னம்"** என்ற கிரந்தம் எழுதினீர்கள் அல்லவா! அதில் ஞானம் சம்பூர்ணமாக சொல்லினீர்கள் அல்லவா! இப்போது மறுபடியும் புதியதாக சொல்ல என்ன இருக்கிறது? என்று சிலர் கேட்கலாம். அதற்கு என்னுடைய பதில் என்னவென்றால்! உன் தேகத்தில் உள்ள ஆத்மாவே உனக்கு, அனைத்து ஜீவிகளுக்கு மனிதர்கள் எல்லோருக்கும் கடவுளாக இருக்கிறார். மேலும் அதே ஆத்மா மனிதர்களுக்கு காரியங்கள் செய்கின்றவராக கூட இருக்கிறார். ஆத்மா உனக்கு எஜமானாக (ஈஸ்வரனாக) அதிபதியாக உள்ளது. அதே ஆத்மா இன்னொரு விதமாக உனக்கு சேவை செய்கின்றவனாக, காரியங்கள் செய்கின்றவராக, வேலைக்காரனாக இருக்கிறார். ஆத்மா அதிபதியாக இருந்து சேவகனாக இருப்பது ஆச்சரியம்தான். ஆனால் வாஸ்தவமாக நடக்கின்றது, உள்ளது அவ்வளவு தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஆத்மா, ஜீவாத்மா பக்கம் இருப்பதை

தெரிந்து கொண்டால் காலம், கர்மத்தை அனுசரித்து ஆத்மாவே கடவுளாக இருக்கிறது. அதன் போலவே கர்மத்தை அனுசரித்து ஆத்மா சேவகனாக இருக்கிறது என்னும் தெரியும்படி, அந்த விதமாக ஆத்ம ஞானம் அர்த்தமாகுவதற்கு வரைந்த படமே கடவுள் சின்னம். **"கடவுள் சின்னம்"** என்னும் கிரந்தத்தில் தேகம் உள் பாகத்தில் ஏழு ஸ்தானங்கள் அல்லது குர்ஆனில் சொல்லப்பட்ட ஏழு ஆகாசங்களில் இருந்து தெடங்கி கர்மத்தை கர்ம சக்கரமாக, காலத்தை கால சக்கரமாக, ஆத்மாவை பிரம்மநாடியாக, பரமாத்மாவை ஏழு ஸ்தானங்களில் பிரம்ம சக்கரமாக, ஜீவன் ஜீவனுக்கு ஒட்டிக் கொண்டிருக்கின்ற குணங்கள் குணசக்கரங்களாக காட்டப்படுகின்றது. இந்த நான்கு சக்கரத்தில் சுற்றுவது பிரம்ம, கால, கர்ம, குண சக்கரங்களை வரைந்து காட்டியது. அப்படி காட்டிய வரைபடத்தில் கடவுள் சின்னம் என்னும் பெயர் வைக்கப்பட்டது. **"கடவுள் சின்னம்"** இந்த பெயரில் எழுதிய கிரந்தத்தில் நான்கு சக்கரங்கள் விவரம் சம்பூர்ணமாக உள்ளது. நான்கு சக்கரங்கள் விவரத்தில் ஆத்மாவுக்கு சம்பந்தப்பட்ட மூன்று ஆத்மாக்கள் உள்ளது. அதன் போலவே பிரக்ருதி சம்பந்தமான கால, கர்மா, குணங்கள் விவரங்கள் இருக்கிறது. பிரம்ம நாடியில் ஆத்மா விவரம் சொல்லிக் கொண்டு மேலும், ஏழு ஆகாசங்களாக பிரம்ம நாடி இருக்கிறது அதனை ஏழு நாடி மையமாக கூட சொல்லி விவரித்து சொல்லினோம். இந்த நான்கு சக்கரத்தில் வரைபடம் என்றால் கடவுள் சின்னம் என்பது சிருஷ்டி ஆதியில் இருந்து இல்லை. இப்போதே புதியதாக

சொல்லியதினால் நம்ப முடியாததாக இருக்கலாம். அதனால் சிலர் இதற்கு சாஸ்திரம் ஆதாரம் இருக்கிறதா? என்று கேட்கலாம். அதற்கு என்னுடைய பதில் என்னவென்றால்! தெய்வ கிரந்தமான குர்ஆனில் சூரா 5, ஆயத்து 2 இல் கடவுள் சின்னத்தைப் பற்றி மகா ஞானி ஜிப்ராயில் சொல்லி உள்ளார். அங்கு ஓரிடத்தில் மட்டுமல்லாமல் 22 சூராவில் 32 ஆயத்தில் கூட சொல்லி உள்ளார் என்னும் இதற்கு முன் எழுதிய **“கடவுள் சின்னம்”** கிரந்தத்தில் எழுதினோம். கடவுள் சின்னத்தைப் பற்றி தெய்வ கிரந்தத்தில் சொல்லி உள்ள அதனை முஸ்லிம்கள், வேறவர்கள் கிரகிக்கவில்லை என்று சொல்லினோம். எல்லோரும் கிரகிக்கும்படி நாங்கள் எழுதிய “கடவுள் சின்னம்” கிரந்தத்தில் எழுதினோம். இறுதி தெய்வ கிரந்தத்தில் எழுதியதை பார்க்கலாம். **(5-2) “நம்பிக்கை கொண்ட மக்களே! அல்லாஹ் சின்னத்தை, எந்த நிசித்த மாதத்தை அகௌரவப்படுத்தாதீர்கள்” (22-32) “இது கூட தெரிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் சின்னத்தை யாராவது கௌரவிக்கின்றார்கள் என்றால் அது அவரில் இருதயத்தில் பக்தி எண்ணத்தினால் தான் என்று தெரிந்து கொள்ளுங்கள்”.** இந்த வாக்கியத்தை அனுசரித்து, இந்த வாக்கியத்தை ஆதாரமாக எடுத்துக்கொண்டு “கடவுள் சின்னம்” என்ற கிரந்தத்தில் கடவுள் சின்னம் படம் வரைந்து காட்டினேன். உண்மையை கூறினால் நான் குர்ஆன் கிரந்தத்தில் இந்த வாக்கியத்தை பார்த்தது ஆறு மாதங்களுக்கு முன்பு ஆனால், இந்த சின்ன பொம்மையை வரைந்தது கிட்டத்தட்ட 40 வருடங்கள் முன்பு. இந்த வாக்கியத்தை பார்க்காத போதே அப்போது எப்படி எழுதினீர்கள்? என்று கேட்கலாம். அதற்கு

எங்கள் பதில் என்னவென்றால்! பிரதம தெய்வ கிரந்தத்தில் அக்ஷர பரப்பிரம்மயோகம் என்னும் அத்தியாயத்தில் சூட்சுமமாகவும் மறை முகமாகவும் கடவுள் சின்னத்தை பற்றி தெரிந்த போது, அங்கு தெரிந்ததை என்னுடைய முதல் கிரந்தமான **“பிரபோதா”** கிரந்தத்தில் 1980 இல் அச்சிடுதல் நடந்தது. இதனைப் பொறுத்து 36 வருடங்களுக்கு முன்பே “கடவுள் சின்னம்” என்னும் வரைபடம் மாதிரி அச்சு தயாரானது என்று தெரிகின்றது.

அதே வரைபடத்தில் அதே பெயரில் கிட்டத்தட்ட வருடம் முன்பு கிரந்தம் எழுதினோம். அந்த கிரந்தத்தில் ஒரு விஷயம் கூட இதுவரை இந்த கிரந்தத்தில் எழுதவில்லை. இதுவரை இந்த கிரந்தத்தில் எழுதியது அந்த கிரந்தத்தில் உள்ள விஷயங்களை விட வேறாக இருக்கின்றது. அங்கு எழுதிய விதானம் வேறு, இங்கு எழுதிய விதானம் வேறாக இருக்கிறது. அந்த கிரந்தத்தை ஒரு தடவை படித்துப் பாருங்கள். அங்கு கடவுள் சின்னம் தந்தையாக இருக்கின்ற கடவுளுக்கு சம்பந்தப்பட்டது என்று விவரித்து எழுதினோம். இப்போது **“கடவுள் முத்திரை”** என்ற பெயரில் எழுதிய சமாச்சாரம் எல்லாம் தாத்தாவாக இருக்கின்ற கடவுளைப் பற்றி எழுதியதாக உள்ளது. தந்தையான கடவுளை எல்லோரும் ஆராதனை செய்வதினால், நாம் தெரிந்து கொண்ட ஞானமெல்லாம் தந்தையான கடவுளுடையதே ஆனதினால், நாங்கள் முதலில் தந்தையாக இருக்கின்ற கடவுள் விதானம் தெரியும்படி கடவுள் சின்னத்தை வரைந்து, அந்த வரைபடத்தை தந்தையாக இருக்கின்ற கடவுளுக்கு

சம்பந்தப்பட்ட கால, கர்மங்கள், அவர் வேலை செய்கின்ற விதானம் விவரித்து சொல்லினோம். அந்த கிரந்தத்தில் கடவுள் சின்னம் வரைப்படத்தில் அங்கு சொல்லிய அர்த்தம் (விவரம்) அந்த கிரந்தத்திலிருந்து சேகரித்து இங்கு உங்களுக்கு காட்டினோம். இது பார்த்த பிறகு தாத்தாவான கடவுளை பற்றிய விவரத்தை அந்த சின்னத்திலிருந்து காட்டினோம். இந்த கிரந்தத்தில் சொல்லிய இரண்டு விதானங்கள் ஜாக்கிரதையாக தெரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கிறோம்.

இப்போது **"கடவுள் சின்னம்"** கிரந்தத்தில் பார்க்கலாம். **29-44 வாக்கியத்தில் (29-44) "அல்லாஹ் பூமியை, ஆகாசத்தை உண்மையாக சிருஷ்டித்தார். ஆகாசங்களை பூமியை பரமார்த்தத்தில் சிருஷ்டித்தார் என்னும் தெரிந்தால் இதில் பெரிய நிதர்சனம் கிடைக்கும்"** என்று உள்ளது. ஆனால் இதில் "பூமி, ஆகாசங்கள்" என்னும் சொல்லும் போது பூமி ஆகாசம் ஸ்தூலமாக கண்ணுக்கு தெரிகின்ற விஷயம் தான் அல்லவா! என்னும் யாராவது நினைக்க வாய்ப்பு இருக்கும். அங்கு சொல்லியது ஒரு ஆகாசம் அல்ல **"ஆகாசங்கள்"** என்று சொல்லினார். நமக்கு "ஆகாசம்" தெரிகின்றது மேலும், "ஆகாசங்கள்" தெரியவில்லை. இந்த வார்த்தையில் இதில் தெரியாத ஞானம் இருக்கிறது என்று புரிந்து விடுகிறது. நாம் நன்றாக ஆலோசனை செய்து பார்த்தால் குர்ஆன் கிரந்தம் தவ்ராத் கிரந்தம் ஆதாரத்தில் சொல்லப்பட்டது. அந்த விஷயம் குர்ஆன் கிரந்தத்தில் உள்ளது. தவ்ராத் கிரந்தத்தை குர்ஆன்

கிரந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்னும் சொல்லியபோது தவ்ராத் கிரந்தத்தில் உள்ள ஞானமே குர்ஆன் கிரந்தத்திலும் உள்ளது என்று தெரிந்து போகின்றது. தவ்ராத் கிரந்தத்தில் சொல்லிய வாக்கியங்கள் எல்லாம் தேகம் உள்ளே சொல்லப்பட்டது. இறுதிக்கு கடவுள் மனிதன் தேகத்திலேயும் கூட உள்ளார் என்று சொல்லப்பட்டது. அதே ஞானம் குர்ஆனில் சொல்லப்பட்டதினால் குர்ஆனில் உள்ள ஆயத்துக்கள் தேகத்தில் மறைந்திருக்கும் ஞானத்தையே குறிப்பிடுகின்றன என்று தெரிகின்றது. பகவத்கீதா பிரகாரம், குர்ஆன் பிரகாரம் 29-44 இல் இருக்கின்ற ஞானம் சூட்சுமமானது என்னும், தேகத்தில் இருக்கின்ற ஞானம் என்று தெரிந்து போகின்றது. “பூமி, ஆகாசங்களை அவற்றில் நடுவில் உள்ள சமஸ்த்தமும் கடவுள் சிருஷ்டித்தார். சொல்லியது உண்மைதான் முதல் ஆகாசங்கள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். அந்த முயற்சியில் குர்ஆனில் ஏழு ஆகாசங்கள் என்று பல இடத்தில் கூறப்பட்டது. இதனைப் பொறுத்து ஏழு ஆகாசங்கள் உள்ளது என்னும், ஏழு ஆகாசங்கள் வெளி உலகத்தில் இல்லை என்னும், உள் உலகமாக தேகத்திலேயே இருக்கிறது என்று அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். இந்த வார்த்தைக்கு மூலம் பகவத்கீதாவில் விபூதி யோகம் அத்தியாயம் ஆறாவது சுலோகத்தில் உள்ளது என்று தெரிகிறது. **“மஹர்ஷய சப்த”** இந்த வார்த்தையை எடுத்துக் கொண்டு பார்த்தால் நம் தேகத்தில் உள்ள ஏழு ஆகாசங்கள் விவரம் தெரியும்.

சூரா 29-44 ஆயத்து பிரகாரம் ஏழு ஆகாசங்கள் வெளியே எங்கும் இல்லை. ஆனால் ஏழு ஆகாசங்கள் எனப்படும் விதானங்கள் தேகத்துக்கு உள்ளேயே இருக்கின்றது. தேகத்தில் உள்ளே தலையில் இருந்து ஆசனவாய் வரை முதுகில் தண்டு வடம் எனப்படும் பெரிய நரம்பு இருக்கிறது. தண்டு வடு எனப்படும் பெரிய நரம்பு மூளையிலிருந்து ஆரம்பித்து தண்டுவரை பரவி இடுப்பு கீழ் கடைசி மணிகட்டு வரை இருக்கும். அப்படியே பரவி இருந்த நரம்புகள் அனைத்தும் ஏழு பாகங்களாக பிரிந்து உள்ளது. தண்டுவடு மேல் பாகத்தில் உள்ள மூளை பெரிய நாடி மையமாக உள்ளது. மற்ற ஆறு இடத்தில் தண்டுவடு எனப்படும் நரம்பில் மற்ற ஆறு இடத்தில் ஆறு நாடி மையங்கள் உள்ளது. மொத்தம் தண்டுவடு ஏழு நாடி மையமாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஏழு நாடி மையங்களினால் தேகத்தில் அனைத்து வேலைகளும் நடக்கும் படி ஏழாவது மையத்திலிருந்து சிறிய சிறிய நரம்புகள் தேகமெல்லாம் பரவி உள்ளது. ஏழு நாடி மையத்தில் ஆத்மா சக்தி இருக்கும் போது ஏழாவது மையத்தில் பரமாத்மா சக்தி (கடவுள்) நிலையமாக இருக்கிறார். இந்த விதமாக ஒரு சஜீவமான தேகத்தில் ஏழு ஆகாசங்கள் எனப்படும் ஏழு நாடி மையங்கள் இருக்கிறது. இந்த ஏழு நாடி மையங்களை ஏழு ஆகாசங்கள் என்னும் குர்ஆன் கிரந்தத்தில் பல தடவை கூறப்பட்டது. இதனை டிசைன், செய்தவர், தயார் செய்தவர் அல்லாஹ் தான் (கடவுள் தான்). அதனால் (29-44) ஆயத்தில் **“அல்லாஹ் ஆகாசத்தை பூமியை உண்மையாக சிருஷ்டித்தார்”** என்று

கூறினார். அதே வாக்கியத்தில் உள்ள ஏழு ஆகாசங்களும் பூமி என்னவென்று யோசனை செய்தால், நாடி மையத்திலிருந்து சக்தி பரவி தேகமெல்லாம் பூமியாகவே கணக்கிடப்படுகின்றது. தேகத்தை பூமி என்னும், நாடி மையங்களை ஆகாசங்கள் என்னும் கடவுள் சிருஷ்டித்தார் என்னும் நேராக சொல்லாமல், ஆகாசத்தை, பூமியை அல்லாஹ் சிருஷ்டித்தார் என்னும் அதில் நிதர்சனம் இருக்கிறது என்று மறைவாக கூறினார். பூமி எது, ஆகாசங்கள் எது என்று தெரிவது **பரமார்த்தம்** என்று கூறினார். தேகத்தில் எவ்வளவோ பெரியதாக ஞானம் இருப்பதினால் **உண்மையாக** தயார் செய்தார் என்று கூறினார். தேகத்தில் ஆகாசங்கள் பூமி தெரியாமல் இருப்பதினால் **"நிதர்சனம்"** என்று கூட சொல்லினார்.

இப்போது தெரியப்படும் விஷயத்தை கிரகித்துக் கொள்ளாமல் போனால், அப்படிப்பட்டவர்கள் பரமார்த்தத்தை தெரியாமல் போனால், நிதர்சனங்கள் தெரியாது. கடவுள் இந்த விஷயத்தை என்றால் தன்னுடைய ஞான விஷயங்கள் முதலிலேயே தெரிவித்து, குர்ஆன் கிரந்தத்தில் சூட்சும ஞான விஷயம் உள்ளது என்னும், அப்படிப்பட்ட சூட்சும ஞானம் புத்தி, ஆர்வம் இருக்கின்றவர்கள் மட்டும் தான் கிரகிப்பார் என்று தெரிவித்து உள்ளார். மற்றும் சூட்சும விஷயம் ஞானம் கடவுளுக்கு தவிர எந்த மனிதனுக்கும் தெரியாது என்று முதலிலேயே கூறினார். தேகத்தில் நினைவு, ஞானம், கற்பனை கடவுளினால் கிடைக்கும் என்னும் பகவத்கீதாவில் புருஷோத்தம பிராப்தியோகத்தில் 15 ஆவது சுலோகத்தில் கூறியுள்ளார் பாருங்கள்.

**சுலோகம்:- சர்வஸ்ய சாஹும் ஹ்ருதிசன்னி விஷ்டோ மத்தஹு சுமுர்த்திர் ஞான மபோஹு நம்ச /**


**வேதைச்ச சர்வைரஹு மேவ வேத்யோ வேதாந்தா குருத் வேதவி தேவ சாஹும் //**

**கருத்து:- "நான் அனைத்து ஜீவராசிகளில் ருதயம் என்னும் பிரம்ம நாடி அல்லது தண்டுவடமில் இருக்கிறேன். என்னால் தான் நினைவு, ஞானம், கற்பனை வரும். வேதங்கள் எல்லாம் என்னையே தெரிவிக்கின்றது. வேதங்களுக்கு பலன் கொடுக்கின்றவனும் கூட நான் தான்"** என்று கடவுள் தன் சுலோகங்களில் கூறியுள்ளார். இதனைப் பொறுத்து தேவைப்படும்போது மனிதன் தேகத்திலிருந்து கடவுளே தன்னுடைய ஞானத்தை தெரிவிப்பார் என்று தெரிகின்றது. இப்போது கூட கடவுள் எனக்கு தெரிவிக்கும் ஞானம் நான் உங்களுக்கு சொல்கின்றேன். கடவுளுடைய ஞானம் கடவுளைத் தவிர வேறு எந்த மனிதனுக்கு தெரியாது என்னும் குர்ஆன்கிரந்தத்தில் சூரா3, ஆயத்து 7 இல் தெரிவித்தார். எந்த மனிதன் மீதும் என்னுடைய ஞானத்தை ஒளிபரப்பபடவில்லை என்னும் சூரா 6, ஆயத்து 91 இல் கூட தெரிவித்தார். கடவுளுடைய ஞானம் கடவுள் தெரிவித்தால் தான் மனிதர்களாகிய நமக்குத் தெரியும். சூரா 29, ஆயத்து 44 இல் உள்ள சமாச்சாரம் முழுமையாக சூட்சும ஞானத்தில் கூடியுள்ளது. இங்கு உள்ள ஞான விஷயம் தேகம் அந்தர் பாகத்தில் (உள் பாகத்தில்) தெரியாமல் இருப்பதினால் இது நிதர்சனமான ஞானம் என்னும் வாக்கியத்தில் கூறினார். தெரிகின்ற பூமி ஆகாசங்களை விட வேறாக இருந்த

அர்த்தத்தில் கூடி உள்ளதினால் பர+அர்த்தம்=பரமார்த்தத்தில் கூடி உள்ளது என்று கூறினார்.

பரமார்த்தம் என்றால் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கும் அர்த்தம் அல்லவென்று வெளிப்படையாக தெரிந்து போகின்றது. அதன் பிரகாரம் நாம் நினைத்துக் கொண்ட ஆகாசங்கள் அல்ல, அதன் போலவே நாம் நினைத்துக் கொண்ட பூமி அல்ல என்று தெரிந்து போனது. அது எது என்னவென்று நம் தேகத்தில் சிதம்பர ரகசியம் என்று தெரிந்து போனது. சிதம்பர ரகசியத்தை **"வெளிப்படையாக"** தெரியும்படி காட்டியது போல நாம் கூட நம் தேகத்தில் உள்ள கடவுள் சொல்லிய ரகசியம் அப்படியே தெரியும்படி வரைந்து கீழ் படத்தில் பார்க்கலாம்.

கடவுள் தன்னுடைய ஞானத்தில் முதலாவதாக தன்னுடைய சிருஷ்டியை பற்றி கூறினார். பிறகு தன்னுடைய ஞானத்தைப் பற்றி கூறினார். முதலில் ஏழு ஆகாசங்களை எப்படி சிருஷ்டித்தாரோ நிதர்சன உருவமாக இருக்கின்ற ஞானத்தை தரிசனமாக செய்து பார்த்துக் கொண்டோம். சிருஷ்டி பிறகு முக்கியமான ஞானமாக சொல்லியது மூன்று ஆத்மா விஷயங்கள். மூன்று ஆத்மாக்கள் விஷயங்கள், மூன்று தெய்வ கிரந்தத்தில் சொல்லப்பட்டது. தவ்ராத் (பகவத்கீதா) கிரந்தத்தில் புருஷோத்தம பிராப்தியோகத்தில்




சொல்லிய மூன்று ஆத்மா விஷயங்கள் மற்ற இரண்டு கிரந்தங்களில் கூட சொல்லப்பட்டன.

**1.ஷரன் அக்ஷரன் புருஷோத்தமன்**

**(ஜீவாத்மா) (ஆத்மா) (பரமாத்மா)**

**என்பவர் மூன்று, புருஷர்கள் ஒவ்வொரு தேகத்திலும் இருப்பார்கள்.**

**(பகவத்கீதாவில் புருஷோத்தம பிராப்தியோகத்தில் 16,17 சுலோகங்களை பாருங்கள்.)**

**2. குமாரன் தந்தை பரிசுத்த ஆத்மா**

**(ஜீவாத்மா) (ஆத்மா) (பரமாத்மா)**

**என்பவர் மூன்று பேர், தெரியப்படதவர்கள், ஒவ்வொரு மனித தேகத்தில் இருக்கிறார்.**

**(பைபிளில் மத்தேயு சுவார்த்தையில் 28 அத்தியாயம் 19,20 வாக்கியங்களை பாருங்கள்.)**

**3. விரட்டபடுபவர் விரட்டுபவர் சாட்சியாக பார்க்கின்றவர்**

**(ஜீவாத்மா) (ஆத்மா) (பரமாத்மா)**

**என்பவர் மூன்று பேர், தெரியாதவர்கள் ஒவ்வொரு மனித தேகத்தில் இருக்கிறார்.**

**(இறுதி தெய்வ கிரந்தமான குர்ஆனில் சூரா 50, ஆயத்து 21 பாருங்கள்.)**

கடவுள் கூறிய ஞானத்தில் முதல் சிருஷ்டி, இரண்டாவது சிருஷ்டியில் உள்ள மூன்று ஆத்மாக்கள் ஞானம். மூன்று ஆத்மாவை பற்றி மூன்று தெய்வ கிரந்தங்களில் கூறியுள்ளார். பிறகு முக்கியமான ஞானம் மனிதர்கள் செய்து கொண்ட பாவ புண்ணியங்கள் எனப்படும் கர்மத்தைப் பற்றி தெரிந்து கொண்ட ஞானம். கர்மத்தை பற்றி மூன்று தெய்வ கிரந்தங்களில் எவ்வளவோ விவரங்கள் கொடுத்தார். கர்மம் மனிதன் தேகத்திலேயே மேற்பார்வையாளர்களால் எழுதப்பட்டது என்று இறுதி தெய்வ கிரந்தமான குர்ஆனில் கூறினார். கர்மம் எழுதுவது **"கர்ம பத்திரம்"** என்னும் சொல்வது மட்டுமல்ல கர்மம் ஒரு திவ்ய

கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டது என்று கூட சொல்லினார். கர்மத்தை அனுபவிக்காமல் யாரும் தப்பிக்க முடியாது என்னும் சொல்வது மட்டுமல்லாமல், கடவுள் ஒருவர்தான் அதனை மன்னிக்க கூடியவர் என்று சொல்லினார். கர்மம் நம் தேகத்தில் எப்படி இருக்கிறது, எங்கு இருக்கிறது ரகசிய ஞானமாக குர்ஆனிலும் பகவத்கீதாவிலும் கூட சொல்லினார்.


கடவுள் முதலில் சிருஷ்டியை பற்றிய ஞானம் கூறினார். பிறகு மூன்று ஆத்மாவை பற்றிய ஞானம் கூறினார். அதன் பிறகு ஜீவன் கர்மத்தினால் இயக்கப்படுகிறான் என்னும், கர்மத்தைப் பற்றி ஞானம் கூறினார். இறுதியாக ஒவ்வொரு கர்மத்திற்கும், ஒவ்வொரு வேலைக்கும் ஒரு காலக்கெடு இருக்கிறது என்னும், ஒவ்வொரு நேரமும் காலத்தில் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது என்று கடவுள் தன்னுடைய ஞானத்தில் கூறினார். இந்த விதமாக கடவுள் ஞானத்தை நான்கு முக்கியமான பாகங்களாக கூறினார். மூன்று தெய்வ கிரந்தத்தில் இந்த நான்கு ஞானங்களே முக்கியமாக கூறப்பட்டுள்ளது. இந்த நான்கு பாகங்கள் ஞானம் தரிசனமாக செய்து கொண்டால் அதுதான் கடவுள் சின்னமாகும். கடவுள் ஞானம் கண்ணுக்குத் தெரியாமல் பரமார்த்தமாக இருக்கிறது. அப்படிப்பட்ட பரமார்த்தத்தை அர்த்தம் செய்து கொண்டால், நிதர்சனமான ஞானம் தரிசன உருவமாக செய்து கொண்டால், தரிசனம் கொடுப்பதே கடவுள் சின்னமாகும். கடவுள் சின்னம் மிகவும் சக்தி கொண்டது, அப்படிப்பட்ட கடவுள் ஞானம் எப்படி தெரியும்படி சின்னமாக (அடையாளமாக) செய்து கொள்ள வேண்டுமோ இப்போது விவரித்துக் கொள்ளலாம். கடவுள் முதலில்

பூமியை, ஏழு ஆகாசங்களை சிருஷ்டித்தார். அதனை தெரியும்படி செய்து கொண்ட போது தேகம் பூமியாக, ஏழு ஆகாசங்கள் தேகத்திற்குள் தேகத்தை நடத்தும் ஏழு நாடி மையமாக சொல்லிக் கொண்டோம். ஏழாவது நாடி மையத்தின் மேல் கடவுளுடைய சிம்மாசனம் உள்ளது போல் கடவுள் அங்கு இருப்பது போல் குர்ஆன் கிரந்தத்தில் கூறினார். அதனை தெரியும்படி பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அப்படியே ஞானப்பார்வையில் பார்த்தால் கடவுள் சிருஷ்டியில் ஏதாவது பிழை இருக்குதா இல்லையா உனக்கே தெரியும் அல்லவா! என்று கூறினார். இந்த விஷயத்தை குர்ஆன் கிரந்தத்தில் சூரா 67, ஆயத்து 3 இல் **(67-3) "அவர் ஏழு ஆகாசங்களை ஒன்றின் மேல் ஒன்று தயார் செய்து வைத்தார். நீ எப்படி பார்த்தாலும் கருணா மையனின் சிருஷ்டி வேலையில் எப்படிப்பட்ட பிழையும் தெரியாது. வேண்டுமென்றால் மற்றொரு தடவை கவனம் செலுத்தி பார், உனக்கு ஏதாவது பிழை தெரியுமோ!"**

இந்த ஆயத்தில் நீ எப்படி பார்த்தாலும் ஒரு காட்சியை பார்த்தது போல் சொல்லினார்கள் அல்லவா! கடவுளுடைய சிருஷ்டியை "வேண்டுமென்றால் மற்றொரு தடவை கவனத்தை செலுத்தி பார். உனக்கு ஏதாவது பிழை தெரியுமோ" என்று சொல்லுவதும் கூட நடந்தது. இதனை பொறுத்து கடவுள் சிருஷ்டியை காட்சி உருவத்தில் பார் என்னும் ஏதாவது பிழை தெரிகிறதா என்று கூறினீர்கள் அல்லவா! இங்கு சிருஷ்டியை காட்சி வடிவமாக பார் என்று சொல்லியது. இங்கு கடவுள் சொல்லியது போல் சிருஷ்டியை

காட்சி வடிவத்தில் மாற்றிக் கொண்டு காட்சியாக பார்த்தால் ஏழு ஆகாசங்கள் இப்படி இருக்கிறது என்னும் முதலிலேயே ஒரு விதமாக வரைந்து பார்த்துக் கொண்டோம். இப்போது ஏழு ஆகாசங்கள் மீது கடவுளுடைய இருப்பு எப்படி இருக்கிறதோ வரைந்து கொண்டு பிறகு பக்கத்தில் பார்க்கலாம்.

ஏழு ஆகாசங்கள் மீது கடவுளுடைய நிலையம் காட்சி வடிவமாக செய்து கொண்டோம். கடவுள் நிவாசிக்கும் நிவாசத்தை பிரம்ம சக்கரம் என்று சொல்கின்றோம். பிரம்ம சக்கரம் என்றால் கடவுளுடைய சக்கரம் என்று அர்த்தம். கடவுளுடைய சக்கரம் இரண்டு பாகங்களாக இருக்கிறது. ஒரு பாகம் கடவுளுடைய பகல், மற்றொரு பாகம் கடவுளுடைய ராத்திரி. பகவத்கீதாவில் அக்ஷரபரப்பிரம்மயோகத்தில் 17ஆவது சுலோகத்தில் ஆயிரம் யுகங்கள் கடவுளுக்கு ஒரு பகல், அதன் போலவே ஆயிரம் யுகங்கள் கடவுளுக்கு ஒரு ராத்திரி என்று கூறினார்.



கடவுள் சக்கரம் ஒரு சுற்று சுற்றுவதற்கு 2000 யுகங்கள் காலம் பிடிக்கும் என்று தெரிகின்றது. என்றால் கடவுளுக்கு ஒரு நாள் என்றால் 2000 யுகங்கள் காலம் என்று அர்த்தம். கடவுளுடைய பகல் ராத்திரி கிரகித்தால் எவ்வளவோ பெரிய ஞானம் மனிதன் தெரிந்து கொள்வான். இந்த விஷயத்தை குர்ஆன் கிரந்தத்தில் சூரா 24, ஆயத்து 44 இல் இந்த விதமாக இருக்கிறது பாருங்கள். **(24-44) "அல்லாஹ் இரவும் பகலும் மாற்றிக் கொண்டிருப்பார். கண் இருக்கின்றவர்களுக்கு இதில் பெரிய பாடம் உள்ளது".**

இங்கு நன்றாக ஜாக்கிரதையாக விவரித்துக் கொண்டு பார்த்தால் **கண் இருக்கின்றவனுக்கு** இதில் ஒரு பெரிய பாடம் இருக்கிறது என்று கூறினீர்கள் அல்லவா! இதனை பொறுத்து கடவுள் பகல் ராத்திரியை வரைபடத்தில் பார்த்தவர்களுக்கு அதில் ரகசியமான ஞானம் தெரியும் என்று அர்த்தமாகின்றது. அதனால் நாங்கள் கடவுளுடைய நிவாசத்தை ராத்திரி பகலாக பிரித்து ஏழு ஆகாசங்கள் மேல் உள்ள பிரம்ம சக்கரத்தை காட்டினோம். சிலருக்கு நாங்கள் கூறியது சிறிதளவு கூட அர்த்தம் ஆகாமல் போனதினால் எங்களை அஞ்ஞானியாக ஒப்பிட்டு தூசித்து, அஞ்ஞானத்தை போதிக்கிறார் என்று சொல்லலாம். அவர்களுக்கு நாங்கள் சொல்லுவது என்னவென்றால்! நாங்கள் எங்கும் சுயமாக போதிக்காமல் தெய்வ கிரந்தத்தை ஆதாரம் செய்து கொண்டு சொல்கின்றோம். சிலர் அஞ்ஞானத்தில் இருந்து அல்லாஹ் நிதர்சனங்கள் தரிசன உருவமாகும்போது, நிதர்சனமான விஷயத்தில் பிடிவாதமாக பேசுகின்றார்கள். அந்த

விஷயத்தை குர்ஆன் கிரந்தத்தில் சூரா 40, ஆயத்து 35 பிடிவாதமான வாதனைகளைப் பற்றி இப்படி கூறியுள்ளார் பாருங்கள். **(40-35) "அவர்கள் தங்களிடம் வந்தவர்களை எந்த பிரமாணம் இல்லாமலே அல்லாஹ் நிதர்சனம் விஷயங்களில் பிடிவாதமாக பேசுவார்கள். இந்த போக்கு அல்லாஹ்விடம் மற்றும் விசுவாசிகளிடம் கூட எவ்வளவோ விரும்பத்தகாதது. இந்த விதமாக கர்வம், மிருகத்தனமான ஒவ்வொரு நபர் இருதயத்தில் மேல் அல்லாஹ் போட்டுவிடுவார்".**

நாங்கள் ஞானப்பார்வை இல்லாதவருக்கும் கூட அர்த்தம் ஆகும்படி, சூட்சுமமான கடவுளுடைய ஞானத்தை ஸ்தூலமான அடையாளத்துடன் எல்லோருக்கும் தெரியும்படி காட்டுகின்றோம். நாங்கள் ஒவ்வொன்றும் தெய்வ கிரந்தத்தில் உள்ள ஆதாரத்தில் தெரிவிக்கிறோம். இங்கு சிலருக்கு ஒரு சந்தேகம் வந்து இப்படிபட்ட கேள்வி வரும். சூட்சுமமான கடவுளுடைய ஞானம் போதனை வடிவத்தில் இருக்கும் போது, காட்சி வடிவத்தில் பார்ப்பதற்கு சாத்தியமாகுமா? என்று கேட்கலாம். அதற்கு பதில் நாங்கள் இப்படி கூறுகிறோம். பகவத்கீதா புருஷோத்தமபிராப்தியோகம் என்னும் அத்தியாயத்தில் 10,11 இந்த விதமாக இருக்கிறது பாருங்கள்.

**சுலோகம்:-10, உத்க்ராமந்தம் ஸ்திதம் வாபி புஞ்சானம் வா குணான் விதம் /**

**விமூடா நானு பஸ்யந்தி பஸ்யந்தி ஞான செக்சுசம் //**

**சுலோகம் 11. யதந்தோ யோகின சைனம் பஸ்யந்த்யாத்மா நவ்யவசிதம் /**

**யதந்தோ பிரக்ருதாத்மானோ நைனம் பஷ்சன்னியே சேதஷிஹ //**


**கருத்து:-**"ஜீவாத்மா குணங்களுடன் தேகத்தில் நிவாசிக்கும். குணங்கள் நடுவில் இருந்து விஷயத்தில் உள்ள சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும். இந்த விதானம் அஞ்ஞானிகளுக்கு தெரியாது. ஞானக்கண் இருப்பவர்கள் மட்டும் பார்ப்பார்கள்".

"தேகத்தில் உள்ள ஆத்மாவை, ஜீவாத்மாவை முயற்சி செய்யும் யோகிகளுக்கு தெரியும் (பார்ப்பார்கள்)". அஞ்ஞானிகள் எவ்வளவு முயற்சி செய்தாலும் தேகத்தில் உள்ளே நடக்கின்ற தெய்வீக பொறிமுறையை பார்க்க முடியாது. "குர்ஆன் கிரந்தத்தில் நிதர்சனங்களாக இருக்கின்றதனை பார்ப்பார்கள் என்னும் பகவத்கீதா கிரந்தத்தில் 5000 வருடங்கள் பூர்வமே, தேகத்தில் உள்ள ஜீவன் குணங்கள் நடுவில் எப்படி இருக்கிறது என்பது யோகிகளுக்கு தெரியும், அஞ்ஞானிகளுக்கு தெரியாது என்று கூறினார்.

தெய்வ கிரந்தத்தில் பிரமாணமாக சொல்லியது போல் நிதர்சனத்தை தரிசனமாக செய்து கொண்டால், ஏழு ஆகாசங்கள் நம் தேகத்தில் எப்படி இருக்கிறது என்று தெரிந்து போனது. பிறகு ஏழு ஆகாசங்கள் மீது கடவுளுடைய ஸ்தானம் எப்படி இருக்கிறது என்று

அடையாளித்தோம். இந்த விதமாக கடவுள் சொல்லிய ஞானம் பிரகாரம் மூன்று ஆத்மாக்கள் விதானம், கர்ம விதானம், கர்மாவின் செயல்படும் விதானம் தெரியும்படி பார்ப்பதற்கு முயற்சி செய்வோம். முதலில் ஜீவாத்மா நிவாசத்தை பற்றி பகவத்கீதா சுலோகம் பிரகாரம் மற்றும் குர்ஆன் வாக்கியம் பிரகாரம் பார்ப்பதற்கு முயற்சி செய்வோம். ஏழு ஆகாசங்கள் மேல் பரமாத்மா இருப்பது போல் அங்கே ஏழு ஆகாசங்கள் மேல் ஜீவாத்மா கூட இருக்கிறது. ஜீவாத்மா பரமாத்மா இடத்தை விட சிறிது கீழே நிவாசம் இருக்கும். அதனை தெரியும்படி வரைந்து கொண்டதை பார்க்கலாம்.

இந்த வரைபடத்தில் ஏழாவது ஆகாசம் மேல் உள்ள பிரம்ம சக்கரத்தில் இரண்டு பாகங்களில் கடவுள் இருப்பார். ஏழ ஆகாசங்கள் நீட்டமாக ஆகாசம் நடுவில் என்றால் பிரம்ம நாடி நடுவில் ஏழாவது ஆகாசத்தில் இருந்து ஒன்றாவது ஆகாசம் வரை ஆத்மா இருக்கும். ஏழாவது இடத்திலேயே என்றால்! ஏழாவது ஆகாசத்திலேயே பிரம்ம சக்கரம் கீழ் மூன்றாவது சக்கரமாக இருக்கின்ற குண சக்கரத்தில் ஜீவன் நிவாசிக்கின்றான். ஏழாவது ஸ்தானத்தில் உள்ள நான்கு சக்கரத்தில் மேல் உள்ளது பிரம்ம சக்கரம் கீழ் இருப்பது குணசக்கரமாக உள்ளது.





குணசக்கரங்கள் மூன்று பாகங்களாக உள்ளது. மூன்று பாகத்தில் ஏதோ ஒரு இடத்தில் ஜீவாத்மா இருக்கின்றது. இந்த விதமாக ஏழாவது ஆகாசத்தில் அல்லாஹ் (கடவுள்) விட கீழே குணசக்கரத்தில் ஜீவாத்மா இருக்கும்போது, ஏழு ஆகாசங்கள் நீளத்தில் பிரம்ம நாடியில் ஆத்மா இருக்கின்றது. இந்த விதமாக மூன்று ஆத்மாக்கள் நிவாசம் தெரிந்து தரிசன வடிவத்தில் வந்தது.

இப்போதும் ஏழு ஆகாசங்கள், மூன்று ஆத்மாக்கள் ஞானம் நிதர்சனம், பரமார்த்தம் தெரிந்து போனது. இனி தெரிய வேண்டியது கர்மம், காலக்கெடுவுடன் கூடி உள்ள காலம். இப்போது கர்மத்தை பற்றி பார்த்தால் இப்படி தெரியும்.

கர்ம சக்கரம் 12 பாகமாக உள்ளது. அதில் 1,5,9 ஸ்தானத்தில் புண்ணியம் சேமிக்கப்படுகிறது. அப்படியே 3,7,11 ஸ்தானத்தில் பாவம் சேமிக்கப்படுகிறது. மற்ற 2,4,6,8,10,12 ஸ்தானத்தில் பாவ புண்ணியம் இரண்டும் இருக்கும். மனிதன் செய்துகொண்ட பாவ புண்ணியம் கர்ம சக்கரத்தில் அந்தந்த ஸ்தானத்தில் ஆத்மாவினால் பதிவாகும். அதன் போலவே ஆத்மாவினால் அனுபவிக்கும் படி செய்யும். ஆனால் கர்ம சக்கரம் விட கீழ் உள்ள குணசக்கரங்களில் கர்ம சக்கரத்திற்கு சம்பந்தம் இருக்கும். கர்ம சக்கரத்தில் உள்ள கர்மம் (பாவ புண்ணியம்) கீழ்சக்கரம் மீது அழுத்துவதினால் அங்குள்ள ஜீவன் அதனை அனுபவிப்பான். அந்த விஷயத்தை குரான் கிரந்தத்தில் யாருடைய கர்மம் அவனே அனுபவிக்க வேண்டும் என்னும் சூரா 2, ஆயத்து 134 இல் கூறியுள்ளார்.

**(2-134) "அது கடந்த காலத்தின் ஒரு சமூகம் அவர் செய்து கொண்டது அவருக்கே சேரும். நீங்கள் செய்து கொண்டது உங்களுக்கே சேரும். வேற அவர்களுடைய கர்மத்தை பற்றி நீங்கள் விசாரிக்கப்பட மாட்டீர்கள்"** என்று உள்ளது. இதனின் பொறுத்து மேல் உள்ள கர்ம சக்கரத்தில் என்ன பதிவாக இருந்தால் கீழ் சக்கரத்தில் உள்ள ஜீவனுக்கு அந்த அனுபவமே வரும்.





**கர்ம சக்கரம் படம்**

வேறவர் கர்மத்தினால் ஜீவனுக்கு சம்பந்தம் இல்லை. அதன் செயல்பாட்டில் குணசக்கரத்தில் உள்ள குணங்கள் ஜீவன் மீது பயன்படுத்தப்படும். குணசக்கரத்தை நன்றாக பரிசோதனை செய்து பார்த்தால் இந்த விதமாக இருக்கும். பிறகு பக்கம் படம் பாருங்கள்.

குணசக்கரம் மூன்று பாகங்களாக உள்ளது. ஒவ்வொரு பாகத்தில் வெவ்வேறு பெயர் உள்ள 12 குணங்கள் உள்ளது. ஒவ்வொரு பாகத்தில் குணங்களுக்கு ஒவ்வொரு பெயர் இருக்கின்றது. மேல் பாகத்தில் உள்ள

குணங்களுக்கு தாமசபாகம் குணங்கள் என்று சொல்கின்றோம். அதன் போலவே நடுவில் உள்ளதை ராஜச குணபாகம் என்று சொல்கின்றோம்.




**குணசக்கரம்**

அதன் போலவே மூன்றாவது சாத்வீக குணபாகம் என்று சொல்கின்றோம். நடுவில் உருண்டையாக இருக்கின்ற பாகம் பிரம்ம நாடியாக இருக்கின்றது. அதனை குண ரஹீதா பாகம் (குணங்கள் இல்லாத பாகம்) என்று சொல்கின்றோம். இந்த மூன்று குண பாகத்தில் குணங்கள் இருக்கும். ஒவ்வொரு பாகத்தில் 12 குணங்கள் இருக்கும். அதில் 6 நல்ல குணங்கள் 6 கெட்ட குணங்கள் இருக்கும். கெட்ட குணங்கள் வரிசையாக காம, குரோத, லோப, மோஹ, மத, மஸ்தரம் என்று சொல்கின்றோம். நல்ல குணங்கள் வரிசையாக தான, தய, அவுதாரிய, வைராக்கிய, வினைய, அன்பு என்று சொல்கின்றோம். கெட்ட குணங்களில் ஜீவன் சேர்ந்தால் பாவம் வரும். நல்ல குணங்களில் ஜீவன் சேர்ந்தால்

புண்ணியம் வரும். ஜீவன் தாமச, ராஜச, சாத்வீக என்று மூன்று குணபாகத்தில் சுற்றிக் கொண்டிருக்கும். எந்த ஒரு குணபாகத்திலும் கூட நிரந்தரமாக இருக்காது. ஆனால் அதிக காலம் எந்த பாகத்தில் கடத்தினால் அந்த பாகத்தின் பெயர் அவனுக்கு வரும். தாமசத்தில் அதிக காலம் இருக்கின்றவனை தாமசத்தில் உள்ளவன் என்னும், ராஜசத்தில் அதிக காலம் இருக்கின்றவனை ராஜசத்தில் உள்ளவன் என்னும், சாத்வீகத்தில் அதிக காலம் இருக்கின்றவனை சாத்வீகன் என்று சொல்லலாம்.

கீழ் குணசக்கரம் இருக்கும்போது அதன் மேல் கர்ம சக்கரம் இருக்கும் குண சக்கரத்தில் உள்ள ஜீவன் செய்து கொண்ட பழைய பாவ புண்ணியங்கள் கர்ம சக்கரத்திலிருந்து ஆத்மா அனுபவிக்கும் படி செய்யும். அதன் போலவே தற்போது காலத்தில் செய்து கொண்ட பாவ புண்ணியங்கள் ஆத்மாவே கர்ம சக்கரத்தில் பதிவு செய்கின்றது. குணசக்கரத்தின் மேல் உள்ள கர்ம சக்கரத்தில் இருந்து கர்மம் இறங்கி அனுபவத்திற்கு வரும். அதன் போலவே ஜீவன் புதியதாக செய்து கொண்ட கர்மம் கர்ம சக்கரத்தில் ஏறுகின்றது. கடவுள் ஏழாவது ஸ்தானம் (ஏழாவது ஆகாசத்தில்) இருந்து கீழே இறங்கும் கர்மத்தை, மேல் ஏறுகின்ற கர்மத்தை பார்க்கின்றார். கடவுள் சாட்சியாக மட்டும் இருக்கின்றார். இரண்டாவது ஆத்மா மட்டும் தேகத்தில் காரியங்கள் எல்லாம் செய்கின்றது. ஒவ்வொரு விஷயத்தில் ஜீவனை கர்மத்தில் பிணைக்கும் படி செய்து கர்மத்தை அனுசரித்து நடத்துகின்றது. கடவுள் மட்டும் ஒன்றும் செய்யாமல் இறங்கும் கர்மத்தை ஏறுகின்ற கர்மத்தை

பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்த விஷயத்தை குரான் கிரந்தத்தில் சூரா 34, ஆயத்து 2 இல் இப்படி இருக்கின்றது பாருங்கள். **(34-2) "பூமியில் போகுவது, அதிலிருந்து வெளியே வருவது, ஆகாசத்தில் இருந்து இறங்குகின்றது, அதற்குள் (ஆகாசத்திற்குள்) பறந்து போகுவது அனைத்தும் அவருக்கு (கடவுளுக்கு) தெரியும். அவர் எல்லையற்ற கருணை பிரதாதா, மன்னிக்கும் தன்மை கொண்டவர் (பெரும் கருணையை வழங்கி மன்னிப்பவர்)"** என்று உள்ளது.

கடவுளுடைய ஞானம் பிரகாரம் கர்மம் ஜீவன் மீது இறங்குவது, ஜீவனிலிருந்து கர்ம சக்கரத்தில் பதிவு ஆகுவது, கண்டிப்பாக நாம் தெரியும்படி உருவம் செய்து கொண்டோம். கர்ம சக்கரத்தின் மேல் கால சக்கரம் உள்ளது. கால சக்கரத்தில் ஒவ்வொரு விஷயத்திற்கு ஒரு கெடுவு நிர்ணயிக்கப்பட்டு இருக்கும். காலசக்கரத்தில் நிர்ணயித்த காலக்கெடுவு பிரகாரம் கீழ் கர்ம சக்கரத்தில் கர்மம் நடந்து கொண்டிருக்கும். அதனால் எப்போது மரணிக்க வேண்டியவன் அவன் அப்போதே மரணிப்பான். நடக்க வேண்டிய காரியம் எதுவாக இருந்தாலும் ஒரு நொடி கூட வித்தியாசம் இல்லாமல் நடக்கும். அது கால சக்கரத்தில் உள்ள காலத்தின் நிர்ணயம் யாரும் மாற்ற முடியாது. கால சக்கரத்தை கீழ் தெரியும் உருவமாக பார்த்துக் கொள்ளலாம்.

காலசக்கரம் மொத்தம் 12 பாகங்களாக உள்ளது. ஒவ்வொரு பாகம் ஒவ்வொரு பெயரில் இருக்கின்றது. ஒவ்வொரு பாகத்தில் இரண்டு மணி நேரம் இருக்கும். அந்த காலச்சக்கரம், கர்மச்சக்கரம், குணசக்கரம் ஒன்றின் ஒன்று

சம்பந்தப்பட்டு இருந்து சுற்றுவதனால், வேறுவேறு நேரத்தில், வேறு கர்மங்களை, வெவ்வேறு அனுபவங்களாக ஜீவன் அனுபவித்துக் கொண்டிருப்பான்.





**கால சக்கரம் படம்**

கடவுள் தன்னுடைய ஞானம் பிரகாரம் மனிதனை சிருஷ்டித்து, தன்னுடைய ஞானம் பிரகாரமே நடக்கும் படி செய்தார். கடவுள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்குத் தெரியாமல் எதுவும் நடக்காது. கடவுளுடைய ஞான பரமார்த்தத்தை, நிதர்சனத்தை முழுமையாக தரிசனமாக பார்த்துக் கொண்டால் கீழ் உள்ள படத்தில் வரைந்திருந்த விதமாக உள்ளது பாருங்கள்.

மனிதன் தேகத்தில் மனிதனுக்கு மூலமான இந்த சக்கரம் இருப்பதினால், பகவத்கீதாவில்

புருஷோத்தமபிராப்தியோகத்தில் முதல் சுலோகத்தில் “ஊர்த்வமூல” என்று கூறியுள்ளார். அந்த வார்த்தைக்கு மேல் மூலம் இருக்கிறது என்று அர்த்தம்.




கடவுளுடைய கிரந்தத்தில் உள்ள கடவுளுடைய ஞானம் தெரியும்படி பார்த்துக் கொண்டால் அது கடவுளுக்கு சம்பந்தப்பட்ட முத்திரை ஆகும். ராஜா சாசனங்களுக்கு அடையாளமாக ராஜ முத்திரை இருப்பது போல், கடவுளுடைய தர்மத்திற்கு அடையாளமாக **கடவுள் முத்திரை அல்லது கடவுள் சின்னம்** உள்ளது. கடவுள் சின்னம், கடவுள் ஞானத்திற்கு உருவமாக இருப்பதினால் அதில் தெய்வ சக்தி இருக்கிறது என்று சொல்லலாம். தெய்வ சக்தி எங்கு இருக்குமோ அங்கு கர்மம் எரிந்து போகும். அக்னி எங்கு இருக்குமோ அங்கு இருக்கின்ற பொருட்கள் எது இருந்தாலும் அக்னியினால் எரிந்து போவது போல், தெய்வ சக்தி

இருக்கும் இடத்தில் எந்த கர்மம் இருந்தாலும் ஞான அக்னி பட்டு எரிந்து போகும்.

**கேள்வி:-நீங்கள் தெரியும்படி காட்டிய கடவுள் சின்னத்திற்கு உண்மையாக தெய்வ சக்தி இருக்குமா?**

**பதில்:-** தெய்வ ஞானத்தில் முக்கியமானவை (1)பூமி ஆகாசங்கள் சிருஷ்டி விஷயம். (2)மூன்று ஆத்மாக்கள் விஷயம். (3)கர்மம் பற்றிய விஷயம். (4)கால நிர்ணயம் உள்ள விஷய ஞானம் இருப்பதினால் கடவுள் அடையாளத்திற்கு கடவுளுடைய சக்தி ஒட்டிக்கொண்டு இருக்கின்றது. இந்த நான்கு ஞானங்கள் தவிர வேறு ஆன்மீக ஞானம் இல்லை. கடவுளுடைய ஞானத்தில் எது கூறினாலும் இந்த நான்கு அம்சங்கள் ஞானமே இருக்கும். ஆன்மீக ஞானத்தில் மேல் உள்ள நான்கு ஞானங்களே முக்கியமாக இருப்பதினால், கடவுள் முத்திரையாக காட்டப்பட்ட படத்திற்கு அல்லது உருவத்திற்கு தெய்வ சக்தி இருக்கும் என்று சொல்கின்றோம்.

இப்போது "கடவுள் சின்னம்" இந்த பெயரில் மட்டுமல்லாமல் **"கடவுள் முத்திரை"** இந்த பெயரில் சொல்லும் விதானத்தை பாருங்கள். கடவுள் சின்னமாக உள்ள பொம்மையை பார்த்தீர்கள் அல்லவா! இங்கு அதே பொம்மையை கடவுள் முத்திரையாக சொல்கின்றோம். மனிதன் ஆராதிக்க வேண்டிய கடவுள் ஒருவர் தான். அதே விஷயம் குர்ஆன் கிரந்தத்தில் சூரா 3, ஆயத்து 18 இல் அல்லாஹ்வே சுயமாக **"இவர் தான் நீங்கள் ஆராதனை**


**செய்ய வேண்டிய கடவுள்"** என்று தன்னைவிட வேறாக இருக்கின்றவரை காட்டினார். ஆராதனை செய்ய வேண்டிய கடவுள் ஒருவர்தான் என்னும் அந்த ஒருவரை காட்டியவர் சுயமாக அல்லாஹ்வே. முஸ்லிம்கள் எல்லோரும் ஆராதனை செய்ய வேண்டியது ஒரு அல்லாஹ்வை மட்டும்தான் அல்லவா! அப்படிப்பட்ட போது அல்லாஹ் யாரை காட்டினார்? என்ற விஷயம் இதுவரை இந்த கிரந்தத்தில் விவரித்தோம். அல்லாஹ் மனிதர்களுக்கு தந்தையாக இருக்கின்றார் மற்றும் தாத்தாவாகவும் இருக்கின்றார். தாத்தாவாக இருக்கின்ற அல்லாஹ், தந்தையாக இருக்கின்ற அல்லாஹ் இருவரும் ஒருவர்தான். ஆனால் அல்லாஹ் இன்னும் நெருக்கமாக அர்த்தமாகுவதற்கு அதன் போல பிரித்து காட்ட வேண்டியிருந்தது. புனித குர்ஆன் கிரந்தத்தில் சூரா 3, ஆயத்து 18 இல் அல்லாஹ் சொல்லிய வார்த்தை மறக்கக் கூடாது. ஞானம் பெற்றவர்கள், தேவதூதர்கள் மற்றும் **சுயமாக அல்லாஹ்** சொல்லியது ஒவ்வொரு மனிதனும் கண்டிப்பாக ஒப்புக்கொள்ள வேண்டும். யாராவது ஒப்புக் கொள்ளாமல் போனால் அவர் அல்லாஹ் வார்த்தை மீறியவர் ஆகுவார். அப்போது அவர் அல்லாஹ்வுக்கு (கடவுளுக்கு) எப்படி விசுவாசி ஆகுவார்? அல்லாஹ்வின் மீது உண்மையான விசுவாசியாக யார் இருக்கின்றார்களோ அவர் கண்டிப்பாக அல்லாஹ் வார்த்தைகளை (ஆயத்துகளை) கேட்பார்.

"கடவுள் சின்னம்" விட வேறாக இருக்கின்றது **"கடவுள் முத்திரை"** என்ற கிரந்தம். கடவுள் முத்திரை கிரந்தத்தில் ஒவ்வொரு விஷயமும் கடவுள் சின்னத்தில்

உள்ள விஷயத்தை விட வேறாக சொல்லிக்கொண்டு வந்தாலும் “கடவுள் சின்னம்” இந்த படம் அதன் போலவே “கடவுள் முத்திரை” இந்த படம் இரண்டும் ஒன்றுதான். ஆனால் கடவுள் சின்னம் வரைபடம் அந்த கிரந்தத்தில் எப்படி இருக்கின்றது இந்த கிரந்தத்தில் காட்டினோம். கடவுள் சின்னம் பொம்மையை அதுக்கு சம்பந்தப்பட்ட சமாச்சாரம் அந்த கிரந்தத்திலிருந்து எடுத்துக்காட்டினோம். அப்படி காட்டியதினால் கடவுள் முத்திரை, கடவுள் சின்னம் இரண்டும் ஒன்றுதான் என்னும் தனித்துவமாக அர்த்தமாகும். “கடவுள் சின்னம்” இந்த கிரந்தத்திலிருந்து கடவுள் சின்னம் என்ற வரைபடம் பார்ப்பது மட்டுமல்லாமல் அதில் உள்ள சிறிது சமாச்சாரத்தையும் கூட பார்த்தார்கள். அந்த சமாச்சாரம் இதுவரை எழுதிய கடவுள் முத்திரை கிரந்தத்தில் உள்ள சமாச்சாரம் எல்லாம் வேறாக இருப்பது போல் தெரிந்து போனது. சமாச்சாரம் எப்படி வேறாக இருக்கின்றதோ அதன் போலவே கடவுள் வரைபடம் அர்த்தம் கூட வேறாக இருக்கும். இப்போது கடவுள் முத்திரை விவரம் தெரிந்து கொள்ளலாம்.

**சிருஷ்டி ஆதியில் முதன் முதலில் கடவுள் எத்தனை பாகங்களாக பிரிந்தார்?** இந்த கேள்விக்கு பல பேர் மூன்று பாகங்கள் என்னும் ஜீவாத்மா, ஆத்மா, பரமாத்மா என்று எழுதினார்கள். கடவுள் மூன்று ஆத்மாவாக தயாரானது உண்மைதான். ஆனால் முதல் உலகம் தயாரான பிறகு கடவுள் மூன்று ஆத்மாவாக பிரிந்து போனார். அதனால் முதன் முதலில் உலகம் என்னும் பிரக்ருதி வெளியில்

வந்தது. பிரக்ருதியினால் பஞ்ச பூதங்களினால் தயாரான உலகம் ஏற்பட்ட பிறகு கடவுளிடம் இருந்து இரண்டு ஆத்மாக்கள் வெளியில் வந்தது என்னும், அந்த விதமாக முதன் முதலில் கடவுள் நான்கு பாகங்களாக பிரிக்கப்பட்டார் என்னும், கிரந்தம் ஆரம்பத்திலேயே கூறிக் கொண்டோம். முதல் பிறந்த பிரக்ருதி மூன்று ஆத்மாக்களுக்கு நிவாசத்திற்கு ஆதாரமானது. ஒரு பாத்திரத்தை உதாரணமாக சொல்லிக்கொண்டு முதலில் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு அதில் மூன்று ரகம் உள்ள தண்ணீரை ஊற்றினோம். அந்த மூன்று ரகம் உள்ள தண்ணீருக்கு பாத்திரம் ஆதாரமாக இருக்கின்றது என்று சொல்லிக்கொண்டோம். அதனை தெரியும்படி படம் வரைந்து கொண்டு பார்க்கலாம். கடவுளிடமிருந்து வந்த முதல் பாகமான பிரக்ருதியை பிறகு பக்கத்தில் வரை படத்தில் பாருங்கள்.



முதலில் பிரக்ருதி தயாராகி அது மூன்று ஆத்மாக்களுக்கு நிலையம் ஆகாததற்கு முன்பே ஏழு வண்ணமாக தெரிந்தது. அதனை இந்திர தனுசு வண்ணம் என்னும் இன்று நேராக தெரிகின்ற வண்ணங்களை சொல்லிக் கொண்டிருப்போம். இந்திர தனுசில் ஏழு வண்ணங்கள் இருப்பது சகஜம்தான். ஏழு வண்ணங்களை பொறுத்து ஏழு நாட்கள் பெயர் தயார் செய்யப்பட்டது. ஜீவாத்மா ஆத்மா தயாராகுவதற்கு முன்பே கடவுள் கால சொரூபனாக இருப்பதினால் பிரக்ருதி பிறந்த போதே காலம் இருந்தது. ஆதியில் பிரக்ருதி பிறந்தபோது கடவுள் காலமாக இருந்து பிரக்ருதியில் ஏழு பெயராக அழைக்கப்பட்டார். அந்த ஏழு பெயர்கள் நாட்களாக நமக்கு அறிமுகமானது. இதனைப் பொறுத்து பிரக்ருதி பிறந்த பிறகு எந்த ஜீவராசி பிறப்பதற்கு முன்பே காலமிருந்தது, காலங்களுக்கு ஏழு நாட்கள் பெயர் இருந்தது. காலம் ஆதிவாரத்தில் (ஞாயிற்றுக்கிழமை) ஆரம்பித்தது. முதலில் பிரக்ருதி, பிறகு ஜீவிகள் உற்பத்தி ஆத்மாவுடன் நடந்தது. ஜீவிகள் முதல் பிறந்தநாள் ஞாயிற்றுக்கிழமை என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் ஜீவராசிகள் ஞாயிற்றுக்கிழமையில் ஆரம்பித்தது என்று சொல்கின்றோம். ஞாயிற்றுக்கிழமை நாள் ஜீவிகள் உற்பத்தி ஆரம்பமானது. அதனால் தெரியும் படி உள்ள பிரக்ருதி, உருவம் கொண்ட படத்தில் ஏழு நாட்களை அடையாளிக்கப்பட்டது. மனிதன் தேகத்தில் பிரக்ருதி என்னும் சக்கரம் இருக்கும்போது, மேல் உள்ள பிரக்ருதி சக்கரம் இரண்டு பாகங்களாக ஷர, அக்ஷசர பிரக்ருதி என்று தயாரானது. தலையில் உள்ள மூளை இரண்டு பாகங்களாக உள்ளது. தேகம் பிரக்ருதியால்

தயாரானதினால் மேலும் மூளை இரண்டு பாகங்களாக, இரண்டு பாகங்கள் சக்கரம் போல் தெரிகின்றது. இரண்டு பாகங்களாக உள்ள மூளையில் இருந்து பிரம்ம நாடி அல்லது தண்டுவடம் இந்த நரம்பு மேல் இருந்து கீழ் வரை ஏழு பாகங்களாக உள்ள விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

சிருஷ்டி ஆதியில் பரமாத்மாவிலிருந்து பிரக்ருதி பிறந்து பரமாத்மா, பிரக்ருதி இரண்டும் “நாடகம்” என்னும் விளையாட்டில் ஒரு பக்கம் பொருந்தும். அதனால் இரண்டாவது பக்கம் இருவர் இருக்கும் படி நினைத்த பரமாத்மா ஆத்மாவை, ஜீவாத்மாவை அவரிலிருந்து வெளியே எடுத்தார். அப்போது மொத்தம் நான்கு பேர் தெரிந்தார். மூன்று ஆத்மாக்கள் ஒரு பிரக்ருதி தயாரானது. முதல் தயாரான பிரக்ருதி கடவுள் முத்திரை என்னும் பொம்மையில் அல்லது வரைபடத்தில் மேல் பாகத்தில் இரண்டு பாகங்களாக ஷர, அக்ஷர பிரக்ருதியாக இருக்கின்றது. அதற்கு கீழ் பரமாத்மாவை மறைத்து வைத்துக் கொண்டது போல் பிரக்ருதி பின்பாகத்தில் என்றால் பிரக்ருதி என்னும் சக்கரத்துக்கு கீழ் இரண்டாவது சக்கரமாக இணைந்து போனது. பிரக்ருதி, பரமாத்மா ஓரிடத்தில் நிற்கின்றவர் அல்ல. எப்போதும் சக்கரம் போல் முன்னுக்கு உருண்டு போய்க் கொண்டிருப்பார். இது இரண்டும் எவ்வளவு காலமானாலும் உருளலாம், எவ்வளவு காலமானாலும் கடக்கலாம். ஓரிடத்தில் நிற்கின்றது அல்ல ஆனால் பிரக்ருதியை, பரமாத்மாவை சக்கரம் போல் வரைபடத்தில் காட்டப்பட்டது. காலம் இயக்கத்திலும் (இயக்கத்துடன்) கூடியுள்ளது. அதனால்

பிரக்ருதி, பரமாத்மா எப்போதும் முன்னோக்கிப் போகும் நகர்கிறது என்று சொல்லப்படுகின்றது. அதனால் இவர்களை சக்கரங்களாக வரையப்பட்டது. இந்த விஷயத்திற்கு சம்பந்தப்பட்ட சமாச்சாரம் பகவத்கீதாவில் ராஜ வித்யா ராஜ குஹ்ய யோகத்தில் 10 ஆவது சுலோகத்தில் இப்படி கூறினார் பாருங்கள்.

**சுலோகம்:-10. மாயா தக்ஷேண பிரக்ருதி சூயதே ஸசரா சரம்!**

**ஹெதுனநேன கௌந்தேய /**


**ஜெகத் விபரிவர்த்ததே //**

**கருத்து:-"பிரக்ருதிக்கு நான் தலைமை தாங்குவதால் உலகத்தில் ஜீவராசிகள் எல்லாம் பிறக்கின்றது. நான் ஆதாரமாக இருக்கும்போது பிரக்ருதி சக்கரத்தில் இறப்பு பிறப்பு ஜெகத் சக்கரம் போல் சுற்றுகின்றது".**

பரமாத்மா பிரக்ருதிக்கு கீழ் மறைமுகமாக உள்ளதை கடவுள் முத்திரை வரைபடத்தில் தெரிகின்றதை நேரடி உருவமாக பார்க்கலாம். அந்த பார்வையில் பார்ப்பதினால் சிறிது வரை கடவுளுடைய விதானம் மனிதனுக்கு அர்த்தமாகும். ஞாயிற்றுக்கிழமை பிரம்ம நாடியில் எங்கு உள்ளதோ அங்கே பிரக்ருதி சக்கரம் உள்ளது. அதன் போலவே திங்கட்கிழமை எங்கு உள்ளதோ அங்கே பரமாத்மா சக்கரம் உள்ளது.


கடவுள் முத்திரையில் இரண்டு சக்கரங்களை பார்க்கலாம். கடவுள் முத்திரை மொத்தம் நான்கு

சக்கரமுள்ள வரைபடம். ஆனால் பிரக்ருதி பரமாத்மா வரை அப்படி இருந்தது. சிருஷ்டி காரியங்களில் உடனே பரமாத்மாவில் இருந்து ஆத்மா, ஆத்மாவிலிருந்து ஜீவாத்மா வெளியே வந்தது. அந்த இரண்டு ஆத்மாக்கள் இரண்டு படங்களாக தயாராகி பிரக்ருதிக்கு சம்பந்தப்பட்ட பிரம்ம நாடியை நாடுகின்றன. அப்போது பார்க்கும் காட்சி பிறகு படத்தில் காட்டப்பட்டது பாருங்கள்.




இந்த விதமாக கடவுள் முத்திரை தயார் செய்யப்பட்டது. கடவுள் சின்னத்தில் மேல் இருந்து பிரம்ம, கால, கர்ம, குணசக்கரங்கள் காட்சி வடிவமாக இருக்கும்போது கடவுள் முத்திரையில் மேல் இருந்து பிரக்ருதி, பரமாத்மா, ஆத்மா ஜீவாத்மாக்கள் நான்கு சக்கரங்கள் காட்சி வடிவமாக உள்ளது. கடவுள் சின்னம், கடவுள் முத்திரையில் வித்தியாசங்கள் கவனிக்கலாம்.

கடவுள் சின்னத்தில் நான்கு சக்கரங்கள் பெயர் மேல் இருந்து கீழ் வரிசையாக **பிரம்ம சக்கரம், கால சக்கரம், கர்ம சக்கரம், குணசக்கரம்** என்று சொல்லுகின்றோம். அதே வரைபடம் கடவுள் முத்திரையாகவே சொல்லினால் கடவுள் முதலில் கூட அதே வரைபடம் இருந்த, அதிலும் கூட நான்கு சக்கரங்கள் இருந்து, அந்த நான்கு சக்கரங்கள் மேல் இருந்து கீழ் வரிசையாக இப்படி கூறலாம். மேலுள்ளது பிரக்ருதி அடையாளம், பிறகு உள்ளது பரமாத்மாவுக்கு அடையாளம், அதன் பிறகு மூன்றாவது ஆத்மாவுக்கு அடையாளம், இறுதியில் கீழுள்ள நான்காவது சக்கரம் ஜீவாத்மாவுக்கு அடையாளமாக உள்ளது. பிரம்ம நாடி தேகத்திற்கு (பிரக்ருதிக்கு) அடையாளமாக இருக்கிறது என்று சொல்லலாம்.




இங்கு கடவுள் முத்திரையாக உள்ள நான்கு சக்கரங்களை ஆழமாக கவனித்தால் மேல் உள்ள பிரக்ருதி சக்கரம், ஷர

அக்ஷர பிரக்ருதி என்னும் இரண்டு பாகங்களாக உள்ளது. அதனை விட கீழ் பரமாத்மா அடையாளமான இரண்டாவது சக்கரம் 12 பாகங்களாக இருக்கின்றது. அதே கடவுள் சின்னத்தில் கால சக்கரமாக சொல்லப்பட்டது. அதில் 12 பாகங்கள் 12 மாதங்களுக்கு அடையாளமாக சொல்லிக் கொண்டோம். இங்கு அதே சக்கரம் கடவுள் முத்திரை என்னும் பெயரில் பரமாத்மாவுக்கு அடையாளமாக சொல்லப்பட்டது. அதனை விட கீழ் உள்ள மூன்றாவது சக்கரம் ஆத்மாவுக்கு அடையாளமாக சொல்லப்பட்டது. பரமாத்மாவுக்கு அடையாளமாக இரண்டாவது சக்கரம், ஆத்மாவுக்கு அடையாளமாக உள்ள மூன்றாவது சக்கரம் இரண்டும் 12 பாகங்களாக இருப்பது தெரிந்த விஷயம் தான். இந்த 12 பாகங்கள் கடவுள் சின்னத்தில் கால, கர்ம சக்கரங்கள் பிரிவு பிரகாரம் கால சக்கரத்தில் உள்ள 12 பாகங்கள் 12 மாதங்களுக்கு, கர்ம சக்கரத்தில் உள்ள 12 பாகங்கள் மனிதனுடைய 12 கர்ம ராசிக்கு போதுமான அளவு பிரிந்து இருக்கும். அதே கடவுள் முத்திரையில் பரமாத்மா, ஆத்மா இரண்டு சக்கரங்களில் மேலும் கீழும் 12 பாகங்கள் இருப்பதினால் பரமாத்மாவுக்கு சமமானவர் ஆத்மா என்று தெரியப்படுகின்றது. கடவுள் சுயமாக தன்னைப் போலவே தன்னுடைய ஆத்மாவை அதிகாரியாக நிர்ணயித்தார். எனவே மேலுள்ள பாகங்கள் கீழ் உள்ளது என்று அர்த்தம் செய்து கொள்ள வேண்டும்.

ஒரு சம்பூர்ண புள்ளி 360 டிகிரி கோணங்களாக இருக்கும். என்றால் ஒரு சக்கரம் உருவம் ஏதாவது 360 டிகிரி வட்டமாக இருக்கும். கடவுளாக இருக்கின்ற பரமாத்மா ஒரு

சக்கரமாக காட்டப்பட்டது. அந்த சக்கரம் என்றால் அந்த வட்டம் 30 டிகிரி கோணங்களாக 12 பாகங்கள் செய்வதினால் 360 கோணங்கள் சரியாகின்றது. கடவுள் மூன்று ஆத்மாவாக இருப்பதினால் மூன்று பத்து டிகிரிகள் ஒரு கோணமாக பிரித்து 12 பாகங்கள் செய்து 12X30=360 டிகிரி வட்டம் சரியாக இருக்கும் என்று சொல்லலாம். மேல் உள்ள பரமாத்மா சக்கரம், கீழுள்ள ஆத்மசக்கரம் இரண்டும் சம பாகத்தில் இருப்பதினால் இரண்டும் சமமாக இருக்கிறது என்று சொல்லலாம். பார்ப்பதற்கு சொல்வதற்கு வெவ்வேறாக சக்கரங்களாக இருந்தாலும் இரண்டும் ஒன்றாகவே இருக்கின்றது. இரண்டும் ஒரே அதிகாரத்தைப் பெற்று இருக்கின்றது. இரண்டும் எல்லாவற்றிலும் சமமான அதிகாரம் கொண்டு இருப்பதினால் இரண்டையும் ஒன்றாக சொல்லலாம். அதனால் இன்ஜீல் (பைபிள்) ஞானத்தில் யோவான் சுவார்த்தையில் பத்தாவது அத்தியாயத்தில் முப்பதாவது வாக்கியத்தில் இப்படி கூறப்பட்டது பாருங்கள்.

**(யோவான் 10-30) “நானும் என் தந்தையும் ஒன்றாக இருக்கிறோம் என்று அவரிடம் கூறினேன்”.**

இந்த வாக்கியங்களை கவனித்தால் என் தந்தை (12) பன்னிரண்டு ஆனால் நான் பன்னிரண்டாகவே இருக்கிறேன், “நானும் என் தந்தை ஒன்றாக இருக்கிறோம் என்று கூறினார்”, “ஒன்றாகவே இருக்கிறோம்” என்று கூறினார். நடுவில் இரண்டு சக்கரங்களாக இருக்கின்ற தந்தை குமாரன் இருவரும் சமமாக இருப்பதினால் இரண்டு சக்கரத்தில் 12 பாகங்களே காட்டினார். கீழுள்ள நான்காவது சக்கரம் ஜீவாத்மாவுக்கு

அடையாளமாக இருக்கின்றது கீழ் உள்ள ஜீவாத்மா மேல் மோக்ஷமாக இருக்கின்ற பரமாத்மாவில் சேர வேண்டும் என்றால் நடுவில் உள்ள ஆத்மா சக்கரத்தினால் போக வேண்டியது இருக்கும். அதனால் இன்ஜீல் யோவான் 14 ஆவது அத்தியாயத்தில் ஆறாவது வாக்கியத்தில் இப்படி கூறினார் பாருங்கள். **யோவான் (14-6) "இயேசு நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன், என்னால் மட்டுமே தவிர ஒருவனும் தந்தையிடம் வரமாட்டான்".** இங்கு கடவுள் முத்திரை வரைபடம் பார்த்தால் இந்த வாக்கியத்திற்கு சரியாக இருக்கின்ற ஞானம் என்று தெரிகின்றது. கடவுள் சின்னம் என்னும் வரைபடம் பகவத்கீதாவிலிருந்து உணர்ந்து நாங்கள் கிட்டதட்ட 40 வருடங்களுக்கு முன்பே எழுதினோம். அந்த கடவுள் சின்னத்தை பற்றி இரண்டு ஆயத்துகளில் (5-2), (22-32) நேரடியாக "கடவுள் சின்னம்" என்று பெயர் வைத்து சொல்லப்பட்டது. மற்றும் மறைமுகமாக குர்ஆன் வாக்கியங்களில் பல இடத்தில் கடவுள் சின்னத்தை பற்றி சொல்லப்பட்டது. நேரடியாக 22 ஆவது சூராவில் 32 வது ஆயத்தில் வாக்கியத்தில் **"கடவுள் சின்னத்தை கௌரவபடுத்துங்கள்"** நேரடியாக சொல்லி இருந்தாலும், முஸ்லிம்களுக்கு இன்று வரை கடவுள் சின்னத்தை பற்றி தெரியவில்லை என்று சொல்லலாம். கடவுள் சின்னத்தை பற்றி தெய்வகிரந்தமான குர்ஆனில் சொல்லி உள்ளது அது என்னவென்று நேரடியாக, மறைமுகமாக அர்த்தமாகவில்லை.

கடவுள் சின்னத்தைப் பற்றி இறுதி தெய்வகிரந்தமான குர்ஆன் கிரந்தத்தில் அதிகமாக சொல்லப்பட்டது போல், கடவுள் முத்திரை பற்றி தெய்வ கிரந்தமான இன்ஜீல் கிரந்தத்தில் அதிகமாக சொல்லப்பட்டது. பைபிள் (இன்ஜீல்) கிரந்தத்தில் மறைமுகமாக சில இடத்தில், நேரடியாக சில இடத்தில் சொல்லி உள்ளார். அதே பிரதம தெய்வ கிரந்தமான பகவத்கீதாவில் கடவுள் முத்திரையை அல்லது கடவுள் சின்னத்தை பற்றி நேரடியாக இல்லை மறைமுகமாக சொல்லப்பட்டுள்ளது. முதலில் நான் பகவத் கீதாவில் மறைமுகமாக உள்ள விஷயங்கள் பார்த்து “கடவுள் சின்னம்” இந்த வரைபடம் எல்லோரும் கண்ணால் பார்ப்பது போல் அதனுடைய உருவத்தை நாங்கள் வரைந்து காட்டி தெரிவித்தோம். நாங்கள் காட்டிய கடவுள் சின்னம் பொம்மையே (வரைபடம்) குர்ஆன் கிரந்ததில் (22-32) **“கடவுள் சின்னத்தை கௌரவிக்க வேண்டும்”** என்னும் எழுதினாலும் எப்படி கௌரவிக்க வேண்டுமோ அவர்கள் ஆலோசனை செய்யாமல் போனார்கள். கடவுள் சின்னம் நான்கு சக்கரம் உருவமாக இருக்கிறது என்று கூட கிரகிக்காமல் போனார்கள். அவரவர் பெரியோர்கள் சொல்லிய பிரக்ருதி விலங்குகள், பிரக்ருதி காட்சிகள் கடவுள் சின்னமாக ஒப்பிட்டுக் கொண்டார்கள். கடவுள் சொல்லியது பிரக்ருதி சம்பந்தமானது அல்லவென்று தெரிந்து கொள்ளாமல் போனார்கள்.


இன்ஜீல் கிரந்தத்தில் என்றால் பைபிள் கிரந்தத்தில் நான்கு சுவார்த்தையில் மறைமுகமாக கடவுள் முத்திரையை

பற்றி கூறினார். நாங்கள் கடவுள் சின்னமாக சொல்லிய அடையாளத்தை கடவுள் முத்திரையாக இப்போது எழுதப்பட்டது. கடவுள் முத்திரை பற்றி பைபிள் கிரந்தத்தில் சுவார்த்தையில் மறைமுகமாக சொல்லுவது மட்டுமல்லாமல், கிரந்தம் இறுதியில் உள்ள யோவான் எழுதிய "பிரகடன கிரந்தம்" என்பதில் ஒன்பதாவது அத்தியாயத்தில் நான்காவது வாக்கியம் முதல் ஆறாவது வாக்கியம் வரை நேராக **"கடவுள் முத்திரை"** என்ற பேரில் சொல்லப்பட்டது. அந்த விஷயம் இப்போது பார்க்கலாம் **(பிரகடன 9-4,5,6)** **"நெற்றியில் கடவுள் முத்திரையில்லாத மனிதர்கள் தவிர பூமி மேல் உள்ள புல்லையும், எந்த மரத்தையும், செடிகளையும், மற்றும் சேதப்படுத்தக் கூடாது என்னும் கட்டளை வழங்கப்பட்டது. மற்றும் அவர்களை கொன்றுவதற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை மேலும் ஐந்து மாதங்கள் வரை துன்புறுத்துவதற்கு அவற்றுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவற்றினால் வரும் வேதனை தேள் மனிதனுக்கு கடித்த போது அந்த வேதனை போல் இருக்கும். அந்த நாளில் மனிதர்கள் சாவை தேடுவார்கள் ஆனால் அது அவருக்கு கிடைக்கவே கிடைக்காது. சாக வேண்டும் என்னும் ஆசைப்படுவார்கள் மேலும் சாவோ அவர்களிடமிருந்து விலகிபோகும்".**

யோவான் பிரகடன கிரந்தத்தில் மூன்று வாக்கியங்களைப் பார்த்தால் கடவுள் முத்திரை எவ்வளவு பெரியதோ, கடவுள் முத்திரை நெற்றி மேல் வைப்பதினால் எவ்வளவு ஆபத்து நீங்கி விடுமோ, அந்த ஆபத்தினால்

மனிதர்கள் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியது இருக்குமோ கவனித்து, கடவுள் முத்திரை வைக்காமல் எதற்கு இவ்வளவு அஞ்ஞானத்தில் அறிவில்லாதவர்களாக இருக்கிறோம் என்று நினைக்கிறோம். யோவான் பிரகடன கிரந்தத்தில் எழுதியது போல் அப்படி துன்புறுத்தும் தேவ தூதர்கள் இருக்கிறாரா என்ற சந்தேகம் வரலாம். இந்த வார்த்தையை நம்பாமல் இருந்து போவதற்கு, கடவுள் முத்திரையை கௌரவிக்காமல் போவதற்கு வாய்ப்பு இருக்கும். அதனால் இதுவரை கூறிய கடவுள் முத்திரை, ஒரு தடவை பக்கத்து பின் பக்கத்தில் பார்த்த பிறகு அதன் மேல் உள்ள நோக்கத்தை சொல்லிக் கொள்ளலாம்.

இப்போது உங்களுக்கு காட்டிய நான்கு சக்கரங்கள் பிரகடன கிரந்தத்தில் சொல்லிய உண்மையான கடவுள் முத்திரை ஆகும். கடவுள் முத்திரை வைக்காத மனிதர்களை தவிர மரத்தையும், புல்லையும் சேதப்படுத்தகூடாது என்று கட்டளை வழங்கப்பட்டது என்று கூறப்பட்டது.




**இது சம்பூர்ணமான கடவுள் முத்திரை மற்றும் கடவுள் சின்னம்.**

கட்டளை யார் கொடுத்தார்? யாருக்கு கொடுத்தார்? இந்த விஷயம் சிறிது அர்த்தமானால் மேல் சொல்லப்பட்ட வாக்கியங்கள் மீது நம்பிக்கை ஏற்படும். அப்போது கடவுள் முத்திரையை யாராவதும் கௌரவிப்பார் மற்றும் வைத்துக் கொள்வார்கள். கடவுள் முத்திரையை ஞானம் பிரகாரம் தனித்தனியாக சொல்லிக் கொண்டோம். அதன் போலவே கடவுள் சின்னத்தை ஞானம் முறையில் விவரித்துக் கொண்டோம் இதுவரை நாங்கள் கூறிய கடவுளின் சின்னம் அல்லது கடவுள் முத்திரையை பற்றி இங்கு முஸ்லிம்களுக்கும், அங்கு கிறிஸ்தவர்களுக்கும் தெரியாது. ஹிந்துக்கள் விஷயத்திற்கு வந்து பார்த்தால் அவர் வைக்கின்ற நாமங்களை, விபூதி ரேகைகள், குங்குமம் பொட்டுக்கு இந்த முத்திரைக்கு எந்தவிதமான சம்பந்தம் இல்லை. அதனால் ஹிந்துக்களுக்கு கூட கடவுள் முத்திரை பற்றி சிறிதளவு கூட தெரியாது. இதுவரை இந்த முத்திரை எந்த மதத்திற்கு சேர்ந்தவர்களுக்கும் தெரியாது. கடவுள் முத்திரை பற்றி முக்கியமாக மூன்று மதத்தில் உள்ளவர்களுக்கு தெரிந்து இருக்க வேண்டும். ஆனால் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவர்கள் மூவருக்கும் இந்த முத்திரையை பற்றி சிறிதளவு கூட தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். இந்த முத்திரை மூன்று மதத்திற்கு சம்பந்தப்பட்டு இருந்தாலும், கடவுள் தன்னுடைய மூன்று கிரந்தத்தில் இந்த முத்திரையை பற்றி கூறியிருந்தாலும், மூன்று மதத்தில் உள்ளவர்கள் கடவுள் முத்திரையை புறக்கணித்தார்கள். கடவுள் சொல்லிய போதனைகளை மனிதர்கள் மட்டுமல்லாமல் மனிதர்களோடு பிறந்த கடவுளின்

நிர்வாகத்தின் ஆட்சியாளர்களாக இருந்த மகாபூதங்கள், பூதங்கள், கிரகங்கள், துணைக் கிரகங்கள் முதலியன எல்லோரும் கடவுளுடைய ஞானம் தெரிந்துக்கொண்டு இருக்கிறார்கள். கடவுள் நிர்வாகத்தின் ஆட்சியாளர்கள் எல்லோரும் கடவுளுடைய ஞானம் எவ்வளவோ இஷ்டமாக தெரிந்து கொள்ளுவது மட்டுமல்லாமல் தங்களுக்கு வரும் கட்டளைகளை தவறாமல் நிறைவேற்றுகின்றார்கள். இங்கு வாக்கியத்தில் “கட்டளை கொடுக்கப்பட்டது” என்று சொல்லினீர்கள் அல்லவா! கட்டளை கடவுளின் நிர்வாகத்தின் ஆட்சியாளர்களுக்கு கொடுக்கப்பட்டது. கொடுத்தவர் யார்? என்பது இப்போது நமக்கு முக்கியமான கேள்வி. கட்டளை கொடுத்தவர்களை பற்றி தெரிவதற்கு முதலில் கட்டளையை கிரகித்து கட்டளையை அமல் செய்யும் ஆட்சியாளர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? எப்படி இருக்கின்றார்கள்? இந்த விஷயம் மனிதர்களுக்கு சிறிது அர்த்தமாக வேண்டியது இருக்கும். அதனால் முதல் ஆட்சியாளர்கள் விஷயம் பற்றி அறிந்து கொள்ளலாம்.

பூமி மீது இரண்டு ரகமான ஜீவராசிகள் உள்ளது. ஒன்று ஆள்பவர் இரண்டு ஆளப்படுபவர். ஆளப்படுபவர் மனிதர்கள் மற்றும் அனைத்து ஜீவராசிகள். ஆளபவர் பூதங்கள், கிரகங்கள் இந்த இரண்டு ரகமானவர்கள் இருக்கின்றார்கள். ஆளப்படுபவர் மனிதர்கள், ஜீவராசிகள் உருவங்கள் பெயர் சிறிது வரை தெரிந்து உள்ளது. ஆனால் ஆள்பவர் பூதங்கள், கிரகங்கள், துணை கிரகங்கள் உருவங்கள் சிறிதளவு கூட மனிதர்களுக்கு தெரியாது. அவற்றின் உருவங்கள் முழுமையாக சொல்லாமல் குறிப்பாக

சொல்ல நினைத்தோம். ஆட்சியாளர்கள் எண்ணிக்கை பூதங்களாக, கிரகங்களாக, துணை கிரகங்களாக மூன்று ரகம் உள்ளவர்கள் பல கோடிக்கணக்கான எண்ணிக்கையில் இருக்கின்றார்கள் என்று சொல்லலாம். கோடிக்கணக்கான இருக்கின்ற கிரகங்கள், பூதங்கள் யாருக்கும் தெரியாது என்று சொல்லலாம். அவற்றின் உருவம் விலங்குகள், பூச்சிகள், பறவைகள், மனிதர்கள், சர்ப்பங்களை கலந்து செய்தது போல இருக்கும். மனிதர்கள் விலங்குகள் கலந்து பிறந்தது போல சிலது இருக்கும் போது, விலங்குகள் பறவைகள் கலந்து பிறந்தது போல சிலது இருக்கும். பறவைகள் சர்ப்பங்கள் கலந்து பிறந்தது போல சிலது இருக்கும். இதன் போல மனிதர்கள் கற்பனைக்கு எட்டாத உருவத்தில் ஆட்சியாளர்கள் இருக்கிறார் என்று சொல்லலாம். சிலர் ஆட்சியாளர்கள் இரண்டு மூன்று ஜாதிகள் இணைந்து பிறந்த உருவங்கள் இருந்து, சிலர் ஆட்சியாளர்கள் ஒரே உருவத்தில் பிறந்து இருக்கின்றார்கள். எது எந்த உருவத்தில் இருந்தாலும் அது நூற்றுக்கணக்கான கோடி எண்ணிக்கைகளில் ஆயிரக்கணக்கான கோடியில் இருக்கின்றது என்று சொல்லலாம். பூமி மீது தற்போது மக்கள் எண்ணிக்கை 700 கோடிகள் பேர் இருக்கலாம் என்று நினைத்துக் கொள்ளலாம். 700 கோடி பேருக்கு 7000 கோடி, அதனை விட அதிகமாக ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள் என்று கணிக்கலாம்.

ஒரு மனிதனுக்கு கிட்டத்தட்ட 10 பேர் ஆட்சியாளர்கள் இருந்தால் மற்ற ஜீவராசிகளுக்கு கலந்து எத்தனை பேர் ஆட்சியாளர்கள் இருக்கிறார் என்று சொல்லுவதற்கு சாத்தியமில்லை. மனிதர்களை ஆள்பவர்

வரை அர்த்தம் செய்து கொண்டால் மனிதன் எவ்வளவோ ஞானத்தை சம்பாதித்தது போல் ஆகும். மனிதனை ஆள்கின்ற ஆட்சியாளர்கள் தெய்வ ஞானத்தில் முதல் ஞானியாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு கடவுள் என்றால் மகா இஷ்டம். கடவுளை தூசிப்பவரை, கடவுளுடைய ஞானத்தை தூசிப்பவரின் மீது மிகவும் கோபம் கொண்டவர்கள். ஆனால் அவர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளை பிரகாரம் வேலை செய்வார்கள். ஞான விஷயங்களில் அஞ்ஞானமாக நடக்கின்றவர்களை, கடவுளை கௌரவிக்காமல் தேவதைகளை, மனிதர்களை கௌரவித்து, பூஜை செய்கின்றவர்கள் மீது கூட கோபமாக இருப்பார்கள். ஆனால் அவர் இஷ்ட பிரகாரம் வேலை செய்யாமல் அவருக்கு கொடுக்கப்பட்ட கட்டளை பிரகாரம் வேலை செய்வார்கள். முக்கியமாக அவர்கள் உருவங்களைப் பற்றி சொல்லினால் எங்கள் வார்த்தையை நம்பாதவர்கள் இருக்கலாம். அதன் போலவே இருப்பார் என்னும் சொல்வதற்கு ஆதாரம் என்னவென்று கூட கேட்கலாம். அதற்கு எங்களுடைய பதில் இந்த விதமாக இருக்கிறது. நான் நேரடியாக யாரையும் பார்க்கவில்லை சிறிது எனக்கு உள்ள ஞானத்தினால், தெய்வ கிரந்தத்தில் சொல்லிய ஆதாரத்தினால் மட்டும்தான் கூறினேன்.

கடவுளின் ஆட்சியாளர்களிடையே கிரகங்கள் கீழ் துணை கிரகங்களாக இருக்கின்ற அவற்றின் உருவங்கள் அதே பிரகடன கிரந்தத்தில் எழுதிய விதானத்தை பார்த்து அர்த்தம் செய்து கொள்ளலாம். பிரகடன ஒன்பதாவது அத்தியாயம், ஏழாவது வாக்கியத்தில் இருந்து பத்தாவது

வாக்கியங்கள் வரை பார்க்கலாம். **(யோவான் பிரகடன 9-7,8,9,10) "அந்த வெட்டுக்கிளி உருவங்கள் போர்களுக்கு தயார் செய்யப்பட்ட குதிரைகள் போல் உள்ளது. தங்கம் போல் மின்னுகின்ற கிரீடம் போல் அவற்றின் தலை மேல் இருக்கும். அவற்றின் முகங்கள் மனிதர்கள் முகங்கள் போன்றது. பெண்கள் தலை முடி போல் தலைமுடி அவற்றுக்கு இருக்கும். அவற்றின் பல்கள் சிங்கம் பல் போல் இருக்கும். இரும்பு கவசம் போன்ற கவசம் அவற்றுக்கு இருந்தது. அவற்றின் இறக்கைகள் சப்தம் போர்களுக்கு ஓடும் படி அது பல குதிரை வண்டிகளின் சப்தம் போன்றது. தேள் வால் போன்ற வால்களையும், கொடுக்குகள் போன்று இருக்கும். ஐந்து மாதங்கள் வரை அவற்றின் வாலினால் மனிதர்களை துன்புறுத்துவதற்கு அவை அதிகாரம் கொண்டு இருக்கும்".** இந்த விதமாக மனிதர்களை துன்புறுத்தும் ஆட்சியாளர்கள் உருவத்தைப் பற்றி சிறிது இங்கு கூறப்பட்டது. நான் கடந்த காலத்தில் பல தடவை கடவுளின் ஆட்சி ஆட்சியாளர்களை பற்றி சொல்லி உள்ளேன். அவர்களுக்கு நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான கைகள் கூட உள்ளது என்னும் அதிக கை உள்ள ஆட்சியாளர்களைப் பற்றி கூட சொல்லி உள்ளோம். அவருடைய உருவங்கள் இங்கு சொல்லியது போல் கலப்பு வடிவங்களாக உள்ளது. அவற்றின் பலம் கணிக்க முடியாது. கடவுள் ஞானத்தில் எவ்வளவோ இஷ்டத்தில், பக்தியில் இருக்கின்ற ஆட்சியாளர்கள் ஆனதினால் அவர் முன்பு கடவுள் பற்றி, கடவுள் ஞானம் பற்றி தூசித்தவர்களை தண்டனை கொடுப்பதற்காக பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

கடவுளின் ஆட்சியில் எத்தனையோ கோடி எண்ணிக்கையில் இருக்கின்ற ஆட்சியாளர்கள் அவர்களுக்கு இஷ்டம் வந்தது போல் நடந்து கொள்ளாமல் அவருக்கு கொடுக்கும் கட்டளை பிரகாரமே நடந்து கொள்ளுவார் என்று தெரிகின்றது. **(பிரகடன 9-5) இல் "அவர்களை கொன்றுவதற்கு அதிகாரம் கொடுக்கவில்லை ஐந்து மாதங்கள் வரை துன்புறுத்துவதற்கு அவற்றுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது".** அதன் போலவே பத்தாவது வாக்கியத்திலும் கூட **"மனிதர்களை துன்புறுத்துவதற்கு அவற்றுக்கு அதிகாரம் இருக்கும்"** என்று சொல்லப்பட்டது. இதன் பிரகாரம் ஆட்சியாளர்கள் எல்லோரும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளை பிரகாரம் வேலை செய்கிறார் என்று தெரிகின்றது. சில சந்தர்ப்பத்தில் மனிதர்கள் செய்து கொண்ட பாவங்களை பொறுத்து அவர்களை கொன்றுவதற்கு கூட கட்டளை கொடுக்கப்பட்டிருக்கும். அவர்களுக்கு வந்த கட்டளை பிரகாரம் ஆட்சியாளர்களாக இருக்கின்றவர்கள் வேலை செய்து கொண்டிருப்பார்கள். ஆட்சியாளர்கள் பல உருவங்களில் இருந்தாலும், பல கைகள் இருந்தாலும் எங்கும், எந்த சந்தர்ப்பத்திலும் மனிதர்களுக்கு தெரிந்ததாக பதிவுகள் இல்லை. அதனால் மனிதர்கள் ஆட்சியாளர்களினால் தண்டனைகள் அனுபவித்துக் கொண்டிருந்தாலும் யாரினால் அவருக்கு அந்த கஷ்டங்கள் ஏற்படுகின்றது என்று தெரியாது. பெரிய ரோடு விபத்திற்கு காரணமானவர்கள் ஆட்சியாளர்கள் தான் என்று அந்த விஷயம் மனிதர்களுக்கு தெரியாது. பலவிதமான நோய்களுக்கு காரணமானவர்கள் ஆட்சியாளர்கள் தான் என்று

பல பேருக்கு தெரியாது. சிறிய சம்பவத்தில் இருந்து பெரிய பெரிய துபான்கள் வரை, சுனாமிகள் வரை, பூகம்பங்கள் வரை பலவிதமான பிரக்ருதி பேரழிவு வரும் ஆபத்துகள் கூட ஆட்சியாளர்களினால் வருகிறது என்ற விஷயம் பல பேருக்கு தெரியாது. இதெல்லாம் மனிதர்கள் செய்து கொண்ட பாவங்களினால் தான் நடக்கின்றது. மனிதர்கள் பாவங்களை பொறுத்து ஆட்சியாளர்களுக்கு கட்டளையிடப்பட்டது. ஆட்சியாளர்களுக்கு வந்த கட்டளை பிரகாரம் கடவுள் சிப்பாய்களாக இருக்கின்ற ஆட்சியாளர்கள் அவர்கள் வேலையை அவர்கள் செய்து கொண்டிருப்பார்கள். இந்த நடவடிக்கை எல்லாம் தெரிவதற்கு தெய்வ ஞானம் தேவை என்று சொல்கின்றோம்.

ஆட்சியாளர்கள் ஆகாசத்தில் இருந்து பூமி வரை உள்ளார்கள். அவர் எங்கேயாவதும் போவார்கள், எங்கேயாவதும் இருப்பார்கள். மனிதர்களை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் வெளி உலகத்தில் நூற்றுக்கணக்கான கோடிகள் இருந்தாலும் மனிதர்களுக்கு அந்த விஷயம் தெரியாது. பிரக்ருதி எல்லாம் சுற்றிக்கொண்டு மனிதன் கர்மத்தை பொறுத்து நடந்து கொள்வதற்கு பிரக்ருதியினால் கட்டளை கொடுக்கப்படுகின்றது. பிரக்ருதியில் இருந்து வந்த கட்டளை ஆட்சியாளர்களாக இருக்கின்ற கிரகங்கள், பூதங்கள் நிறைவேற்றுகின்றது. பிரக்ருதி பின் இருந்து பிரக்ருதியை நடத்துபவர் பரமாத்மா. பரமாத்மா பிரக்ருதிக்கு எப்படி தன்னுடைய குறிப்பு தெரிவிப்பாரோ நமக்கு தெரியாது. பிரக்ருதி கடவுள் குறிப்பு பிரகாரம் ஆட்சியாளர்களுக்கு கட்டளை கொடுத்து, ஆட்சியாளர்கள் அப்படியே வேலை

செய்கின்றார்கள். மனிதன் பிறந்ததிலிருந்து மரணிக்கும் வரை இரண்டு விதமாக ஆளப்படுகிறார். ஒன்று வெளியே ஆட்சி மூலம், இரண்டு உள் ஆட்சி மூலம் என்று சொல்லலாம். உள்ளே, வெளியே என்பதில் தேகம் வெளியில், தேகம் உள்ளே என்று சொல்லலாம். தேகம் வெளியில் பிரக்ருதியினால் கட்டளை வந்து, அந்த கட்டளைக்காக ஆட்சியாளர்கள் வேலை செய்து, தேகத்திற்கு உள்ளே சுயமாக ஆத்மாவே மனிதனை கஷ்ட சுகங்களை அனுபவிக்கும் படி செய்கின்றது. வெளியே பிரக்ருதி தவிர பரமாத்மா வேலை செய்ய மாட்டார். பிரக்ருதியில் இருந்து வரும் கட்டளைகள் சுயமாக பிரக்ருதி கொடுப்பது போலவே இருக்கும். ஆனால் கௌரவமாக பிரக்ருதிக்கு பரமாத்மா வழிமுறையால் பிரக்ருதி கட்டளை கொடுக்கின்றது என்று சொல்கின்றோம். ஆனால் பிரக்ருதிக்கு பரமாத்மா வழிமுறை செய்கின்றார் என்னும் சொல்வதற்கு சாஸ்திரம் ஆதாரம் எதுவும் இல்லை.

தேகத்தில் ஆத்மா கடவுளாக இருந்து மற்றும் காரியங்கள் செய்பவராக இருந்து இரண்டு விதமாக வேலை செய்து ஜீவன்களை ஆட்சி செய்கின்றார். ஆத்மா தேகத்தில் ஒரு பக்கம் கடவுளாக இருந்தாலும் மற்றொரு பக்கம் காரியங்கள் செய்பவராக என்றால் குமாஸ்தாவாக இருந்து, வேலை செய்து ஜீவராசிகளை (மனிதனை) கஷ்ட சுகங்களை அனுபவிக்கும் படி செய்கின்றார். தேகத்தில் உள்ள ஜீவன் செய்து கொண்ட பிராரப்த கர்ம பிரகாரம் கஷ்ட சுகங்களை அனுபவிக்கும் படி செய்வதற்கு தேகத்தில் உள்ள ஆத்மாவே சுயமாக வேலை செய்து கஷ்ட சுகங்கள் அனுபவங்களை

அடையும்படி செய்கின்றார். கர்ம பிரகாரமே நடத்தும் ஆத்மா கர்ம பிரகாரமே ஜீவனை நடத்துகின்றது. அதன் போலவே கர்ம பிரகாரமே ஜீவனை கொன்றுவிடுகிறது. அதன் போலவே ஜீவனை மற்றொரு தேகத்தில் பிறக்க வைக்கின்றது. கஷ்ட சுகங்களை, இறப்பு பிறப்புகளை செய்கின்ற ஆத்மா ஜீவனுடைய ஆர்வத்தை பொறுத்து ஞானத்தை தெரியப்படுத்துகின்றது. மனிதன் இஷ்டத்தை பொறுத்து ஞானத்தை தெரிவித்தது போல, இஷ்டமில்லாததை பொறுத்து அஞ்ஞானத்தை கூட தெரியப்படுத்துகின்றது. தேகத்திற்கு உள்ளே ஆத்மா ஆட்சி செய்யும் போது, தேகம் வெளியில் ஆட்சியாளர்கள் ஆட்சி செய்து கொண்டு ஜீவனை நடத்துகின்றார்கள். தேகம் வெளியில் ஆட்சியாளர்கள் செய்கின்ற இடைஞ்சல்கள், கஷ்ட சுகங்களை பொறுத்துக் கொள்ளாமல் மனிதனாகப்பட்டவன் மரணத்தை தேடுவான் என்று உள்ளது. கர்ம பிரகாரமே எல்லாம் நடக்கும் அதனால் அவன் அனுபவிக்க வேண்டியது அனுபவித்தே தீரவேண்டும். அதனால் கஷ்டங்களை பொறுத்துக் கொள்ளாமல் மரணத்தை தேடினாலும் மரணம் வராது. தேகத்தில் ஆத்மாவே எல்லாம் செய்கின்றது. மேலும் ஆத்மாவுக்கு தெரியாமல் மரணம் வராது. தேகத்தில் ஆட்சி நொடி நொடியில் நடந்து கொண்டிருக்கின்றது, தேகத்தில் வெளியே ஆட்சி எப்போதாவது நடக்கும். வெளியே அனுபவங்களுக்கும் மற்றும், உள்ளே அனுபவங்களுக்கும் கர்மம் தான் காரணமாக இருப்பதினால் எல்லாம் கர்மங்கள் போலவே கர்மப்பிரகாரமே நடக்கிறது. அதனால் மனிதன் உள்ளே

நடக்கும் ஆத்மா ஆட்சியை தெரிந்தால் பிறகு சிறிது சிறிதாக வெளியே ஆட்சியைப் பற்றி அர்த்தம் ஆகும்.

தேகத்தில் ஆத்மாவே கடவுள், ஆத்மாவே ஆட்சியாளர், ஆத்மாவே காரியம் செய்கின்றவராக இருக்கிறார். வெளியில் உள்ள கடவுள் பரமாத்மாவாக இருந்தாலும் அவர் இல்லாதது போலவே இருக்கின்றார். பரமாத்மா எதுவும் செய்யாமல் இருந்தாலும் வெளியில் உள்ள பிரக்ருதியே வெளியில் உள்ள ஆட்சியாளர்களிடம் மனிதனை ஆளவைக்கின்றது. கடவுளாக இருக்கின்ற பரமாத்மா பிரக்ருதி பின்னால் இருந்து யாருக்கும் தெரியாமல் இருக்கின்றார். மூலக்கர்த்தா, ஆதி கடவுள் பரமாத்மா தான் ஆனால் மனிதன் எல்லோருக்கும் தேகத்திற்கு உள்ளவே ஆத்மாவையே கடவுளாக அறிவித்து, தனக்கு உள்ள அதிகாரங்களை எல்லாம் ஆத்மாவுக்கு கொடுத்து, மக்களுக்கு ஆராதனை தெய்வமாக இருக்கும் படி சுயமாக கடவுளே நிர்ணயித்தார் என்று குர்ஆன் கிரந்தத்தில் (3-18) இல் சொல்லப்பட்டது. ஒரு குர்ஆன் என்கிற கிரந்தத்தில் மட்டுமல்லாமல் மற்ற பகவத்கீதாவில், பைபிளிலும் ஆத்மாவே ஆராதனை செய்ய வேண்டிய கடவுளாக சொல்லி உள்ளார். ஆத்மாவே கடவுள் ஆனால், தேகத்தில் காரியங்கள் செய்பவராக இருக்கின்றார் என்னும் அதே குர்ஆன் கிரந்தத்தில் (6-102) வாக்கியத்திலும் கூறியுள்ளார். ஆத்மா மனிதன் செய்து கொண்ட கர்மம் பிரகாரம் வேலை செய்து கொண்டு பாவ புண்ணியங்களை அனுசரித்து கஷ்ட சுகங்களை கொடுக்கின்றது. ஆத்மா தேகத்தில் கொடுக்கின்ற ஒவ்வொரு பாவம் புண்ணியம் ஜீவன் அனுபவிக்கின்றான்.

ஆனால் வெளி உலகத்தில் பிரக்ருதி தன்னுடைய ஆட்சியாளரினால் மனிதனை சில விபத்துகளுக்கு ஆளாகும் படி செய்கின்றது என்று தெரிந்து கொண்டோம். அது கூட மனிதன் செய்து கொண்ட பாவத்தினால் நடந்தது அல்லவா! தேகத்தில் உள்ள ஆத்மா பாவ புண்ணியங்களை தன்னுடைய தேகத்திலேயே ஆட்சி செய்து கொண்டு, வெளியே அனுபவிக்கின்ற பாவ புண்ணியங்கள் வெளியில் உள்ள கடவுள் பரமாத்மா பிரக்ருதிக்கு வழிமுறைகள் கொடுத்து, பிரக்ருதி ஆட்சியாளருக்கு வழிமுறையை கொடுத்து, ஆட்சியாளர்கள் மனிதனை கஷ்ட சுகங்களை அனுபவிக்கும்படி செய்கின்றார்கள்.

மனிதன் தேகம் வெளியே அனுபவித்தது, தேகம் உள்ளே அனுபவித்தது மனிதன் தலையில் கர்ம சக்கரத்தில் உள்ள கர்ம பிரகாரமே அனுபவம் இருக்கும். வெளியில் அனுபவிக்க வேண்டும் என்னும் முதலிலேயே நிர்ணயித்து உள்ள கர்மங்களை பிரக்ருதி வெளியில் அனுபவிக்கும்படி செய்யும். தேகம் உள்ளே அனுபவிக்க வேண்டிய கர்மங்களை ஆத்மா தேகத்திற்கு உள்ளே அனுபவிக்கும்படி செய்யும். தேகம் வெளியே உள்ள ஆட்சியாளர்கள் பூதங்கள், கிரகங்கள் அவர்களுக்கு வந்த கட்டளை பிரகாரம் கர்மங்களை அனுபவிக்கும் படி செய்வது மட்டும் அல்லாமல், கர்மத்தை அனுபவிக்க செய்யாமல் கர்மங்கள் இல்லாமல் செய்யும் சாமர்த்தியமும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். கடவுள் மீது விசுவாசம் உள்ளவன் கர்மத்தை ஆத்மா தேகத்தில் மன்னிக்கும் என்று தெரிந்து கொண்டோம். பகவத்கீதாவில் சொல்லிய பிரகாரம் ஞானம் உள்ள

மனிதனுக்கு ஞான சக்தி இருக்கும் என்னும், ஞான சக்தியே ஞான அக்னியாக மாறி மனிதனில் உள்ள கர்மத்தை இல்லாமல் செய்கின்றது என்று கூறினார். பகவத் கீதாவில் ஞான யோகம் என்னும் அத்தியாயத்தில் 37,ஆவது சுலோகத்தில் இந்த விஷயத்தை கூறியுள்ளார் பாருங்கள்.

**சுலோகங்கள்:-யதைதாம்சி சமித்தோக்நிர் பஸ்மஸாத் குருதேர்ஜுன /**

**ஞானாக்னி சர்வ கர்மானி பஸ்ம ஸாத்குருதே ததா //**

**கருத்து:-"அக்னியில் எத்தனை விறகாவதும் எரிந்து சாம்பல் ஆகுவது போல் ஞானம் என்னும் அக்னியில் சர்வ கர்மங்கள் எரிந்து போகும். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை".** என்று கூறியுள்ளார். அந்த வார்த்தை பிரகாரம் தேகம் உள்ளே அனுபவங்களுக்கு வருகின்ற கர்மங்கள் தேகம் உள்ளவே ஞானத்தினால் மன்னிக்கப்படும். அது எரிந்து போகும் என்று அர்த்தமாகும் படி கூறினார். தேகத்தில் உள்ள ஆத்மாவே தேகம் உள்ளே இருக்கின்ற சில கர்மங்களை மன்னிக்கின்றது. என்றால் இல்லாமல் செய்கின்றார். எந்த மனிதனாவதும் கடவுளுடைய சத்தியமான ஞானத்தை தெரிந்து கொண்டு அனுசரித்தால், தூய்மையான கடவுளுடைய ஞானம் தெரிந்து அதே எண்ணத்தில் இருப்பதினால் அவருடைய கர்மங்கள் இல்லாமல் போகும், என்றால் மன்னிக்கப்படும். தெய்வ ஞானம் உள்ள மனிதன் உள்ளே அனுபவிக்க வேண்டிய கர்மங்களை அனுபவிக்காமல் தேகம் உள்ளே ஆத்மாவாக இருக்கின்ற கடவுள்

செய்கின்றார். தேகம் வெளியில் கர்மங்களை அனுபவிக்காமல் பரமாத்மாவான கடவுளே செய்கின்றார். ஆனால் அவர் வேலை செய்யாதவராக இருப்பதினால் அவர் சுயமாக எதுவும் செய்யாமல் தன்னுடைய ஆட்சியாளரிடம் செய்ய வைக்கின்றார். அதனால் கடவுள் மன்னிப்பவர், கருணை உள்ளவர் என்று தெய்வ கிரந்தத்தில் கூறினார். கடவுளை நம்பியவனை, கடவுளுடைய ஞானம் தெரிந்தவனுக்கு கடவுள் மன்னிப்பவர், கருணை உள்ளவர். அதைத் தவிர எல்லோருக்கும் கடவுள் மன்னிக்கின்றவர் அல்ல. பாவத்தை மன்னிப்பதில் அவருக்கு கருணை உள்ளது கருணாமயனாக, அஞ்ஞானத்தில் உள்ளவர்களுக்கு கருணை உள்ளவர் அல்ல என்று தெரிந்த கொள்ள வேண்டும்.

தெய்வ கிரந்தம் பிரகாரம் ஞானத்தை தெரிந்து கொண்டு அதே எண்ணத்தில் இருக்கின்றவனுக்கு அவன் தேகத்தில் உள்ள ஆத்மாவே அவனுடைய கர்மத்தை எரித்து விடுகின்றது. தேகம் வெளியில் அனுபவிக்க வேண்டிய கர்மங்களை தேகம் வெளியில் உள்ள ஆட்சியாளர்கள் அனுபவிக்கும் படி செய்ய வேண்டியதை, அனுபவிக்காமல் கர்மத்தை இல்லாமல் செய்வதற்கு அருகதை பெற்று இருக்கின்றார்கள். தேகம் உள்ளே ஆத்மா செய்கின்ற வேலையை, தேகம் வெளியில் பிரக்ருதியில் உள்ள ஆட்சியாளர்கள் தண்டனை கொடுப்பதும், மன்னிப்பதும் செய்கின்றார்கள். இதெல்லாம் கண்ணுக்கு தெரிகின்ற விஷயம் அல்ல. ஞானத்திற்கு மட்டும் தெரிகின்ற விஷயம். அதனால் ஞானம் உள்ளவர்கள் இந்த விஷயத்தை சுலபமாக தெரிந்து கொள்வார்கள். ஞானம் இல்லாதவர்கள், கடவுள்

மீது விசுவாசம் இல்லாதவர்கள் நாங்கள் கூறிய விஷயங்கள் நம்ப முடியாது. நீங்கள் கூறியதற்கு ஆதாரம் இருக்கின்றதா, சாஸ்திரம் பிரகாரம் உள்ளதா? என்று கேள்வி கேட்பார்கள். பகவத் கீதாவில் ஞான யோகத்தில் சொல்லிய 37 ஆவது சுலோகம் ஆதாரத்தில் நாங்கள் இந்த வார்த்தை சொல்லினோம் என்றால், அதுதான் எங்களுக்கு சாஸ்திர ஆதாரம் என்னும் சொல்லினால் நேரடியாக நாங்கள் பார்த்தால் தான் நம்புவோம் இல்லையென்றால் நம்ப மாட்டோம் என்பவர்களும் கூட இருக்கின்றார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கு தேகம் உள்ளே நடக்கும் கர்ம மன்னிப்பு எப்படியும் தெரியாது. அதனால் வெளியில் நடக்கும் கர்ம மன்னிப்பு விஷயத்தில் நேரடியாக தெரியும்படி செய்ய வேண்டும் என்னும் நமக்கு தாத்தாவாக இருக்கின்ற பரமாத்மா நினைத்ததினால் அஞ்ஞானிகளும் நம்பும் படி, அவர்களும் கூட ஞானிகளாக மாறும்படி, பகுத்தறிவாளர்கள், நாத்திகவாதிகள் ஆலோசனை செய்யும் படி, ஆட்சியாளர்களிடம் பாவ மன்னிப்பு நடந்து கொண்டிருப்பது இன்றும் நேரடியாக தெரியும்படி கடவுள் செய்தார் என்று சொல்லலாம். வெளியில் உள்ள கடவுள் ஒன்றும் செய்யாமல் அமைதியாக இருந்து எல்லாம் தன்னுடைய செயற்பாட்டாளர்கள் பிரக்ருதியில் ஆட்சியாளர்களாக இருக்கின்றவர்களிடம் செய்ய வைக்கின்றார். வெளியில் ஆட்சியாளர்கள் எத்தனையோ கோடிக்கணக்கானவர்கள் இருந்து பெரிய ஆபத்து ஒருவருக்கு இருவருக்கு மட்டுமல்லாமல் குழுவாக மனிதர்கள் இருக்கும் இடம் ஏற்படுத்தி, நூற்று ஆயிரக்கணக்காக மரணிக்கும் படி

செய்கின்றார்கள் என்று சொல்லிக் கொண்டோம். அவர்களுக்கு கர்மத்தை நடத்துவதும் மற்றும் கர்மத்தை எரித்து விடுவதும் கூட செய்கின்றார்கள். கடவுள் மீது, கடவுள் ஞானம் மீது விசுவாசம் இருக்கின்றவர்களுக்கு வெளியில் உள்ள ஆட்சியாளர்கள் கர்மத்தை எப்படி எரித்து விட்டார்களோ (இல்லாமல் செய்தாரோ) ஒரு நேரடியாக நடந்ததை பற்றி தெரிந்து கொள்ளலாம். தேகம் உள்ளே ஆத்மா கடவுள் கர்மங்கள் இல்லாமல் செய்தாலும் அது யாருக்கும் அர்த்தம் ஆகாது. அது இப்படி தான் நடந்தது என்று தெரியாது. அடிப்பட்ட காயம் அடிபடாமல் போனாலும், வந்த நோய் ஒரு மாதமாக துன்புறுத்துவது ஒரு நாளில் இல்லாமல் போனாலும் அதெல்லாம் சகஜமாக நடந்தது என்று நினைத்துக் கொள்வார்கள். ஒருவனுக்கு தேகத்தில் வயிற்றில் வலி ஒரு மாதம் அனுபவிக்கும் கர்மம் அமலுக்கு வந்தது. ஆனால் அவன் கடவுளை தெரிந்துகொண்டு (கடவுள் ஞானத்தை தெரிந்து கொண்டு) இருப்பதினால் அவனுக்கு வயிற்று வலி ஒரு நாள் மட்டும் இருந்து மற்ற 29 நாட்கள் இல்லாமல் போனது. அப்போது அவன் தனக்கு உள்ள ஞான பிரகாரம் அது போனது என்னும், தேகம் உள்ளே உள்ள கடவுள் தன்னுடைய கர்மத்தை மன்னிப்பது என்று நினைப்பதற்கு முடியாது. அவன் உபயோகித்த மாத்திரையால் வயிற்று வலி குறைந்து விட்டது என்று நினைத்துக் கொள்வான். அவனுக்கு நேரடியாக முழுங்கிய டேப்லெட் (மாத்திரை) தெரியும் தவிர ஞானத்தினால் மன்னிப்பு கிடைத்தது என்னும் நினைப்பதற்கு முடியாது. அது தவிர அவனுக்கு தனக்குள்ள வயிற்று வலி ஒரு மாதம்

அனுபவிக்க வேண்டியது உள்ளது என்ற விஷயம் கூட தெரியாது. அதனால் அவனுக்கு வலி ஒரு மணி நேரத்தில் போனாலும் அல்லது ஒரு நாளில் போனாலும் நம் கணக்கில் அது கர்மம் மன்னிப்பு அல்லது கர்மம் எரிப்பு என்று சொல்லலாம். அந்த விஷயம் வயிற்று வலி இருக்கின்றவனுக்கு தெரியாது. அவன் தன்னுடைய வலி தன் முழுங்கிய டேப்லெட்டினால் (மாத்திரையினால்) போனது என்று நினைப்பான். தான் நம்பிய ஞானத்தினால் போனது என்று நினைக்க மாட்டான்.

இந்த விதமாக கர்ம எரிப்பு நடந்தது அது மனிதனுக்கு தெரிவதற்கு வாய்ப்பில்லை. அதனால் கடவுளுடைய வார்த்தை அசத்தியமாக தெரியும் வாய்ப்பு இருக்கும். அப்படியே தேகம் வெளி கர்மங்கள் ஆட்சியாளர்கள் தண்டனை கொடுக்காமல் எரித்துவிட்டு, அது கடவுள் மன்னிப்பதினால் போனது என்னும், தெய்வ கிரந்தத்தில் சொல்லியது போல் கர்மம் எரிந்து விட்டது என்னும் நினைப்பதற்கு வாய்ப்பு இல்லை. தனக்கு இருந்த கர்மம் சிறிது தான் என்று நினைத்துக் கொள்வான். இந்த விதமாக சத்தியத்தை தெரியாமல் போவதற்கு வாய்ப்பு இருக்கும். மனிதன் நேரடியாக ஸ்தூலமாக இருப்பதை கவனிப்பான், மறைமுகமாக சூட்சுமமாக நடக்கின்ற விஷயங்களை கவனிக்க மாட்டான். அதனால் மனிதன் ஞானத்திற்கு வரும் வாய்ப்பு குறைந்துவிடும். அஞ்ஞானியாக மாறுவதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கும். அப்படிப்பட்ட போது ஸ்தூலமாக நடக்கும் கர்ம எரிப்பு மனிதனுக்கு தெரியும்படி செய்யுங்கள் என்று வேண்டினோம். அப்படி

தெரிவதினால் மனிதன் கர்ம எரிப்பை கவனித்து பகவத்கீதா ஞான யோகத்தில் 37 ஆவது சுலோகத்தில் சொல்லிய **“கர்ம எரிப்பு”** வார்த்தை சத்தியம் என்று தெரியும். அப்படியே பைபிள் கிரந்தத்தில் சொல்லிய **“பாவமன்னிப்பு”** என்ற வாக்கியத்தை நம்ப வேண்டும். அப்படியே குர்ஆன் கிரந்தத்தில் சொல்லிய கடவுள் **“மன்னிப்பவர்”** என்று நம்ப வேண்டும்.

மனிதன் கடவுள் ஞானத்தை தெரியும்படி கர்ம எரிப்பு விஷயத்தை சூட்சுமமாக மட்டுமல்லாமல் ஸ்தூலமாக தெரியும்படி கடவுள் செய்ய வேண்டும் என்னும் நினைத்தார் அதனால் கர்ம எரிப்பு ஸ்தூலமாக நடக்கும் படி அதனை மனிதன் கிரகிக்கும் படி செய்தார். தன்னுடைய கர்மத்திலிருந்து வெளிப்படும் படி தெரிந்த சிலர்கள் கடவுள் தன்னுடைய கர்மத்தை மன்னித்தார் என்னும், தன்னுடைய கர்மம் இல்லாமல் செய்தார் என்னும் சொல்லிக் கொண்டது பார்த்து நாங்கள் எவ்வளவோ சந்தோசப்பட்டோம். மனிதன் உலகத்திற்கு சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் வேண்டாமல் தெய்வத்திற்கு சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் வேண்டலாம். தெய்வீகமான கோரிக்கைகள் வேண்டுகின்றவர்களை கடவுள் இஷ்டப்படுவார். நான் கர்ம எரிப்பு ஸ்தூலமாக தெரிந்தால் நன்றாக இருக்கும், மனிதர்களுக்கு ஞானத்தின் மதிப்பு, புனிதம் தெரியும் என்று நினைத்தேன். அந்த விஷயம் கடவுளுக்கு கூட தெரியும் மேலும் என்னுடைய கோரிக்கைகளை கேட்ட கடவுள் வெளியில் உள்ள கர்மங்களை எரிப்பதை ஸ்தூலமாக தெரியும்படி செய்தார்.

ஸ்தூலமாக எப்படி தெரியும்? என்று சிலர் கேள்வி கேட்கலாம். அதனால் எனக்குத் தெரிந்த, நான் பார்த்த ஒரு உண்மையான நிகழ்வுகளைப் பற்றி இப்போது சொல்லிக் கொள்ளலாம். அதற்கு முன்பு நான் சில நூற்றுக்கணக்கான நிகழ்வுகளைப் பற்றி வேறவர்கள் எனக்கு சொல்லியதை கேட்டேன் மேலும், நேரடியாக நான் பார்க்கவில்லை. பல பேர் எனக்கு சொல்லுவதை விட தெரியும் படி காட்டுவது நல்லது என்று வீடியோ படங்கள் போட்டோக்கள் கொண்டு வந்து காண்பித்தார்கள். ஆனால் நான் அதனைப் பற்றி அதிகமாக ஆலோசனை செய்யாமல் போனேன். நான் அதிக நேரம் கிரந்தம் எழுதுவதில் இருந்ததினால் நான் பார்த்த வீடியோ படங்களை பற்றி, போட்டோ படங்களை பற்றி காரணங்கள், அறிவியல் ரீதியாக, உண்மையை ஆலோசனை செய்யாமல் போனேன். ஒரு நாள் ஒரு முஸ்லிம் நபர் எனக்கு அறிமுகம் உள்ள மற்றொரு நபரிடம் இணைந்து வருவது நடந்தது. வந்த முஸ்லிம் நபர் ஐந்து நாட்கள் அல்லது ஒன்பது நாட்கள் இங்கே இருந்து விட்டார். எத்தனை நாள் இருந்தார் என்று எனக்கு இப்போது ஞாபகம் இல்லை. தோராயமாக ஐந்து நாட்கள் என்று நினைத்து கொள்ளலாம். தேகம் ஆரோக்கியம் சரியாக இல்லாதவர்கள், பலவிதமான ஆரோக்கியம் பிரச்சனை உள்ளவர்கள் கிருஷ்ண மந்திரத்தில் மூன்று, ஐந்து, ஒன்பது நாட்கள் தூங்கிப் போவார்கள். சில நாட்கள் அங்கே இருந்து இங்கு வேலை சேவை வடிவத்தில் செய்வதினால் அவர்களுடைய ஆரோக்கிய பிரச்சனைகள் இல்லாமல் போகும் என்று நம்பிக்கை. அதே நம்பிக்கையில் முஸ்லிம் குடும்பம் என்றால் கிட்டதட்ட 60 வயது இருக்கின்ற

அவர் அவருடைய மனைவி இருவரும் வந்தார்கள். அப்போது நான் மந்திரத்தில் இருந்தேன் என்னுடைய அறையில் நான் இருப்பேன். என்னிடம் யாரும் வர மாட்டார்கள். நான் வெளியில் போக மாட்டேன். முஸ்லிம் நபரை அழைத்து வந்த ஒரு நபர் என்னுடன் கலந்து பேசுவதற்கு அனுமதி கேட்டார் நான் அனுமதி கொடுத்து, அவர் என்னிடம் வந்து பேசினார். அப்போது அவருடன் வந்த முஸ்லிம் நபரை பற்றி சொல்லினார். என்னிடம் அந்த நபர் அரசு பள்ளிக்கூடத்தில் (ஹை ஸ்கூலில்) ஆசிரியராக பணியாற்றி வருகிறார். அவருடன் வந்த அவரும் கூட ஆசிரியராக பணியாற்றி வருகிறார், அதே ஸ்கூலில் பணியாற்றி வந்ததால் இருவருக்கும் அறிமுகம் உள்ளது.

அந்த இரு ஆசிரியர்கள், நெல்லூர் ஜில்லா, ஆத்மக்கூரில் பணியாற்றி வருகிறார்கள். முஸ்லிம் நபருக்கு கிட்டத்தட்ட சில வருடங்களில் இருந்து வயிற்றில் கேன்சர் நோய் இருப்பது போல், அவர் மூன்று, நான்கு வருடங்களிலிருந்து உடல் நிலை சரி இல்லாமல் கஷ்டப்பட்டு கொண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு, இப்போது வரை கிட்டதட்ட 15 லட்சங்கள் ரூபாய் செலவு ஆனது என்னும், ஆனால் அது குணமாகவில்லை என்னும் அவர் ஸ்கூலுக்கு வந்து உட்காரும் பொறுமை இல்லாமல் படுத்துக் கொண்டு போவார், அவருடைய நிலை பார்த்த எல்லோரும் அவருக்கு உதவி செய்து வந்தனர், ஸ்கூலுக்கு வந்து போனாலும் அட்டனன்ஸ் போட்டு சம்பளம் கொடுப்பார், அவர் நோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோது பார்க்க முடியாமல் எங்களிடம் வந்த மனிதர் நான் எழுதிய ஒரு

கிரந்தத்தை அவருக்கு கஷ்டமாக இருக்கின்ற இடத்தில் வயிற்று மேல் வைக்கும் போது அந்த கிரந்தம் வயிற்றுக்கு ஒட்டிக்கொண்டு போனது என்று சொல்லினார். வயிற்றுக்கு ஒட்டிக்கொண்டு போன கிரந்தம் ஒரே தடவை 8 மணி நேரம் ஒட்டிக் கொண்டிருந்தது. 8 மணி நேரம் பிறகு அவருக்கு வயிற்று வலி நின்றது. வயிற்று வலி நின்ற பிறகு கிரந்தம் வயிற்றில் ஒட்டிக்கொண்டிருந்த கிரந்தம் நழுவி வந்துவிட்டது. இதெல்லாம் கிரந்தம் கொடுத்த சுதாகர் ஆச்சாரிக்கு, கிரந்தம் ஒட்டிக்கொண்ட முஸ்லிம்க்கு ஆச்சரியமாக தெரிந்தது. ஒவ்வொரு நாளும் கேன்சர் நோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த மஹபூப் பாஷாவுக்கு அப்போதிருந்து வயிற்று வலி வரவில்லை என்றார். நேரடியாக கிரந்தம் வயிற்று மேல் ஒரே தடவையாக 8 மணி நேரம் ஒட்டிக் கொண்டிருந்து உள்ளே உள்ள கஷ்டமாக இருக்கின்ற கர்மத்தை இல்லாமல் செய்வது ஆச்சரியமாக மற்றும் அற்புதமாக தெரிந்தது. அவர் வயிற்றுக்கு என்னுடைய கிரந்தம் ஒட்டிக் கொண்டிருந்த போட்டோவை எனக்கு காண்பித்தார்கள்.

வயிற்றில் உள்ள கஷ்டம் தெரியாமல் போன ஒரு மாதம் பிறகு அவர் ஆசிரமத்தில் தூங்கினால் நல்லதென்று இங்கு வர நடந்தது. அந்த விஷயம் எல்லாம் என்னிடத்திற்கு வந்து பேசிய நபர் சொல்லியபோது நான் கேட்டேன். பிறகு அவர் ஊருக்குப் போகும் நாள் அவரை கூப்பிட்டு பேசினேன். அப்போது அவர் பெயர் மஹபூப் பாஷா என்று சொல்லி தனக்கு நடந்த விஷயம் எல்லாம் சொல்லினார். அவர் சொல்லியதெல்லாம் உண்மைதான் என்று எனக்கு அர்த்தமானது. அதுவரை அந்த விஷயத்தின் மீது கவனம்

செலுத்தாத நான் சிறிது ஆலோசனை, சிறிது லோச்சனை செய்யும் போது மற்றும் சிறிய யோசனையாக தெரிந்தது. முஸ்லிம் எனக்கு காண்பித்த போட்டோ மறுபடியும் மறுபடியும் நினைப்பு வந்து கொண்டிருந்தது. அதனால் நான் அந்த விஷயத்தை லோச்சனையிருந்து யோசனை வரை கொண்டு போனேன்.

அந்த போட்டோவை 156 ஆவது பக்கத்தில் முதல் படத்திலேயே பார்க்கலாம் 156 ஆவது பேஜியிலிருந்து 169 பேஜி வரை மற்ற சில போட்டோக்கள் கூட நீங்கள் பார்க்கலாம்.







మంత్రము-మహిమ
(నిజమా-అబద్ధమా)
ఇందూ (హిందూ)
మతములో సిద్ధాంతకర్తలు








ఒక మాట
మూడు గ్రంథములు


అంతిమ
కల్వరి టెంపుల్
నేడు రక్షకుడు మీ కొరకు పుట్టియున్నాడు.
లూకా 2:11
నవంబర్
2015
డిసెంబర్








అంతిమ










దైవ గ్రంథములో
సత్యాసత్య విచక్షణ

நான் பார்த்தது ஒரு போட்டோ முஸ்லிம் உடையது, பிடித்துக் கொண்ட கிரந்தம் இந்துக்கள் உடையது. கடவுளுக்கு மதம் இல்லை. மனிதர்களாகிய நாம் மதத்தை வைத்துக் கொண்டோம். மனிதர்கள் எல்லோரும் கடவுள் பார்வையில் ஒன்றுதான். கடவுள் மனிதர்களுடைய மதத்தை பார்க்கவில்லை. அவர்களுடைய விசுவாசத்தை பார்க்கின்றார். ஒரு முஸ்லிம் கடவுள் மீது விசுவாசத்தில் கடவுள் ஞானமுள்ள கிரந்தம் தன்னுடைய வயிற்றுக்கு தன்னுடைய வயிற்றில் வைத்து போது அது பசை வைத்து ஒட்டியது போல் ஒட்டிக் கொண்டது. அது எல்லாருக்கும் தெரியும் காட்சிதான். அப்படி தெரிகின்ற காட்சியில் மூன்று மதத்தில் உள்ளவர்கள் போட்டோ உள்ளது. ஒரு கிரந்தம் மனிதனுக்கு ஒட்டிக் கொண்டபோது அதனை மந்திரமோ, தந்திரமோ என்று சரி செய்யலாம். அப்படி ஒட்டிக்கொண்டது மட்டுமல்லாமல் அந்த காரியம் பின்னால் ஆன்மீக ரகசியம் இருக்கின்றது. எந்த மனிதனுக்கு கிரந்தம் ஒட்டிக்கொண்டு அப்படியே நின்று போனதோ அந்த காட்சிக்குப் பின் எல்லோர் புத்திக்கு எட்டாத ஒரு பெரிய காரியம் நடக்கின்றது. கிரந்தம் ஒட்டிக்கொண்டது வெளி உலகத்திற்கு ஒரு விசித்திரம் தான். சிறிய கிரந்தம் என்றால் ஏதாவது நினைத்துக் கொள்ளலாம். அப்படி மட்டுமல்லாமல் 800 பக்கம் உள்ள கிரந்தம் குறைந்தபட்சம் ஒரு கிலோவில் இருந்து கிட்டதட்ட இரண்டு கிலோ கணம் இருக்கும் கிரந்தங்கள் பூமி ஈர்ப்பு சக்திக்கு கீழே விழுகாமல், பூமி ஈர்ப்புக்கு எதிர்ப்பாக நிற்பது யாருக்காவதும் ஆச்சரிய விஷயமாக தெரியும். இதற்கு

பகுத்தறிவாளர்களும் நாத்திகவாதிகளும் மோசடிக்காரர், பிரச்சாரத்திற்காக எதையோ ஒன்றை ஒட்டவைத்து காட்டுகின்றார் என்று நினைக்கலாம். சரிதான் அவர்கள் வார்த்தை பிரகாரம் தெரிகின்ற காட்சி மோசடி, குற்றம் இருக்கலாம். ஆனால் அங்கு தெரியாமல் நடக்கின்ற காரியம் பற்றி யார் எந்த விவரம் கொடுக்கவில்லை. அங்கு தெரியாத காரியங்கள் பற்றி நாங்கள் சுயமாக ஆலோசனை செய்ய நடந்தது. எங்களுடைய கிராகித சக்தி லோச்சனா, யோசனைக்கு போகும் வரை எங்களுக்கே அர்த்தமாகவில்லை. அதனால் இந்த விஷயம் யாரும் குற்றம் சொல்ல முடியாது.

இப்போது உண்மையான விஷயத்திற்கு வருவோம். இந்த விஷயம் நான் கேட்டாலும், சில போட்டோக்களை பார்த்தாலும் எளிதாக எடுத்துக்கொண்டு, அதனைப் பற்றி ஆலோசனை செய்யவில்லை. இப்போது வேறு மதத்திற்கு சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்ளும் மஹபுப்பாஷா அவர் நோயைப் பற்றி, அவர் செலவு செய்த பணதை பற்றி விவரமாக சொல்லிய போது எனக்கு அதன் மீது கவனம் வந்தது. சில வருடங்களாக இருந்த நோய் ஒரு ஆன்மீகம் கிரந்தம் ஒட்டிக்கொண்டு சில மணி நேரம் ஒட்டிக்கொண்டு விட்டுப் போவது, பிறகு அவருடைய நோய் இல்லாமல் போவது பற்றி இதன் பின்பு தெரியாத விதானம் என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால்! இங்கு எங்களால் எழுதப்பட்ட கிரந்தங்கள், நாங்கள் விடுதலை செய்த கிரந்தங்கள் மட்டுமே அப்படி செய்கின்றது.

நாங்கள் எழுதிய கிரந்தம் எந்த மதத்திற்கு தொடர்பு கொண்டாலும் பாதிக்கும் நபர் எந்த மதத்திற்கு சேர்ந்தவராக இருந்தாலும் அவரில் அந்த கிரந்தம் ஒப்புக் கொண்டு அவருடைய கர்ம நிவாரணத்திற்கு, கர்ம மன்னிப்புக்கு, கர்ம எரிப்புக்கு வேலை செய்கின்றது. நீங்கள் போட்டோகளில் பார்த்த மஹபூப் பாஷா அவர் தன்னுடைய அனுபவங்களை சொல்லியபோது கேட்டோம். அதுவரை அந்த விஷயத்தை பற்றி பார்க்காத நாங்கள் ஆழமாக பார்க்க வேண்டியது நடந்தது. இந்த விஷயம் எனக்கு தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் வேறவர்களுக்கு என்ன நடக்கிறது என்று தெரியப்படுத்துவது மிக முக்கியமானது. மூன்று தெய்வ கிரந்தங்களில் கடவுள் கர்மத்தை எப்படி மன்னிப்பார்? என்ற விஷயம் ஞானம் பிரகாரம் எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்றால் இதில் எல்லோருக்கும் தெரியாமல் நடக்கின்ற ரகசியமான வேலை விரிவாக அர்த்தமாகும் படி சொல்ல வேண்டும். இதற்கு முன்பு எழுதிய எழுத்துக்களில் மனிதன் கடவுள் மீது, கடவுளுடைய ஞானம் மீது விசுவாசமாக இருந்தால் தேகம் உள்ளே, தேகம் வெளியே பாவ மன்னிப்பு நடக்கும் என்று கூறினோம். தேகம் வெளியில் உள்ள கடவுளுடைய ராஜ்ஜியமான பிரக்ருதியில் ஆட்சியாளராக இருக்கின்ற பூதங்கள், கிரகங்கள் தனித்துவமான சக்தி கொண்டு, தனித்துவமாக உருவம் கொண்டு கர்மத்தை அனுபவிக்கும் படி செய்வது மட்டுமல்லாமல் கடவுள், கடவுளுடைய ஞானத்தை நம்பியவர்கள் பாவ கர்மங்களை மன்னித்து அனுபவத்திற்கு வராமல் எரித்து விடும் அருகதை,

அதிகாரத்தை பெற்று இருக்கிறார் என்று சொல்லினோம். ஆனால் அந்த விதமாக நடந்தால் நம்பகத்தன்மை இல்லை என்னும், அது நேரடியாக ஸ்தூலமாக நடந்தால் நன்றாக இருக்கும் என்னும், எல்லோரும் தெய்வ சக்தியை அர்த்தம் செய்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்று கடவுளை வேண்டிக் கொள்ளுவது நடந்தது. நான் கோரிக்கைகளை வேண்டுபவன் அல்ல. ஆனால் நான் வேண்டியது எனக்கு சம்பந்தப்பட்ட வேண்டுதல் அல்ல. கடவுளுக்கு சம்பந்தப்பட்ட ஞானம் வேறவர்களுக்கு சுலபமாக தெரியும் விதானத்தை வேண்டினேன். அதனால் இது மக்கள் எல்லோருடைய கோரிக்கை என்னும், கடவுளை நம்புபவர் எல்லோருடைய கோரிக்கை தான் என்று சொல்லிக் கொண்டோம். இது என்னுடைய ஒருவனுடையது அல்ல என்னும் பக்தர்கள் எல்லோருடைய கோரிக்கை தான் என்னும் தெரிந்து கொண்ட கடவுள் என்னுடைய கோரிக்கைகள் என்னிடமே, என்னுடைய கிரந்தத்திலேயே காட்டுவதும், நிறைவேற்றுவதும் நடந்தது. இது உலகத்திற்கு சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல, இது கடவுளுடைய விஷயம். அதனால் ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும்.

பிரக்ருதி அனைத்தும் ஆகாசத்தில் இருந்து பூமி வரை பரவி இருந்த பூதங்கள் கிரகங்களில் முக்கியமானவர்கள் சிலர்கள் வந்து என்னிடம் இருப்பார்கள். என் கையால் எழுதப்பட்ட ஞானம் உள்ள கிரந்தம் முழுமையாக தயாரான பிறகு, அந்த கிரந்தம் முதலில் ஒவ்வொன்றும் என்னிடம் வந்த போது நான் ஒரு தடவை அந்த கிரந்தத்தை பார்த்த பிறகு, என்னிடம் உள்ள ஆட்சியாளர்கள் நான் பார்த்த

ஒவ்வொன்றிலும் நுழைவார்கள். பிறகு மற்றவர்கள் எல்லோரும் என்னிடம் தயாரான ஒவ்வொரு கிரந்தத்திலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கிரந்தத்தில் நுழைவார்கள். இது நடப்பதெல்லாம் 1980 வருடத்திலிருந்து நடக்கின்ற இந்த விஷயம் எனக்கு உண்மையாக தெரியாது. ஒரு கிரந்தம் ஆயிரம் பக்கங்கள் தயாரானால் ஆயிரம் பேர் ஆட்சியாளர்கள் கிரந்தங்களில் நுழைவது நடந்து கொண்டிருக்கின்ற காரியம். 2008 ஆவது வருடம் **"பேய்கள்-பூதங்கள் உண்மையான நிகழ்வுகள்"** இந்த கிரந்தம் எழுதி ஐந்தாயிரம் கிரந்தங்கள் தயார் செய்யப்பட்டது. அப்போது ஐந்தாயிரம் பேர் ஆட்சியாளர்கள் ஒரே தடவையாக அந்த கிரந்தத்தில் சேர்ந்தார்கள். அப்போது அந்த கிரந்தம் எந்த வீட்டிலும் சேர்ந்தால், யார் படித்தாலும், படித்தவர்களுக்கு அதுவரை உள்ள நாள்பட்ட நோய்கள் குணமடைந்தது. அந்த வீட்டில் ஆரோக்கியப் பிரச்சனை சிலது குணமடைந்தது. அப்போது பல பேர்கள் இந்த விஷயத்தை சொல்லிக் கொண்டு வந்தார்கள். சில முக்கியமான கர்ம நிவாரணம் நடந்த விஷயம் நான் கேட்டாலும், அப்போது அந்த விஷயத்தின் மீது ஆர்வம் செலுத்தவில்லை. நான் கிரந்தங்கள் எழுதுவதில் லக்னமாகி இருந்தது அதற்கு காரணமாக இருக்கலாம்.

சமீப காலத்தில் மஹபூப்பாஷா, அப்போது மூன்று வருடங்கள் இருக்கலாம் என்னிடம் வந்து பேசியபோது அடைந்த சந்தோஷத்தை சொல்லியபோது பின் காலத்தில் பல பேர்கள் அவர்களுடைய நோய்கள் குணமடைந்த விதானங்கள் சொல்லிய விஷயங்கள் எல்லாம் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. தற்போது காலத்தில் கிரந்தங்கள்

ஒட்டிக்கொண்ட வீடியோக்கள், போட்டோக்கள் பார்ப்பது தவிர நேரடியாக பார்க்கவில்லை. ஆனால் என் முன்பே கழுத்து வலியில் கஷ்டப்படுகின்ற ஒரு நபர் கழுத்து கீழ்பாகத்தில் **“மந்திரம்-மகிமை”** என்னும் கிரந்தம் வைத்த போது அது ஒட்டிக்கொண்டது. நீங்கள் பார்த்த 32 போட்டோக்களில் அந்த போட்டோ ஒன்று கூட உள்ளது. முதுகு மேல் பாகத்தில் கழுத்து கீழ் பாகத்தில் சித்தாந்தகர்தர்கள் படம் மேல் தெரிகின்ற கிரந்தம் ஒட்டிக்கொண்டு இருக்கும் போது, அதனை நான் கீழ் பாகத்தைப் பிடித்துக் கொண்டு நான் இழுத்தேன். அது நழுவி வரவில்லை. முதலில் சிறிது இழுத்த போது, பிறகு சிறிது கனமாக இழுத்தேன். ஆனாலும் வரவில்லை. கிரந்தம் அவ்வளவு பலமாக ஒட்டிக் கொண்டது என்னவென்று ஒருவேளை 50 கிலோ கணத்தை எடுக்கின்ற பலத்தை உபயோகித்தால் என்றால் என்னுடைய கையில் இருந்த பலத்தை எல்லாம் உபயோகித்து கீழே இழுத்தேன். சுவருக்கு உடும்பு ஒட்டிக் கொண்டது போல் அது ஒட்டிக்கொண்டு இருந்தது அவ்வளவு பலத்தை உபயோகித்து இழுத்தாலும் அது நழுவி வரவில்லை. முதல் தடவை அவ்வளவு அழுத்தமாக கிரந்தம் தேகத்திற்கு ஒட்டிக்கொண்டு இருக்கும்போது பார்த்த எனக்கு ஆச்சரியமாக இருந்தது. முதலிலேயே சொல்லினோம் “கிரந்தத்தில் ஆட்சியாளர்கள் நுழைந்தார்” என்னும், அவர் பலத்தினால் அது கீழே இழுத்தாலும் வரவில்லை என்று தெரிந்தது. இன்னொரு ரகமான கிரந்தத்தை தேகத்தின் மேல் வைத்து இழுத்தால் சுலபமாக நம் கைக்கு வருகின்றது. வைக்கும் போது எப்படி வைத்தோமோ அப்படியே எடுத்தால் எந்த சிரமம் இல்லாமல்

தேகத்திலிருந்து தனியாக வருகின்றது. கீழ் இழுத்தால் மட்டும் கை விரலில் இருந்து கிரந்தம் வழுக்கி விடுகின்றது அது மட்டும் கீழே நூல் அளவு கூட கீழ் வரவில்லை. கடந்த காலத்தில் கூட அப்படி கீழே இழுத்தவர்களும் இருக்கிறார்கள். அப்போது கூட எவ்வளவு பலத்தை உபயோகித்தாலும் சிறிது கூட அந்த இடத்தில் இருந்து அசையவில்லை என்று சொல்லினார்கள். கீழ் இழுத்த போது வராத கிரந்தம் மேல் இருந்து எடுத்தால் சுலபமாக வருகின்றது.

மற்றொரு விசித்திரம் என்னவென்றால்! சிலருக்கு வயிற்று மேல் ஒட்டிக்கொண்ட கிரந்தம் தேகத்தில் உள்ள வலி மேல் பரவி போகும்போது கிரந்தம் கூட நழுவிய நிகழ்வுகள் உள்ளது. கீழிருந்து போய் கழுத்துக்கு ஒட்டிக்கொண்டது என்று கூட சிலர் சொல்லினார்கள். சிலருக்கு தேகத்தில் உள்ள வலி பக்கத்துக்கு நழுவும்போது, கிரந்தம் கூட அதுக்கு தானே நகர்ந்து போவது நடக்கின்றது என்னும் பல பேர் சொல்லினார்கள். முழங்கால் வலி உள்ளவர்கள் முழங்காலுக்கு கிரந்தத்தை ஒட்டும்போது அது அப்படியே ஒட்டிக்கொண்ட காட்சியை கிரந்தங்களில் உள்ள போட்டோக்களில் பார்க்கலாம். முதுகுகளுக்கு, கைகளுக்கு, வயிற்றுக்கு, கழுத்துக்கு, தலைக்கு, கன்னத்திற்கு ஒட்டிக்கொண்ட கிரந்தங்கள் காட்சிகள் தெரிகின்றது. மற்றொரு விசித்திரம் என்னவென்றால்! முகத்தின் மேல் வைத்துக்கொண்ட **"கடவுள் முத்திரை"** (கடவுள் சின்னம்) இந்த அச்சு கூட நெற்றி பாகத்தில் ஒட்டிக்கொண்டு அப்படியே நின்று போன காட்சி கூட இருக்கின்றது. அதனை

ஒட்டி இருக்கின்ற நபர் ஒரு கிறிஸ்துவ மதத்திற்கு சேர்ந்தவர் என்று போட்டோவிலேயே அர்த்தமாகின்றது. நீங்கள் கிரந்தத்தில் மூன்று மதத்திற்கு சேர்ந்தவர்கள் கிரந்தங்கள் ஒட்டிக் கொண்டிருக்கும் காட்சியை பார்க்கலாம். அப்படியே தெரிவதினால் கடவுளை மனிதர்கள் யாராவதும் நம்பலாம் மேலும், தன்னை, தன்னுடைய ஞானத்தை நம்பியவர்கள் எந்த மதத்திற்கு சேர்ந்தவராக இருந்தாலும் கடவுளுடைய ஆட்சியாளர்கள் அவனுடைய கர்மத்தை இல்லாமல் செய்வார் என்று தெரிகின்றது. கிரந்தத்தில் உள்ள போட்டோக்களில் சிறியவர்களில் இருந்து முதியோர்கள் வரை, ஹிந்துக்களில் இருந்து கிறிஸ்தவர்கள், முஸ்லிம்களும் கூட காணப்படுகின்றார்கள். இதனைப் பொறுத்து ஒருவருக்கு பக்தி எண்ணம் இருந்தால் போதும் அல்லது சிறிது விசுவாசமாக இருந்தாலும் போதும், அவர் சிறியவர்களாக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும் எந்த குலம், எந்த மதத்திற்கு சேர்ந்தவராக இருந்தாலும் அவர்களுடைய கர்மத்தை ஆட்சியாளர்கள் இல்லாமல் செய்து அவர் அந்த கஷ்டங்களில் இருந்து முக்தியை அடைய வைத்து கடவுள் மன்னிக்கக் கூடியவர், கர்ம ஏரிப்புக்காரர் என்று நிரூபிக்கின்றார்கள். முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் எங்கள் கையால் எழுதப்பட்ட, எங்களுடைய ஞானத்தில் நிறைந்துள்ள கிரந்தங்கள் எல்லாம் அதன் போலவே இருக்கிறது என்று சொல்கின்றோம். எங்களிடமிருந்து எழுதப்பட்ட, எங்களிடமிருந்து வெளிப்பட்ட, **பிரபோதா ஆசிரமத்திற்கு** சம்பந்தப்பட்ட கிரந்தத்தில் தெய்வ

ஆட்சியாளர்கள் வந்து சேர்ந்து விடுகிறார்கள் என்று சொல்கின்றோம்.

நீங்கள் கிரந்தங்களில் 129 பக்கத்திலிருந்து 144 வரை உள்ள போட்டோக்களில் சிறியவர்கள், நடுத்தர வயதுள்ளவர்கள், முதியோர்கள் மூன்று வெவ்வேறு வயதினராக பார்க்கலாம். அதன் போலவே ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்தவர்களை பார்க்கலாம். அதன் போலவே மூன்று மதத்திற்கு சம்பந்தப்பட்ட கிரந்தங்களை பார்க்கலாம். நான் மூன்று மதம் ஞானம் ஒன்றாக சொல்கின்றேன். அதனால் சிலர் என்னை **"மூன்று மதத்திற்கு ஒரே குரு"** என்று சொல்கின்றார்கள். சிலர்கள் மதச் சிந்தனையாளர்களுக்கு எங்களுடைய விதானம் என்றால் மூன்று தெய்வ கிரந்தம் ஞானம் சொல்லுவது சரிபோகாமல் போகலாம். ஆனால் நான் செய்வது நல்ல வேலை தான் என்று நான் நினைக்கின்றேன். நான் நினைப்பது அல்ல நீங்கள் எங்களுடைய கிரந்தங்களை படியுங்கள், அப்போது என்னுடைய கிரந்தத்தில் உள்ள ருசி என்னவென்று தெரியும். கிரந்தத்தில் நேரடியாக கடவுளுடைய மகத்துவம் தெரிந்து கொண்டு இருந்தாலும், மதத்தை பின்பற்றி என்னை தூசிப்பவர்களுக்கு பாவ மன்னிப்பு இருக்காது. நான் ஒன்றும் நினைக்காமல் இருந்தாலும் ஆட்சியாளர்கள் தண்டனை கொடுப்பார் என்னும் என்னுடைய அனுபவத்தில் கூறுகிறேன். பல பேர் தண்டனைக்கு குறியானவர்களை பார்த்ததனால் நான் சொல்கின்றேன்.

இப்போது வரை இந்த கிரந்தத்துடன் நான் எழுதியது எண்பத்து நான்கு (84) கிரந்தங்கள். பிறகு எங்களிடம்

அச்சிடப்பட்ட, எங்களுடைய பக்தர்கள் எங்களுடைய ஞானத்தை அனுசரித்து எழுதிய கிரந்தங்கள் கூட சிலது இருக்கின்றது. அந்த கிரந்தங்கள் சிலதை நான் பார்ப்பது, அவற்றை என் கையால் விடுதலை செய்வதும் நடந்தது. அப்படி என்னிடமிருந்து வந்த கிரந்தங்களுக்கு கூட தெய்வ சக்தி நிரம்பி உள்ளன. ஆட்சியாளர்கள் கூட அதில் சேர்ந்தார் என்று சொல்கின்றேன். அப்படிப்பட்டது ஐந்து அல்லது ஆறு கிரந்தங்கள் உள்ளது. என்னுடைய கிரந்தங்கள் இப்போது 84 உள்ளது ஆனால், வரப்போகும் காலத்தில் நூறு கிரந்தங்களுக்கு மேல் வர வேண்டும் என்னும் கடவுளுடைய சங்கல்பம் உள்ளது. வரப்போகும் கிரந்தங்களில் இப்போது இருந்து **தனித்துவமான** ஆட்சியாளர்கள் வருவார்கள் என்று நினைக்கின்றேன். நாங்கள் சொல்லும் விஷயங்கள் எல்லாம் பார்த்து சிலர்கள் பொறாமை பட்டு ஏளனமாக பேசலாம். நான் சொல்லியது எல்லாம் தனித்துவமாக இருப்பதினால் சிலர்கள் பக்தியாக கேட்கலாம், சிலர்கள் பொறாமையால் பேசுவது சகஜம்தான். அர்த்தம் ஆகாமல் போனால் இன்னொரு தடவை படித்து தெரிந்து கொள்ளலாம் இல்லாமல் போனால் சும்மா இருப்பது உத்தமமான வேலையாகும். நாங்கள் எதற்கு சும்மா இருப்போம் என்னும் என்னை தூசித்தால் அந்த நேரத்தில், அந்த பகுதியில் தெரியாத கிரகங்கள் பூதங்கள் அங்கு இருந்து அவர்கள் காதில் கேட்டால் தூசிப்பவனை சும்மா விட மாட்டார்கள். இப்போதும் பல பேர் நோயாளிகளாக இருக்கின்றார்கள். அதன் போலவே காரணம் இல்லாமல் மரணித்தவர்களும் கூட இருக்கின்றார்கள். பிறகு டாக்டர்கள்

ஹார்ட்பெயில் என்று சொல்வது சகஜம். எந்த காரணம் தெரியாமல் போனால் சொல்லுவது அது தான். அவ்வளவு வேலை எதற்கு, சும்மாவாவது இரு அல்லது தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய். எதுவும் அல்லாமல் வெளியே பேசியதற்காக காரணம் இல்லாத அவஸ்தைகள், காரணம் இல்லாமல் மரணங்கள் நடந்ததை நாங்கள் பார்த்தோம். நாங்கள் எழுதிய **"பேய்கள்-பூதங்கள் உண்மையான நிகழ்வுகள்"** இந்த கிரந்தத்திலும், **"ஸ்ரீகிருஷ்ணர் கடவுளா! பகவானா!"** இந்த கிரந்தத்திலும் இப்படிப்பட்ட விஷயங்கள் எழுதப்பட்டுள்ளது. அதனால் உன்னுடைய நன்மைக்காக நாங்கள் கூறியது என்னவென்றால்! நாங்கள் இதுவரை கூறிய விஷயங்கள் நம்ப முடியாமல் இருக்கிறது என்னும் நானே சுயமாக சொல்கின்றேன் அல்லவா! என்னுடைய வார்த்தையை பொறுத்து தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். இல்லாமல் போனால் எதுவும் தெரியதது போல் ஆமைதியாக இருந்து விடுங்கள்.

**கேள்வி:-நீங்கள் "நாங்கள் இனி எழுதப் போகின்ற கிரந்தங்களில் தனித்துவமான ஆட்சியாளர்கள் வருகின்றார்கள்" என்று சொல்லி உள்ளீர்கள். உங்களுடைய கிரந்தங்களில் ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள் என்னும் சொல்லுவதே பெரிய தனித்துவமானது. உலகத்தில் எங்கும் இல்லாத விதானத்தை இதுவரை கூறினீர்கள். இப்போது வரப்போகும் கிரந்தங்களில் தனித்துவமான ஆட்சியாளர்கள் வருகின்றார்கள் என்னும் சொல்லுவது எங்களுக்கு அர்த்தமாகாத விஷயம் ஆகிப்போனது. இந்த விஷயம்**

**எங்களுக்கு அர்த்தம் ஆகும்படி விவரமாக சொல்லுங்கள் என்று விரும்புகிறோம்?**

**பதில்:-**நாங்கள் கர்மம் நீக்குவது மற்றும் ஆட்சி முறை ஸ்தூலமாக தெரிவிக்க வேண்டும் என்று கடவுளை வேண்டியது தர்மமான விஷயம். அதனால் தேகம் வெளியில் கடவுளுடைய ஆட்சியாளர்கள் கர்மாவை எப்படி ஆட்சி செய்கின்றது சூட்சுமமாக அர்த்தமானாலும், எப்படி நீக்குகின்றது ஸ்தூலமாக தெரியும்படி செய்தார். அது கூட எங்கேயோ மட்டுமல்லாமல் எங்களுடைய கிரந்தங்களினால் நடக்கின்றது என்று சொல்லினோம். கிரந்தங்கள் தேகத்திற்கு ஒட்டிக் கொள்வது ஸ்தூலமாக தெரிந்தாலும் அது எப்படி நடக்கின்றதோ எங்களுக்கு சிறிது வரை அர்த்தமானது. அதனை விவரமாக சொல்லினால் இப்படி இருக்கின்றது. கடவுளுடைய ஆட்சியாளர்கள் இரண்டு ரகங்களாக இருக்கின்றார்கள். அவரை 1.பூதங்கள், 2.கிரகங்கள் என்று சொல்லலாம். பூதங்கள், கிரகங்கள் இரண்டும் ஆட்சியாளர்களாக இருந்தாலும், கிரகங்களை விட பூதங்கள் சிறிது தனித்துவமாக உள்ளது. கிரகங்களுக்கு இருக்கின்ற சக்தியை விட பூதங்கள் சக்தி மிக அதிகமாக இருக்கும். கிரகங்கள் என்றால் **சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி** முதலியன கிரகங்கள் பரம்பரையாக உள்ளது. கிரகங்களுக்கு ஏழு கிரகங்கள் பரம்பரை கிரகங்கள். அதன் போலவே பூதங்கள் என்றால் **ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி** என்று ஐந்து மகாபூதங்கள் பரம்பரையாக உள்ளது. பிரக்ருதியில் பாகமான ஐந்து சக்திகளும் சந்ததி போல் பரம்பரை கொண்டது. பூதங்கள்,

துணை பூதங்கள் இருக்கின்றது. ஐந்து மகாபூதங்கள் சம்மந்த பூதங்கள் ஜாதி சில நூற்றுக்கணக்கான கோடிகள் உள்ளது. அதன் போலவே ஏழு கிரகங்கள் சம்மந்த கிரகங்கள் ஜாதி பூதங்களை விட இரண்டு மடங்காக சில நூற்றுக்கணக்கான கோடிகள் உள்ளது. அது மட்டுமல்லாமல் ஆயிரத்திற்கு இருநூறு பிரகாரம் கிரகங்கள் ஆட்சியாளர்களில் சில கோடி பேர் யாருக்கும் தெரியாமல், உருவங்கள் இல்லாத துணை கிரகங்களும் கூட உள்ளது. இதெல்லாம் கடவுளுடைய ஆட்சியாளர்கள் விவரம் ஆனால் எப்போதும் மனிதன் தேகத்திலும், தேகம் வெளியில் ஆட்சி நடந்துக் கொண்டே இருக்கிறது. தேகம் உள்ளே ஆத்மா ஒரு பக்கம் கடவுளாக இருந்து, மற்றொரு பக்கம் காரியம் செய்கின்றவராக இருக்கிறது.

தேகம் வெளியில் உள்ள கடவுள் பரமாத்மா அவர் அமைதியாக இருந்து தன்னுடைய பிரக்ருதிக்கு ஒப்படைத்து அவர் ஒன்றும் செய்யாமல் அமைதியாக உட்கார்ந்து இருக்கின்றார். பிரக்ருதி ஐந்து பாகங்களாக இருந்து தன்னுடைய பரம்பரை ஆட்சியாளர்களை நியமித்து கொண்டு, ஏழு கிரகங்கள் பரம்பரையாக இருக்கின்ற கிரகங்கள் கூட நியமித்து ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றது. பிரக்ருதி பரமாத்மா செய்ய வேண்டிய காரியங்கள் செய்து பரமாத்மாவுக்கு வேலையில்லாமல் செய்கின்றது. பிரக்ருதிக்கு சம்பந்தப்பட்டது பூதங்கள் ஜாதி ஆட்சியாளர்கள், பூதங்களில் இருந்து தயாரானது கிரகங்கள். இதனைப் பொறுத்து கிரகங்களை விட பூதங்கள் சிறிது தனித்துவமாக இருக்கின்றது என்று சொல்லலாம். கிரகங்கள் பிரக்ருதி

கட்டளை பிரகாரமே வேலை செய்கின்றது. அவருக்கு என்றால் கிரகங்களுக்கு “தண்டிக்கும் அதிகாரம்” மட்டும் இருக்கின்றது மேலும் மனிதர்களை “கொன்றும் அதிகாரம்” இல்லை. ஒரு தடவை மனிதனைப் பிடித்துக் கொண்டால் ஐந்து மாதம் வரை தண்டிக்கும் அதிகாரம் உள்ளது என்னும், தேள் விஷம்போல் துன்புறுத்தும் வரை துன்புறுத்தும் அதிகாரம் இருக்கும் என்று பைபிள் பிரகடன கிரந்தத்திலும் கூட சொல்லியது போல் உள்ளது. மனிதனை துன்புறுத்தும் எந்த துன்புறுத்தாவதும் பிரக்ருதியின் அனுமதி இல்லாமல் கிரகங்கள் மனிதனை துன்புறுத்தாது. இதுவரை கிட்டதட்ட 80 கிரந்தங்கள் வரை எங்கள் கிரந்தத்தில் ஆட்சியாளர்களாக கிரகங்கள் மட்டும் இருக்கின்றது. 80 கிரந்தத்திலிருந்து இப்போது வருகின்ற கிரந்தங்களில் கூட கிரகங்கள் மட்டுமல்லாமல் தனித்துவமாக பூதங்கள் நுழையும் என்று சொல்கின்றோம். பூதங்கள் சுயமாக பிரக்ருதி பரம்பரையாக இருந்தாலும் பஞ்சபூதங்களுக்கு உள்ள அதிகாரங்கள் சிலது இருக்கும். அதனால் பிரக்ருதி கட்டளைக்காக எதிர்பார்க்காமல் தேவைப்படும்போது “சுயம் நிர்ணயம்” எடுத்து கொள்ளும் அதிகாரம் பெற்றுக் கொண்டிருக்கும். மனிதர்கள் கர்மத்தை பொறுத்து கிரகங்கள் போல் மட்டுமல்லாமல், மனிதர்களைக் கொன்றும் அதிகாரம் கூட பூதங்கள் பெற்று கொண்டிருக்கும். மனிதர்களை துன்புறுத்தும் தவிர, கொன்றும் அதிகாரம் கிரகங்களுக்கு இல்லை. பூதங்கள் அப்படி ஆகாமல் தேவைப்படும்போது நிர்ணயம் எடுத்துக் கொள்ளுவது, தேவையைப் பொறுத்து கொன்றுவிடுவதும் செய்யும் அதிகாரத்தை பெற்றதாக இருக்கின்றது. இதற்கு

முன்பே எங்களுக்கு எதிர்ப்பாக பேசியவர்களை இரண்டாவது நாளே பூதங்கள் கொன்ற விஷயம் சிலருக்கு மட்டும் தெரியும். அந்த நாள் தூசித்தவன் மரணத்திற்கு காரணம் என்ன வென்று பல பேருக்கு தெரியாது. இப்போது இந்த கிரந்தத்திலும் கூட பூதங்களே நுழையப்போகின்றது.

பூதங்கள், கிரகங்கள் கடவுளுடைய ஆட்சியை ஒருங்கிணைப்பாக நிர்வகிக்கின்றது. பூதங்களுக்கு, கிரகங்களுக்கு பிரக்ருதிக்கு பின் இருக்கின்ற கடவுள் தெரியப்படாது. ஆனால் பிரக்ருதி எவ்வளவு கடவுள் மீது பக்தியாக இருக்கின்றதோ அதன் போலவே பூதங்கள், கிரகங்கள் பக்தி கொண்டு கடவுள் ஞானம் மீது ஆர்வம் செலுத்தி ஞானத்தை சம்பூர்ணமாக கொண்டிருக்கின்றது. இன்னும் 38 வருடங்கள் முன்பே "கடவுள் சின்னம்" அடையாளித்து அதனுடைய வடிவத்தை தயார் செய்து காட்டிய பிறகு மனிதர்களை விட முதல் அவர்கள் நெற்றி பாகத்தில் "கடவுள் சின்னம்" அல்லது "கடவுள் முத்திரை" வைத்தவர்கள் பூதங்கள் மற்றும் கிரகங்கள். அப்போதிருந்து எப்போதும் கடவுள் சின்னம் அர்த்தம், கடவுள் முத்திரை அர்த்தம் இரண்டு விதமாக அர்த்தம் தெரிந்து கொண்டு வைத்து கொண்டிருக்கின்றார்கள். பூமி மீது மனிதர்களை விட பெரிய ஞானிகளாக இருக்கின்றார்கள். பூமி மீது மனிதர்களாக இருக்கின்ற சுவாமிஜிகள், பண்டிதர்கள், மதப் பெரியோர்கள் என்பவரில் எதுவரை உண்மையான ஞானம் இருக்கின்றதோ கவனித்து அவருடைய ஞானம் அருகதை எவ்வளவு என்று துல்லியமாக அளவிடுபவர் ஆட்சியாளர்கள். வெளியே

மனிதர்களில் எவ்வளவோ பெரிய ஞானியாக பெயர் இருந்தாலும், அவரில் சரியான ஞானம் இல்லாமல் போனால் அவனை சிறிதளவு கூட கௌரவிக்க மாட்டார்கள். அவனை பெரியதாக பார்க்க மாட்டார்கள். அவனுடைய கர்ம பிரகாரம் அனுபவிக்கும்படி செய்வார்கள்.

**கேள்வி:-"ஆட்சியாளர்களான பூதங்கள் ஒவ்வொரு முறை ஒரு நேரத்தில் பிரக்ருதி கட்டளை கொடுக்காமலே சுயம் நிர்ணயம் எடுத்துக் கொள்வார்கள்" என்று கூறினீர்கள். அப்படிப்பட்ட நிர்ணயங்கள் எங்கேயாவது எடுத்துக் கொண்டது உங்களுக்கு எப்படி தெரியும்? எங்கு அப்படிப்பட்ட நிர்ணயங்கள் எடுத்துக் கொண்டார்களோ சிறிது விவரமாக கூறுங்கள்?**

**பதில்:-**எனக்கு எப்படி தெரியும் என்று உனக்கு சொல்லினாலும் பிரயோஜனம் இல்லை. ஒரு வேளை உனக்கு சொல்லினாலும் உனக்கு அர்த்தமாகாது. உனக்கு அர்த்தமாக வேண்டும் என்றால் முதலில் **பூதங்கள் என்றால் என்ன? கிரகங்கள் என்றால் என்ன?** என்று தெரிந்து இருக்க வேண்டும். பூதங்கள் என்றால் பேய்கள் அல்லவா! என்று சிலர் என்னை கேட்கின்றார்கள். அவர்களுக்கு அதன் போலவே அர்த்தமாகும். அப்படிப்பட்டவர்களுக்கு "ஐயா! பூதங்கள் என்றால் அது தனித்துவமான ஜாதி என்று நினைத்துக் கொள். பேய்களுக்கு, பூதங்களுக்கு சிறிதளவு கூட சம்பந்தமில்லை" என்று நான் சொல்லினால் என்னுடைய வார்த்தை முழுமையாக முடிவதற்குள்ளே "நீங்கள் **"பேய்கள் பூதங்கள்"** இந்த கிரந்தம் நீங்கள் எழுதினீர்கள் அல்லவா! அப்போது இரண்டும் ஒன்றுதான் என்று அர்த்தம் அல்லவா!"

என்று சொல்கின்றார்கள். நான் அங்கே எழுதியது பேய்கள் வேறு, பூதங்கள் வேறென்று தெரிவிப்பதற்காக அப்படி வெவ்வேறாக “பேய்கள், பூதங்கள்” என்னும் எழுதியது போல் சொன்னால் “பேய்கள் என்றால் பூதங்கள் என்றால் ஒன்றுதான் என்று எங்களுடைய பெரியோர்கள் சொல்லினார்கள்” என்று சொல்கின்றார்கள். இந்த விஷயம் யாருக்கும், அவர் பெரியோர்களுக்கும் தெரியாது என்னும் விஷயம் அவர்களுக்கே தெரியாது.

கிரகங்களுக்கு மனிதர்களை துன்புறுத்த அதிகாரம் கொடுக்கப்பட்டது தவிர கொன்றும் அதிகாரம் இல்லை. ஆனால் வெளி உலகத்தில் சில ரோடு விபத்தில் சில பேர் இறந்து போவது நடக்கின்றது. அப்போது அவர்களை யார் கொன்றார்கள்? என்று ஆலோசனை செய்தால் கிரகங்கள் மட்டும் அல்லவென்று சொல்லலாம். அப்போது அங்கு கொன்றது பூதங்கள் தான் என்று தெளிவாக தெரிகின்றது. பூதங்களுக்கு கட்டளை கொடுக்காமலே அது அப்படி செய்கின்றது என்று கூறினோம். எதற்கு அப்படி செய்கின்றது என்றால்! பூதங்கள் பிரக்ருதிக்கு சம்பந்தப்பட்டதாகும். பிரக்ருதியில் இருக்கின்ற நிர்ணயம் பிரக்ருதி அவர்களுக்கு கூறாமலே கிரகிக்கும் அருகதை பெற்றுக் கொண்டிருக்கின்றது. பிரக்ருதியே பூதங்களாக பிரிக்கப்பட்டு பூதங்கள் உருவத்தில் இருப்பதினால் பிரக்ருதியில் இருந்து தனித்துவமாக கட்டளை தேவையில்லாமலே சொல்லப்போகும் நிர்ணயங்களை சரியாக இருக்கும் நிர்ணயங்கள் பூதங்கள் எடுத்துக்கொள்ள நடக்கின்றது. எப்போதும் அப்படி நடக்கவில்லை. சில

சந்தர்ப்பங்களில் மட்டும் அப்படி செய்கின்றார்கள். வெறும் அஞ்ஞானிகளில் மட்டும் பூதங்கள் அப்படி நடந்து கொள்கின்றது. ஞானிகளிடம் அதன் போலவே அஞ்ஞானிகளிடம் பூதங்கள் நடந்து கொள்ளுவது வெவ்வேறாக இருக்கும். ஞானிகள் விஷயங்களில் பூதங்கள் சுயம் நிர்ணயம் எடுத்துக் கொள்ளாது. ஞானிகள் விஷயத்தில் பிரக்ருதி எப்படி நிர்ணயிக்குமோ அப்படியே செய்யும். அஞ்ஞானிகள் விஷயங்களில் பூதங்கள் பிரக்ருதி நிர்ணயத்திற்க்காக காத்துக் கொண்டு இருக்கும் என்று நம்பிக்கை இல்லை. அங்கு மட்டும் பூதங்கள் சுயம் நிர்ணயங்கள் எடுத்துக்கொள்ளுவது நடக்கின்றது.

பூமி மீது கடவுளுடைய ஞானம் தெரிந்து மூன்று கிரந்தங்கள் பிரகாரம் தெய்வ மார்க்கத்தில் இருக்கின்றவனை ஞானியாக பூதங்கள், கிரகங்கள் கணக்கிட்டு அவனை கௌரவிக்கின்றது. அவனிடம் கௌரவம் கொண்டு இருக்கின்றது. கடவுள் ஞானம் இல்லாதவரிடம் கடவுளுடைய ஆட்சியாளர்கள் கருணை கௌரவம் இல்லாதவராக இருப்பார்கள். அஞ்ஞானிகளாக இருப்பவர்கள் கடவுளை தேகத்திலும், தேகத்துக்கு வெளியிலும் சிறிதளவு கூட தெரியாமல் போனதினால், தெரிவதற்கு முயற்சி செய்யாமல், சில்லறை தேவதைகளை என்றால் கடவுளால் உருவாக்கப்பட்ட பல பேர் தேவதைகளை பின்பற்றி கும்பிடுபவர்களைப் பார்த்தால் கிரகங்களுக்கு, பூதங்களுக்கு அதிகமாக கோபம் கொண்டிருக்கும் என்று சொல்லலாம். வேறு கடவுளின் தரிசனத்திற்கு செல்லுபவர்களை மட்டும் சாலை விபத்துக்களை கிரகங்கள், பூதங்கள்

ஏற்படுத்துகின்றது. தேவதைகளுக்காக போகும் பயணங்கள் ஆட்சியாளர்களுக்கு சரியாகாது. தம்மை பிறக்க வைத்த கடவுளை விட்டு தேவதைகளை ஆராதிப்பது, தரிசனத்திற்காக செய்யும் பயணங்கள் அதிகமாக விபத்துக்கு குறியாகின்றது. விபத்து செய்தவர்கள் பூதங்களானால் மனிதர்களை கொன்று விடுவார்கள். கிரகங்களானால் கொன்றாமல் காயம் படுவது வரை செய்வார்கள். பயணங்கள் எத்தனை நடந்தாலும் அதிகமான சதவீதம் தேவதைகள் தரிசனத்திற்காக போகின்றவர்களுக்கு நடந்து கொண்டிருக்கும்.

தேவதைகளுக்காக பயணம் மட்டுமல்லாமல் பிறகு அதிக ரோடு விபத்துக்கள் திருமணம் விஷயத்திலேயே. திருமணம் காரியம் எல்லாம் தெய்வ சம்பந்தமாக இருக்கின்றது. அந்த விஷயம் நாங்கள் **“இந்து சம்பிரதாயங்கள்”** என்ற கிரந்தத்தில் எழுதியுள்ளோம். திருமணத்தில் ஒவ்வொரு காரியங்கள் கடவுளுடைய ஞானத்திற்கு சம்பந்தப்பட்டிருக்கும்போது, இன்று யாரும் அந்த விதமாக ஞான முறையாக, ஞானம் தெரிந்து திருமணம் செய்யவில்லை. அதனால் திருமணம் காரியங்களுக்கு முதலிலேயே, திருமணத்திலேயும், திருமணத்திற்கு பிறகும் பயணம் செய்யும்போது அல்லது மற்ற நேரத்திலும் கடவுளுடைய ஆட்சியாளர்கள் விபத்து செய்ய வேண்டும் என்று பார்த்துக் கொண்டிருப்பார்கள். எப்போது வாய்ப்பு வந்தால் அப்போது விபத்துக்களை செய்வார்கள். அதிகம் திருமணத்திற்கு சம்பந்தப்பட்ட திருமணம் விவகாரத்தில் ரோடு விபத்துக்கள் அதிகமாக நடக்கின்றது போல் தெரிகின்றது.

இதெல்லாம் பார்த்தால் “மனிதர்களுக்கு ஞானம் இல்லாமல் போனது தான் முதல் காரணம்” என்று தெரிகின்றது. திருமண காரியத்திலும் திருமண பயணத்திலும் யாராவது ஞானி இருந்தால், ஆட்சியாளர்களுக்கு ஞானம் தெரிந்ததினால் ஞானியை கௌரவித்து, அங்கு விபத்து செய்யாமல் இருப்பார்கள். நெற்றி பாகத்தில் கடவுளுடைய அடையாளம் அணிந்தவர் இருந்தால் அங்கு விபத்து தவிர்ந்து விடும். கடவுளுடைய ஞானம் என்றால் ஆட்சியாளர்களுக்கு எவ்வளவோ பாசம், கௌரவம். அதன் போலவே அஞ்ஞானிகள் என்றால் ஆட்சியாளர்களுக்கு, அப்படிப்பட்டவர்களை பார்த்தால் எதிரிகளை பார்ப்பது போன்றதாகும்.

கடவுளுடைய அடையாளத்தை அணியாதவர்களை துன்புறுத்த வேண்டும் என்னும், கடவுள் முத்திரை அணியாது புல்களையும் துன்புறுத்த வேண்டாம் என்னும் பிரக்ருதியில் இருந்து என்றால் பிரக்ருதி பின்னால் இருக்கின்ற கடவுளிலிருந்து கட்டளை இருக்கிறது என்று பைபிள் பிரகடன கிரந்தத்தில் 9ஆவது அத்தியாயத்தில் 4ஆவது வசனத்தில் சொல்லி உள்ள வார்த்தை கேட்டிருப்பீர்கள் அல்லவா! இந்த வார்த்தையை பொறுத்து கடவுள் முத்திரை அணியாத வரை பார்த்தால் பிரக்ருதிக்கு பிடிக்காது என்னும் ஒரு விதமாக அர்த்தமாகின்றது. அப்படி ஆகாமல் போனால் கடவுள் முத்திரை அணிவதால் அவன் பாவம் மன்னிக்கப்படுகின்றது என்னும் அதனால் அவரை பாதிக்காதே என்று சொல்லியது போல உள்ளது. இது எல்லாவற்றையும் கவனித்தால்

கடவுளுக்கு (பிரக்ருதிக்கு) கடவுளுடைய ஆட்சியாளர்களுக்கு கடவுள் முத்திரை என்றால் இஷ்டம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இது பேய்களுக்கு அல்லது சூட்சும தேகங்களுக்கு அக்னி குண்டமாக வெப்பத்தை சிதறடிக்கும். அதனால் மரணித்த பிறகு என்றால் அகால மரணம் அடைந்தவர்கள் கடவுள் முத்திரை அணிந்தவர்களை பார்த்து பயப்பட்டு தூரமாக இருப்பார்கள். பேய்களாக இருக்கின்றவர்கள் அஞ்ஞானிகளாக இருந்தால் கடவுள் முத்திரை வெப்பம் படும். பேய்களாக இருக்கின்றவர்கள் சிறிதாவது கடவுள் ஞானம் தெரிந்து இருந்தால் அவருக்கு கடவுள் சின்னத்தினால் எப்படிப்பட்ட கஷ்டமும் இருக்காது.

கடவுள் முத்திரையை அணிந்தவர்களை பார்த்தால் பயப்படுவதினால், பேய்கள் கடவுள் முத்திரையை அணிந்தவர்களிடம் உள்ளே சேர முடியாது. முதலிலேயே அவர்களுடைய தேகத்தில் பேய்கள் இருந்தாலும், அவர் கடவுள் முத்திரை அணிவதால் அவர் தேகத்தில் உள்ள பேய்களுக்கு இடைஞ்சலாக இருக்கும். அதனால் புதியதாக ஆறு மாதங்கள் அல்லது வருடம் இருந்து இருந்தால் பேய்கள் தேகத்தை விட்டு ஓடிப் போகும். வருடத்தை விட அதிக காலம் இருந்த பேய்கள் இருக்கின்றவர்களுக்கு அவர்கள் தேகத்திலிருந்து பேய் வெளியே போகாமல் சிரமப்படும். மூன்று அல்லது நான்கு வருடங்களை விட அதிக காலம் இருக்கின்றவர் நிலை தேகத்தில் மிக கஷ்டமாக இருக்கும். தேகத்தில் சிக்கிக் கொண்டு போனதினால் அவர்கள் போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டாலும் போகாத நிலையில் இருப்பார்கள்.

கடவுள் முத்திரை என்றாலும், கடவுள் சின்னம் என்றாலும் இரண்டும் ஒன்றாகவே பார்க்க வேண்டும். மனிதன் தேகத்தில் உள்ள கடவுள், தேகம் வெளியே உள்ள கடவுள் இரண்டு விதமான ஞானம் தெரிய வேண்டியது இருக்கும். ஆனால் யாருக்காவதும் தேகத்தில் கடவுளே உள்ள ஆராதனை செய்ய வேண்டிய கடவுள் என்னும், அவர் ஒருவர்தான் ஆராதிக்க வேண்டிய தெய்வம் என்னும் மூன்று தெய்வ கிரந்தத்தில் சொல்லப்பட்டது. கடவுளுடைய ஞானம் சம்பூர்ணமாக தெரிந்து கொண்டால் சிருஷ்டி பூர்வமுள்ள கடவுளான பரமாத்மா, சிருஷ்டி பிறகு கடவுளான ஆத்மா என்று இந்த இரண்டு விதங்கள் தெரிந்து கொண்டால், சுயமாக பரமாத்மாவான கடவுள் ஆத்மாவாக இருக்கின்ற கடவுளையே ஆராதனை செய்ய வேண்டும் தெரிவித்துள்ளார் என்று தெரிகின்றது. மேலும் மூன்று தெய்வ கிரந்தத்திலும் தேகத்தில் உள்ள ஆத்மாவாக இருக்கின்ற கடவுளே ஆராதனை செய்ய வேண்டிய கடவுள் என்னும் சொல்லியது போல அர்த்தமாகும். இந்த விதமாக தெரிவதினால் சிருஷ்டி முதல் கடவுள், சிருஷ்டி பிறகு கடவுள் என்று ஒரே கடவுளை தான் சொல்கிறோம். ஒரே கடவுளை அப்படி சொல்ல வேண்டியிருந்தது. அதனால் ஒரே அடையாளத்தை முத்திரை, சின்னம் என்று இரண்டு பெயரில் சொல்லினாலும் அவை இரண்டும் ஒன்றுதான் என்று தெரிய வேண்டும். ஞானம் விவரத்திற்காக தேகத்தில் உள்ளே இருக்கின்ற கடவுளை **"கடவுள் சின்னம்"** என்னும், தேகம் வெளியில் உள்ள கடவுளை **"கடவுள் முத்திரை"** என்று சொல்கின்றோம். ஆனால் ஹிந்துக்கள் முக்கியமாக முதல் கடவுள்

சின்னத்தை, பிறகு கடவுள் முத்திரை இரண்டும் தெரிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்கள் விஷயத்திற்கு வந்தால் அவர்கள் முதல் கடவுள் முத்திரை பிறகு கடவுள் சின்னத்தை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். இனி முஸ்லிம்கள் விஷயத்திற்கு வந்தால் முதல் கடவுள் சின்னத்தை பிறகு கடவுள் முத்திரையை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் எங்களுடைய கிரந்தம் என்னும் சொல்லிக் கொண்டிருக்கும் குர்ஆன் கிரந்தத்தில் 5 ஆவது சூரா 2 ஆவது ஆயத்து (5-2) இல் மற்றும் (22-32) இல் **"கடவுள் சின்னம்"** இந்த பெயரில் வாக்கியங்கள் இருக்கின்றது. அதனால் முஸ்லிம்களுக்கு முதல் கடவுள் சின்னத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். கடவுள் சின்னத்தைப் பற்றி அர்த்தம் செய்து கொண்ட பிறகு அதே வரைப்படத்தை கடவுள் முத்திரையாக கூட தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் விஷயத்திற்கு வந்தால் கிறிஸ்தவர்கள் எங்களுடைய கிரந்தம் என்னும் சொல்லிக் கொண்டிருக்கும் பைபிள் கிரந்தத்தில் "பிரகடன கிரந்தம்" என்னும் பாடத்தில் **"கடவுள் முத்திரை"** என்னும் சொல்லப்பட்டிருந்ததால் கிறிஸ்தவர்கள் கடவுள் முத்திரை பற்றி முதல் தெரிந்து பிறகு கடவுள் சின்னத்தை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். ஹிந்துக்கள் பகவத்கீதையில் கடவுள் சின்னம் என்னும், கடவுள் முத்திரை என்னும் எங்கும் பெயர் வைத்து எழுதப்படவில்லை. ஆனால் இங்கு இரண்டு விதானங்கள் பற்றி எங்களுக்கு தெரியப்பட்டது. மூன்று

மதத்தில் உள்ளவர்களுக்கு, மூன்று கிரந்தத்தில் சமமான ஞானம் சொல்லப்பட்டுள்ளது. மேலும் எந்த கிரந்தமும் தனித்துவமாக எந்த மதத்திற்கு சேர்ந்தது அல்ல. எந்த கிரந்தமாவதும் அனைத்து மதத்தில் உள்ளவர்களுக்கும் அனைவருக்கும் சொல்லப்பட்டது மேலும் பலான மதத்திற்கு சேர்ந்தது என்று சொல்லப்படவில்லை. அதனால் மூன்று மதத்திற்கு சேர்ந்தவர்கள் ஒரே கடவுளுடைய ஞானம் தெரிந்து கொள்கின்றார்கள். ஒரே கடவுளுடைய ஞானத்தை தெய்வ கிரந்தத்தில் சொல்லியது போல இரண்டு ரகமாக அடையாளம் சொல்லி உள்ள கடவுள் முத்திரை, கடவுள் சின்னம் என்னும் ஞானம் தெரிந்தால் சம்பூர்ண ஞானிகள் ஆனதாகும். ஆகாசத்திலும் பூமி, மீதும் வியாபித்த கடவுள் ஆட்சியாளர்களான பூதங்கள், கிரகங்கள் இரண்டு பேரும் இரண்டு அடையாளத்தை தெரிந்து கொண்டு அவர்கள் கடவுளின் அடையாளத்தை அணிகிறார்கள்.

முதலில் பூமி மீது 2000 வருடம் முன்பு "மதம்" என்று பெயர் வைத்துக் கொண்டு பிறந்தது கிறிஸ்தவர்கள். அதுவரை சிருஷ்டி ஆதியிலிருந்து உள்ள ஹிந்து சமூகம், கிறிஸ்தவ மதம் பிறந்த பிறகு ஹிந்து மதமாக மாறிப்போனது. கிறிஸ்தவ சமூகத்தினர் தங்களை கிறிஸ்தவ மதமாக சொல்லிக் கொண்ட பிறகு மற்ற மதங்கள் விதைக்கப்பட்டன. இன்று பூமி மீது மொத்தம் 12 மதங்கள் இருக்கும்போது அதில் பெரியது, முக்கியமான ஞானம் உள்ளது மூன்று மட்டும்தான். அதுவே **இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம்** என்று மூன்று மதங்களாக உள்ளது. மூன்று மதத்தில் உள்ளவர்கள் கடவுள் சொல்லிய ஒரே ஞானத்தை

மத கிரந்தங்களாக பிரித்துக் கொண்டார்கள். யார் எப்படி சொல்லிக் கொண்டாலும், மூன்று கிரந்தத்திலும் **ஒரே கடவுள், ஒரே ஞானம் உள்ளது.** மூன்று கிரந்தத்திலும் மூன்று ஆத்மாக்களை பற்றி சொல்லியது முக்கியமான ஞானமாக இருக்கின்றது. மூன்று கிரந்தத்திலும் கிரந்தத்திற்கு ஆதாரமான முக்கிய ஞானமாக மூன்று ஆத்மா ஞானமே உள்ளது. மூன்று கிரந்தத்திலும் கிரந்தம் மத்திய பாகத்தில் மூன்று ஆத்மாக்களை பற்றி கூறினார். நன்றாக யோசனை செய்தால் மூன்று கிரந்தத்தில் எந்த கிரந்தத்திற்காவது முக்கிய சூத்திரம், ஆதாரமுள்ள ஞானம் மூன்று ஆத்மாக்களை பற்றி சொல்லிய ஞானமே. மூன்று ஆத்மாவுக்கு சம்பந்தப்பட்ட அனுபந்த ஞானமே மற்ற கிரந்தங்களில் இருப்பதை கவனிக்கலாம். இந்த மூன்று ஆத்மாக்கள் ஆதாரம் செய்து கொண்டு கடவுள் சின்னம், அதன் போலவே கடவுள் முத்திரை பற்றி சொல்லினார் என்று தெரிகின்றது. மூன்று கிரந்தத்திலும் சிருஷ்டி பூர்வமுள்ள கடவுள், சிருஷ்டி பிறகு கடவுள் இரண்டு ரகமாக பிரிந்து தெரிகின்றார். அந்த இரண்டு ரகமான கடவுள் பற்றி எழுதி தெரிவித்தது **"கடவுள் சின்னம்" "கடவுள் முத்திரை"** என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

மனிதர்களுக்கு கடவுள் பிரசாதிக்கப்பட்ட மூன்று தெய்வ கிரந்தத்திலும் மனிதன் மறுபடியும் கடவுளை சேருகின்ற விதானம் இருந்தாலும் அதனை மனிதன் கிரகிக்காமல் போனான். ஆனால் மூன்று மதத்திற்கு சேர்ந்தவர்கள் யாருக்கு அவரவர் கடவுளைப் பற்றியே சொல்கின்றார்கள். நாங்கள் கடவுள் மார்க்கத்தில் எல்லோரை

விட முதல் இருக்கிறோம் என்று சொல்கின்றார்கள். உண்மையாக மூன்று மதத்தினர்கள் கடவுள் பக்கம் பயணம் செய்து கொண்டிருந்தாலும், அவர் முன் பின் இருக்கிறார் என்று சொல்லலாம். ஹிந்துக்களை விட கிறிஸ்தவர்கள் நாங்கள் கடவுள் மார்க்கத்தில் முதல் இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதன் போலவே முஸ்லிம்கள் ஹிந்து கிறிஸ்தவர்கள் விட எங்களுடைய ஞானமே பெரியது, அவர்களை விட நாங்களே உண்மையான ஞானம் தெரிந்தவர்கள் அவர்கள் கடவுளை விட எங்களுடைய அல்லாஹ்வே பெரியது என்று சொல்கின்றார்கள். யாருக்கு அவர்களுடையது பெரியது என்று சொல்லிக் கொள்வது சகஜமாக இருந்தாலும், உண்மையாக மூன்று மதத்தினர் யார் முதல் இருக்கிறார் என்று நாம் பார்த்தால் இப்படி தெரிகின்றது. கடவுள் ஞானத்திற்கு ஆதாரம், அடிப்படை எல்லாம் மூன்று ஆத்மாக்களே. கடவுள் மூன்று ஆத்மாக்கள் உருவமாகவே இருக்கின்றார், மேலும் ஞானம் எல்லாம் மூன்று ஆத்மாக்கள் ஆதாரம் செய்து கொண்டே இருக்கும். மூன்று ஆத்மாக்கள் ஆதாரம் செய்து கொண்ட ஞானமே மூன்று தெய்வ கிரந்தத்தில் இருக்கின்றது.

இன்று மூன்று மதத்தினர்கள் அவரவர் மத முறை மீது காட்டிய ஆர்வத்தை கடவுள் கிரந்தத்தில் சொல்லிய ஞானம் மீது காட்டவில்லை. ஆனால் சம்பூர்ணமான ஞானம் மூன்று கிரந்தத்தில் இருக்கிறதை மனிதர்கள் தெரிந்து கொள்ளாமல் போனார்கள். ஹிந்து மதத்தில் “கடவுள்” என்னும் சொல் மறந்து போய், “தேவதைகள்” என்ற

சொல்லில் இருக்கிறார்கள். அவர்களுக்கு பகவத்கீதாவில் சொல்லிய மூன்று புருஷர்கள் ஞானமே தெரியாமல் போனது. கடவுள் மீது உள்ள விசுவாசத்தில் எல்லோரை விட முதல் இருக்கின்றவர்கள் முஸ்லிம்கள் ஆனாலும் அவர்களுக்கு மூலாதாரமான ஆத்ம ஞானம் தெரியாது. முஸ்லிம்களில் பிரார்த்தனை, விஸ்வாசம் இரண்டும் பலமாக இருக்கிறது. கம்யம் (முடிவு) தெரியாத பயணம் போல் அவர்கள் கடவுள் ஒருவர் தான் என்னும் கடவுள் மீது விசுவாசத்தில் கடவுளை பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாலும் அவர்களுடைய கிரந்தத்தில் கூறிய ஞானத்தை விட்டு எவ்வளவு காலம் பிரார்த்தனை செய்தாலும் வீணாகும். வீட்டுக்கு போக வேண்டும் ஆனால் நடக்க வேண்டிய வழி தெரியாத போது சுடுகாடுக்கு போனது போல இருக்கும். தெய்வ ஞானத்திற்கு மூலாதாரமான வாக்கியம் குர்ஆன் கிரந்தத்தில் **சூரா 50, ஆயத்து 21 இல் உள்ள மூன்று ஆத்மாக்கள் விஷயம்** தெரியாமல் போனதினால் அவர்களும் கூட சார்த்தகம் அடையாமல் போனார்கள். ஆனால் அவர்களுக்கு அந்த விஷயம் தெரியாது. நாங்கள் எல்லோரை விட ஞானிகளாக இருக்கின்றோம் என்று நினைக்கின்றார்கள். அவர்கள் சிறிதளவு கூட பின் திரும்பி பார்க்கவில்லை.

மூன்று ஆத்மாக்கள் ஞானம் சகல ஞானத்திற்கு மூலாதாரமாக உள்ளது. பகவத்கீதாவில் சொல்லிய **ஷரன், அக்ஷரன், புருஷோத்தமன்** தெரியாத போது அவர்கள் எவ்வளவு பெரிய ஞானியாக இருந்தாலும் எந்த பிரயோஜனம் இல்லை. அதன் போலவே பைபிள் கிரந்தத்தில் சொல்லிய **தந்தை, குமாரன், பரிசுத்த ஆத்மாவை** பற்றி தெரியாத

கிறிஸ்தவர்கள் வழி தவறி நடந்தது போல் ஆகும். எவ்வளவு பிரார்த்தனை செய்தாலும் பலன் கிடைக்காமல் போகும். ஆனால் மற்ற இரண்டு மதத்தினோர்கள் மூன்று ஆத்மாக்கள் விஷயம் தெரிந்து கொள்ளாமலும், ஒரு கிறிஸ்துவ மதத்திற்கு சேர்ந்தவர்கள் மட்டும் மூன்று ஆத்மாக்கள் பெயர்களை சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். தந்தை, குமாரன், பரிசுத்த ஆத்மா என்னும் மூன்று ஆத்மாக்கள் பெயர் சொல்லுவது வரை இருந்தார்கள். இது மத்தேயு சுவார்த்தையில் 28 அத்தியாயத்தில் 19 ஆவது வசனத்தில் இந்த மூன்று பெயர் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஒரு நாள் ஒரு கிறிஸ்துவ போதகரை சந்தித்தபோது அவரில் மூன்று ஆத்மாக்கள் விஷயங்கள் பற்றி சிறிது நேரம் பேசினோம். அந்த விஷயம் இப்போது பார்க்கலாம்.

**நான்:-**நீங்கள் கிறிஸ்தவ போதகர் அல்லவா! நீங்கள் சொல்லிய ஞானம் மற்ற கிறிஸ்தவர்கள் எல்லோரும் கேட்பார்கள். நீங்கள் இயேசுவை மனித குமாரன் என்னும் சொல்லினீர்கள் அல்லவா! இயேசு மனித குமாரனா? கடவுளுடைய குமாரன் இல்லையா!

**போதிப்பவர்:-**இயேசு நாம் பார்த்தால் மனித குமாரனே. அவரை நாம் மனித குமாரன் என்று சொல்ல வேண்டும். ஆனால் இயேசு சில சந்தர்ப்பங்களில் அவர் தன்னை கடவுளின் குமாரனாக சொல்லினார்.

**நான்:-** இயேசு கடவுள் குமாரன் இல்லையா?

**போதிப்பவர்:-**நமக்கு தெரிந்தவரை தாய் தந்தை இருக்கின்றவராக பிறந்தார். அதனால் மனிதகுமாரன் என்று சொல்கின்றோம்.

**நான்:-**தந்தை என்றால் யார்? இயேசுவின் தந்தை யார்?

**போதிப்பவர்:-**இயேசுக்கு தந்தை கடவுளே என்று சொல்ல வேண்டும். தந்தை என்று கடவுளையே சொல்ல வேண்டும்.


**நான்:-**பரிசுத்த ஆத்மா என்றால் யார்?

**போதிப்பவர்:-**கடவுள் என்று சொல்ல வேண்டும்.


நான் போதிப்பவரிடம் நடத்திய சம்பாசனையில் **தந்தை, குமாரன், பரிசுத்த ஆத்மா** என்னும் சொல்லுக்கு அர்த்தம் அவர் சிறிதளவு கூட பொருத்தம் இல்லாமல் சொல்லினார். தந்தை, பரிசுத்த ஆத்மா இருவரும் ஒருவர்தான் என்று சொல்லினார். நாம் எப்படி சொல்லிக் கொண்டாலும் பரவாயில்லை. ஆனால் சொல்லியது உண்மையா இல்லையா! என்னும் சொல்லியவர், கேட்டது உண்மையா இல்லையா! என்னும் கேட்டவர்கள் பார்த்துக் கொள்வது நல்லது. போதிப்பவர்கள் சிறிது ஏறக்குறைய சொல்லினாலும் கிறிஸ்தவர்களிலேயே மூன்று ஆத்மாக்களை பற்றி சொல்லிக் கொள்ளுவது இருக்கின்றது. மற்ற இரண்டு மதங்களில் மூன்று ஆத்மாக்களை பேச்சுக்காவதும் சொல்லிக் கொள்ளவில்லை. ஆன்மீகத்திற்கு மூலாதாரம் மூன்று ஆத்மா ஆகும்போது, அவற்றை தெரியாமல் போனால் **ஆன்மீகம்** சிறிதளவு கூட தெரியாது என்று சொல்லலாம்.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட பிறகு, வெளி பார்வை உள்ளவர்கள் இயேசு இறந்து போன சிலுவையை இயேசு அடையாளமாக வைத்துக் கொண்டார்கள். இயேசுவை வைத்துக் கொண்டால் அது ஹிந்துக்கள் போல இயேசுவை தேவதைகளில் சேர்த்தது போல் ஆகும் என்னும் அவர் அடையாளமாக சிலுவையை வைத்துக் கொண்டார்கள். நாங்கள் இயேசு பக்தர்கள் என்னும் சிலுவையை அணிந்தவர் இருக்கின்றார்கள். அதன் போலவே இது இயேசு பிரார்த்தன ஆலயம் என்னும் தெரியும்படி சர்ச்சுக்கு மேல் பாகத்தில் சிலுவையை வைத்தார்கள். எங்கேயாவது சிலுவை இருந்தால் கிறிஸ்தவம் என்னும், கிறிஸ்தவம் என்றால் சிலுவை என்று தெரியும்படி செய்தார்கள். இதெல்லாம் வெளிப்பார்வை உள்ளவர்கள் செய்தது. சிறிது சூட்சும ஞானம் உள்ளவர்கள் கிரந்தத்தில் உள்ள ஞானத்தை கிரகித்தவர்கள் பைபிள் கிரந்தத்தில் சொல்லிய சாராம்சமான ஞானம், மூலாதாரமான ஞானம் தெரிந்தவராக, தெரிந்த ஞானத்தை அடையாளமாக கடவுள் முத்திரையை தயார் செய்து சர்ச் முன்பு சர்ச்சுக்கு மேல் பாகத்தில் வைத்தார்கள். சில கிறிஸ்தவர்கள் இயேசு மரணித்த சிலுவையை இயேசுக்கு அடையாளமாக வைத்துக்கொண்டு, சிலர் மட்டும் கடவுள் முத்திரையை வைக்க நடந்தது. அதிகம் பேர் வெளி பார்வை உள்ளவர்கள் 90 சதவீதம் சிலுவையை வைத்துக்கொண்டு, 10 சதவீதம் பேர் கடவுள் முத்திரையை சர்ச்சுக்களிடம் வைத்தார்கள். அதிகம் பேர் வைத்த உருவம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் சூட்சும ஞானத்தில் இருக்கின்ற கடவுள் முத்திரை அதிகம் பேருக்கு தெரியாது. ஒரு தடவை சிலுவைக்கு,

கடவுள் முத்திரைக்கு உருவம் நிர்மாணத்தை கீழ்ப்படத்தில் பாருங்கள்.




சிலுவை




கடவுள் முத்திரை


சிலுவை உருவத்தை, கடவுள் முத்திரை உருவத்தை பார்த்தால் சிலுவை வெளி அர்த்தத்தில் கூடி உள்ளது. இயேசுவை சிலுவை உருவமுள்ள கட்டைமேல் வைத்து கால்களுக்கு கைகளுக்கு ஆணிகளை அடித்தார்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். சிலுவை மேல் அடையாளத்தை பார்த்த இடத்தில் கால்களுக்கு கைகளுக்கு ஆணிகளை அடித்தார்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். சில சிலுவைகள் மீது இயேசு தேகம் சிலுவைகளில் தொங்கியது போல் காண்பித்தனர். சில

சிலுவைகளுக்கு இயேசு இல்லாமல் அதனைப் பார்த்தால் அவரைப் பார்த்தது போல் அடையாளமாக சொல்லிக் கொண்டிருப்பார்கள். சிலுவையில் ஞானம் ஒன்றும் இல்லை. அதே கீழ் உள்ள கடவுள் முத்திரையில் எவ்வளவோ சாராம்சமான ஞானம் உள்ளது. முதலில் சிலர் வெளி அர்த்தமாக சிலுவையை சர்ச்சுகளிடம் வைத்து அதில் ஞானம் எதுவும் இல்லை என்னும் சில ஞானிகள் மத்தேயு சுவார்த்தை 28ஆவது அத்தியாயத்தில் 19ஆவது வசனத்தில் **தந்தை, குமாரன், பரிசுத்த ஆத்மா** என்னும் அர்த்தத்தில் கூடிய அடையாளத்தை வைத்தார்கள்.


முதலில் ஞானி ஆனவர்கள் கடவுள் முத்திரையில் முதல் பிறந்த பிரக்ருதியை சேர்த்து கடவுள் நான்கு பாகங்களாக இருக்கிறார் என்னும் விவரமாக தெரியும்படி வைத்தார்கள். பிறகு சிலர்கள் ஞானம் தெரிந்தவர்கள் வாக்கியத்தில் உள்ள மூன்று ஆத்மாக்களை அடையாளித்து வைத்தால் ஆத்மாக்கள் விஷயம் முக்கியமாக தெரியப்படும், ஞானத்தில் முக்கியமானது, மூலாதாரமானது மூன்று ஆத்மாக்களே என்னும் மேல் உள்ள முதல் பிரக்ருதியை எடுத்துவிட்டு மூன்று அடையாளத்தை மட்டும் வைத்தார்கள். கடவுள் முத்திரை முதல் சம்பூர்ணமான உருவத்தை பின் பக்கத்தில் பாருங்கள்.

இறுதிக்கு சில இடத்தில் மட்டும் மீதமுள்ளவை மூன்று சக்கரங்கள் அடையாளம். பிரேசில் மற்றும் சில நாடுகளில் இன்று கூட சர்ச்சுகளிடம் சிலுவைகளை வைக்காமல் மூன்று அடையாளம் உள்ள கடவுள்

முத்திரையை அடையாளமாக வைக்கப்பட்டிருக்கின்றது. கிறிஸ்தவர்களில் அதிகம் எண்ணிக்கை இருக்கின்றவர்கள்





பிறகு கடவுள் முத்திரை மாறிய உருவத்தை பார்க்கலாம்.




கடவுள் முத்திரை

இயேசு பிரபு இறந்து போன சிலுவை அடையாளத்தை இயேசுக்கு அடையாளமாக வைத்துக் கொண்டிருக்கும்போது சில நாடுகளில் சிலர் மட்டும் மூன்று கட்டைகள் அடையாளம் சர்ச்சுகளிடம் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். காலம் கடந்து கொண்டிருக்கும்போது அர்த்தங்கள் தெரியாமல் போய் உருவத்திற்கு மட்டும் சில இடத்தில் மீதமுள்ளது. முக்கியமாக சொல்லிக் கொண்டால் இன்று கூட கிறிஸ்த்துவர்களுக்கு பெரியவராக இருக்கின்றவர்கள்

வாட்டிகன் சிட்டியில் போப் கூட மூன்று கோடு உள்ள அடையாளத்தை வைத்துக் கொண்டு இருப்பது நான் ஒரு போட்டோவில் பார்த்தேன். மூன்று கோடு அடையாளத்திற்கு மூன்று ஆத்மாக்கள் பெயர் எழுதிக் கொண்டது விசேஷமானது. இதனைப் பொறுத்து மூன்று ஆத்மாக்கள் ஞானம் கிறிஸ்தவர்களிலேயே அதுவும் சில இடத்தில் மட்டும் தெரிகின்றது. வாட்டிகன் சிட்டியில் போப் தோள்பட்டையில் வைத்துக்கொண்ட மூன்று சக்கரங்கள் அடையாளத்தை பாருங்கள்.



இன்று பூமி மீது மீதி இருக்கின்ற அடையாளம் இது. இவற்றுடன் கூட கிரந்தத்தில் உள்ள வாக்கியம் சிறிதாக தெரியும்படி வந்தது. இவற்றுடன் சம் திருப்தி அடையாமல்

சம்பூர்ணமான நான்கு சக்கரங்கள் கடவுள் முத்திரையை நெற்றி பாகத்தில்




வைத்துக் கொண்டவர் உண்மையான கிறிஸ்தவனாக கடவுள் பார்வையில் கணக்கிடப்படும். கடவுள், கடவுள் ஞானம் நம் தேகத்தில் உள்ளது. அதனால் கடவுள் முத்திரையை தேகத்தின் மேல் வைத்துக் கொண்டு அதனை கௌரவிக்க வேண்டும். "நாங்கள் கிறிஸ்தவர்கள் நெற்றி மேல் அடையாளத்தை வைத்துக் கொண்டால் ஹிந்துக்கள் போல் தெரிவோம்" என்று நினைக்கக் கூடாது. ஒவ்வொரு கிறிஸ்தவர்கள் நெற்றி மேல் நான்கு சக்கரங்கள் அடையாளத்தை வைத்துக் கொள்ள வேண்டும். நெற்றி மேல் வைக்க வேண்டும் என்னும் (பிரகடன 9-4) கடவுளே கூறியுள்ளார். நீ வைக்கின்ற கடவுள் சின்னம் ஒவ்வொரு மனிதனுக்கு சம்பந்தப்பட்டதாக உள்ளது. அதனால் கடவுள் ஞானத்தில் வெட்கப்படக் கூடாது. இதுவரை சொல்லிய மூன்று ஆத்மாக்கள் ஞானத்தை பயமாக, பக்தியாக தெரிந்து கொள்ள வேண்டும். தெரியாமல் போனால் தெரிந்து

கொள்வதற்கு முயற்சி செய். கடவுள் முத்திரை அணிந்து. கடவுள் மன்னிப்பு அடைந்து, கடவுளிலேயே சேர வேண்டும் என்னும் அதற்கு **“கடவுள் முத்திரை”** தான் வழி என்று சொல்கின்றோம்.

மனிதர்கள் சிருஷ்டி ஆதியில் இருந்து இருக்கின்றார்கள். எத்தனையோ லட்சக்கணக்கான வருடங்கள் கடந்து போய், கிட்டத்தட்ட 2000 வருடத்திலிருந்து “மதம்” என்பது மனிதர்களில் சேர்ந்து போனது. மனிதன் முதலில் இருந்த ஞானத்தை விட்டு மதத்தை இறுக்கி பிடித்துக் கொண்டான். “முதல் மதம் பிறகு ஞானம்” இந்த முறையில் இருக்கின்றார்கள். முஸ்லிம்கள் குர்ஆன் கிரந்தம் எங்களுடையது சொல்லினால் அவர் குர்ஆனை விட “ஹதீஸ்” கிரந்தங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். ஒவ்வொரு மதத்திலும் மத ஆச்சாரங்கள் தெய்வ ஞானத்தை பின்னுக்கு தள்ளி விடுகிறது. இல்லை நாங்கள் ஞானத்திற்கு மதிப்பு கொடுக்கின்றோம் என்னும் நடிக்கின்றவர்களும் கூட இருக்கின்றார்கள். இன்று எந்த மதத்திலும் மதத்திற்கு, மத சம்பிரதாயத்திற்கு அதிக மதிப்பு கொடுக்கின்றார்கள், தெய்வ ஞானத்திற்கு மதிப்பு கொடுக்கவில்லை. மேலாக நாங்கள் ஞானிகள் என்னும் சொல்லினாலும் அவனில் மதம் 90 சதவீதம், தெய்வ ஞானம் 10 சதவீதம் மட்டும் இருக்கின்றது. சில இடத்தில் அதுவும் 10 சதவீதம் கூட தெரியவில்லை.

உதாரணத்திற்கு குர்ஆன் கிரந்தத்தில் 15 ஆவது சூராவில் 28 ஆவது ஆயத்திலிருந்து 31 வரை பார்க்கலாம்.

இந்த வாக்கியங்கள் பார்த்த பிறகு அவர் மதங்களுக்கு எவ்வளவு சதவீதம், கடவுள் ஞானத்திற்கு எவ்வளவு சதவீதம் மதிப்பு கொடுக்கின்றாரோ தெரிகின்றது. **(15-28,29,30,31)"உன் பிரபு கடவுள் ஆட்சியாளர்களும் இப்படி கூறினார். "நிச்சயமாக நான் ஓசை தரக்கூடிய மாற்றத்துக்குரிய கருப்பு களிமண்ணினால் மனிதனை படைக்க போகிறேன். (29) இனி நான் அவருக்கு முழுமையாக உருவத்தை கொடுத்து அவர் உள்ளே என்னுடைய ஆத்மாவை ஊதிய போது நீங்கள் எல்லோரும் அவர் முன்பு சாஷ்டாங்கம் படுங்கள். (30) ஆட்சியாளர்கள் அனைவரும் சாஷ்டாங்க பட்டார்கள். (31) ஒரு இப்லீஸ் சாஷ்டாங்கம் படுகின்றவர்களிடம் இருந்து சேருவதற்கு விலகிக் கொண்டார்".** இந்த விதமாக இறுதி தெய்வ கிரந்தமான குர்ஆன் கிரந்ததில் சொல்லப்பட்டுள்ளது. கடவுள் சுயமாக "நான் ஒரு மனிதனை தயார் செய்து அனுப்புகிறேன். அந்த மனிதனில் என்னுடைய ஆத்மாவை நிறைத்து அனுப்புகிறேன்" என்னும் சொல்லியபோது வரும் நபர் பெரியவர் தான் அல்லவா! அர்த்தம். கடவுள் தன்னுடைய ஆத்மாவை ஊதி அனுப்பியதால் கடவுள் சக்தி இருக்கின்றவரே வருவார். கடவுளின் பிரதிநிதி வருகின்றார் என்னும் என்னை கௌரவிப்பது போலவே என் பிரதிநிதிக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும் என்னும் கடவுளே சொல்லியபோது தேவ தூதர்கள் எல்லோரும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்த போது, மனிதனில் இப்லீஸ் (மாயா) இருப்பதினால் கடவுளிடமிருந்து வந்தவருக்கு மனிதன் நமஸ்காரம் செய்யவில்லை. இப்லீஸ் (மாயா) இருக்கின்றவன் கடவுளுடைய பிரதிநிதியான பகவானுக்கு மனிதன்

கர்வத்தினால் நமஸ்காரம் செய்யாமல் போனான். இன்று முஸ்லிம்கள் நமஸ்கரிக்காமல் போவதை ஆதரிக்கின்றார்கள். “நாங்கள் கடவுளுக்கு தவிர வேற அவர்களுக்கு நமஸ்கரிக்க மாட்டோம்” என்று சொல்கின்றார்கள்.

கடவுள் சாதாரண மனிதர்களுக்கு நமஸ்காரம் செய்யுங்கள் என்று சொல்லவில்லை. “அவர் அனுப்பிய தன் பிரதிநிதிக்கு” என்று சொல்லி உள்ளார். குர்ஆன் கிரந்தம் சொல்லப்பட்டு 1400 வருடங்கள் ஆனது. அப்போது “நான் ஒரு மனிதனை தயார் செய்து அனுப்புவேன்” என்னும் கூறினால் அது குர்ஆன் சொல்லிய பிறகு என்று அர்த்தம் ஆகின்றது. “கடவுள் அவதரிக்கமாட்டார்” என்னும் முஸ்லிம்கள் சொல்கின்றார்கள். “நான் அவதரிப்பேன்” என்று (89-21,22) கூறியுள்ளார். மற்றும் கடவுள் நேரடியாக எங்கும் வரமாட்டார். தன் பிரதிநிதியாக அவரே வருவார் என்னும் இந்த வாக்கியத்தில் தெரிந்து போகின்றது. தன் பிரதிநிதி என்றால் கிட்டதட்ட கடவுள் சக்தி கொண்டவர் தான் அல்லவா! அர்த்தம். அப்போது கூட நாங்கள் நமஸ்கரிக்க மாட்டோம் என்றால் இப்லீஸ் விளைவுகள் என்று நினைக்க தவறாது. கடவுள் சுயமாக மனிதனாக வந்தால் தன் பிரதிநிதிக்கு நமஸ்கரிக்க வேண்டும் என்று கூறினார். தேவ தூதர்களும் கூட நமஸ்கரித்தார்கள். ஆனால் மனிதன் நமஸ்கரிக்க மாட்டோம் என்னும் சொல்லினால் அது அஞ்ஞானம் அல்லவா! சில முஸ்லிம்கள் எங்கள் மத ஷரியத் பிரகாரம் நாங்கள் யாருக்கும் நமஸ்கரிக்க மாட்டோம் என்றால் தெய்வ கிரந்தத்தில் கடவுள் கூறிய வார்த்தையை


கூட கேட்காதது தானே அர்த்தம். கிரந்தத்தில் என் பிரதிநிதிக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யுங்கள் என்னும் சொல்லியபோது, மனிதனில் தெய்வ ஞானத்தை பார்த்து அவரை சாதாரணமான நமஸ்காரம் ஆவது செய்யாமல் போனால், இது எங்களுடைய மத ஷரியத் என்றால் மதத்தில் கடவுளுடைய வார்த்தையை மீறியது போல் அல்லவா! கடவுளை அவமரியாதை செய்வது போல் அல்லவா!

இதனைப் பொறுத்து மனிதன் மதத்திற்கு அதிகம் கௌரவம் கொடுக்கின்றான். கடவுள் வார்த்தைக்கு கௌரவம் கொடுக்கவில்லை என்று நேரடியாக தெரிகின்றது. ஒரு முஸ்லிம் மதத்தில் ஷரியத் மட்டும் அல்ல எல்லா மதத்திலேயும் மத ஆதிக்கம் அதிகமாக இருக்கின்றது. அதனால் மத சம்பிரதாயங்கள் அனுசரிப்பதில் தவறக் கூடாது என்று கடவுளுடைய வார்த்தையை காற்றில் விடுகிறார்கள். கிறிஸ்தவர்களிலும் கூட முகம் மீது கடவுள் முத்திரை அணியாமல் போனால் தண்டனை தவறாது என்னும் கடவுளே கூறினாலும், **கடவுள் முத்திரை** என்னும் தன் பெயரை சொல்லிக் கொண்டாலும் “நாங்கள் எங்கள் மதத்தின் மீது உறுதியுடன் இருக்கிறோம். எங்கள் மத சம்பிரதாயம் பிரகாரம் நெற்றியின் மேல் எந்த அடையாளத்தையும் வைக்க மாட்டோம்”. என்னும் சொல்லினால் கடவுள் வார்த்தையை மீறியது அல்லவா! தெய்வ கிரந்தத்தில் உள்ள கடவுளின் வார்த்தையை மதிக்காதது போல் ஆகும் அல்லவா! யாருக்கு அவர் (மதம்) என்னும் கடவுள் வார்த்தை கணக்கிடாமல் போனால் கடவுள் மனிதனை ஒன்றும் சொல்லாமல்

மௌனமாக இருந்தாலும், கடவுளுடைய ஆட்சியாளர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். கிரகங்கள் தேள் கடித்தால் எவ்வளவு கஷ்டமாக இருக்குமோ அந்த கஷ்டமாக ஐந்து மாதங்கள் துன்புறுத்துவார்கள். பூதங்கள் முழுமையாக கொன்று விட தவற மட்டார்கள். அதனால் மனிதர்கள் மதத்தை விட்டு கடவுளுடைய வார்த்தை பிரகாரம் அனுசரிக்க வேண்டும் என்று சொல்கின்றோம். "கடவுள் மார்க்கத்திற்கு தடங்கல் இருந்தால் கண்ணைக் கூட அகற்றி விடு, கையை கூட வெட்டி விடு" என்னும் கடவுளே சொல்லியபோது உன் மத ஆச்சாரங்களை விட மாட்டாயா? ஆலோசனை செய்து கொள், வாக்கியம் பிரகாரம் கடவுள் முத்திரை அணிவாயோ! மதம் என்று சொல்வாயோ!! ஆட்சியாளர்கள் பார்ப்பார்கள்.

**இப்படிக்கு**

**யோகீஸ்வரர்**



ஒரு விஷயத்தை ஒப்புக் கொள்வதற்கு சாஸ்திரம்

எவ்வளவு தேவையோ,

அதன் போலவே ஒரு விஷயத்தை கண்டிக்க

சாஸ்திரம் அவ்வளவு தேவையாகும்.

அசத்தியத்தை ஆயிரம் பேர் சொல்லினாலும்,

அது சத்தியம் அல்ல,

சத்தியத்தை ஆயிரம் பேர் அல்லவென்று சொல்லினாலும்,

அது அசத்தியம் அல்ல.